x455

T.N.L.A. Debates

Official Report

No 384

Vol 31

November 23rd } 1986
December 22nd }

C

V211,31 N86
N86·31·384
126500

வெளியீடு 13-10-1987 Issued 13-10-87

1615/87
2955

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, நவம்பர் 25, 1986-தொகுதி 31-எண் 3
Tuesday, the 25th November 1986-Volume 31-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

உள்ளடக்கம்.

25-11-86.


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. 239–279
(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. 280–338

2. ஒழுங்குப் பிரச்சினை—
அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித் 341–353
தோர் உறுப்பினர்கள் தகுதியை
இழத்தல். .. .. 355–359

3. அமைச்சரின் அறிக்கை—
உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்
துறை அமைச்சர் அறிக்கை. .. 354

4. கவன ஈர்ப்பு—

(அ) திட்டக்குடி வட்டம், வைத்தியநாத
புரத்தில் வெள்ளத்தடுப்பு நட 359–360
வடிக்கைகள். .. ..

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில்
வறட்சிப் பணிகள். .. .. 361–363

(இ) நாகர்கோவிலிலுள்ள நாகம்மாள்
மில்ஸ் தொழிலாளர்கள் பிரச்சினை. 363–364

(ஈ) பேட்டை, ஆரல்வாய்மொழி போன்ற
இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்
பாலைத் தொழிலாளர் வேலை
நிறுத்தம். .. .. 364–366

(உ) திருச்சி சிம்கோ இஞ்சினியரிங்
லிமிடெட் தொழிலாளர் பிரச்சினை. 367

(ஊ) கரும்புக்கு கட்டுப்படியான விலை
கோரி விவசாயிகள் உண்ணாவிரதம். 367–369

(எ) திருப்பூர் பனியன் தொழிற்சாலை
யிலிருந்து வெளிவரும் கழிவு நீரால்
பாதிப்பு. .. .. 369–370

(ஏ) கோவை நகரின் வடக்குப் பகுதியில்
நில ஆர்ஜித நடவடிக்கையால்
பாதிப்பு. .. .. 371–372

(ஐ) சிட்கோ தொழிலாளர்களுக்கு குடி
யிருப்புகளை உடமையாக்குதல். 373–374

பக்கங்கள்

(ஓ) புதுக்கோட்டை மாவட்டம் நமன சமுத்திரத்திலுள்ள லட்சுமி சண்முகா ஸ்பின்னிங் மில்லை விடுப்பு நிறுவன மாக அறிவித்தல். .. .. 373–375

(ஒ) கோவை மாவட்டம் ஆதிவாசிகள் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்தல். .. .. 375–376

(ஔ) சமயபுரம் மாரியம்மன் கோவில் நகைகள் திருட்டு. .. .. 377–378

(அஅ) இரப்பர் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி உயர்வு வழங்காதது. .. .. 379–381

(ஆஆ) இந்திரா காட்டன் மில்ஸ் தொழிலாளர் பிரச்சினை. .. .. 381–382

(இஇ) மந்தைவெளி, பட்டினப்பாக்கம் பகுதி களில் திறந்தவெளி சாக்கடை அமைப்பதன் அவசியம். .. 382–383

(ஈஈ) கோவை மாவட்டத்தில் சில எஞ்சினியரிங் மற்றும் பனியன் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்காதது. .. .. 383–385

(ஈஈ) சென்னையில் கொசு ஒழிப்பு நட வடிக்கை. .. .. 386–388

(உஉ) பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்பு. .. .. 389– 99

5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு .. 400

(ஆ) மதிப்பீட்டுக் குழு. .. 400

(இ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு. .. .. 400

6. அறிவிப்பு—

சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்டமுன்வடிவு, 1986 (ஆ.இ.) .. .. 400



2955

பக்கங்கள்

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—

(அ) சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்டமுன்வடிவு 1986. .. .. 400

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகை முறைகள் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1986. .. .. 402

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986. 402

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986. .. .. 403

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1986. .. .. 404

(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986. .. .. 405

(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்டமுன் வடிவு, 1986, .. .. 406

8. அரசினர் தீர்மானம்—

பேரவை ஒத்தி வைக்கப் பெறுதல் 406

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 407–409

....

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1986, நவம்பர் 25, செவ்வாய்க்கிழமை**

**கார்த்திகை 10, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு-2017**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்''

தீய செயல்கள் தீயவைகளையே விளைவிக்கும் தன்மை உடையவைகளாக இருத்தலால் அத்தீய செயல்கள் தீயைவிட கொடுமையாகக் கருதி அஞ்சப்படும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

### நுகர் பொருள் வாணிபக் கழகங்களில் குழுக்கள்

*164— (*வினா எண். 3618)* திரு. மு. தங்கமணி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் வாணிபக் கழகங்களில் வட்ட, மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. மு. தங்கமணி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது வட்ட, மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை என்று குறிப்பிட்டார்கள் நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருள்களாகக் கருதப்படுகிற அரிசி, சர்க்கரை, எண்ணெய் போன்றவைகள் எல்லாம் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகத்தான் வழங்கப் படுகின்றன. அவ்வாறு வழங்கும்போது அதன் காரணமாகப் பிரச்சினைகள் எழுகின்றன. எனவே அப்பிரச்சினைகளைத் தீர்த்து, பொதுமக்களுக்கும் நிர்வாகத்திற்கும் ஒரு நல்ல சுமுக உறவை ஏற்படுத்த இப்படிப்பட்ட குழுக்கள் சிறப்பாகப் பணியாற்ற வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் மீண்டும் அப்படிப்பட்ட குழுக்கள் அமைக்கப் பரிசீலனை செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரை விழிப்புப் பணிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. வட்ட அளவில் அமைப்பது பற்றி அரசின் ஆலோசனையில் உள்ளது. மாவட்ட அளவைப் பொறுத்தவரை கோவை மற்றும் சேலம் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட கண்காணிக்கும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஒன்றை அமைக்கும் கருத்துரு பரிசிலனையில் உள்ளது.

திரு. மு. தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது வட்ட அளவில் குழுக்கள் அமைக்க இருப்பதாகச் சொன்னார்கள். மாவட்ட அளவில் மாநிலம் முழுவதும் இத்தகைய குழுக்களை அமைக்கும் போது அதில் சட்டப் பேரவை உறுப்பினர்களும் இடம் பெறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்கள் இடம் பெறக்கூடாது என்பதற்கு விதிமுறை ஏதுமில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் அமைக்கப் படுகிற இத்தகைய குழுக்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு உறுப்பினர்கள் அத்தகைய கடைகளைப் பார்க்க வேண்டும். கடைகளுக்கு வருகிற பொருள்கள் பதிவேடுகளில் சரியாக எழுதப்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அவைகளின் இருப்பு குறித்து கடைகளில் விநியோகிப்பதற்கு முன்னால் கண்காணிப்புக் குழுவினரின் கையெழுத்தைப் பெற்றாக வேண்டும். அதற்குப் பிறகுதான் பொருள்களை விநியோகிக்க வேண்டும். கடைகளைக் கண்காணிப்பதோடு பொதுமக்கள் கடைகளின் செயல்பாடு குறித்து குறைபாடுகள் தெரிவித்தால் அவற்றைப் பற்றி அரசுக்குத் தகவல் தெரிவிக்கிற வகையில் அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. இது ஒரு விஜிலென்ஸ் கமிட்டி போன்றது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ''மாவட்ட அளவில் அமைக்கப்படக் கூடிய குழுக்களில் சட்ட சபை அங்கத்தினர்கள் அங்கம் பெறக்கூடாது என்று இல்லை'' என்று டபுள் நெகடிவ்வில் பதில் அளித்தார்கள். மாவட்ட அளவில் அமைக்கப்படும் குழுக்களில் குறைந்த பட்சம் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த எம்.எல்.ஏ.க்களில் ஒருவரையாவது நியமிக்க அரசு முன்வருமா? இது கட்சிக்குப் பிரதிநிதித்துவம் என்ற அடிப்படையில் கேட்கப்படவில்லை. பொதுஜன



இயக்கத்தை நடத்திக் கொண்டிருப்பவர்களே அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள்தான். ஆகவே, அவர்களுக்குப் பிரதி நிதித்துவம் இருக்க வேண்டும். சட்ட சபை உறுப்பினர்கள் இடம் பெற்றால் இங்கே இருக்கும் சட்ட சபைக்கும் அமைச்சருக்கும் இந்த விவரங்களைக் கொண்டு வந்து சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்ற வகையில் இந்த யோசனை கவனத்தில் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு அமைக்கப்படும் முறை, அதனுடைய பணிகள் ஆகியவை நீண்ட பட்டியலாக அரசு ஆணையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அது அவ்வளவையும் சொல்வ தென்றால் அது மிகப் பெரிய பதிலாக இருக்கும். நியாய விலைக் கடைகள் இருக்கும் பகுதிகளில் வசிக்கும் பொது நலத்தில் ஆர்வம் உடையவர்கள், முந்தைய அரசியல் தலைவர்கள், மருத்துவர், வழக்கறிஞர் மற்றும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சார்ந்த பெரியவர்கள் ஆகியவர்களை இந்தக் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கலாம். ஆகவே நாம் எல்லாம் பொது நலத்தில் ஆர்வமுடையவர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், இன்னும் பிற பொது நல ஊழியர்கள் கொண்ட கண்காணிக்கும் குழு மிக அருமையாகப் பணி செய்து கொண்டிருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஏனெனில், அவருடைய பதிலில் அது இல்லை. அந்த நிலையை அறிந்து உணர்ந்து மாநிலம் முழுவதும் அது போன்ற குழுக்களை அமைத்து அதை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையினர் தந்த தகவலைவிட மாண்புமிகு உறுப்பினர் தந்த தகவல் எனக்குக் கூடுதலாக இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

### வாலாஜாபேட்டை தாலுக்கா, பூண்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர்த் திட்டம்.

165– (*வினா எண் 3920) திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டை தாலுக்காவில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீரால் பாதிக்கப்பட்ட பூண்டி, அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கூட்டு குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வடாற்காடு மாவட்டம் வாலாஜாபேட்டை வட்டம் பூண்டி, கடப்பேரி மற்றும் இதர வழியோரக் கிராமங்களுக்காகவும் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயற்படுத்த தமிழ்நாடு அரசு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் திருத்திய திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்பு, தொழில் நுட்ப அனுமதியும், நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டு, திட்டம் செயல்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ந. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வாலாஜா தாலுக்காவில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவு நீரால் பாதிக்கப்படுகிற கிராமங்களுக்கு குடிநீர் வழங்குகிற திட்டத்தை அறிவித்தார்கள். அதற்கு நன்றி. இருந்தாலும்கூட பல கோடிக் கணக்கான ரூபாயில் அங்கே தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு, அவற்றிலிருந்து வருகிற கழிவு நீர் பாலாற்றில் கலப்பதால் வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கேயுள்ள பல நகரங்கள் பாதிக்கப்பட்டு ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற பல குடிநீர் திட்டங்கள் பாழாகிக் கொண்டிருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரியுமானால் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன? வருங்காலத்திலே வருகிற திட்டங்களும் பாழாகிற சூழ்நிலை இருக்கிறது. இதை அரசு ஆராய்ந்து முன்னெச்சரிக்கையாக அதற்காக எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருக்கின்ற தோல் பதனிடும் தொழிற் சாலைகள் மற்றும் இரசாயன பொருள்கள் தொழிற்சாலைகள் காரணமாக அந்தப் பகுதியில் குடிநீர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியும். ஆகவே, அதற்கான தன்மையில் வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜா வட்டம், பூண்டி, கடப்பேரி, கடப்பந்தாங்கல், ஒட்டந்தாங்கல், சென்ன சமுத்திரம், கன்னிகாபுரம், மலைமேடு, தென் கடப்பந்தாங்கல், புளியந்தாங்கல், அம்மந்தாங்கல் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் உள்ள மொத்தம் 9,113 மக்கள் பயனடையும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல் படுத்த 31.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் இயக்குநரால் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலே நான் கேட்டது. ஏற்கெனவே திருப்பத்தூரிலிருந்து வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, குடியாத்தம், வேலூர் விஷாரம், ராணிப்பேட்டை, வாலாஜா ஆற்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு திட்டங்கள் பாதிக்கப்



பட்டிருக்கின்றன. பாலாற்றங்கரையின் இருபுறங்களிலும் இருக்கின்ற தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பாலாற்றில் கலக்கிறது. இதனால் கோடிக்கணக்கான ரூபாயில் செலவு செய்து போடப்படும் குடிநீர்த் திட்டங்கள், நகர்ப்புறங்களில் உள்ள குடிநீர்த் திட்டமாக இருந்தாலும், அவை உட்பட அனைத்துத் திட்டங்களும் வட ஆற்காடு மாவட்டத்திலே பாழாகிக் கொண்டிருக்கின்றன. (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வி நேரம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீரைப் பொறுத்தவரையில் சுத்திகரிக்க வேண்டும் என்பது சுற்றுப்புற சூழல் மற்றும் மாசு கட்டுப்படுத்துதல் துறை நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

**திரு. ர. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறப்படுகிற கெமிகல்ஸ் கலந்த கழிவுநீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது. நிலத்தடிநீர் பாதிக்கப்படாமல் தடுக்க நீண்டகால கண்ணோட்டத்தோடு ஏதாவது திட்டம், செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியும் சுற்றுபுறச் சூழல் மற்றும் மாசு கட்டுப்படுத்தல் துறை அமைச்சரிடம் கேட்கப்பட வேண்டும்.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஊராட்சி மன்றத்தில் நல்ல குடிநீர் இல்லாத நேரத்தில், வேறொரு ஊராட்சி மன்றப் பகுதியில் 'போர்' போட்டு, தண்ணீர் எடுக்கும்போது, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதைத் தடை செய்கிறார்கள். அது பற்றி அரசு அதிகாரிகளிடத்தில் சொல்லும்போது எங்களால் ஒன்றும் செய்ய முடியாதென்று சொல்லுகிறார்கள். இதனால் பல திட்டங்கள் நிறைவேறாமல் இருக்கின்றன. எனவே, அப்படி இன்னொரு பகுதியிலிருந்து தண்ணீர் எடுக்கும்போது, அந்த மக்கள் அதைத் தடை செய்வதைத் தடுத்து, தண்ணீர் கிடைக்காத பகுதிக்கு தண்ணீர் வழங்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் பல குக்கிராமங்களில் இருக்கின்றன. எனவே, அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளோடு கலந்து, கிராம மக்களிடத்தில் பேசி, சுமுகமான முடிவு ஏற்படுத்துவதுதான் சிறந்த வழியாகும். என்னுடைய தொகுதியில் அந்த முறையில் நான் வெற்றி பெற்றிருக்கிறேன்.

[1986 நவம்பர் 25

## திருவண்ணாமலை "TANFED" மில்

166—(*வினா எண் 4282) திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் உள்ள "TANFED"க்கு சொந்தமான மில்லை "TANCOF" வாங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், "TANCOF" – விடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், எப்பொழுது ஒப்படைக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 12-9-1985 அன்று தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய வித்துக்கள் உற்பத்தியாளர் இணையத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## திருவையாறு, பூதலூர், ஒரத்தநாடு பகுதிகளில் பழுதுபட்ட குழாய்கள்.

167—(*வினா எண் 9147) திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு, பூதலூர், ஒரத்தநாடு போன்ற பகுதிகளில் குடிநீர் தருவதற்காக போடப்பட்டுள்ள பைப்புகள், டேப்புகள் பழுதுபட்டு செயல்படாத நிலையில இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சரிசெய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் 3 இறைப்பான்களும், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 5 இறைப்பான்களும், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் 3 இறைப்பான்களும் பழுதுபட்ட நிலையில் உள்ளன. இறைப்பான்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஊராட்சி மன்றங்களிலே குடிநீர் வழங்குகின்ற நிலையில், பல்வேறு இடங்களில் பைப்புகள் பழுதடைந்துள்ளன. இன்றைய நிலையில்



1986 நவம்பர் 25]

ஊராட்சிகளிலே நல்ல நிதி நிலைமை இல்லை. தெரு விளக்குக்குக் கூட பணம் கட்டுவதற்கு சரியான நிதி நிலைமை இல்லாத சூழ்நிலையில், பைப்புகளை அவர்களால் பழுது பார்க்க முடியாத நிலையைக் கவனத்தில் கொண்டு, பொது நிதியிலிருந்து அல்லது விசேஷ நிதி மூலம் இப்படிப்பட்ட குறைகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, இறைப்பான்கள் பழுதுபட்டால் உடனுக்குடன் சரி செய்ய தக்க நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்ட குழாய்களைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தால் போடப்படுகின்ற பைப்புகளும், இறைப்பான்களும் தரமானவையல்ல என்று சொல்லப்படுகிறது. எனவே தரமான பைப்புகளையும், இறைப்பான்களையும் வாங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. இதுவரையிலே வைக்கப்பட்டிருக்கிற பைப்புகளும், கை இறைப்பான்களும், விசை இறைப்பானகளும் ஒழுங்காக வேலை செய்து வருகிறதென்று நான் நம்புகிறேன்.

## தஞ்சை மாவட்டம், களப்பாலில் இரண்டாவது எண்ணெய் கிணறு

168—(*வினா எண் 6489) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், களப்பாலில் இரண்டாவது எண்ணெய்க் கிணறு தோண்டப்படுகிறதா?

(ஆ) வேலை எந்த அளவிற்கு நடைபெற்று வருகின்றது?

(இ) ஒரு நாளைக்கு எவ்வளவு எண்ணெய் கிடைக்கும் என்பது பற்றி அரசுக்கு ஏதும் விபரம் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) எண்ணெய் எரிவாயுக் கமிஷன், கோவில்களப்பால் பகுதியில் எண்ணெய் துருவும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது. கோவில் களப்பாலிலுள்ள இரண்டாவது கிணறு வறண்டு விட்டதால் மூன்றாவது கிணற்றில் எண்ணெய் எடுப்பதற்காகத் தற்போது துளையிடப்படுகிறது.

(இ) கோவில் களப்பால் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு கிடைக்கும் அளவு பற்றி இன்னும் கணக்கிடப்படவில்லை. இப்பகுதியில் எண்ணெய் துருவும் விரிவான திட்டப் பணி முடிவுற்ற பின்னர் எண்ணெய் மற்றும் எரிவாயு நாளொன்றுக்கு எவ்வளவு கிடைக்கும் என்று கணக்கிடப்படும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் களப்பால் பகுதியில் மூன்றாவது கிணறு தோண்டப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். களப்பால் பகுதியில் மட்டுமல்லாமல், காவிரிப் படுகையில் உள்ள பகுதிகளிலும் கனி வளம் உள்ளதாகச் சொல்லப் படுகிறது. அந்த அடிப்படையில் இன்னும் எத்தனை கிணறுகள் தோண்டுவதற்கு திட்டமுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவில் களப்பாலில் கிடைக்கும் எரிவாயு வணிக முறையில் ஏற்புடையதாக இருக்குமா என்று அறிய அந்தக் கமிஷன் ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனை துளைகள் போடுவார்கள் என்று அவர்கள் அறிவித்த பிறகுதான், மாநில அரசுக்கு அது தெரியும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமீபத்திலே 3, 4 மாதங்களுக்கு முன்னதாக சோவியத் யூனியனிலிருந்து எண்ணெய் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கக் கூடிய நிபுணர்கள் வரப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளதே, அந்த அடிப்படையிலே இன்றைக்கு சோவியத் யூனியன் அதிபர் கோர்பச்சேவ் அவர்கள் டெல்லிக்கு வர இருக்கின்றார்கள். இந்தியாவின் நலனைப் பற்றி பேச்சுவார்த்தை தொடங்குகின்ற போது, தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பகுதியில் எண்ணெய் கண்டுபிடிக்கக்கூடிய ஆராய்ச்சி நிபுணர்கள் வரக்கூடிய நிலையில், இதைப் பற்றியும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட இருக்கின்றதா, இது சம்பந்தமாக தமிழக அரசு சிபாரிசு செய்து இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எண்ணெய் உற்பத்தியைப் பொறுத்தவரையில் அது மத்திய அரசுக்குட்பட்ட விவகாரம். சோவியத் யூனியன் பிரதமர் கோர்பர்ச்சேவ் அவர்கள் வருகின்றபோது இதைப் பற்றியும் இந்திய அரசு பேசும் என்று நம்புகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஓரத்தநாடுக்கு அருகிலுள்ள முதலிப்பட்டியில் 6 மாத காலமாக எண்ணெய் தோண்டுவது தொடங்கப்பெற்று நடைபெற்று வருகிறது. இது அரசுக்குத் தெரியுமா? அப்படி தோண்டப்படுகின்ற அந்த இடத்தில் தரமான எண்ணெய் கிடைக்கிறதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, களப்பால் பகுதியிலே நரிமணம் என்ற இடத்தில் எண்ணெய் கிடைப்பதாக மாநில அரசுக்குத் தகவல் இருக்கின்றது. அந்த எண்ணெயை சென்னையிலே உள்ள சுத்திகரிப்பு ஆலைக்குக் கொண்டு வந்து ஆய்வு செய்ததிலே அந்த எண்ணெய் தரமானதாக உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. கோ. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய் வளத்தை, குறிப்பாக நரிமணம் பகுதியிலே எடுக்கப்படக்கூடிய எண்ணெய் தினசரி சுத்திகரிப்பு ஆலைக்குக் கொண்டுவரப்படுகிறது. அங்கே எரி வாயு வீணாக எரிக்கப்படுகிறது. வீணாக்கப் படுகின்றதை சேமிக்க முயற்சி எடுக்க, பின் தங்கிய பகுதியிலேயே எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை உண்டாக்க மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரம்பக்கட்டத்திலேதான் இருக்கின்றது. ஆகவே எரிவாயு தற்போது வீணாவதைத் தடுக்க வழி இருப்பதாகத் தெரியவில்லை. அதிகமாக எரிவாயு இருப்பதாகக் கண்டு பிடித்தால், அந்த எரிவாயுவை வைத்து உரத் தொழிற்சாலை ஏற்படுத்தவும், மற்ற காரியங்களைச் செய்யவும் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆய்வுகள் முடிகின்ற வரையிலே பொறுத்திருப்போம்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தஞ்சையிலே இருக்கின்ற எண்ணெய், எரிவாயு போன்றவை குறித்து எந்த அளவுக்கு ஆராய்ச்சி செய்திருக்கிறார்களோ அது போன்று ஆழ்வார் திருநகரி பஞ்சாயத்து யூனியனில் என்னுடைய தொகுதியில் குடிநீர் பைப் போடும்போது அதிலிருந்து பெட்ரோல் வருவதாக அறியப்பட்டது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கின்றதா? அதன் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப் பற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, தமிழகத்திலே வேறு எந்தெந்தப் பகுதிகளிலே எண்ணெய் வளம் பற்றி ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றது? அப்படி எடுக்கக்கூடிய எண்ணெயிலே தமிழகத்திற்கு ராயல்டி ஆக பங்கு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது களப்பால் பகுதியில் நரிமணம் என்ற இடத்தில் எண்ணெய் எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதிகமாக எண்ணெய் எடுத்ததற்குப் பிறகு பங்கு கேட்பது பற்றி யோசிக்கலாம்.

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் களப்பான் பகுதியில் 3 எண்ணெய் கிணறுகள் தோண்டப்படுவதாகத் தகவல் தந்திருக்கின்றார்கள். இரண்டாவதாக தோண்டப்பட்ட கிணற்றில் நல்ல எண்ணெய் வளம் இருப்பதாக அதிகாரிகள் கண்டுபிடித்தும், சுற்றியுள்ள வேறு மாநில அதிகாரிகள் அது பொய்த்துவிட்டது எனக்கூறி இருக்கின்றார்கள். மீண்டும் அந்தஎண்ணெய்கிணற்றைப் பற்றி ஆய்வு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் அரசுக்கு இல்லை. தற்போது மூன்றாவது கிணறு தோண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வேதாரண்யம் பகுதியில் உப்புத் தொழிற்சாலை.

169 (*வினா எண் 8352) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் கடல் நீரிலிருந்து எடுக்கப்படும் உப்பிலிருந்து "Table salt" தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை.

தாம்பரத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

170—(*வினா எண் 9228) திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ இல்லை. (ஆ) இவ்வினா எழவில்லை



(முற்பகல் 9.20)

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது இந்தப் பிரச்சினை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செங்கல்பட்டு மாவட்டத்தில் படாளத்திலும், மதுராந்தகத்திலும், திருத்தணிக்கு அருகிலுள்ள திருவாலங்காட்டிலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. தாம்பரம் பகுதியில் சர்க்கரை உற்பத்தி செய்கின்ற கரும்பு சாகுபடி இல்லை. ஆகவே, தற்போது தாம்பரம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கின்ற உத்தேசம் அரசிடம் இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் எத்தனை சர்க்கரை ஆலைகள் இயங்குகின்றன? குறிப்பாக கூட்டுறவுத் துறையில் எந்த வழிக்காட்டிக் கொள்கையின்கீழ் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவுத் துறையின் கீழ் 11 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையின்கீழ் 3 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையின்கீழ் 10 சர்க்கரை ஆலைகளும் இயங்கிக் கொண்டு வருகின்றன. தற்போது தஞ்சை மாவட்டத்திலுள்ள மயிலாடுதுறையில் தலைஞாயிறு என்ற இடத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டு வருகிறது.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குதல்.

171—(*வினா எண். 3467) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மற்றும் திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக 1-6-1981-ல் ஆக்கப்பட்டது போல் நகராட்சிப் பள்ளியில் பணிபுரிபவர்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, நகரியம் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் அனைவரையும் 1-6-86 முதல் அரசு ஊழியர்களாக ஆக்க அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை எண் 702, கல்வி, நாள் 23-5-1986.)

[1986 நவம்பர் 25

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு துணைக் கேள்வி கேட்க முடியாத அளவுக்கு காலதாமதமாக பதில் வந்துள்ளதால் துணைக் கேள்வி கேட்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வினா 16-6-1986 அன்று போடப்பட்டது. 9-9-1986 அன்று தான் அதனுடைய விடை துறைக்கு வந்திருக்கிறது.

## Foot ball stadium at Madras.

172—(* Q. No. 3977):—THIRU G. ANANTHA KRISHNA: Will the Hon. the Minister for Education and Law be pleased to state—

(*a*). Whether the Government has abandoned the programme to build a stadium for staging foot ball matches in Madras City ; and

(*b*) if not, what are the steps taken for constructing a foot ball stadium.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னையில் கால்பந்து விளையாட்டிற்கென நேரு விளையாட்டு அரங்கம் உள்ளது. கடந்த 1984-ம் ஆண்டு சந்தோஷ் கோப்பைக்கான கால்பந்து போட்டிகள் இங்கு நடத்தப்பட்டன. பன்னாட்டு அழைப்பு நேரு தங்கக் கோப்பைக்கான கால்பந்து போட்டிகள் நடத்துவதற்கென சென்னையில் கால்பந்து விளையாட்டு அரங்கம் கட்டும் செயற் குறிப்பு தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியின் காரணமாக கைவிடப்பட்டது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இன்டோர் ஆடிட்டோரியம் அமைப்பதாகவும், தமிழ்நாடு கூடைப்பந்து வளர்ச்சிக் கழகத்திடம் அதை ஒப்படைக்கப் போவதாகவும் ஏற்கெனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்களே, அந்தச் செயற்குறிப்பு கைவிடப்பட்டதா? இல்லையெனில் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுங்கம்பாக்கம் மனமகிழ் மையத்திடம் உள்ள மைதானம் மற்றும் தரமணி ஆகிய இடங்களில் புதிதாக அரங்கம் கட்டலாம் என்ற செயற்குறிப்புதான் இருக்கிறது. ஏனெனில் தற்போது இருக்கின்ற நேரு விளையாட்டு அரங்கமே போதும் என்பதால்தான் அது குறித்து நடவடிக்கை எடுக்க வில்லை.



1986 நவம்பர் 25]

## விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் வயது வரம்பு.

173—(*வினா எண். 5831) திரு. க. சோலைராசு : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் வயது வரம்பை தளர்த்த அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட இனம் முன்னேறவேண்டுமென்ற அடிப் படையில் அவர்கட்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தர வேண்டு மென்ற எண்ணத்தில் வயது வரம்பைத் தளர்த்தி அவர்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள். அதுபோல் நாட்டுக்குப் புகழையும், பெருமையையும் சேர்க்கும் வகையில் ஈடுபட்டுள்ள விளையாட்டு வீரர்களின் வயது வரம்பைத் தளர்த்துவது பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனை களை ஊக்குவிக்க அரசு ஏற்கெனவே ஆணை வெளியிட்டிருக் கிறது. அரசு கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்ற பப்ளிக் செக்டார் அண்டர்டேக்கிங்குகளில் வேலை வாய்ப்பகம் மூலம் வராமல் நேரடியாகவே விளையாட்டுத் தேர்ச்சி பெற்றுள்ள, திறமையின் அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரலாமென்ற அடிப்படையில் ஆணையிடப்பட்டுள்ளது. வயது வரம்பைத் தளர்த்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப் படுகின்றது என்று சொன்னாலும் கூட, போக்குவரத்துறை, உறைவுத்துறை ஆகிய துறைகளில் மட்டும் அப்படி வேலை தரப் படுகிறது. எனவே, மற்ற அனைத்துத் துறைகளிலும் விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாட்டினையும், அதேபோல் விளையாட்டை ஊக்குவிக்கின்ற முறையில் ஒவ்வொரு தாலுக்கா தலைமையிடத் திலும் விளையாட்டுப் பயிற்சி மையத்தை கல்வித் துறையின் மூலம் ஏற்பாடு செய்வதையும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆல் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு எல்லா அரசு வாரியங்களுக்கும்,

கழகங்களுக்கும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே ஆணையிடப்பட்டிருக்கின்றது. வட்ட அளவிலே விளையாட்டு மையங்களைப் படிப்படியாக அமைக்க அரசு நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களில் பலர் வேலைத் தேடித் தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து 10 ஆண்டுகள் வரை காத்திருந்தும், இன்றைக்கு வயது வரம்பைத் தாண்டிவிட்ட காரணத்தால் அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க, பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில், வயது வரம்பைத் தளர்த்தி, அதாவது எக்ஸெம்ஷன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விளம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அது குறித்துப் பரிசீலிக்கும்.

**திரு. டி. என். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த விளையாட்டு வீரர்களாக இருக்கின்ற காரணத்தால், அத்தகைய மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டமுடியவில்லை. ஆகவே, அத்தகைய மாணவர்களுக்கு தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் எடுத்திருந்தாலும், தேர்வு செய்துவிடலாம் என்பதை அரசு பரிசீலிக்குமா? வெளிநாடுகளில் இதுபோன்ற முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரபஷனல் கோர்சஸ். மேல்படிப்புக்கு அதாவது என்ஜினியரிங், மெடிகல், பி.எஸ்.ஸி., (அக்ரி., பி.வி.எஸ்.ஸி., பீ.டி.எஸ்., ஆகியவைகளுக்கு ஏற்கனவே இந்தச் சலுகை தரப்படுகிறது. மேலும் விளையாட்டு வீரர்களுக்கு இத்தகைய ஊக்குவிப்பைத் தருவதற்கு அரசு ஆயும்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் எத்தனை விழுக்காடு தரப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து தற்போது தகவல் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

### என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு.

174—(*வினாஎண். 8637) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்கள் ஊதிய உயர்வு பற்றி அரசு ஏதும் திட்டமிட்டுள்ளதா?



(ஆ) ஆம் எனில், ஊதிய உயர்வு எந்த அடிப்படையில் வழங்க உள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம்தான் (Honorarium) தரப்படுகிறது.

(ஆ) இந்த மதிப்பூதியத்தை கீழ்க்கண்டவாறு இரட்டிப்பாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| | | முன்பு அளிக்கப் பட்ட விகிதம். | 1-4-1986-க்குப் பின்னர் அளிக்கப் படும் விகிதம். |
|---|---|---|---|

முதுநிலை பிரிவு (Senior Division) மற்றும் மகளிர் பிரிவு முதுநிலை.

| | | | |
|---|---|---|---|
| மேஜர் | ரூ. 100 | மாதந்தோறும் | ரூ. 200 மாதந்தோறும் |
| காப்டன் | ரூ. 90 | ,, | ரூ. 180 ,, |
| லெப்டினட் | ரூ. 80 | ,, | ரூ. 160 ,, |
| 2 லெப்டினட் | ரூ. 75 | ,, | ரூ. 150 ,, |

இளநிலை பிரிவு (Junior Division) மற்றும் மகளிர் பிரிவு இளநிலை.

| | | |
|---|---|---|
| தலைமை அதிகாரி | ரூ. 75 மாதந் தோறும் | ரூ. 150 மாதந் தோறும் |
| முதல் அதிகாரி | ரூ. 65 ,, | ரூ. 130 ,, |
| இரண்டாம் அதிகாரி | ரூ. 55 ,, | ரூ. 110 ,, |
| மூன்றாம் அதிகாரி | ரூ. 50 ,, | ரூ. 100 ,, |

### சேலம் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

175 —(*வினா எண் 9605) திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆத்தூரில் ஒன்றை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மாவட்டங்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலையைவிட இன்றைக்கு உள்ள வேலையின் பளு 3 மடங்கு அதிகமாகி இருக்கின்ற காரணத்தால், தாலுக்கா அளவிலுள்ள எங்கள் ஆத்தூர் தாலுக்காவில் ஒரு கல்வி மாவட்டத்தை ஏற்படுத்த அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்வி மாவட்டத்தை அமைப்பதற்கு 5.7 இலட்சம் செலவாகும். கிட்டத்தட்ட 800 லிருந்து 900 வரைக்கும் பள்ளிகள் அந்த வட்டத்திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக 2,422 பள்ளிகள் இருக்கின்றன. ஏற்கனவே 3 கல்வி மாவட்டங்கள் இருக்கின்றன. சேலம், நாமக்கல், சங்ககிரி ஆகிய மூன்றும் சேலத்தின் 3 கல்வி மாவட்டங்கள் ஆகும். எனவே, சேலத்தை இரண்டாகப் பிரித்து ஆத்தூரில் கல்வி மாவட்டம் ஏற்படுத்த வேண்டுமென்றால், அங்கே 400 பள்ளிகள் தான் வரும். அது தற்போதைய விதிக்கு உட்படாமல் இருக்கின்ற காரணத்தால், அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளிகளுக்கென இயக்குநரகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால், மாவட்ட அளவில் அதற்குத் தனியாக மாவட்ட அலுவலர்களை நியமிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. கல்வி மாவட்டங்களைப் பிரிக்க முடியவில்லை என்று சொன்னாலும், இருக்கின்ற கல்வி மாவட்டங்களில் துவக்கப் பள்ளிகளுக்கு என்று தனி மாவட்ட அலுவலர்களை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியினை மேற்கொள்வார்களா? அப்படிப்பட்ட திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளிக்கென இயக்குநரகம் தற்போது தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை விரிவாக்க அரசு படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கும்.

திருமதி தா. இராசாம்பாள்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கல்வி மாவட்டத்திலே மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கள் அந்தப் பள்ளிகளைத் தணிக்கை செய்வதற்கும் அதோடு ஆசிரியர்களுடைய நிர்வாகத்தில் உள்ள—பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்கு மேலும் கொடுக்கப்படுகின்ற சத்துணவுப் பணிகளைக் கண்காணிப்பதற்கும் மிகவும் சிரமமாக



இருக்கிறது. ஏற்கனவே, 1960—61-லிருந்த ஆசிரியர்களைவிட தற்போது இருக்கிற ஆசிரியர்களுக்கு அதிகமான பிரச்னைகள் இருக்கிற காரணத்தினால் மீண்டும் பரிசீலனை செய்து அரசு ஆத்தூர் தாலுகாவில் கல்வி மாவட்டத்தை உருவாக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கும் தணிக்கை குறித்து அவர்களுக்குள்ள வேலைப் பளுவுக்கும் தொடர்பு இருப்பதாக நான் கருதவில்லை. ஆத்தூர் மாவட்டத்திற்கென தனியாக ஒரு மாவட்டம் அமைக்க வேண்டுமானால், தமிழகத்திலே ஒவ்வொரு பகுதியிலும் அதுபோன்ற பிரச்சினைகள் எழுந்து, இன்னும் அதிகமான செலவு அரசுக்கு ஏற்படும். நிதிநிலைமையை ஒட்டித்தான் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

உத்திரமேரூரில் துணை நீதிமன்றம்.

176—(*வினா எண் 9844) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூரில் துணை நீதிமன்றம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

இலவச சட்ட உதவி வழங்கும் திட்டம்.

177-(*வினா எண் 11224)—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலவச சட்ட உதவி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியம் எத்தனை இடங்களில் மத்தியஸ்த மையம் அமைத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்தின் கீழ் 16 மத்தியஸ்த மையங்கள் இயங்கி வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத்தலைவர் அவர்களே, மேலும் எத்தனை மையங்களை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Mediation centres என்று சொல்லக்கூடிய இந்த மத்தியஸ்தம் செய்து சமாதான முறையில் தீர்த்து வைக்கும் மையங்கள், நீதிமன்றங்களுக்குள் உள்ள வழக்குகளாக இருந்தாலும் சரி, நீதிமன்றங்களுக்குச் செல்லவேண்டிய பிரச்னைகளாக இருந்தாலும் சரி settlement out of court என்ற முறையிலே தீர்வினைக் காண்பதற்காக ஒவ்வொரு வட்ட அளவிலும் இந்த mediation centres அமைக்க வேண்டுமென்பது அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையில் தற்போது அதிகப்படியான நிதியைக் கூட இந்தியத் துணைக் கண்டத்தில், தமிழகத்தில்தான் ரூ. 38 இலட்சம் அளவுக்கு, ஒதுக்கி இருக்கிறோம். இந்த ஆண்டு ரூ. 40 இலட்சமாகக் கூட உயர்த்த இருக்கிறோம். படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளியவர்களுக்கு விரைவில் உதவியைப் பெற்றுத் தருகிற இந்த மையங்களை நடத்துவதற்காக மத்திய அரசு ஏதாவது உதவியைச் செய்து வருகின்றதா? அதோடு நீதிமன்றத்திலேயே கிடைக்கிற இடத்தில்தான் இந்த மையங்களை நடத்த வேண்டியிருக்கிறது. இதற்கென்று சிறிய கட்டிடத்தையாவது நீதிமன்ற வளாகத்திற்குள் கட்டித் தருகின்ற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய நிதி உதவி இதற்கு இல்லை. மாநில அரசினுடைய பொருளாதாரத்தைக் கொண்டுதான் இதை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இட வசதியைப் பொறுத்தவரைக்கும் தற்போது இந்தப் பிரச்சனை உயர்நீதிமன்றத்தால் அரசுக்குத் தெரிவிக்கப்படவில்லை. பிரச்னை இருக்கும் என்றுகூட அரசு கருதவில்லை அப்படி இருந்தால் அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச சட்ட உதவி மையங்கள் தமிழகத்தில் செயல்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த, எந்த மாவட்டங்களில் செயல்படுகின்றன? அனைத்து மாவட்டங்களுக்கும் அது விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 மாவட்டங்களில் அல்ல; 16 mediation centres என்று சொன்னேன். 16 இடங்களிலே செயல்படுகின்றன. செங்கை மாவட்டத்திலே திருப்போரூரில், காஞ்சிபுரத்திலே உத்திர மேரூர் பகுதியில், காஞ்சிபுரம் தாலுகாவில் வாலாஜாபாத்தில், திருவள்ளூர் தாலுகாவில் கடம்பத்தூரில், குன்னூர் தாலுகாவில் கோத்தகிரியில், பூந்தமல்லியில் ஸ்ரீபெரும்புதூரில், திருப்பத்தூரில் கீழ்சீவல்பட்டியில், மதுராந்தகத்தில் சித்தனூர், அண்ணா மாவட்டத்தில் காடம்பாறையில், கடலூரில் தங்கரைர்,



நீலகிரியில் மஞ்சூரில், பழனியில் சத்திரம்பட்டியில், காரைக்குடியில் கல்லன், ஜெயங்கொண்டானில் ஆண்டிமடம், தென்னாற்காட்டில் குறிஞ்சிப்பாடி, கள்ளக்குறிச்சியிலே கல்வராயன் மலை ஆகிய இடங்களில் அவை செயல்படுகின்றன.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இலவச சட்ட உதவி வழங்கும் மையங்களின் மூலம் 1985–86-ல் எத்தனை வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டன? அதில் எத்தனை பைசல் செய்யப்பட்டன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக 91,937 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றில் பல கட்டங்களில் பல தீர்க்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் மூலமாக 87 ஆயிரத்து சொச்சம், சட்ட உதவிக் குழுவின் முயற்சியால் உடன்பாடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 4,141—அதாவது இந்த மீடியேஷன் சென்டர்ஸ் மூலமாக, mediation centres—negotiation and settlement out of court. என்ற முறையில் அவை தீர்த்து வைக்கப்பட்டன. அதைப்போலவே கருத்து வேறுபாடுகள் உள்ள வழக்குகளிலே 1,418 வழக்குகள் Settlement out of court மூலம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றில் இன்னும் நிலுவையாக 24,421 வழக்குகள் இருக்கின்றன. நீதிமன்றத்திலேயே சட்டஆலோசனைக் கமிஷன் தலையிட்டு 77,956 வழக்குகளைத் தீர்த்து வைத்திருக்கிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவச சட்ட உதவி என்பது ஏழைகளாக இருப்பவர்கள், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் அவர்கள் வழக்கு மன்றங்களிலே இழுக்கப்படுவதால்தான் அவர்களுக்கு வசதியில்லை என்ற அடிப்படையில் இந்த உதவிகளைத் தமிழக அரசு செய்திருக்கிறது. இது நல்லதொரு சிறந்த திட்டம் என்பதால் அதே சமயத்தில் இருபதம்சத் திட்டத்திலே இது இல்லை என்றாலும், அதிலேகூட சேர்க்கப்பட வேண்டிய ஒரு நல்ல முக்கியமான திட்டமாக இருக்கின்ற காரணத்தினால் மத்திய அரசிடம் வலியுறுத்தி அதற்கான நிதி உதவியைப் பெறுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசிடம் இதுகுறித்து நிதியை மாநில அரசு கேட்டுத்தான் வருகிறது. தொடர்ந்து வலியுறுத்துவோம்.

திருக்கோவிலூரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்.

178—(*வினா எண் 4655) திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் நகரத்தில் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் மேலும் வீடுகள் கட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் நகரமானது வருவாய்க் கோட்டத்தினுடைய தலைமையிடமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே பல்வேறு அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. அதிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்குத் தற்போது குடியிருப்பு வசதி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அதற்கு முன்னுரிமை கொடுத்து வருகின்ற ஆண்டிலாவது வீடுகள் கட்டித்தர வீட்டு வசதி வாரியம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 60 வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நிதிநிலைக்கேற்ப அரசு பிறகு பரிசீலிக்கும்.

திரு. வி. பி. சிந்தன்: அவைத் தலைவர் அவர்களே, ஆலை அதிபர்களுடன் கலந்து பேசி, தொழிலாளர்களுக்கு வீடு கட்ட ஹட்கோவினுடைய உதவியையும் பயன்படுத்திக் கொண்டு திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி, தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூரில்-அது 'டிவிஷனல் ஹெட் குவார்ட்டார்ஸ்'—அங்கே கூடுதலாக வீடு கட்டித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் எந்தத் தொழிற்சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.



புதுக்கோட்டை புறநகர் பகுதிக்கு வீட்டு வசதி வாரிய வீடுகள்.

179—(*வினா எண் 9527) திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் புதுக்கோட்டை புறநகர் பகுதிக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சுமார் ஐந்து கோடி ரூபாயில் முதல் கட்டப் பணிகள் முடிவுற்று வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாகவும் குடியிருப்புகள் கட்ட அரசு திட்டமிட்டிருக்கிறது.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக ஐந்து கோடி ரூபாய் செலவில் வீடுகள் கட்டப்பட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் இது வரையிலும் அரசு அதிகாரிகளுக்கு எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன? ஒதுக்கப்பட்ட அந்த மனைப் பட்டாக்களில் தனி நபர்களுக்கு எத்தனை மனைப்பட்டா வழங்கப்பட்டு அரசு மூலம் விற்கப்பட்டு இருக்கிறது? ஒரு மனையினுடைய விலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் வாரியம் இது வரை நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கு ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் செலவில் சுமார் 198 குடியிருப்புகளும் குறைந்த வருவாயினருக்கு 25 இலட்சம் செலவில் 100 குடியிருப்புகளும், தமிழக அரசு ஊழியர் மற்றும் வாடகை வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 2 கோடியே 60 இலட்சம் செலவில் 226 குடியிருப்புகளும் கட்டி முடித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 72 இலட்சம் செலவில் மேலும் 2 குடியிருப்புகள் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன. மேலும், சிறைச்சாலை ஆய்வாளருக்கு ஒரு குடியிருப்பு, துணை நீதிபதிக்கு ஒரு குடியிருப்பு, மாவட்ட முன்சீபுக்கு ஒரு குடியிருப்பு, துணை மாவட்ட குற்ற இயல் நீதிபதி மற்றும் துணை குற்ற இயல் நீதிபதி, வருவாய்த் துறையைச் சார்ந்த மாவட்ட அதிகாரி, வருவாய்க் கோட்ட அலுவலர் ஆகியோருக்கு தலா ஒரு குடியிருப்பும் ஏற்கனவே கட்டி முடித்துள்ளது.

(முற்பகல் 9-40)

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனைகளைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு கிரவுண்டுக்கு சுமார் 7,000 ரூபாய் நிர்ணயம் செய்து, அந்த அடிப்படையில் அரசு விற்பனை செய்து வருகிறது.

திரு. அ. வெங்கடாசலம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டையில் தேசிய ஒருமைப் பாட்டு விழாவில் பேசும்போது வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அறந்தாங்கியில் வீடுகள் கட்டப்படும் என்று சொன்னார்கள். அதைப் போன்று மற்ற தாலுகா தலைமையிடங்களிலும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவும் நலிந்த பிரிவினருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் எதிர்காலத்தில் விரிவுபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அரசு வகுத்திருக்கின்ற கொள்கை அடிப்படையில் மாவட்டத் தலைமையிடங்களிலும் கோட்டத் தலைமையிடங்களிலும் (டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ்) அரசு அலுவலர்களுக்கும் பொது மக்களுக்கும் குடியிருப்புகளை அரசு கட்டி வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிடமாக இருப்பதால் அங்கே குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன; தொடர்ந்து கட்டப்படவிருக்கிறது. அறந்தாங்கி டிவிஷனல் ஹெட் குவார்ட்டர்லாக இருப்பதால் அங்கும் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படவிருக்கின்றன. தாலுகா தலைமையிடங்களில் குடியிருப்பு கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை,

திரு. ஜே. முகம்மது கனி : தலைவர்அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்படுவதற்கு உத்தரவாதம் தந்தற்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புதுக்கோட்டையைச் சேர்ந்த காந்திநகர், காமராஜர் நகர், கோவில்பட்டி போன்றவை மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கே இருக்கின்ற குடிசைகளை மாற்றி, நல்ல வீடுகளை கட்டிக்கொடுக்க குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று, நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் பணி ஏற்கெனவே சென்னை மாநகரில் மட்டும் நடைபெற்று வருகின்றது. சமீபத்தில் குடிசை மாற்று வாரியத்தினுடைய பணி 43 நகராட்சிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதில் புதுக்கோட்டையும் இணைக்கப்பட்டுள்ளது. எனவே மாண்புமிகு உறுப்பினர்



அவர்கள் சொன்ன இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர கடன் வசதி மற்றும் ஏழை எளிய ம்க்களுக்குச் செய்யப்படுகின்ற உதவிகள் எல்லாம் செய்யப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் டிவிஷனல் ஹெட் குவார்ட்டர்ஸிலும், மாவட்டத் தலைமையிடங்களிலும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதைப் போன்று தாலுக்கா தலைமையிடங்களிலும், குறிப்பாக நிலக்கோட்டை போன்ற இடங்களில் ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நில ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் டிவிஷன், ஜில்லா என்று பார்க்காமல், ஏற்கெனவே ஆர்ஜிதம் செய்து வைத்திருக்கிற இடங்களில் துரிதமாக வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, தாலுகா அளவில் வீட்டு வசதி வாரியம் பணிகளை மேற்கொள்ளும் போது நிலக்கோட்டை பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கோட்ட தலைமையிடங்களிலும் மாவட்டத் தலைமையிடங்களிலும் அரசு அலுவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். அதைப் போன்று தாலுக்கா தலைமையிடங்களில் இல்லை என்றாலும் மாவட்டத் தலைமையிடங்களில் பத்திரிகை நிருபர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா? ஏனென்றால் சிலநேரங்களில் பத்திரிகை நிருபர்கள், அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கின்றபோது அவர்களை பேட்டி காண வேண்டுமென்றால் ஒரே நேரத்தில் அவர்களுக்குத் தகவல் கொடுப்பதற்கும் அவர்களை அழைத்து வருவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே மாவட்டத் தலைமையிடங்களில் பத்திரிகை நிருபர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா? இல்லை என்றால் இனிமேலாவது பரிசீலித்து, ஏற்றுக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியைப் பெற்று இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டப்படுகின்ற வீடுகளைப் பொறுத்தவரையில் 43 நகரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதனுடைய பட்டியலை அறிவிக்க அமைச்சரால் இயலுமா என்பதையும் திருச்சியும், பெரம்பலூரும் இதில் இணைக்கப்பட்டு உள்ளதா என்பதையும் அறிய விருமபுகிறேன்.

[1986 நவம்பர் 25

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி புதுக்கோட்டை மாவட்டத்தில் ஹவுஸிங் போர்டு சார்பில் கட்டப்படுகிற வீடுகள் பற்றியது. ஸ்லம் க்ளியரன்ஸ் பற்றிய குறிப்பு இப்போது என்னிடத்தல் இல்லை. 43 நகரங்கள் எவை, எவை என்று அரசின் ஜி. ஓ. பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஜி. ஓ. காப்பி வேண்டுமென்றால் கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தேவை என்றால் தருகிறேன்.

கீழ்க்கொடுங்காலூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

180—(*வினா எண் 8647) திரு. அ. ஆறுமுகம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி வட்டம் கீழ்க்கொடுங்காலூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் எண். 1374 இதன் நிர்வாக போர்டை கலைத்து தனி அலுவலரை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

கடைய நல்லூரில் கூட்டுறவு நூற் பாலை.

181— (*வினா எண் 9179) திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் கடையநல்லூரில் ''கூட்டுறவு நூற்பாலை'' அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, பின்தங்கிய மாவட்டமான நெல்லை மாவட்டத்தில் கடையநல்லூர், தென்காசி, புளியங்குடி போன்ற பகுதிகளில் ஏறத்தாழ 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் தனிப்பட்ட முதலாளிகளிடம் கொத்தடிமைகளாக இருப்பதால் அவர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்துகின்ற வகையில் அடுத்த ஆண்டாவது அங்கே ஒரு நூற்பாலை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 25]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 328 நூற்பாலைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. கூட்டுறவுத் துறையின் சார்பிலே சுமார் 18 நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. வருகிற ஆண்டில் தென்னாற்காடு மாவட்டம் கிள்ளையிலும், தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியிலும், இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலும் ஆக இந்த மூன்று இடங்களில் நூற்பாலைகள் அமைக்க மைய அரசினுடைய அனுமதிக்காக மாநில அரசு பரிந்துரை செய்து இருக்கிறது. இதைக் கேட்டதற்கே தமிழகத்தில் நூற்பாலைகள் அதிகம் என்றும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஸ்பிண்டில்ஸ் அதிகம் என்றும் அதாவது தமிழகத்தினுடைய தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்றும் சொல்லி மைய அரசு இதுவரையில் அனுமதி தராமல் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் புதிதாக மைய அரசிடமிருந்து அனுமதி பெறுகிற வாய்ப்புகள் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இனிமேல் கிடையாது.

திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட போகநல்லூர் கிராமத்தில் இருக்கிற ஒரு சிலர் நூற்பாலை வருவதாகச் சொல்லி அங்கே மெம்பர்களைச் சேர்த்துக் கொண்டு இருப்பது குறித்து அரசுக்குத் தெரியுமா? அப்படி ஏதாவது மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற்று அவர்கள் நடத்துகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற பகுதியில் எந்த நூற்பாலையும் வருவதற்கான வாய்ப்பு இல்லை. ஒருவேளை இதற்கு முன்னால் தனியார்கள் யாரேனும் அரசாங்கத்தினிடத்தில் அனுமதி பெற்று அந்த வகையில் மெம்பர்களைச் சேர்க்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எனவே தனியாகக் கேள்வி கேட்டால் அது குறித்து விசாரித்து தக்க பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது தர்மபுரி மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில் உள்ள பாப்பாரப்பட்டியில் நூற்பாலை ஏற்படுத்துவதற்காக

தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்திருப்பதாகச் சொன்னார்கள். அங்கே பட்டு நூற்பாலை ஏற்படுத்துவதற்காகப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளதா அல்லது சாதாரண நூற்பாலை ஏற்படுத்து வதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பட்டு நூற்பாலை அல்ல; சாதாரண நூற்பாலைதான்.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக நூற்பாலை தொடங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புதுக்கோட்டை பற்றி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் அது அவர்களுடைய சொந்த மாவட்டம். அங்கே இரண்டே இரண்டு நூற்பாலைகள் இருக்கின்றன. காவேரி மில் இருக்கிறது, நமன சமுத்திரத்தில் லட்சுமி செண்பகா மில் இருக்கிறது. இவை பல ஆண்டுக் காலமாக ஒழுங்காக நடக்காமல் மூடிக் கிடக்கின்றன. ஒன்றரை ஆண்டுக் காலமாக லட்சுமி செண்பகா மில் மூடிக்கிடக்கின்றது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கும் தெரியும். எனவே இம்மாதிரி நூற்பாலைகள் மீண்டும் இயங்குவதற்கும் அங்கே வேலை செய்கிற தொழி லாளர்களுக்கு வேலை கிடைப்பதற்கும், அவர்களுடைய குடும் பத்தினர் நிம்மதியான, நிரந்தரமான வாழ்வு வாழ்வதற்கும் அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கேள்வி புதியதாக நூற்பு ஆலைகள் துவக்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருப்பது ஏற்கெனவே மூடிக்கிடக்கிற நூற்பாலைகள் பற்றி ஏற்கெனவே மூடிக்கிடக்கிற நூற்பு ஆலைகளை திறப்பது குறித்து அரசு தீவிரமாகப் பல்வேறு கோணங்களில் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இயங்குகின்ற கூட்டுறவு நூற்பு ஆலைகளில் எத்தனை இலாபத்தில் இயங்குகின்றன. எத்தனை நட்டத்தில் இயங்குகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல புதியதாக நூற்பு ஆலைகள் துவங்குவதற்கான செயற் குறிப்பு இருக்கிறதா இல்லையா என்ற மூலக் கேள்விக்கான விடைதான் என்னிடத்திலே இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.



திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுக்காவிலே இந்த கூட்டுறவு நூற்பு ஆலையை அமைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி, மாண்புமிகு கடையநல்லூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினா அவர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள், ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடையநல்லூரிலே அமைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கிற காரணத்தால் மத்திய அரசிடம் ஏற்கனவே கேட்கப்பட்ட நூற்பு ஆலைகளில் இது சேர்த்துக் கேட்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், அந்தப் பகுதியிலே நூற்பு ஆலை அமைப்ப தற்கான காரணங்கள் நிறைய இருக்கின்ற காரணத்தாலே, நீங்கள் கேட்பதை கேளுங்கள். எதிர் காலத்தில் கொள்கையில் மாற்றங்கள் வந்தால், அதற்கு வாய்ப்பு ஏற்படலாம் என்ற வகையில் அதனுடைய அவசியத்தை மத்திய அரசிடம் வற் புறுத்த விழைவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பதிலே என்றும் கஞ்சத்தனம் செய்வதில்லை. தாராளமாகத்தான் கேட்டிருக் கிறோம். தமிழகத்திலே இருக்கிற மொத்த ஸ்பிண்டில்ஸ் 67 லட்சம் ஆகும். தமிழகத்திலே மொத்த உற்பத்தி சுமார் 3 கோடியே 70 லட்சம் மில்லியன் கிலோக்கள். அதிலே தமிழகத்திலேயே கொள்முதல் செய்யப்படுவது 1 கோடியே 90 லட்சம் மில்லியன் கிலோக்கள். மீதி இருக்கிற உபரி நூல்கள் வெளி மாநிலங்களுக்குத்தான் விற்பனைக்காக அனுப்பப் பட்டு வருகின்றன. ஆகவே நூற்பு ஆலைகளைப் பொறுத்த வரையில், துவங்குவதற்கு வேண்டுமானால் சாத்தியக் கூறுகள் இருக்கலாமே தவிர, மார்க்கெட்டிங் என்ற நிலைமையிலே பார்க்கிறபோது அதற்கான வாய்ப்பு இல்லை. இருப்பினும் 3 நூற்பு ஆலைகளுக்கு அனுமதி கேட்டிருக்கிறோம். மத்திய அரசு ஏற்கனவே ஜீரோ இன்டஸ்ட்ரீஸ் ஏரியாவிற்குத்தான் லைசன்ஸ் தரப்படும் என்று சொல்லிவிட்டது. ஆகவே இவற்றை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்துத்தான் மத்திய அரசு எந்த முறையில் கேட்டால் கிடைக்கும் என்று சொல்லுகிறார் களோ, அந்த முறையில் பார்த்துத்தான் அந்த 3 பகுதிகளுக்குக் கேட்டிருக்கிறோம். இது போன்று மற்றப் பகுதிகளில் வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால் இந்த 3 பகுதிகளுக்கு மட்டும் தான் கேட்டிருக்கிறோம்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் தாலுக்கா வறட்சியான பிரதேசம். நிறைய பருத்தி விளைகிறது. கைத்தறித் தொழிலாளர்களும் நிறைய இருக்கிறார்கள். பவர்லூம்களும் நிறைய இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையை அமைக்க மத்திய குழுவிடம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் படி பரிந்துரை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னது போல நெல்லை மாவட்டம் கடையநல்லூர் பகுதிக்கு மட்டும் அல்ல. பொதுவாகவே மாண்புமிகு உறுப்பினர்களின் எல்லாத் தொகுதிகளுக்கும் சேர்த்தே சொல்லிவிடுகிறேன். இந்த 5 ஆண்டு திட்டத்தில் நான் ஏற்கெனவே சொன்ன 3 கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கான அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிற விண்ணப்பங்களைத் தவிர, வேறு எதுவும் அரசிடம் இப்போது இல்லை.

### தாராபுரம் கூட்டுறவு நூற்பாலையை விரிவாக்கல்

182— (*வினா எண் 10154) திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், தாராபுரத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் விரிவாக்க திட்டத்தை அருகில் உள்ள சென்னிமலையில் துவங்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தொகுதி மக்களுடைய கோரிக்கையை நேரிலேயே கண்டறிந்து, இத்துறையில் முன்பு பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேஸ்ட் காட்டன் மில் ஒன்றை இப்பகுதியில் நிறுவ உறுதி அளித்திருந்தார்கள். அந்தப் பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து எனக்குத் தெரியாது. கேள்வி கூட்டுறவு நூற்பு ஆலை ஆரம்பிப்பது பற்றி, வேஸ்ட் காட்டன் ஆலை அமைப்பது பற்றி அல்ல. அது குறித்துத் தனியாகக் கேள்வி போட்டால், அப்படி முன்னாள் அமைச்சர் அறிவித்து அரசிடம் பரிசீலனையில் ஏதாவது விவரங்கள் இருக்குமானால் அது குறித்துச் சேகரித்து தருகிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு துணி நூல் கழகம் மூலம் சிறப்பாக பெரியார் மாவட்டம் சிவகிரியிலே நிறுவப்பட்டுள்ள விசைத்தறி ஆலையிலே நூல் பற்றாக்குறை காரணமாக அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 'நோ வொர்க்' கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது போன்று நூல் பற்றாக்குறை அடிக்கடி ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலை இழக்கிற நிலைமை அங்கேயிருந்து வருகிறது. எனவே அந்த நூல் பற்றாக்குறையைப் போக்குகிற வகையில் புதிய நூற்பாலையை பெரியார் மாவட்டத்தில் நிறுவுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, பவர் லூம் காம்ப்ளக்ஸ் நூல் பற்றாக்குறை பற்றி கேட்கிறார்கள். பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் 25 ஆயிரம் ஸ்பின்டில்ஸ் அளவில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டு கூட்டுறவு நூற்பாலை அந்த மாவட்டத்தில் அமைக்கிற வாய்ப்பு இல்லை.

திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி நூற்பாலை விரிவாக்கத் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே கேள்வி தாராபுரத்தில் உள்ள நூற்பாலையை விரிவாக்கம் செய்வதைப் பற்றியதாகும். எனவே உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கும் இந்த ஆலை குறித்த தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை.

திரு. டி. என். முருகானந்தம்: தலைவர் அவர்களே, புதியதாக கூட்டுறவு நூற்பாலை தொடங்குவதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு உரிமங்கள் கேட்டு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏழை எளிய மக்கள் அணிவதற்கு வாய்ப்பாக பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி செய்யும் நூற்பாலைகள் துவங்க உரிமங்கள் தாராளமாக வழங்கப்படுமென்று பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே பாலியஸ்டர் நூற்பாலைகள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இந்த மூன்று நூற்பாலைகள் கூட பாலியஸ்டர் நூற்பாலைகளுக்குத்தான் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது.

### வேதாரண்யம் கைக்குத்தலரிசி குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

183—(*வினா எண் 9407) திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் கைக்குத்தலரிசி குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கைகுத்தலரிசித் தொழிலில் மட்டும் ஈடுபட்டிருந்த சங்கத்தை பல தொழிற் கூட்டுறவுச் சங்கமாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, இந்த கைக் குத்தலரிசி குடிசைத் தொழிலுக்கு மாற்று ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்போது துவங்கப் படும்? அதிலே எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அது கூட்டுறவுத் துறையில் இருக்கிற காரணத்தால் சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொண்டு ஏற்கனவே இருக்கிற தொழிலை நிறுத்தி புதிய தொழிலைத் துவங்க வேண்டுமோ அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வேகமாகப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். முன்பு பணியாற்றியவர்கள் அத்தனை பேருக்கும் அதிலே பணி கிடைக்கும்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, வேதாரண்யம் கைக்குத்தல் அரிசி குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் மட்டுமல்லாமல் திருமழிசைக்குப் பக்கத்தில் இருக்கிற இப்படிப் பட்ட சங்கமும் இப்போது இயங்காமல் இருக்கிறது. அதற்கும் மாற்று நடவடிக்கைகள் எடுத்திருப்பார்களென்று கருதுகிறேன். மொத்தத்தில் கைக்குத்தலரிசி விற்பனையானால் இந்தச் சங்கங்கள் எல்லாம் செம்மையாகச் செயல்படும். எனவே தமிழ்நாட்டில் 85 லட்சம் மக்களுக்கு இலவச உணவு அளிக்கும் போது அங்கே சத்தோடு கூடிய கைக்குத்தலரிசி, தவிடு நீக்காத அரிசி போடுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, மற்ற அரிசியோடு ஒப்பிடுகிறபோது கைக்குத்தல் அரிசியின் விலை அதிகமாகிறது. சுமார் 4½ ரூபாய் ஆகி விடுகிறது. அதைச் சத்துணவுத் திட்டத்திற்கு உபயோகப் படுத்துவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இரண்டாவது இந்த கைக்குத்தலரிசியை நம்மைப் போன்ற பெரியவர்களே பெரியதாக இருப்பதால் சாப்பிட அச்சப் படுகிறார்கள். ஆகவே குழந்தைகளுக்கு அதைக் கொடுப்பது என்பது முடியாத காரியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிப் போடப்பெற்ற வினாக்கள் 115, 116 மற்றும் 118 இப்போது எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

### அரக்கோணம் வட்டத்தில் ஏரிகளை சீர்செய்தல்

115— (*வினா எண் 2019) திரு. வி. கே. இராசு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அரக்கோணம் வட்டம் உரியூர், நாகவேளு, பருத்திப் புத்தூர், வளர்புறம், முதூர் ஆகிய ஊர்களில் உள்ள ஏரிகளை சீர் செய்யும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

### நாங்குநேரி கொடுமுடியாறு அணைத் திட்டம்.

116—(*வினா எண் 3447)—திரு. மு. ஜான் வின்சென்ட் மற்றும் திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் கொடுமுடியாறு அணைத் திட்ட ஆய்வுப் பணிகள் முடிவடைந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) திட்டத்தை மேற்கொள்ள அரசின் ஒப்புதல் வழங்கப் பட்டுவிட்டது.

(இ) ரூ. 1,560 இலட்சங்கள்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்— விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொடுமுடியாறு திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவை சமீபத்திலே இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இந்தத் திட்டத்தின் வேலைகள் இயங்கவில்லை எனறு பொதுமக்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. அங்கே இயந்திரங்கள் எவ்வளவு வந்திருக்கின்றன, அந்த அலுவலகம் எங்கே அமைக்கப்பட்டு இருக்கிறது, இதனால் பயனடையும் பாசன ஆயக்கட்டுகள் எத்தனை ஏக்கர் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு வள்ளியூரில் கொடுமுடியாறு நீர்த்தேக்கக் கோட்டம் என்ற ஒரு கோட்டத்தை ஆரம்பித்து இப்போது செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள். இதிலே வன இலாக்காவிற்குச் சொந்தமான 33.15 ஏக்கர் நிலங்களை நாம் எடுக்கவேண்டியதாக இருக்கிறது. அது வரைக்கும் காலதாமதம் செய்யாமல் அந்தப் பகுதியிலே இருக்கிற கால்வாய்களைப் புதுப்பிக்கும் பணிகளை முதலிலே எடுத்துக்கொள்ளும்படி, செயற்பொறியாளர் அவர்களிடம் அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஆகவே அந்தப் பணிகளை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் இந்தத் திட்டத்தால் 1,954 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு உறுதிப் பாசனமும், 1,925 ஏக்கர் பாசனம் பெறமுடியாமல் இருக்கிற நிலங்களுக்குப் பாசனமும் கிடைக்கும்.

திரு. மு. ஜான் வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடியாறு திட்டத்தில் சேர்க்கப்பட்ட அந்த பரப்பளவோடு அந்தப் பகுதியிலே உள்ள கூடுதல் நிலங்களைச் சேர்க்க அரசு முன்வருமா? அதேநேரத்தில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வன இலாக்கா 30 ஏக்கர் நிலம் விஷயமாக அவர்களைக் கேட்கவேண்டும் என்று சொன்னார்கள். வன இலாக்கா சொல்லுகின்ற இடங்களில் காரியங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான நிலங்களைச் சேர்க்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறது. பின்னாலே அதைப் பற்றி யோசிக்கலாம். அதேபோல் வனத்துறைக்கு சம்பந்தப்பட்ட இடங்களை எடுப்பதில் ஒருசில இடங்களில் தகராறுகள், மத்திய அரசாங்கத்திலே கேட்டுச் செய்யவேண்டியதாக இருப்பதால், அதையெல்லாம் துரிதப்படுத்திச் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கின்றபோது, வனத்துறைக்குச் சொந்தமான சில ஏக்கர் நிலங்களை நமக்குப் பெற வேண்டியிருப்பதில், காலதாமதம் ஆகக்கூடாது என்ற வாசகத்தைச் சொன்னார்கள். 1970-லே தொடங்கி, 6 ஆண்டுகள் ஆய்வு செய்து, மத்திய திட்டக் கமிஷன் அனுமதி வழங்கி, மத்திய அரசு 35 லட்ச ரூபாய் வழங்கி வேலை நடந்தது ஒரு காலத்தில். இப்போது அங்கு அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. அங்கே மத்திய திட்டக் கமிஷன் அனுமதி வழங்கியதற்குப் பின்னாலேயும், இந்தச் சிரமம் ஏற்படுவதற்கு என்ன காரணம்? அதை உடனடியாக போக்கி வேலைகள் எப்போது துரிதப்படுத்தப்படும்? 60 பேர்களை அனுமதித்து இருக்கிறார்கள்.





அவர்கள் வேலையின்றி சும்மா இருப்பதாகத்தான் இப்போது தகவல் கடைசியில் வந்திருக்கிறது. இதற்கு ஆவன செய்ய நமது அமைச்சர் பெருமகனார் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வன இலாக்காவிற்குச் சொந்தமான இடங்களை நாம் எடுக்கவேண்டும் என்று சொன்னால், மத்திய அரசின் ஒப்புதல் பெறாமல் எடுக்க முடியவில்லை. அதை வேகமாகச் செய்து இப்போது வழிவகைகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல் அங்கே ஆட்கள் வெறுமனே சும்மா இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி வேலை நடக்காமல் இருக்கக்கூடாது என்ற எண்ணத்தோடுதான் அங்கேயுள்ள கால்வாய்களைப் புதுப்பிக்கும் பணியை முதலிலே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று செயற்பொறியாளர் அவர்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

டாக்டர் நே. குமாரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கொடுமுடியாறு அணைத் திட்டத்தை நிறைவேற்ற இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மிக்க நன்றி. அதேபோல் தமிழகத்தில் புதிதாக அணைகளைக் கட்டுகின்ற திட்டங்கள் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா? அதேமாதிரி அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்விலே நிறைய திட்டங்கள் இருக்கின்றன. தனியாகக் கேள்வி போட்டால், எந்தெந்தத் திட்டங்கள் ஆய்விலே இருக்கின்றன என்பதையும், அதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும் சொல்லமுடியும்.

### தமிழ்நாட்டில் உலமாக்கள் ஓய்வு ஊதியம்.

118— (*வினா எண். 9097) டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை நபர்களுக்கு உலமாக்கள் ஓய்வு ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது?

(ஆ) எவ்வளவு பணம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1981-ம் ஆண்டு உலமா ஓய்வூதியத் திட்டம் முதலில் 400 பேர்களுக்கென்றே உருவாக்கப்பட்டது. இது, படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது இத்திட்டத்தினால் ''00 பேர்கள் பயனடைந்து வருகின்றனர். 1987-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

[1986 நவம்பர் 25

(ஆ) 1986–87ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் இதற்காக ரூ. 22,50,000/- ஒதுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலமா ஓய்வு ஊதியம் கொடுப்பது குறித்து நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், இந்த ஓய்வு ஊதியத்திற்கு ஏதாவது வயது வரம்பு உள்ளதா? அப்படியானால் அது எவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓய்வு ஊதியம் பெறுவதற்கான தகுதி வக்ப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டு பள்ளிவாசலில் குறைந்தது 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் 60 வயதுக்கு மேல்இருப்பவர்கள் தான் இந்தத் திட்டத்தில் பயன் பெற முடியும்.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி வக்ப் வாரிய நிதியிலிருந்து ஒதுக்கப்படுகிறதா? அல்லது அரசாங்க நிதியிலிருந்து ஒதுக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க நிதியிலிருந்து தான் ஒதுக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்த உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இதுவரைக்கும் எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன எத்தனை மனுக்கள் டிஸ்போஸ் ஆகியிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான சரியான விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. இப்போது ஆயிரம் பேருக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லி அரசு முடிவு செய்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலமாக்கள் ஓய்வு ஊதியம் பிற மாநிலங்கள் எங்கேனும் வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் எந்த ஒரு மாநில அரசும் செய்யாத காரியத்தை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் செய்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டல்)



1986 நவம்பர் 25]

திரு. ஜே. முகம்மதுகான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமாக்கள் ஓய்வூதியம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால் அந்த ஓய்வூதியத்தைக் கூட்டித் தர அரசு முன்வருமா மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 200 ரூபாய் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம் அதுவே அதிகம் இனிமேல் அதுகப்படியான ஆட்களுக்குக் கொடுக்க முடியுமா என்ற அந்த முயற்சியைச் செய்து பார்க்கலாமே ஒழிய இருப்பவர்களுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டியது இல்லை

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலமாக்கள் ஓய்வூதியத் திட்டம் எந்த ஆண்டிலிருந்து தரப்படுகிறது? அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பேர்கள் இந்த ஓய்வூதியத்தை பெறுகிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டிலிருந்து இந்த திட்டம் அரசாங்கத்தால் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு இருக்கிறது. எனக்கு வந்திருக்கிற தகவல் படி தஞ்சை மாவட்டத்தில் 35 பேர்கள் இந்த திட்டத்தினால் பயன் அடைந்து இருக்கிறார்கள்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற போது உலமாக்களுக்கு ஓய்வூதியமாக அரசாங்கத்தால் 200 ரூபாய் தரப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் இதே சமயத்தில் மற்ற சமுதாயத்தில் உள்ள ஏழை எளியவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குகிற தொகை எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 ரூபாய் என்று சொன்னார்கள். அது 250 ரூபாய். மற்ற சமுதாயத்தினருக்கு கொடுக்கின்ற திட்டம் அரசாங்கத்தில் இல்லை. அதுதான் பொதுவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓ. ஏ. பி. என்று சொல்லி எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுப்பதில் அவர்கள் பயன் பெற்றுக் கொள்ள வேண்டியது தான்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் சாதிக் முகம்மது நூர் உல்லா காஜி என்பவர் 60 வயதுக்கு மேற்பட்டவர் 25 ஆண்டுகள் தொடர்ந்து இந்தப் பணியை செய்து வருகிறார்க

அவர்கள் 5-4-1983ல் அரசுக்கு ஒரு மனு கொடுத்து இருக்கிறார்க்ள். அந்த மனு மீது அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அரசு அவருடைய மனுவைப் பரிசீலித்து அவருக்கு உலமா ஓய்வூதியத்தை வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு, கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மனுவின் மீது ஏன் நடவடிக்கை இல்லாமல் இருக்கிறது என்று தெரியவில்லை ஆகவே உடனடியாக சம்பந்தப்பட்ட மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமாக்களுக்கு வழங்குகிற ஓய்வூதியம் தர்மபுரி மாவட்டத்தில் எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்படுகிறது? அத்தோடு 250 ரூபாய் என்பதை 300 ரூபாயாக கூட்டிக் கொடுக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 250 ரூபாய் என்பதை 300 ரூபாயாக உயர்த்துகின்ற திட்டம் அரசின் கருத்துருவில் இல்லை. தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 30 பேர்கள் பயனடைந்து கொண்டு இருக்கிறார்கள்.

### தருமபுரி மாவட்ட கேலவரப்பள்ளி அணை

184—(*வினா எண். 9055) திரு கோ. வீரய்யன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கேலவரப்பள்ளி என்கிற இடத்தில் கட்டப்பட்ட அணை வேலை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன;

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம் (ஆ) கேலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திட்டத்திற்காக சில நிலங்களைக் கையகப்படுத்துதல் சம்பந்தமாக உயர்நீதி மன்றம் பிறப்பித்த தடை உத்தரவின் பேரில் இத்திட்டத்தின் வேலைகள் 1979 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்ட வேலைக்காக ஆரம்பத்தில் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு 1979-லிருந்து கோர்ட் நடவடிக்கையால் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதைத் துரிதமாக முடித்து அந்த அணை வேலையைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



[முற்பகல் 10–10.]

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே அதற்காக அரசு ரூ. 311 இலட்சம் செலவு செய்திருக்கிறது. சட்டப்படி இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு மா. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூ. 311 இலட்சம் செலவு செய்யப்பட்டு, அது பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே அதனால் பயனடைய வேண்டிய விவசாயிகள் பயனடையாமல் இருக்கிறார்கள். அரசுப் பணமும் வீணாகி விவசாயிகளும் பயனடையாமல் இருக்கிறார்கள். எனவே அதன்மீது துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன்மீது அரசாங்கம் சட்டப்படி கோர்ட்டில் நடவடிக்கைஎடுத்திருக்கிறது. சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கையும் துரிதமாக எடுக்கப் பட்டிருக்கிறது. விவசாய நிலங்களுக்கு மட்டுமல்லாமல் அங்கேயிருக்கின்ற சிப்காட் நிறுவனங்களுக்கும் தண்ணீர் கொடுக்கின்ற வகையிலே அந்தத் திட்டம் இருக்கிறது. அதையெல்லாம் கருத்தில் கொண்டு வேகமாகவும், துரிதமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு மா. மணிமாறன் : மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேலவரப்பள்ளி திட்டம் போடுகின்ற நேரத்தில், கேச்மெண்ட் ஏரியா பெறும் அளவிற்கு மழை பெய்து தண்ணீர் நமக்குக் கிடைக்கிறதா? அதன் பரப்பளவு எவ்வளவு? அல்லது எனைய மாநிலங்களிலிருந்து நாம் எதிர்பார்க்கின்ற தண்ணீர் வந்தால் தான் அந்தத் திட்டம் நடைபெறுகின்ற வாய்ப்பு இருக்கிறதா? இந்தத் திட்டத்திற்காகும் செலவு எவ்வளவு, இந்தத் திட்டம் எடுக்கப்பட்ட பிறகும், இதற்காக செலவு செய்யப்பட்டதற்குப் பிறகும், உயர்நீதிமன்றம் தடை கொடுத்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ரூ. 6 கோடிக்கு ஒரு திட்டத்தைத் தீட்டும்போது, அந்த அளவிற்கு ஆய்வு செய்யாமல், திட்டம் மேற்கொள்ளப்பட்டதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதற்காக அரசாங்கம் அனுமதித்தத் தொகை 551.50 இலட்சம் பாசனம் பெறவேண்டிய நிலங்கள் 3,238 ஹெக்டேர் புதிய புன்செய் பயிர்நிலங்கள், 438ஹெக்டேர் பாசனம் குறைவான நிலங்கள், இவைகளுக்காக பயன்படுகின்ற திட்டமாக இருக்கிறது. 1977-லே இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு சில சட்டப் பிரச்சினைகளால் இந்தத் திட்டம் நின்றுகொண்டிருக்கிறது. இதைத் துரிதப்படுத்தயிருக்கிறோம்.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டம் விருதுநகர் தொகுதியிலே கட்டப்பட்டு வரும் கோல்வார்பட்டி ஆனைகுட்டம் அணைகள் நீண்ட காலமாகக் கட்டப்பட்டு வருகின்றன. அவை தொடர்ந்து நடைபெற்று வருகிறதா? அவை எப்போது முடிவுறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தில் தொடர்ந்து வேலை நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டம் முடிக்கப்படும்.

திரு க. இரா. சின்னராசு: தலைவர் அவர்களே, ஹோசூர் அருகாமையில் கட்டப்பட்டு வருகின்ற கேளவரப்பள்ளி அணையில் எல்லா வேலைகளும் முடிந்து, திட்டம் முடிவுறும் தருவாயில் இருக்கின்ற நேரத்திலே, வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை செய்திருக்கிறார்கள். அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் ரூ. 99 இலட்சம் நஷ்ட ஈடாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசு அவர்களை நேரடியாக அழைத்துப் பேசி முடிப்பதற்கு ஏதாவது உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலச் சொந்தக்காரர்களின் இடம் 53·21 ஏக்கர். அவர்களே அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற நேரத்திலே எல்லா கூட்டங்களுக்கும் வந்து கலந்துகொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக வாய்ப் பேச்சுகளுக்கு ஒத்துக்கொண்டுதான் ஆரம்பித்திருக்கிறார்கள். நடுவிலே திட்டம் ஆரம்பித்தவுடனேயே பிரச்சினையைக் கிளப்பி, ரூ. 90 இலட்சத்திற்கு மேலாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய மதிப்பீடு குறைவாக இருக்கின்ற காரணத்தால், இன்று உயர்நீதி மன்றத்திலே கூட நடுவர் ஒருவரைப் போட்டு, முடிவு செய்யலாம் என்று சொல்லி, அதையும் அவர்கள் ஒத்துக் கொள்ளாத காரணத்தால்தான் அது வழக்கில் இருக்கிறது.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தொழில் நிறுவனம் மிக அதிகமாக உள்ள சிப்காட் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு, நடந்து கொண்டிருக்கின்ற அந்தத் திட்டம் நின்று கொண்டிருப்பது நிலத் தகராறின் காரணமாகத்தான், நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலத்தைக் கேட்டு, அந்த நிலம் அவர்களுக்கே சொந்தமானதுதானா என்ற பிரச்சினைக்குரிய ஒன்றாக இருப்பதாக அரசாங்கத்திடமிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. ரூ. 99 இலட்சம் அவர்கள் கேட்டார்கள் என்று சொன்னார்கள். முதலில் அவர்களுக்கு அந்த நிலமே சொந்தமில்லை. அது அரசாங்கத்தினுடைய நிலம் என்று வாதாடிக்கொண்டிருக்கக்கூடிய நிலை இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே உடனடியாக அந்த



நிலம் அரசுக்குச் சொந்தமானதா? அந்தத் திட்டம் எப்போது நிறைவேறும். இப்போது இருக்கக்கூடிய நிலையிலே அது ரூ. 9 கோடியிலிருந்து ரூ. 15 கோடிக்கு ஆகும். எனவே இனியும் காலம் கடத்தினால் அது மிக அதிக அளவிலே ஆகும் என்பதைக் கருத்திற்கொண்டு, உடனடியாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே சொல்லிய நேரத்தில் சட்டப்படி இருக்கின்ற பிரச்சனை என்று சொன்னேன். அதையெல்லாம் முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் முயற்சிகளை துரிதமாக எடுத்துக் கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி தொகுதி பொய்கை அணைத் திட்டம்

185—(*வினா எண் 9572)—திரு கோ. பெருமாள்பிள்ளை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கன்னியாகுமரி தொகுதி பொய்கை அணைத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது வேலை தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :

(அ) ரூ. 1087 இலட்சம் செலவில் பொய்கை ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்ட அறிக்கை அரசுக்கு வந்துள்ளது. இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் வேலை தொடங்கப்படும்.

திரு கோ. பெருமாள் பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள பொய்கை அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதற்கு நான் நன்றிதெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். குமரி மாவட்டத்தினுடைய நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது செழிப்பான மாவட்டமான அது இன்றைக்கு வறட்சியான நிலைமையிலே இருந்துகொண்டிருப்பதை மனதிலே கொண்டு, இந்தத் திட்டத்தை நடத்தித் தருவதற்கு அரசு மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : உறுப்பினர்களுடைய கருத்துக்கு ஏற்றாற்போல் இந்த அரசினுடைய பரிசீலனையைத் துரிதப்படுத்த வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி மாடர்னைசேஷன் ஸ்கீம்மில், காவேரி டெல்டா பகுதியில் ஒதுக்கப்பட்ட பணம் காவேரி பிரச்சனைக்கு செலவிடப் படாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். இந்த செலவிடமுடியாத தொகையை, புதிய அணைகள் கட்டுவதற்கு பயன்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி செலவழிக் கப்படாமல்இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால்பதில் சொல்ல முடியும். ஆனால் ஒரு திட்டத்திற்கு ஒதுக்கிய பணத்தை வேறு திட்டத்திற்கு ஒதுக்க முடியாது

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரியில் இருக்கின்ற அணைக்கட்டுகளின் மூலம் வருகின்ற தண்ணீரை அந்த மாவட்டத்திற்கும் பயன்படுத்தி; ராதாபுரம் கால்வாய் வழியாக திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதிகளுக்கும் பயன்படுத்தவேண்டுமென்று காமராஜர் காலத்திலேயே ராதாபுரம் கால்வாய் என்ற ஒன்று வெட்டப் பட்டது. ஆனால் இப்போது இங்கே தண்ணீர் போனால் அங்கே இல்லை. அங்கே போனால் இங்கே இல்லை என்ற நிலையில் கூடங்குளம் அனல் மின் நிலையம் வருவதற்கு கூட தண்ணீர் பற்றாக்குறையினாலே காலதாமதம் ஏற்படுவதாக ஒரு கருத்து நிலவுகிறது. எனவே பொய்கை அணைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றினால், கன்னியாகுமரி மாவட்டம் ராதாபுரம் கால்வாய் வழியாக திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதி, கூடங்குளம் அனல் மின் நிலையம் அதன் மூலம் மின்சார உற்பத்தி அத்தனையும் கிடைக்குமாதலினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத்துரிதமாக இந்த ஆய்வை முடித்து வேலையைத் தொடங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர் இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்துக்கு ஏற்றாற்போல் அந்த ஆய்வைத் துரிதப்படுத்த வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத்துறை அணை கட்டுவதற்கான திட்டம் அரசால் ஏற்கப்பட்டு, மதிப்பீடுகளும் அரசால் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அது எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடப்பட வேண்டும்.





திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வறட்சி நிலையைக் கணக்கில் எடுத்து, மழை காலத்தில் தேக்கி வைக்க முடியாமல் சமுத்திரத்திற்கு சென்று கொண்டிருக்கும் தண்ணீரைத் தேக்கி வைக்கின்ற முறையில் பள்ளிமுட்டம் அணையைக் கட்டுவதற்கான ஒரு ஆய்வு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா? ஆம் என்றால், அதற்கான விவரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தனிக்கேள்வி போட்டால் சரியான விவரங்கள் சொல்லப்படும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து செயல் படுத்தவேண்டும் என்ற நல்ல நோக்கோடு செயல்படுகின்றபோது அதைப் புரிந்துகொள்ளாதவர்களும், பொறாமைப்படுகின்றவர் களும் அல்லது அந்த திட்டத்தால் பாதிக்கப்படுகின்றவர்களும் கோர்ட்டுகளில் சென்று தடை உத்தரவைப் பெற்றுவிடுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட திட்டங்களை ஆரம்பிக்கின்ற நேரத்தில், அவர்களுடைய தடையை, தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கம் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்துக்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

ஓரசோலை கிராமத்தில் பாலம் கட்டும் பணி.

1—வினா 1021—திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி பேரூராட்சியைச் சேர்ந்த ஓரசோலை கிராமத்தில் முடிக்கப்படாமல் இருக்கும் பாலம் கட்டும் பணி எப்போது முடிக்கப்படும்?

விடை—

கோத்தகிரி பேரூராட்சியைச் சேர்ந்த ஓரசோலை (Horashola) கிராமத்தில் உள்ள சிறுபாலம் (Culvert) கட்டி முடிக்கப்பட்டு வாகனப் போக்குவரத்துத் திறந்து விடப்பட்டுவிட்டது.

பட்டினபாக்கம் அரசு ஊழியர் குடியிருப்புகளில் தெருவிளக்குகள் அமைத்தல்.

2—வினா 1066—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்புகளில் தெரு விளக்குகள் போடாத பகுதிகளுக்கு அதனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்புகளின் தெருக்கள் சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளன. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ரூ. 20,017-ஐ மாநகராட்சிக்குச் செலுத்தி, 8 விளக்குகளை குறிப்பிட்ட சாலையில் மட்டும் பொருத்துமாறு கோரியுள்ளது. இவ்விளக்குகள் விரைவில் அமைக்கப்படும். இது தவிர, 19 விளக்குகளை அமைப்பதற்கு உண்டான திட்ட மதிப்பு ரூ. 55,060-ஐ செலுத்துமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தை சென்னை மாநகராட்சி கோரியுள்ளது. இத்தொகையினை வீட்டுவசதி வாரியம் செலுத்தியவுடன், விளக்குகள் சென்னை மாநகராட்சியால் அமைக்கப்படும்



நத்தம்—செந்துறை செல்லும் பேருந்துகள்.

3—வினா 1152—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், அய்யனார்புரம் சேத்தூர் கிராம மக்கள் நத்தம்—செந்துறை செல்லும் பேருந்துகள் அய்யனார்புரம் அடிபைப்பிடம் நிற்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

நத்தம்—செந்துறை செல்லும் எல்லாப் பேருந்துகளும் அய்யனார்புரம் அடிபைப் இடத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

நத்தம் தொகுதி கிராமங்களுக்கு மின்விளக்கு வசதி.

4—வினா 1299—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி சானார்ப்பட்டி யூனியன் ராசாக்கப்பட்டி, நொச்சி ஓடைப்பட்டி, சோட்டாப்பட்டி, பூவக்கிழவம்பட்டி, கொட்டூர், மார்க்கம்பட்டி, கோம்பைப்பட்டி ஆகிய கிராமங்களில் மின்விளக்கு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

நத்தம் தொகுதி சானார்ப்பட்டி ஒன்றியத்தில் கொட்டூர் என்னும் கிராமம் இல்லை. மற்ற கிராமங்களுக்கு ஏற்கெனவே மின்விளக்குகள் பொருத்தப்பட்டுவிட்டன.

பிச்சம்பட்டி அம்பலக்காரர் குளத்தை செப்பனிடல்.

5—வினா 1302—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி சானார்ப்பட்டி யூனியன், செங்குறிச்சி கிராமம் பிச்சம்பட்டியில் 1979 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பலக்காரர் குளத்தை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

சட்டமன்ற வினாவில் கூறப்பட்டுள்ள அம்பலக்காரர் குளத்தை செப்பனிடும் பணி 1986-87 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் செய்ய சேர்க்கப்பட்டுள்ளது.

பொறையார் அரசு மருத்துவமனையை பழுதுபார்த்தல்.

6—வினா 2278—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறையார் அரசு மருத்துவமனையை பழுதுபார்க்கவும், மற்றும் அறுவை சிகிச்சைக்கு தேவையான உபகரணங்களை வழங்கவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

தஞ்சை மாவட்டம் பொறையார் அரசு மருத்துவமனையை விரைவில் பழுதுபார்க்க பொதுப்பணித்துறையுடன் தொடர்பு கொண்டு துரிதமாக நிறைவேற்றவும், மருத்துவமனைக்கு பொதுவாகத் தேவைப்படும் உபகரணங்களை வாங்கவும் மாவட்ட மருத்துவ அலுவலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சென்னை நகர் குடிசைப்பகுதிகளில் புறத் தீயணைப்பு நிலையங்கள் நிறுவுதல்.

7—வினா [illegible]—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் தீயணைப்புப் பணிகளுக்கென புதிய ஏற்பாடு எதையேனும் அரசு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?





விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரின் குடிசைப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக இவ்வாண்டு மொத்தம் குடிசைப்பகுதிகளில் 47 புறத் தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. இதனால், குடிசைத் தீ விபத்துக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

தாம்பரம்—முடிச்சூர் வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகள் விடல்.

8—வினா 2762—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம்—முடிச்சூர் வழித்தடத்தில் கூடுதலாகப் பேருந்துகள் விட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்தடத்தில் 2-1-1986 முதல் கூடுதலாக ஒரு பேருந்து 24 பயணத்தடவைகள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுகிறது.

நரிக்குறவர்கள் மேம்பாட்டிற்கான திட்டம்.

9—வினா 2958—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நரிக்குறவர்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்கென அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் வசிக்கும் நரிக் குறவர் நல்வாழ்வுக்கென தனியாகத் திட்டங்கள் ஏதும் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நரிக்குறவர் வகுப்பினரை தாழ்த்தப்பநல்டார் என அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் இருந்து வருகிறது. அதன் பேரில் அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் வரையில் பிற்படுத்தப் பட்ட வகுப்பு பட்டியலில் இருக்கலாம் என்று கருதி பிற்படுத்தப் பட்ட வகுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் அவர் களுக்கு வீட்டு வசதி செய்யக்கோரி கோரிக்கைகள் வரப்பெற்று அவை பரிசீலிக்கப்பட்டு அதற்கென தனியே உத்தரவிடப் பட்டுள்ளது. அவ்வாறு இதுவரை வடாற்காடு மாவட்டத்தில் அரும்பருததி என்ற கிராமத்தில் நரிக்குறவர்களுக்கென தலா ரூ. 6,000 வீதம் 76 வீடுகள் கட்ட ரூ. 4.56 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டு 'தாட்கோ' மூலம் மேற்படி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இது தவிர செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களிலும் நரிகுறவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன. மேலும் தருமபுரி மாவட்டத்தில் தற்போதைக்கு நரிக்குறவர்களுக்கென வீட்டுமனை கையகப்படுத்தும் திட்டம் மட்டும் பரிசீலனையில் உள்ளது, எனவே இவ்வாறு வீட்டுவசதி செய்து கொடுப்பது தவிர நரிக் குறவர்களின் மேம்பாட்டுக்கென தனித் திட்டங்கள் ஏதும் நடை முறையில் இல்லை. கோரிக்கைகள் வரும்போது ஆய்வு செய்து அவ்வப்போது ஆணைகள் வெளியிடப்படும்.

## குடிசைகளுக்கு சலுகை மூலம் வழங்கப்பட்ட மின் இணைப்புகள்.

10—வினா 2974—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைகளுக்கு மின் இணைப்புகள் சலுகை மூலம் இதுவரை எவ்வளவு வழங்கப்பட்டது, மின் திட்டங்கள் வாரியாக ?

(ஆ) அதில் பாபநாசம் தொகுதியில் எத்தனை இணைப்பு கள் வழங்கப்பட்டன ?



விடை—

(அ) தமிழ்நாட்டில் 31–12–1985 முடிய மின் திட்ட வாரியாக 6,94,475 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது.

31–12–85 முடிய குடிசைகளுக்கு மின் திட்ட வாரியாக மின் இணைப்பு கொடுத்த விவரம்:—

| வரிசை எண். | மின் திட்டப் பெயர். | 31–12–85 முடிய குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுத்த விவரம். |
|---|---|---|
| 1 | சென்னை மின் திட்டம் (பகிர்வு) வடக்கு | 12,110 |
| 2 | சென்னை மின் திட்டம் (பகிர்வு) தெற்கு | 5,638 |
| 3 | செங்கல்பட்டு .. .. .. | 72,979 |
| 4 | வேலூர் .. .. .. | 43,278 |
| 5 | திருவண்ணாமலை .. .. .. | 29,986 |
| 6 | தருமபுரி .. .. .. | 34,458 |
| 7 | தென்னாற்காடு (வடக்கு) } .. .. | 1,06,099 |
| 8 | தென்னாற்காடு (தெற்கு) } | |
| 9 | திருச்சி (வடக்கு) } .. .. .. | 90,687 |
| 10 | திருச்சி (தெற்கு) } | |
| 11 | தஞ்சாவூர் .. .. .. | 65,305 |
| 12 | புதுக்கோட்டை .. .. .. | 27,237 |
| 13 | மதுரை (வடக்கு) .. } .. .. | 32,657 |
| 14 | மதுரை (தெற்கு) } | |
| 15 | இராமநாதபுரம் (மேற்கு) } .. .. | 29,578 |
| 16 | இராமநாதபுரம் (கிழக்கு) } | |
| 17 | திருநெல்வேலி (மேற்கு) } .. .. | 27,737 |
| 18 | திருநெல்வேலி (கிழக்கு) } | |
| 19 | கன்னியாகுமரி .. .. .. | 2,870 |
| 20 | சேலம் .. .. .. .. | 56,238 |
| 21 | மேட்டூர் } | |
| 22 | பெரியார் .. } .. .. | 13,251 |
| 23 | கோயம்புத்தூர் (வடக்கு) } .. .. | 5,085 |
| 24 | கோயம்புத்தூர் (தெற்கு) } | |
| 25 | உடுமலைப்பேட்டை .. .. | 39,277 |
| | | 6,94,475 |

(ஆ) பாபநாசம் தொகுதியில் இதுவரை 1,326 குடிசை களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான குப்பை எடுக்கும் லாரிகள்.

11—வினா 3004—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான குப்பை எடுக்கும் லாரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) மாட்டு வண்டிகள் எத்தனை உள்ளன?

விடை—

(அ) சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான குப்பை எடுக்கும் லாரிகள் மொத்தம் 174 உள்ளன.

(ஆ) வட சென்னை பகுதியில் 322 வண்டிகளும், தென் சென்னையில் 379 வண்டிகளும் முன்னாள் பஞ்சாயத்து பகுதிகளில் 41 வண்டிகளும் ஆக மொத்தம் 742 மாட்டு வண்டிகள் உள்ளன.

திருவில்லிபுத்தூர் தொகுதியில் உபரி நிலங்கள் வழங்கப்பட்டோர்.

12—வினா 3131—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சென்ற நிதியாண்டில் 1984–85-ல் நிலமற்றோருக்கு எத்தனை பேருக்கு உபரி நிலங்கள் வழங்கப்பட்டன?

(ஆ) திருவில்லிப்புத்தூர், வத்திராயிருப்புப் பகுதியில் எத்தனை பேர் பயன் அடைந்துள்ளார்கள்?



விடை—

(அ) 1984–85 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட உபரி நிலங்களின் விவரம்:

| (1) | | பயனடைந்தோர் எண்ணிக்கை. (2) | நிலத்தின் பரப்பு (ஏக்கரில்). (3) |
|---|---|---|---|
| (அ) ஆதிதிராவிடர்கள் | .. | 2,087 | 2,059 |
| (ஆ) மலை ஜாதியினர் | .. | 42 | 92 |
| (இ) மற்றவர்கள் .. | .. | 2,336 | 2,916 |
| | | 4,465 | 5,067 |

(ஆ) திருவில்லிப்புத்தூர், வத்திராயிருப்புப் பகுதியில் 1984–85 ஆம் ஆண்டில் உபரி நிலங்கள் எதுவும் விநியோகிக்கப் படவில்லை.

கங்கையூரில் நீர்த்தேக்கம் அமைத்தல்.

13—வினா 3302—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், அய்யலூர் பகுதியில் உள்ள கங்கையூர் பகுதியில் வரும் காட்டோடைகளைப் பயன்படுத்தி நீர்த்தேக்கம் ஒன்று அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வேடசந்தூர் வட்டம், அய்யலூர் பகுதி கங்கையூர் என்னுமிடத்தில் சுமார் 13 லட்சம் மதிப்பீட்டில் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு அணை கட்டப்பட்டு பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

### ஆலம்பாடியிலுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம்.

14—வினா 3386—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், ஆலம்பாடியில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்தை நடத்தும் செட்டிநாடு சிமெண்ட் கும்பெனி அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு இராயல்டி தொகை செலுத்துகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை, திருவாளர்கள் செட்டிநாடு சிமெண்ட் நிறுவனத்தினர் வேடசந்தூர் வட்டம், ஆலம்பாடியில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் சுண்ணாம்புக்கல்லிற்கு இராயல்டி தொகையை அரசுக்கு செலுத்தி வருகின்றனர். ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்தப் படும் இராயல்டி மீதான உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல் வரித் தொகை வசூலிக்க அந்நிறுவனம் சுப்ரீம் கோர்ட்டில் தடை உத்தரவு பெற்றிருப்பதால் அரசின் அறிவுரைகளின்படி அத் தொகைக்கு சமமான காப்புத் தொகையை அரசுக்கு செலுத்தி வருகிறது. காப்புத் தொகை அரசின் கணக்கில் உள்ளது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிற்குப் பின் மற்ற நடவடிக்கைகள் தொடரப்படும்.

### குளத்தூர் தொகுதியில் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள்.

15—வினா 3392—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதியில் தனியார் மற்றும் அரசு மூலம் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) ஒவ்வொன்றும் எவ்வளவு மூலதனத்தில் என்னென்ன தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன?



விடை—

(அ) மற்றும் (ஆ) இவ்விவரங்கள் *அடங்கிய அறிக்கை பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

### குளத்தூர் தொகுதியில் பாலங்கள் அமைக்கும் செயற்குறிப்பு.

16—வினா 3414—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி அன்னவாசல் ஒன்றியம் பி.எஸ்.கே. சாலை எல்லையாபட்டி சாலையில் 0/6 | 0/8—1/6—1/8 லும் பி.எஸ்.கே, சாலை டு வரவெட்டிவயல் கள்ளமபட்டி மரியநல்லூர் 08/—0/10—1/6—2/2—2/4—2/6 மற்றும் 2/8 லும் எல்லையாபட்டி டு கள்ளம்பட்டி சாலையில் 0/6—0/8—1/10 லும் பாலங்கள் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முடித்துத் தரப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### ஆசிரியர் பயிற்சி முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளோர் எண்ணிக்கை.

17—வினா 3470—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்பு மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர் பயிற்சி முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங் களில் பதிவு செய்து இருக்கும் பெண் ஆசிரியர் மாவட்ட வாரியாக எத்தனை பேர்?

*407—410 ம்பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

விடை—

30—9—1985 அன்றைய நிலவரப்படி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண். (1) | மாவட்டம். (2) | பெண் பட்டதாரி ஆசிரியர்கள். (3) | பெண் இடை நிலை ஆசிரியர்கள், (4) |
|---|---|---|---|
| 1 | வடாற்காடு | 278 | 183 |
| 2 | தென்னாற்காடு | 346 | 76 |
| 3 | திருச்சி | 284 | 201 |
| 4 | செங்கற்பட்டு | 357 | 192 |
| 5 | திருநெல்வேலி | 1,374 | 646 |
| 6 | தஞ்சாவூர் | 451 | 82 |
| 7 | சென்னை | 335 | 664 |
| 8 | காமராஜர் | 345 | 110 |
| 9 | பசும்பொன் முத்துராமலிங்கம் | 67 | 31 |
| 10 | இராமநாதபுரம் | 103 | 48 |
| 11 | அண்ணா | 285 | 147 |
| 12 | கோயம்புத்தூர் | 884 | 186 |
| 13 | பெரியார் | 215 | 47 |
| 14 | தர்மபுரி | 158 | 182 |
| 15 | சேலம் | 664 | 117 |
| 16 | மதுரை | 732 | 438 |
| 17 | கன்னியாகுமரி | 1,493 | 575 |
| 18 | புதுக்கோட்டை | 93 | 30 |
| 19 | உதகமண்டலம் | 75 | 64 |
| | மொத்தம் | 8,539 | 4,001 |



**வாழைத் தோட்டம் ஆனைக்கட்டியை இணைக்கும் புதிய பாலம் கட்டும் திட்டம்.**

18—வினா 3604—திரு. கே. உர்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி மசினகுடி ஊராட்சியைச் சேர்ந்த வாழைத் தோட்டம்—ஆனைக்கட்டியை இணைக்கும் புதிய பாலம் கட்டும் திட்டம் உண்டா?

(ஆ) ஆமெனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) சிகூர் வாழைத் தோட்டத்திலிருந்து ஆனைக்கட்டி சாலையை மேம்பாடு செய்ய ரூ. 110.00 இலட்சத்திற்கு 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அனுமதி வழங்கப்பட்டது. இதில் சாலை வேலை அனைத்தும் முடிக்கப்பட்டு விட்டது. இச் சாலை சங்கிலி 7780-ல் (ch 7780 m) ஒரு பாலம் கட்டும் வேலை நடைபெற்று வருகின்றது. இப்பால வேலையில் ஆனைக்கட்டி பக்கம் சார்வுச் சுவர் (abutment) கட்ட கடக்கால் பணி வேலையில் முடிந்து கான்கிரீட் அடிமட்டம் வரை போடப் பட்டுள்ளது. தூண்கள் (Piers) 5 மற்றும் 6–ல் மண்வேலை முன்னேற்றத்தில் உள்ளது. அணுகு சாலைக்குக் குண்டுக்கல் (Boulders) சேகரிக்கும் வேலை முன்னேற்றத்தில் உள்ளது.

(ஆ) இப்பால வேலையின் மதிப்பீடு ரூ. 26.60 லட்சம் ஆகும்.

**ஒட்டப்பிடாரம் தலைமை மருத்துவமனை.**

19—வினா 3842—திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தில் தாலுக்கா தலைமை மருத்துவ மனை எப்போது கட்டப்பட்டது?

(ஆ) எத்தனை படுக்கைகள் உள்ளன?

விடை—

(அ) மற்றும் (ஆ): பல ஆண்டுகளுக்குமுன் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தில். கோவில்பட்டி தாலூக்கா குழுவால் நடத்தப்பட்டு வந்த மருந்தகம், 1966 ஆம் ஆண்டு அரசு மருந்தகமாக மேற்கொள்ளப்பட்டு, ஒட்டப்பிடாரம் தாலூகா அமைந்தபின், 6 படுக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றது.

தம்மம்பட்டி அரசினர் மருத்துவமனைக்கு பெண் மருத்துவர் நியமனம்.

20—வினா 3964—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தம்மம்பட்டி அரசினர் மருத்துவமனைக்கு பெண் மருத்துவர் நியமனம் செய்யாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் பெண் மருத்துவர் நியமிக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) போதிய பெண் மருத்துவர்கள் தற்சமயம் இல்லாமையால் தற்போதுள்ள இரண்டு பணியிடங்களிலும் ஆண் மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர், பெண் மருத்துவர்கள் கிடைக்கும்பொழுது ஆண் மருத்துவ அலுவலர்களில் ஒருவரை மாற்றம் செய்து ஒரு பெண் மருத்துவ அலுவலர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

வீரகனூர் அரசினர் மருந்தகத்திற்கு பெண் மருத்துவர் நியமனம்.

21—வினா 3967—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீரகனூர் அரசினர் மருந்தகத்திற்கு பெண் டாக்டர் ஒருவரை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

அரசு வகுத்துள்ள வரைமுறைகளின்படி ஓர் ஆண் மருத்துவர் பணியிடம் வீரகனூர் அரசு மருந்தகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து கூடுதல் மருத்துவர் பணியிடம் ஒப்பளிக்கப்படும்பொழுது, பெண் மருத்துவர் ஒருவரை நியமிப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.



22—கோவை வட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை:

வினா 4324—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுகிறவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) வழங்கப்பட்ட நிலுவையில் உள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—

கோவை வட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுகின்றவர்கள் மற்றும் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் விவரங்கள் கீழ்வருமாறு:—

| வரிசை எண். (1) | விவரம். (2) | முதியோர் உதவித் தொகை. (3) | விதவைகள் உதவித் தொகை. (4) | ஊனமுற்றோர் உதவித் தொகை. (5) | விவசாய கூலிகள் உதவித் தொகை. (6) | மொத்தம். (7) | குறிப்பு. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை (22—8—1984 தேதிய சமூக நலத்துறை அரசாணை பல்வகை எண் 2060இன்படி பயனடைந்தவர்களையும் சேர்த்து) | 1,740 | 1,037 | 181 | 260 | 3,218 | .. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1—11—1985 அன்று நிரப்பப் பட்ட இடங்கள் .. .. | 1,721 | 1,032 | 181 | 260 | 3,194 | .. |
| 3 | 1—11—1985 அன்று காத்திருப் போர் பட்டியலில் இடம் பெற் றவர்களின் எண்ணிக்கை .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4 | 1—11—1985 அன்று நிலுவை யில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை .. .. | 248 | 191 | 49 | 7 | 485 | .. |
| 5 | நிலுவையிலுள்ள விண்ணப்பங் களை முடிவு செய்ய எடுக்கப் பட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள். | முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 19 இடங் கள் காலியாக உள்ளன. தற்போது 1—11—1985 அன்று நிலுவையில் இருந்து 495 விண்ணப்பங்களில் 252 விண் ணப்பங்கள் மீது அறிக்கை பெறப்பட்டு வட்ட அலு வலகத்தில் பரிசீலனையில் உள்ளன. உதவித் தொகை பெறத் தகுதியானவர்கள் பெயர் காத்திருப்போர் பட்டி யலில் சேர்க்கப்படும். 70 வயதுக்கு அதிகமானவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு காலியிடங்கள் நிரப்பப் படும். | | | | | |



## குறிச்சி பேரூராட்சியிலுள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டிடம்.

23—வினா 4341—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியிலுள்ள குறிச்சி பேரூராட்சிக்குட் பட்ட ஆத்துப்பாலம் பகுதியில் ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் போதிய வசதியில்லாமல் "ஷிப்டு" முறையில் பள்ளி நடப்பதை அரசு அறியுமா?

(ஆ) கூடுதல் கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கட்டிடம் கட்டுதல், பராமரித்தல் ஒன்றிய ஆணை யாளர் பொறுப்பில் உள்ளது. கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட போதுமான இடவசதி இல்லை. மேற்படி பள்ளிக்கு சுற்றுப்புறத் தில் யாதொரு புறம்போக்கு இடவசதியும் இல்லை. பள்ளிக் கட்டிடத்திற்கு பொது மக்களிடம் இடவசதி கேட்டதில், பள்ளிக் கட்டிடத்திற்கு இடவசதி கொடுக்க ஒருவரும் முன்வரவில்லை.

## திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

## கும்பாபிஷேக திருப்பணி செலவுத் தொகை.

24—வினா 4383—திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை நடத்தப்பட்ட திருத்தணிகை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சியையொட்டி செலவு செய் யப்பட்ட திருப்பணிக்கான செலவு எவ்வளவு?

விடை—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் கும்பாபிஷேகத்தையொட்டி செய்யப்பட்ட திருப்பணிக்கான செலவு ரூ. 5,78,556.20.

### அடையாறு சினிமா நடிப்புக் கல்லூரி.

25—வினா 4501—டாக்டர். ந. மாசிலாமணி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையாறு சினிமா நடிப்புக் கல்லூரியில் வருடத்திற்கு எத்தனை மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்?

(ஆ) ஆண்கள், பெண்கள் எத்தனை பேர்?

(இ) ஆதி-திராவிட மாணவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) சென்னை அடையாறில் இயங்கிவரும் தமிழ்நாடு திரைப்பட தொலைக்காட்சி தொழிற்பயிற்சி நிறுவனத்தில் ஒரு வருடத்திற்கு பொதுவாக 75 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) பெண்களுக்கென்று இட ஒதுக்கீடு கிடையாது. தகுதியான பெண்கள் எல்லோரும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

(இ) ஆதி-திராவிட மாணவர்கள் 8 பேர்கள் (ஆண்கள் 7 பெண் 1).

### மதுரை மாவட்டத்தில் விவசாய கிணறுகளுக்கு மின்இணைப்பு வழங்கல்.

26—வினா 4577—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் 31–3–1985 முடிய விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கோரி பரிசீலனையில் உள்ள விண்ணப்பங்கள் எத்தனை? வட்ட வாரியாக.





விடை—

15–9–1985 முதல் மதுரை மாவட்டம் இரு மாவட்டங்களாக அதாவது மதுரை மாவட்டம், அண்ணா மாவட்டம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. எனவே இரு மாவட்டங்களிலும், 31-3-1985 முடிய விவசாய கிணறுகளுக்கு மின்இணைப்பு கோரி பரிசீலனையில் உள்ள விண்ணப்பங்கள் விவரம் கீழ்வருமாறு:—

| | வட்டம். (1) | | விவசாய கிணறுகளுக்கு பரிசீலனையில் உள்ள விண்ணப்பங்கள். (2) |
|---|---|---|---|
| | மதுரை மாவட்டம்: | | |
| 1 | பெரியகுளம் (மதுரை தெற்கு மின் திட்டம்) | 1,152 | 3,422 |
| 2 | பெரியகுளம் (மதுரை வடக்கு மின் திட்டம்) | 2,270 | |
| 3 | உத்தமபாளையம் .. .. | | 2,213 |
| 4 | திருமங்கலம் (மதுரை தெற்கு மின் திட்டம்). | 1,133 | 1,304 |
| 5 | திருமங்கலம் (மதுரை வடக்கு மின் திட்டம்). | 171 | |
| 6 | உசிலம்பட்டி (மதுரை தெற்கு மின் திட்டம்). | 2,931 | 3,564 |
| 7 | உசிலம்பட்டி (மதுரை வடக்கு மின் திட்டம்). | 633 | |
| 8 | மதுரை (தெற்கு) (தெற்கு மின் திட்டம்). | 286 | 544 |
| 9 | மதுரை தெற்கு .. .. | 258 | |
| 10 | மதுரை (வடக்கு மதுரை) (தெற்கு மின் திட்டம்). | 242 | 333 |
| 11 | மதுரை வடக்கு .. .. | 97 | |
| 12 | மேலூர் .. .. .. | | 1,324 |
| | மொத்தம் .. | | 12,710 |

| வட்டம். (1) | விவசாய கிணறுகளுக்கு பரிசீலனையில் உள்ள விண்ணப்பங்கள். (2) |
|---|---|
| **அண்ணா மாவட்டம் :** | |
| 1 திண்டுக்கல் .. .. .. | 4,652 |
| 2 வேடசந்தூர் .. .. .. | 4,951 |
| 3 நிலக்கோட்டை .. .. | 3,157 |
| 4 பழனி .. .. .. | 1 |
| 5 கொடைக்கானல் .. .. | 4 |
| மொத்தம் .. | 12,765 |

### தமிழ்நாட்டிலுள்ள சைனிக் பள்ளியில் சேரும் மாணவர்களுக்கு வழங்கும் உதவித் தொகை.

27—வினா 4592—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சைனிக் பள்ளியில் சேரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தமிழக அரசு உதவிப்பணம் கொடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த தகுதிகளின் அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்படுகிறது?



**விடை—**

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் அமராவதி நகரில் உள்ள சைனிக் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும் பிற மாநிலங்களிலுள்ள சைனிக் பள்ளிகளில் பயின்றுவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களின் மாத வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு தமிழக அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது ;—

| பெற்றோர்/காப்பாளரின் மொத்த மாத வருமானம். (1) | படிப்பு உதவித் தொகை. விதம். (2) | உதவித்தொகை. (3) |
|---|---|---|
| 1 ரூ. 700 வரை | முழு உதவித் தொகை. | வருடத்திற்கு ரூ. 5,100 உதவித்தொகை மற்றும் உடைகளுக்கான படி முதல் ஆண்டுக்கு ரூ. 600 பின்வரும் ஆண்டுகளில் ரூ. 300. |
| 2 ரூ. 1,000 வரை. | 3/4 உதவித் தொகை. | வருடத்திற்கு ரூ. 3,825 மற்றும் உடைகளுக்கான படி முதல் ஆண்டுக்கு ரூ. 600 பின் வரும் ஆண்டுகளுக்கு ரூ. 300. |
| 3 ரூ. 1,200 வரை. | 1/2 உதவித் தொகை. | வருடத்திற்கு உதவித் தொகை ரூ. 2,550. |
| 4 ரூ. 1,400 வரை. | 1/4 உதவித் தொகை. | வருடத்திற்கு உதவித் தொகை ரூ. 1,275. |

மாவட்ட சமூக நல அலுவலர்கள் மற்றும் வட்ட திட்ட ஊட்டச் சத்து அலுவலர்கள் பதவிகள்.

28—வினா 4798—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

''மாவட்ட சமூகநல அலுவலர் பதவி, வட்டதிட்ட ஊட்டச் சத்து அலுவலர் பதவி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பதவி ஆகிய மூன்றும் இணையான பதவிகளாக இருந்தபோதும், மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வட்ட திட்ட ஊட்டச்சத்து அலுவலர்களை மாவட்ட சமூக நல அலுவலர்கள் கீழ் வைத்திருப்பதன் காரணம் என்ன ?

விடை—

மாவட்ட சமூகநல அலுவலர் பதவி, வட்டதிட்ட ஊட்டச் சத்து அலுவலர் பதவி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பதவி, ஆகிய மூன்றும் இணையான பதவிகளாகும். மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர் பதவிகளுக்கு பதவி உயர்வு மூலம் நியமன ஆணை வெளியிட காலதாமதம் ஆனதால் அம்மாவட்டங்களில் பணிபுரியும் மாவட்ட சமூக நல அலுவலர்கள் அம்மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர் பதவிகளில் (District Project Nutrition Officer) கூடுதல் பொறுப்பு வகித்து வந்தனர். என்வே, மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்களின் கீழ் பணியாற்ற வேண்டிய வட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்கள், கூடுதல் பொறுப்பு வகித்து வந்த மாவட்ட சமூக நல அலுவலர்கள் கீழ் பணிபுரிய நேர்ந்தது. இது ஒரு இடைக்கால நடவடிக்கையாகவே இருந்தது. மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்கள் பணியிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுவிட்டன.

திண்டுக்கல் நகரிலுள்ள மலைக்கோட்டை.

29—வினா 4862—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் உள்ள மலைக்கோட்டை, மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதா ? மத்திய அரசின் கட்டுப் பாட்டில் உள்ளதா ?

(ஆ) மலைக் கோட்டையின் மேல் உள்ள கோயில் கட்டிடத்தில் ஆலயம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?



136500 ... சென்னை-600 008.

விடை—

(அ) திண்டுக்கல் நகரில் உள்ள மலைக்கோட்டை மத்திய அரசின் தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

(ஆ) மலைக்கோட்டையின் மேல் உள்ள கோயில் கட்டிடத்தில் ஆலயம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

எலுமிச்சை சாகுபடியை தீவிரப்படுத்தும் சிறப்பு நடவடிக்கை.

30—வினா 4923—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எலுமிச்சை சாகுபடியினை தீவிரப்படுத்த அரசு மேற்கொண்டு வரும் சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?

விடை—

நச்சுரி நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட எலுமிச்சை செடிகள் ஒரு இலட்சம் அளவில் வருடந்தோறும் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது. மலை மேம்பாடு திட்டத்தின் கீழ் 50 சதவீதம் விழுக்காடு மானிய விலையில் எலுமிச்சை நாற்றுகள் உழவர்கட்கு விநியோகம் செய்யப்படுகிறது.

மைக்கா சுரங்கங்கள்.

31—வினா 4936—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் காக்காய்பொன் சுரங்கங்கள் (மைக்கா) எங்கெங்கு உள்ளன ?

(ஆ) அதன் விவரங்கள் யாது ?

V211, 31 N96
N96-31-3-84

விடை—

(அ) தமிழகத்தில் காக்காய் பொன் சுரங்கங்கள் (மைக்கா) நீலகிரி மாவட்டம், கடலூர் வட்டத்தில் அமைந்துள்ளன.

(ஆ) தமிழகத்தில் 1960 ஆம் ஆண்டு முதல் மைக்கா வெட்டியெடுப்பதற்கு 16 சுரங்கக் குத்தகைகள் பல்வேறுபட்ட தனி நபர்களுக்கு வழங்கப்பட்டது. அவைகளில் தற்போது அங்கு 4 அல்லது 5 சுரங்கங்கள் உள்ளன. சுரங்கத்தில் மைக்கா வெட்டியெடுப்பது மிகவும் கடினமானதாகும். அதற்கு அதிகம் மூலதனம் தேவை. இதனால் அங்கு குத்தகைதாரர்கள் பலர் சுரங்கப்பணிகளை கைவிட்டனர். ஒன்று அல்லது இரண்டு குத்தகைதாரர்கள் மட்டும் அங்கு சுரங்கப்பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

**மதுரை மாவட்டத்தில் கிடைக்கும் கனிவளங்கள்.**

32—வினா 4974—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் என்னென்ன கனிவளங்கள் எந்தெந்தப் பகுதியில் கிடைக்கும் என அரசு ஆராய்ந்து கண்டு பிடித்துள்ளது?

விடை—

மதுரை மாவட்டத்தில் எங்கெங்கு கனிவளங்கள் கிடைக்கிறது என்பதை அரசு ஆராய்ந்து கண்டுபிடித்துள்ள விபரம் ** அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**மதுரையிலுள்ள கால்நடைப் பராமரிப்புத்துறை அலுவலகங்கள்.**

33—வினா 4989—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகங்கள் ஒரே இடத்தில் செயல்பட ஏழு மாடிக் கட்டிடம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**411ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



விடை—

(அ) மதுரையில் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகக் கட்டிடம் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு கால்நடை பராமரிப்புத் துறை அளவில் தற்பொழுது பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரை நகரத்தில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகங்களுக்கான கட்டிடம் கட்ட தல்லாகுளம் கிராமத்தில் 2·00 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் அப்பகுதிக்கான விபரம், சரியான அடையாளம் போன்ற விபரங்கள் பெற மதுரை வடக்கு வட்டாட்சியருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான நில வரைபடம் பெற்றும், அங்கு டைப் டிசைன்படி அலுவலகக் கட்டிடம் கட்ட மதுரை பொதுப்பணித்துறை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டும் மதிப்பீடு மதுரை மண்டல இணை இயக்குநரிடமிருந்து எதிர் பார்க்கப்படுகிறது. நிதி வசதிக்கேற்ப கட்டிடம் கட்டுவது மேலும் பரிசீலிக்கப்படும்.

**தென்காசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி.**

34—வினா 5078—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பரீட்சை அறை மற்றும் கலைக்கூடம் (Exam)Hall-cum-Auditorium. கட்டுவது குறித்து அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை,

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

மேலப்பாவூர் இராஜகோபாலசுவாமி கோயிலருகேயுள்ள பாலத்தை செப்பனிடல்.

35—வினா 5081—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டம், மேலப்பாவூர் இராஜகோபால சுவாமி கோவில் அருகே இடிந்துள்ள பாலத்தை செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கூனாண்டியூர் கீரைக்காரனூர் சாலையை தார்ச் சாலையாக மாற்றல்.

36—வினா 5157—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம் கூனாண்டியூர் கீரைக்காரனூர் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் பணியில் ஏற்படும் காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

(ஆ) எப்போது முடிக்கப்படும்?

விடை—

(அ) மேற்கண்ட வேலையின் ஒப்பந்தக்காரர்களால் தாமதம் ஏற்பட்டது.

(ஆ) தார்பரத்தல் உட்பட விரைவில் முழுமையாக முடிக்கப்படும்.





மேச்சேரி ஒன்றியத்தில் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றல்.

37—வினா 5161—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், கரும்பூ சாலியூர் வெள்ளார் சாலையை தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) எப்போது அந்தப் பணி எடுத்துக் கொள்ளப்படும் ?

விடை—

(அ) இத்தகைய கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

38—வினா 5167—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், அமரம் சாலையையும், கொப்பம் சாலையையும் தார்ச் சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தார் சாலையாக்கிடும் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

## சேலம் மாவட்டத்தில் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம்.

39—வினா 5232—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கென எத்தனை பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது?

(ஆ) இதில் ஆத்தூர், இராசிபுரம், நாமக்கல் கோட்டத்துக்கு எத்தனை ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) 5,902 பம்பு செட்டுகள்.

(ஆ) ஆத்தூர்—1,969 பம்பு செட்டுகள், இராசிபுரம்—86 பம்பு செட்டுகள், நாமக்கல்—556 பம்பு செட்டுகள்.

## தமிழக அரசின் உதவித் தொகை பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள்.

40—வினா 5476—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் உதவித் தொகை பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதனால் ஆண்டுக்கு அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

விடை—

(அ) தமிழக அரசின் சுதந்திரப் போராட்ட வீரர் உதவித் தொகை பெறும் திட்டத்தின்கீழ் இதுவரை 12,752 சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது அந்த உதவித் தொகை பெற்றுவரும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை 9,890 ஆகும்.

(ஆ) இதன் பொருட்டு 1985-86 ஆம் நிதி ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை, பணவிடை செலவு உட்பட சுமார் ரூ. 1,79,75,000 (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தொன்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) ஆகும்.



## சம்பா பயிருக்கு உரம் வழங்கல்.

41—வினா 5488—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சம்பாவுக்கு ரூ. 15 உரமாக வழங்குவதற்கு பதில் அதை நிலவரியில் கழித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும், நெல் கொள்முதலின்போது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் அளப்பதை ஊக்குவிக்கும் வகையிலும் தான் காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு உற்பத்தி பெருக்கு ஊக்க ஊதிய திட்டத்தின் கீழ் ரூ. 35 பெருமான உர வகைகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதை நிலவரியில் கழித்துக் கொள்வது பொருத்தமாக இருக்காது; அவ்வாறான எண்ணமோ கருத்துருவோ அரசின் பரிசீலனையில் இல்லை.

## சென்னை மிருகக் காட்சிச்சாலை.

42—வினா 5631—திரு. மு. இராமநாதன் மற்றும் திரு பரிதி இளம்வழுதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து வந்த மிருகக் காட்சிச் சாலை இப்போது எந்த இடத்தில் எத்தனை ஏக்கரா பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) இந்த மிருகக் காட்சிச் சாலையில் பராமரிக்கப்பட்டு வரும் மிருகங்கள் மற்றும் பறவை இனங்கள் உள்ளிட்ட என்னென்ன உயிரினங்கள் இங்கு இருக்கின்றன?

(இ) அன்றாட செலவு எவ்வளவு?

(ஈ) இதன் விவரமென்ன?

விடை—

*விவர அறிக்கையொன்று விடையாகத் தரப்பட்டுள்ளது.

---

*415 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

கூக்கல் கிராம பள்ளத்தாக்குகளுக்கு அதிக அளவு ஆரஞ்சு மற்றும் மா நாற்றுக்கள் வழங்கல்.

43—வினா 5722—திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூக்கல் கிராமத்தின் பள்ளத்தாக்குகளுக்கு அதிக அளவில் ஆரஞ்சு, மா நாற்றுக்கள் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1985-86 ஆம் ஆண்டில் கமலா, ஆரஞ்சு நாற்றுக்கள் 5 எக்டேருக்கு விநியோகிக்கப்பட்டது. இது 1986-87 ஆம் ஆண்டில் 20 எக்டேராக அதிகரிக்கப்பட்டு, கமலா, ஆரஞ்சு செடிகள் விநியோகம் செய்யப்படும். இதற்காக முன்னோடி நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பகுதிக்கு 'மா' உகந்ததாக இல்லாததால் 'மா' ஒட்டுச் செடிகள் வழங்கப்படுவதில்லை.

சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் நியமனம்.

44—வினா 5746—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

முத்துராமலிங்கம் மாவட்டம், சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் பெண் டாக்டர்களை நியமிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

ஒரு பெண் மருத்துவர் நியமிக்கப்பட்டு அவர் 1-1-1986 ஆம் தேதி முதல் பணியாற்றுகிறார்.





செண்பகத் தோப்பு—அழகர் கோவில் வரை சாலை அமைக்கும் திட்டம்.

45—வினா 5908—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி சமீபம் உள்ள செண்பகத்தோப்பு முதல் அழகர்கோவில் வரை (Western ghat Development Programme) இல் சாலை அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் வேலை நடக்கும்?

விடை—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி சமீபம் உள்ள செண்பகத்தோப்பு முதல் அழகர்கோவில் வரை சாலை அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேம்பனூர் பகுதியில் பாலங்கள் கட்டும் திட்டம்.

46—வினா 5955—திரு.க. சோலைராசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், குமாரவாடி மற்றும் மருங்காபுரி ஒன்றியம், வேம்பனூர் பகுதியில் பாலங்கள் கட்டுகிற திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது வேலைகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வேலையில்லாத மீன்வளப் பட்டதாரிகளுக்கு வழங்கும் உதவித் தொகை.

47—வினா 6005—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்பொழுது வேலையில்லாத மீன் வளப் பட்டதாரிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவித்தொகை எவ்வளவு?

விடை—

(அ) தொழில் கல்வி பெற்ற பட்டதாரிகள் என்ற அடிப்படையில் தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை-17 இல் மீன்வளப் பட்டதாரிகள் தங்களது பெயரினைப் பதிவு செய்கிறார்கள். தொழில் கல்வி பெற்ற பட்டதாரிகள் மாநிலத்தில் இவ்வலுவலகத்தில் மட்டுமே பதிவு செய்யப்படுகிறார்கள். மீன்வளப் பட்டப் படிப்பை அடிப்படை கல்வித் தகுதியாகக் கொண்டு, மேற்படி அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படும் பணிக் காலி இடங்களுக்கு அப்பதிவுதாரர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 31-1-1986 அன்றைய நிலவரப்படி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் மீன் வளப் பட்டதாரிகளின் மொத்த எண்ணிக்கை 37 ஆகும்.

(ஆ) சென்னை-17, தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் மீன்வளப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் உதவித் தொகை இதுவரை வழங்கப்படவில்லை. ஏனெனில் பதிவு செய்து 5 ஆண்டுகள் ஆகியுள்ள பதிவாளர்கள் யாரும் இல்லை.

சிவகங்கை—மானாமதுரை சாலையை மேம்படுத்தும் திட்டம்.

48—வினா 6054—திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகங்கையிலிருந்து மானாமதுரை செல்லும் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

இல்லை.

சொக்கம்புதூரில் கழிப்பிடம் கட்டும் பணி.

49—வினா 6087—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சி பகுதி சொக்கம்புதூரில் கழிப்பிடம் கட்டப்பட்டு பூர்த்தி செய்யப்படாமல் இடையில் நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன?

(இ) மீண்டும் பூர்த்தி செய்ய எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம். இப்பணியானது ஒப்பந்தக்காரருக்கு 9-4-1984 இல் ஒப்படைப்பு செய்யப்பட்டு மேல் கூரை வரை கட்டப்பட்டுள்ளது. மேற்படி பணி தொடர்ந்து செய்யப்படாமல் இருந்ததால், மாநகர மன்ற தீர்மான எண் 369, நாள் 24-6-1985 இன்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை ரத்து செய்து, மேற்படி ஒப்பந்ததாரர் பெயர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டது. மீதமுள்ள வேலையைச் செய்ய 19-9-1985-ல் மற்றும் 7-12-1985-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப் புள்ளியேதும் கிடைக்கப் பெறவில்லை. 24-3-1985 ஆம் தேதி மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

(ஆ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 60,000.

(இ) மறு ஒப்பந்தப்புள்ளி பெற்றவுடன் முடிவு செய்து மீதமுள்ள வேலையை விரைவில் முடிக்க நடவடிக்கை தொடரப் படும்.

சுங்கத்தொகை வசூல் செய்யப்படும் பாலங்கள்.

50—வினா 6105—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சுங்கத் தொகை (Toll) வசூல் செய்யப்படும் பாலங்கள் எத்தனை?

விடை—

16 (பதினாறு) பாலங்கள்.

ஆண்டிப்பட்டி அண்ணா கூட்டுறவு நூற்பாலை.

51—வினா 6203—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதியிலுள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் தற்போது இருப்பில் உள்ள பஞ்சு மதிப்பு எவ்வளவு?

(ஆ) எங்கு கொள்முதல் செய்யப்பட்டது?

(இ) உள்ளூரில் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது?

விடை—

(அ) 31–12–1985 அன்று இருப்பில் உள்ள 2,35,097.6 கிலோகிராம் பஞ்சின் மதிப்பு ரூ. 36,89,297.51 ஆகும்.

(ஆ) 1985 ஆம் ஆண்டில் பஞ்சாப் மற்றும் குஜராத் மாநில கூட்டுறவு பருத்தி விற்பனை இணையங்கள், மத்திய பருத்தி இணையம், தமிழ்நாடு மாநில கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் பருத்தி கொள்முதல் குழு மூலமாகத் தனியார், ஆகியோரிடமிருந்து பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது.

(இ) 1985–ல், ரூ. 5,54,185.57 மதிப்புள்ள 77,271 கிலோ கிராம் பஞ்சு உள்ளூரில் கொள்முதல் செய்யப்பட்டது.

52—வினா 6204—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதியிலுள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் பணியாற்றும் தொழிலாளர் எவ்வளவு பேர்?

(ஆ) இலங்கை தொழிலாளர் எவ்வளவு பேர்?

(இ) அவர்கட்கு வீடு கட்ட பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஈ) உள்ளூர் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் சேர்க்கப் பட்டுள்ளனர்?



விடை—

(அ) அண்டிப்பட்டி தொகுதியிலுள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் இலங்கை அகதிகள், ஆதி திராவிடர் மற்றும் உள்ளூர் தொழிலாளர்களைச் சேர்த்து மொத்தம் 431 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

(ஆ) 224.

(இ) ஆம், இலங்கை அகதிகளுக்கு வீடு கட்ட நபர் ஒருவருக்கு கிராமப் புறமாக இருந்தால் ரூ. 6,000–மும், நகர்ப்புறமாக இருந்தால் ரூ. 10,000 வீதம் கடன் அளிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

(ஈ) மொத்தம் 207 உள்ளூர் தொழிலாளர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.

தலைஞாயிறு ஆலத்தம்பாடி சாலையை தார் சாலையாக மாற்றல்.

53—வினா 6306—திரு. மா. மீனாட்சி சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம்—தலைஞாயிறு—ஆலத்தம்பாடி சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

புல்வாய்க்கரை கிராம அரிசனங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கல்.

54—வினா 6454—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராஜர் மாவட்டம், புல்வாய்க்கரை கிராமத்திலுள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கை ஏதும் அரசு எடுத்துள்ளதா?

விடை—

காமராசர் மாவட்டம், திருச்சுழி வட்டம், புல்வாய்க்கரை கிராமத்தில் வசிக்கும் 23 வீடில்லாத ஆதிதிராவிடர்களுக்கு தனியார் நிலத்தை கையகப்படுத்தும் நடவடிக்கை ஏதும் அரசிடம் இல்லை. அக்கிராமத்தில் புல எண் 22/3-ல் தனியாருக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ள புன்செய் நிலத்தை இரத்து செய்துவிட்டு ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைக்காக ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### திருத்துறைப்பூண்டி அரசு பொது மருத்துவமனை.

**55—வினா 6458—திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி அரசு பொது மருத்துவமனை பெண்கள் பகுதி மின்சார இணைப்புகளை புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இம்மருத்துவமனையிலுள்ள மின்சார இணைப்புகள் ஏற்கனவே பொதுப்பணித்துறையால் பழுதுபார்க்கப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**56—வினா 6468—திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சை தியேட்டரை நவீனப்படுத்த அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



### நிலக்கோட்டை அரசு மருத்துவமனை.

**57—வினா 6497—திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்தவும், தண்ணீர் வசதியும் செய்து கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை அரசு மருத்துவமனையின் படுக்கை வசதியை அதிகப்படுத்தவும், கூடுதல் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. இம்மருத்துவமனையில் கிணற்றின் மூலமும், நிலக்கோட்டை நகர் தொகுதியிலுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து வண்டியின் மூலமும் நீர் எடுக்கப்பட்டு மருத்துவமனையில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

### குமரி மாவட்டத்தில் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்தல்.

**58—வினா 6532பி—டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில், மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### 1984 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட உணவுப்பண்டங்கள் கலப்பட வழக்குகள்.

59—வினா 6536—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 ஆம் ஆண்டு உணவுப் பண்டங்கள் கலப்பட வழக்கு எவ்வளவு பதிவு செய்யப்பட்டது?

(ஆ) அவற்றில் தண்டிக்கப்பட்டவைகள் எத்தனை?

விடை—

(அ) 1,402.

(ஆ) 344.

விவரங்கள் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| அபராதம் விதிக்கப்பட்டவை .. .. .. | 228 |
| சிறைத்தண்டனை அளிக்கப்பட்டவர்கள் .. .. | 2 |
| அபராதமும், சிறைத்தண்டனையும் சேர்த்து அளிக்கப்பட்டவர்கள் — .. .. | 114 |
| மொத்தம் .. | 344 |

### பல்லடம்–பொள்ளாச்சி பாதையில் நெடுஞ்சாலையை அகலப் படுத்தும் திட்டம்.

60—வினா 6544—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பல்லடம்–பொள்ளாச்சி பாதையில் செஞ்சேரி மலைப் பிரிவு வரையுள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

அரசின் பரிசீலனையில் இல்லை.



### உடையார்பாளையம் தாலுகாவில் முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டவர்கள்.

61—வினா 6625—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் சுதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் தாலுக்காவில் 1984–85 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டது?

விடை—

திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்காவில் 1984–85 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட முதியோர் உதவித்தொகை எண்ணிக்கை கீழ்வருமாறு:—

31-3-1985 அன்று முதியோர் உதவித் தொகை பெறுவோரின் எண்ணிக்கை.

1-4-1984 முதல் 31-3-1985 வரை முதியோர் உதவித் தொகை ஒப்பளிக் கப்பட்ட புதிய இனங்களின் எண் ணிக்கை.

| வகை. (1) | (2) | (3) |
|---|---|---|
| (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் .. | 16 | 423 |
| (ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் .. .. | .. | 96 |
| (இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம் | 105 | 682 |
| ( ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் | 19 | 195 |
| மொத்தம் .. | 140 | 1,396 |

### வள்ளுவர் கோட்டத்தில் சினிமா படப்பிடிப்பு.

62—வினா 6722—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வள்ளுவர் கோட்டத்தில் சினிமா படப்பிடிப்பு நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

விடை—

(அ) தடை விதிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

### பொன்னேரியில் சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள்.

63—வினா 6870—திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பொன்னேரியில் சிவில், கிரிமினல் நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் கட்ட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): செங்கை மாவட்டம், பொன்னேரியில் சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் கட்ட பொன்னேரியில் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக உயர்நீதிமன்றம் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளது. மேற்படி செயற்குறிப்பின் மீது செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை இயக்குநர் ஆகியோரின் கருத்துக்கள் கேட்கப்பட்டுள்ளன. நிலம் ஆர்ஜிதம் செய்த பின்னர் அங்கு நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.



### சாணார்பட்டியில் சலவைத்துறை அமைத்தல்.

64—வினா 6910—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம், சாணார்பட்டியில் சலவைத்துறை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், சாணார்பட்டியில் சலவைத்துறை அமைப்பது சம்பந்தமான கோரிக்கையை ஆராய்ந்து விரைவில் கருத்துரு ஒன்று அனுப்புமாறு அண்ணா மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. அவரிடமிருந்து கருத்துரு வரப் பெற்றால் பரிசீலிக்கப்படும்.

### பள்ளப்பட்டியிலிருந்து மஞ்சநாயக்கன்பட்டிக்குச் செல்லும் சாலைக்கு மெட்டல் போடுதல்.

65—வினா 6923—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், திண்டுக்கல் சாலையிலிருந்து பிரிந்து சாணார்பட்டி யூனியன் பள்ளப்பட்டியிலிருந்து மஞ்சநாயக்கன்பட்டிக்குச் செல்லும் 4 கி.மீ. தூர சாலைக்கு மெட்டல் ரோடு எப்போது போடப்படும்?

விடை—

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் பள்ளப்பட்டியிலிருந்து மஞ்சநாயக்கன்பட்டிக்குச் செல்லும் 4 கி.மீ. தூர சாலைக்கு மெட்டல் போடும் பணியை 1986–87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் எடுத்து செய்யப்படும்.

[1986 நவம்பர் 25

கலப்பு இழை தயாரிக்கும் சிறிய ஆலைகள் தொடங்கல்.

66—வினா 6954—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கலப்பு இழை தயாரிக்கும் சிறிய ஆலைகளைத் தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

விருத்தாச்சலம் நகரில் கொசு ஒழிப்புத் திட்டம்.

67—வினா 6976—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருத்தாச்சலம் நகரில் கொசு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

விருத்தாச்சலம் நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 25.05 சதுர கிலோ மீட்டர் ஆகும். அதில் கீழ்ப்பகுதியில் சுமார் 7.00 சதுர கிலோ மீட்டர் தேசிய யானைக்கால் நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் அரசு நேரடி கவனத்திலும் எஞ்சிய 18.05 சதுர கிலோ மீட்டர் பகுதி நகராட்சி நிர்வாகத்தின் கவனத்திலும் கொசு ஒழிப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு களப்பணியாளரும் (Field Assistant) மூன்று தற்காலிக தினக்கூலிப் பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். இந் நகராட்சியில் சிமிண்டினால் கட்டப்பட்ட 14 சாக்கடை கால்வாய்களும், 25 சாதாரண ஆழப்படுத்தப்பட்ட கால்வாய்களும் உள்ளன. இவற்றை தினக்கூலிப் பணியாளர்களும் களப் பணியாளர்களும் அவ்வப்போது சுத்தம் செய்து கொசு மருந்து தெளித்து பராமரித்து வருகிறார்கள். கொசுக்களை ஒழிப்பதற்காக ''பையாசின் ப்ளை ஆயில்'', ''ப்ளைடாக்ஸ்'' மற்றும் ''பாரிஸ்கிரீன்'' போன்ற இரசாயன மருந்துகள் விசைத் தெளிப்பான் மூலம் தினமும் தெளிக்கப்பட்டு வருகிறது. இவ்வேலையை சுகாதார மேற்பார்வையாளர் ஒருவர் கூடுதல் பொறுப்பு வகித்து கவனித்து வருகிறார். இந்நகராட்சியில் கொசு ஒழிப்புத் திட்டம் துப்புரவு ஆய்வர் ஒருவரின் நேரடிக் கவனத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.



1986 நவம்பர் 25]

கிராமங்களில் பாம்புக்கடிக்கு வைத்தியர்கள் நியமனம்.

68—வினா 7013—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் பாம்புக் கடிக்கு வைத்தியம் செய்ய கிராம வைத்தியர்களை அரசு நியமனம் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமனம் செய்யும்?

விடை—

நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் இயங்கிவரும் முறைப்படுத்தப்பட்ட முழு நேர மற்றும் பகுதி நேர ஊரக மருந்தகங்களில் மருத்துவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். எனவே, பாம்புக்கடிபட்டவர்களை அம்மருந்தகங்களுக்கு உடன் அழைத்து சென்று சிகிச்சை பெறுவது கூடும்.

மேலும், இது குறித்து தனிப்பட்ட முறையில் கிராம வைத்தியர்களை நியமனம் செய்ய அரசுத் தரப்பில் செயற் குறிப்புகள் ஏதும் இல்லை.

மேலும் கிராமங்களில் பாம்பு கடித்து சாவோர் எண்ணிக்கை அதிகரித்து விட்டது என்ற புகாருக்கு அலுவலக பூர்வமாக எந்தவிதமான ஆதாரமும் இன்றளவில் இல்லை.

உதகமண்டலத்தில் மலைவாழ் மக்கள் ஆராய்ச்சி மையம் தொடங்குதல்.

69—வினா 7028—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டியில் மலைவாழ்மக்கள் ஆராய்ச்சி மையம் தொடங்குவது பற்றிய குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : உதகமண்டலத்தில் மலைவாழ்மக்கள் ஆராய்ச்சி மையம் 2—10—83 முதல் தொடங்கப்பட்டு, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்வாராய்ச்சி மையம் மலைவாழ் மக்களின் வாழ்க்கை நிலையை ஆய்வு செய்து வருகிறது. மேலும் இம்மையம் பழங்குடி மக்களுக்காக மேம்பாட்டுத் திட்டங்கள் சிலவற்றையும் மதிப்பீட்டாய்வு செய்து வருகிறது.

கன்னியாகுமரியில் புதிதாக குறைந்த கட்டணத்தில் தங்கும் விடுதி கட்டுதல்.

70—வினா 7052— திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் சுமார் ரூ. 10 இலட்சம் செலவில் புதிதாக குறைந்த கட்டணத்தில் தங்கும் விடுதி கட்டும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): மத்திய சுற்றுலாத் துறை கன்னியாகுமரியில் ரூ. 13.36 இலட்சம் செலவில் 8 குடில்கள் கட்ட நிதி உதவி அளித்து ஆணை வெளியிட்டுள்ளது. அதில் முதல் தவணையாக ரூ. 10 இலட்சம் கொடுத்துள்ளது. குறைந்த வருவாய் சுற்றுலா பயணிகளுக்காக ரூ. 5 இலட்சம் செலவில் கன்னியாகுமரியில் இளைஞர் இல்லம் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள இரண்டாம் நிலை ஆய்வு மாளிகையை துயிலக விடுதியாக மாற்றுவதற்கு ரூ. 1.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு இப்பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடைபெற்று வருகின்றன. மேலும் 64 படுக்கைகள் கொண்ட துயிலக விடுதி கட்டுவதற்கு ரூ. 23.40 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.



காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் கட்டும் திட்டம்.

71—வினா 7053—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஓட்டல் கட்ட திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசு அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்துறை காஞ்சிபுரத்தில் ரூ. 40 இலட்சம் செலவில் ''யாத்திரி நிவாஸ்'' ஒன்று கட்டுவதற்கு மத்திய அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பியது. மத்திய அரசு அத்திட்டத்திற்கு ரூ. 34 இலட்சம் ஒப்புதல் அளித்து ரூ. 5 இலட்சம் தற்பொழுது முதல் தவணையாகக் கொடுத்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவினங்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் தயாரிக்கப்பட்டது. மேற்படி கழகம் அத்திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

அவலாஞ்சியில் டிரவுட்வகை மீன் வளர்த்தல்.

72—வினா 7060—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) அவலாஞ்சியில் டிரவுட் வகை மீன் வளர்க்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவு?

[1986 நவம்பர் 25

விடை—

(அ) ஆம். அவலாஞ்சியில் டிரவுட் வகை மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யக்கூடிய பொறிப்பகம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

(ஆ) இதற்காக ஆண்டொன்றுக்கு, சுமார் ரூ. 75,000 செலவிடப்படுகிறது.

### 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியால் வாங்கப்பட்ட புதிய லாரிகள்.

73—வினா 7183—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிக்கு 1984 ஆம் ஆண்டு வாங்கப்பட்ட புதிய லாரிகள் எவ்வளவு?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) சென்னை மாநகராட்சிக்கு 1984 ஆம் ஆண்டு வாங்கப்பட்ட மொத்தம் புதிய லாரிகள் .. .. .. 34 (லேலண்ட்) லாரிகள்.

(ஆ) 34 லாரிகளின் சேசிஸ்களின் (Chassis) மதிப்பீடு .. .. ரூ.60,15,344.88

துப்பரவுப் பணிக்காக கட்டுமானப் பணியின் மதிப்பீடு (Cabin and Body Building) .. ரூ.14,25,462.00

ஆக மொத்தம் மதிப்பீடு .. ரூ.74,40,806.88



1986 நவம்பர் 25]

### உரிமம் பெற்ற கள்ளுக்கடைகள்.

74—வினா 7197:—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உரிமம் பெற்ற கள்ளுக் கடைகள் எத்தனை?

(ஆ) அவைகளில் 1984-85 ஆம் ஆண்டில் ஏலம் போகாத இடங்கள் எத்தனை?

விடை—

(அ) 8,772 கள்ளுக் கடைகள்,

(ஆ) 1984-85ஆம் ஆண்டுக்கு விளம்பரப்படுத்தப்பட்ட அனைத்துக் கடைகளும் அதாவது 9,124 கடைகளும் ஏலம் விடப்பட்டன. ஆனால் அரசு நிர்ணயம் செய்த விலையை விட அதிக தொகை கிடைத்த கடைகளுக்கு மட்டும் ஏல ஊர்ஜிதம் செய்யப்பட்டு உரிமம் வழங்கப்பட்டது. மீதமுள்ள கடைகளில் 54 கடைகளுக்கு ஏலம் கேட்க வராததினால் விளம்பரப்படுத்தப்பட்ட பட்டியலில் இருந்து தள்ளுபடி செய்யப்பட்டது. 298 கடைகள் அரசு நிர்ணயம் செய்த விலைக்கு குறைவாக ஏலம் போனதால் (அதாவது 50 சதவிகிதத்திற்கும் குறைவாக) ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. ஆக 1984—85 கலால் ஆண்டில் ஏலம் போகாத கடைகள் எதுவும் இல்லை.

### அரசு அலுவலர்களுக்கு வங்கிகள் மூலம் ஊதியம் வழங்கும் திட்டம்.

75—வினா 7248—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேமிக்கத் தூண்டும் வகையில் அரசு ஊழியர்களுக்கு வங்கிகள் மூலம் ஊதியம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த முறை எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) தற்போது திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் ரூ.1800—110—2000 என்ற ஊதிய விகிதத்திலும் அதற்கும் மேற்பட்ட ஊதிய விகிதத்திலும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் பணி செய்யும் அரசு அலுவலர்களுக்கு மட்டும், அவரது ஊதியம் முதலியன காசோலையாக வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக் கேள்வி எழுவதற்கு இடமில்லை.

**உப்பிலியாபுரம் தொகுதியில் மலைமீது கட்டப்பட்ட ஏரிகள் மற்றும் குளங்கள்.**

76—வினா 7326—**திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதியில் மலைமீது பொதுப்பணித் துறையால் கட்டப்பட்ட ஏரிகள் எத்தனை? குட்டைகள் எத்தனை?

விடை—

திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள மலைப்பகுதியில் இதுவரையில் பொதுப்பணித் துறையினால் ஏரிகள் மற்றும் குட்டைகள் ஒன்றும் அமைக்கப்படவில்லை. ஆனால் உப்பிலியாபுரம் தொகுதியிலுள்ள பச்சை மலைமீது ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொதுப்பணித் துறையினரால் பச்சை மலையில் ஓடும் ஓடையின் குறுக்கே தடுப்பு அணைக்கட்டுகள் (செக்டேம்) 14 கட்டி முடிக்கப் பட்டுள்ளன. மேலும் 1985—86 ஆம் ஆண்டில் 4 தடுப்பு அணைக் கட்டுகள் கட்டுவதற்கு அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டு வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் உப்பு.**

77—வினா 7374—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக எவ்வளவு உப்பு உற்பத்தியாகிறது?



விடை—

தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 12.50 இலட்சம் டன்கள் உப்பு உற்பத்தி செய்யப் படுகிறது.

**அபிஷேகப்பட்டி கால்நடைப்பண்ணை மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம்.**

78—வினா 7377—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி அபிஷேகப்பட்டியில் உள்ள கால்நடை பண்ணையில் 1983—84 ஆம் ஆண்டு அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) அங்கு எவ்வளவு கால்நடைகள் பராமரிக்கப்படுகின்றன?

விடை—

1983-84 ஆம் ஆண்டு திருநெல்வேலி அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையின் வருமானம் ரூ. 5,10,133 ஆகும். அதற்கான விவரங்கள் பின்வருமாறு:

| | | ரூ. |
|---|---|---|
| 1. | பால் விற்ற வகையில் வருமானம் .. | 3,64,706 |
| 2. | கால்நடை விற்ற வகையில் வருமானம் | 19,002 |
| 3. | ஆடுகள் விற்ற வகையில் வருமானம் | 22,711 |
| 4. | பன்றிகள் விற்ற வகையில் வருமானம் | 13,566 |
| 5. | கோழிகள் விற்ற வகையில் வருமானம் | 29,919 |
| 6. | இதர வருமானம் (விவசாயப் பிரிவு) | 60,229 |
| | மொத்த வரவு .. .. | 5,10,133 |

(ஆ) 1—3—1986 அன்று அப்பண்ணையில் பராமரிக்கப்படும் கால்நடைகளின் விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | கால்நடைப் பிரிவில் பராமரிக்கப்படும் கால்நடைகள் .. .. | 327 |
| 2. | ஆடுகள் பிரிவில் பராமரிக்கப்படும் ஆடுகள் .. .. .. | 943 |
| 3. | கோழிப் பிரிவில் பராமரிக்கப்படும் கோழிகள் .. .. .. | 222 |

## தொட்டிபாளையத்தில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம்.

79—வினா 7383—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொட்டிபாளையம் கிராமம் (சர்வே எண் 21ஏ, 21–பி) 10.28 ஏக்கர் நிலப்பரப்பில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

திருப்பூர் தொட்டிபாளையம் கிராமம் சர்வே எண் 21ஏ, 21பி-யில் 10.28 ஏக்கர் நிலப்பரப்பு பிச்சம்பாளையம் அருள்மிகு மாரியம்மன் மற்றும் விநாயகர் கோவிலுக்கு சொந்தமானதாகையால், இந்நிலத்தினை பொது ஏலத்தில் விற்பனை செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்கள் ஏற்கனவே ஆணையிட்டு விட்டார். எனவே, திருப்பூரில் விளையாட்டு அரங்கம் கட்ட வேறு இடம் ஆய்வு செய்வது தொடர்பாக விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சி இயக்குநரக அளவில் பரிசீலனையில் உள்ளது.

## உச்சிபுளிக்கு அருகில் இந்திய கடற்படை விமானதளம் அமைத்தல்.

80—வினா 7384—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உச்சிபுளிக்கு அருகில் இந்திய கடற்படை விமானதளம் அமைப்பது மாநில அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரமென்ன?



விடை—

(அ) ஆம்.

(ஆ) 1. இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உச்சிபுளி என்ற ஊருக்கு அருகில் ஆற்றங்கரை மற்றும் பெருங்குளம் கிராமங்களில் இந்திய கப்பற்படை மைய அரசுக்குச் சொந்தமான விமான தளத்தை உபயோகிக்க உத்தேசித்துள்ளது. அக்கிராமங்களில் மைய அரசுக்குச் சொந்தமான நிலங்களின் விவரங்கள் பின்வருமாறு—

| கிராமப் பெயர். (1) | | சர்வே எண். (2) | பரப்பளவு. (3) ஹெக்டேர். |
|---|---|---|---|
| (1) | ஆற்றங்கரை .. .. | 153 | 20.43 |
| (2) | பெருங்குளம் .. .. | 238 | 49.20 |
| | மொத்தம் .. | | 69.63 |

2. ஆற்றங்கரை மற்றும் ஆலுகன்குளம் கிராமங்களில் கடற்படை விமானதளம் மேலும் விரிவாக்க, சாலை போக்குவரத்துடன் கூடிய சுமார் 138 ஏக்கர் மற்றும் 23 செண்டுகள் கொண்ட பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்யவும் சுமார் 4 ஏக்கர்கள் கொண்ட அரசு புறம்போக்கு நிலத்தை மாற்றம் செய்யவும் மாநில அரசு கொள்கை அளவில் ஒத்துக்கொண்டுள்ளது.

## தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

81—வினா 7395—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் எத்தனை உள்ளன?

(ஆ) இவைகள் அரசின் முன்அனுமதி பெற்று துவங்கப்பட்டவைகளா?

விடை—

(அ) 1983-ம் ஆண்டு முதல் 1985ம் ஆண்டுவரை மொத்தம் 228 பள்ளிகள்.

(ஆ) இவைகளில் அரசின் அனுமதி பெற்றவை 44 பள்ளிகள் மட்டுமே. மற்றவை அங்கீகாரம் பெறாதவைகள் ஆகும்.

தென்னைக்கு பயிர் ஈட்டுறுதித் திட்டம்.

82—வினா 7420—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னைக்கு பயிர் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வரும் உத்தேசம் உண்டா ?

விடை—

இல்லை, இம்மாநிலத்தில் தற்போது பயிர் ஈட்டுறுதித் திட்டம் நெல் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கு மட்டும் செயலாக்கப்பட்டு வருகிறது.

அச்சங்குளத்திலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலை.

83—வினா 7567—திரு க. பாரமலை : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் அச்சங்குளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பு ஆலையில் (தொழிலாளர்களாகவும், அலுவலகப் பணியாளர்களாகவும்) மொத்தம் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள் ?

(ஆ) அதில் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் அச்சங்குளம் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பு ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் விவரம் வருமாறு :—

| | | | | |
|---|---|---|---|---|
| பணியாளர்கள் | .. | .. | .. | 13 |
| தொழிலாளர்கள் | .. | .. | .. | 232 |
| ஜாபாஸ் மற்றும் கிளீனிங் | | .. | .. | 5 |

(ஆ) இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் ஆதி திராவிடர் தொழிலாளிகள் நியமிக்கப்பட வேண்டும், அதன்படி தொழிலாளர்கள் யாவரும் ஆதிதிராவிடர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பணியாளர்கள் யாவரும் நியமன விதிகளின்படி (Communal Rotation) விகிதாசார அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



வருவாய்த் துறையில் பணிபுரியும் துணை கலெக்டர்கள்.

84—வினா 7571—திரு க. பாரமலை : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 31—1—1985 இல் உள்ளவாறு தமிழகத்தில் வருவாய்த்துறையில் பணிபுரியும் டெப்டி கலெக்டர்கள் (வேறு துறைகளுக்கு Deputation-இல் அனுப்பப்பட்டு பணி புரிபவர்கள் உட்பட) மொத்தம் எத்தனை பேர் ?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களில் பதவி உயர்வின் மூலம் வந்தவர்கள் எத்தனை பேர்?

(ஈ) தேர்வாணைக் குழுவின் நேரடித் தேர்வின் மூலம் வந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) 352.

(ஆ) 16.

(இ) 11.

(ஈ) 5.

தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு இளநிலை ஆய்வாளர்கள்

85—வினா 7577—திரு. க. பாரமலை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் கலைக்கப்பட்டதை ஒட்டி 1985ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் நேரடி நியமனம் செய்ய தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு இளநிலை ஆய்வாளர்கள் Junior Inspector of Co-operative Societies மொத்தம் எத்தனை பேர் ?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) 842 பேர்: (ஆ) 148 பேர் (மொத்த நியமனத்தில் 17.58 சதவிகிதம்)—

மாவட்ட வாரியான விவரங்கள் இணைப்பில்* தரப்பட்டுள்ளன.

**விவசாய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் உள்ள நகரங்களில் விவசாயிகள் தங்குவதற்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதிகள் கட்டுதல்.**

86—வினா 7584—திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விவசாய ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்படுகின்ற நகரங்களில் விவசாயப் பொருள்களை விற்கவும், விவசாய இடுபொருட்களை வாங்கவும் வருகின்ற விவசாயிகள் குறைந்த வாடகையில் தங்குவதற்கு தங்கும் விடுதிகள் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளை பொருட்களை விற்பதற்கு எடுத்து வரும் விவசாயிகள் தங்குவதற்கு ஏற்கனவே விவசாயிகள் ஒய்வு அறைகள் ஒரு சில விற்பனைக் கூடங்களில் உள்ளன. முன்னுரிமை அடிப்படையில் விற்பனைக் கூடங்களில் கட்டிடங்கள் கட்டப்படுவதால் பரிவர்த்தனைக்கூடம், கிட்டங்கிகள், சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள் ஆகிய வேலைகள் முன்னால் செய்யப்படுகின்றன, பகலில் தங்கும் வசதிக்காக விவசாயிகள் ஒய்வுக் கூடங்கள் 39 இடங்களில் கட்டப்பட்டுள்ளன. ஆனால் இரவில் தங்கும் வசதி 12 விற்பனைக் கூடங்களில் மட்டுமே உள்ளது.

---

*பக்கம் 418-ல் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



**விறகனூர் மதகு அணையிலிருந்து பார்த்திபனூர் மதகு அணைவரை கால்வாய்களைச் சீரமைக்கும் பணி.**

87—வினா 7596—திரு. க. பாரமலை: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வைகை ஆற்றில் விறகனூர் மதகு அணையிலிருந்து பார்த்திபனூர் மதகு அணை வரையிலுள்ள வலது மற்றும் இடது கால்வாய்களைச் சீரமைக்கும் பணி எப்பொழுது துவக்கப்பெறும்?

விடை—

விறகனூர் மதகு அணையிலிருந்து வரும் இடது பிரதானக் கால்வாய்க்கு ரூ. 157 இலட்சம் செலவில் வெள்ளக்கரை அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தலைமை பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து அரசுக்கு வந்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மானாமதுரையில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம்**

88—வினா 7597—திரு க. பாரமலை: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மானாமதுரையில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் 1986–87 ஆம் ஆண்டில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

[1986 நவம்பர் 25

### அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

89—வினா 7646—திரு கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பயிற்சிப் பள்ளிகள் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டவைகளா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டவை ?

(இ) அங்கீகரிக்கப்படாதவை எத்தனை ?

விடை—

(அ) தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் (சிறுபான்மை மற்றும் சிறுபான்மை இல்லாத நிர்வாகத்தினர் நடத்தும் நிறுவனங்கள்) அரசால் அங்கீகரிக்கப்பட்டவை உள்ளன. மேலும், அங்கீகாரம் குறித்து பெறப்பட்ட சில விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டும்கூட சில நிர்வாகத்தினர் பள்ளிகளை நடத்தி வருவதாகவும் அறியப்படுகிறது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்டவை 44 பள்ளிகள் (ஆண்கள் 16 : பெண்கள் 28).

(இ) அங்கீகாரம் கோரப்பட்டு மறுக்கப்பட்டவை ;

| | பள்ளிகள். |
|---|---|
| 1983-ல் .. .. .. | 83 |
| 1984-ல் .. .. .. | 54 |
| 1985-ல் .. .. .. | 47 |
| | 184 |

### சென்னையிலுள்ள அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களிலும் மோட்டார் பொருத்தும் திட்டம்,

90—வினா 7669—திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஓடும் அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களிலும் மோட்டார் பொருத்தும் திட்டம் அமுலில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், 1985 ஜூன் வரை எத்தனை ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது?



1986 நவம்பர் 25]

விடை—

(அ) மற்றும் (ஆ) ரிக்ஷா ஓட்டுநர்களின் வசதிக்காக, இயந்திரம் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு அதிக எண்ணிக்கையில் உரிமங்கள் வழங்க புதிய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கான உரிமங்களை 17—2—1981 ஆம் நாளுக்குப் பிறகு வழங்க வேண்டாமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மனித சக்தியால் இயங்கப்படும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு வழங்கப்படும் உரிமங்களை ஆண்டுதோறும் 10 விழுக்காடு குறைத்துக்கொண்டு வந்து அவற்றை நாளடைவில் அறவே ஒழித்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்னை நகரில் 31—12—1985 வரை இயந்திரம் பொருத்தப்பட்ட 468 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### எழும்பூர் பூபதி நகரிலுள்ள குடிசைவாழ் மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுதல்.

91—வினா 7728—திரு சு. பாலன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேம்பாலம் கட்டுவதற்காக சென்னை, எழும்பூர் பூபதி நகரில் வாழ்ந்த குடிசைவாழ் மக்கள் வெளியேற்றப்பட்டார்களா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை; எழும்பூர் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்காக பூபதி நகர் குடிசைப் பகுதியில் வாழ்ந்த 240 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு, சேத்துப்பட்டு இரயில்வே நிலையம் அருகாமையில் உள்ள ஓசான்குளம் பகுதியில், உலக வங்கித் திட்டம் 2-ன்கீழ், ரூ. 3 இலட்சங்கள் செலவில் மேம்பாடு செய்யப்பட்ட இடத்தில் குடியமர்த்தப்பட்டனர். இந்த 240 குடும்பங்களுக்கும்: 10 × 14 ச. அடி பரப்பளவுள்ள மனைகள் ஒதுக்கப்பட்டு, பட்டாவும் வழங்கப்பட்டு, வீடுகள் கட்டிக் கொள்ள கடனும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 8.4 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடற்கரைப் பகுதிகளில் பாதுகாப்புக் கட்டிடங்கள் கட்டுதல்.

92—வினா 7779—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் பாதுகாப்புக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) இதற்கு ஐரோப்பிய பொருளாதார சமூகக் குழு எவ்வளவு மானியம் அளித்துள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) முதல் கட்டமாக 50 புயல் காப்பகங்கள் கட்ட ரூ. 1 கோடி அளித்துள்ளது.

இரண்டாம் கட்டமாக 20 புயல் காப்பகங்கள் கட்ட ரூ. 60 இலட்சம் அளித்துள்ளது.

மூன்றாம் கட்டமாக 15 புயல் காப்பகங்கள் கட்ட ரூ. 90 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவுதல்.

93—வினா 7882—திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் புயல் எச்சரிக்கை கருவிகள் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(ஆ) எங்கெங்கு எத்தனை நிறுவப்பட உள்ளன?



விடை—

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க் கண்ட ஒன்பது இடங்களில் புயல் எச்சரிக்கை கருவிகள் நிறுவப் பட்டுள்ளன :—

1. திருவாடனை
2. தொண்டி
3. திருபாலங்குடி
4. பரமக்குடி
5. இராமநாதபுரம்
6. மண்டபம்முகாம்
7. இராமேஸ்வரம்
8. முதுகொளத்தூர்
9. சிக்கல்

கேசவப் பிள்ளை பூங்கா குடியிருப்புகள்

94—வினா 8045—திரு. சு. பாலன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேசவப்பிள்ளை பூங்கா குடியிருப்புகளில் எந்தெந்த குடிசைப் பகுதிகளில் வாழ்ந்தவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டது?

(ஆ) இவர்களுக்கு மாத வாடகை எவ்வளவு?

(இ) தேங்கி நிற்கும் கழிவுநீர் வெளியே செல்ல என்ன வழி வகைகள் செய்யப்பட்டிருக்கிறது?

விடை—

(அ) குடியிருப்புகள் பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திற்கு அருகே பாதுகாப்புக்கு ஆபத்தான மின் பகுதியில் வசித்த ஜகந்நாதபுரம் குடிசைப்பகுதி மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டது.

(ஆ) ரூ. 20.

(இ) கழிவுநீர் பாதாள சாக்கடை மூலம் வெளியேற்றப் படுகிறது. மழைநீர் தேங்காமல் இருக்க பள்ளமான பகுதிகள் நிரப்பப்பட்டுள்ளது?

[1986 நவம்பர் 25

## மகாராஜா காட்டாற்றில் அணை கட்டும் திட்டம்.

95—வினா 8140—திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடி அருகில் முநவிப்பட்டியில் உள்ள மகாராஜா காட்டாற்றில் அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

## கண்ணக்கன்காடு நரி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

96—வினா 8146—திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கரம்பக்குடி ஒன்றியம், கண்ணக்கன்காடு நரி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

## கோவில்பட்டி ஈ.வெ.ஆ. வள்ளிமுத்து நடுநிலைப்பள்ளி மதிய உணவுக்கூடம்.

97—வினா 8211—திரு. சு. பாலன் : மாண்புமிகு சத்துணவு சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி ஈ.வெ.ஆ. வள்ளிமுத்து நடுநிலைப்பள்ளியில் மதிய உணவுக் கூடத்தில் கொதிக்கும் சாம்பார் அண்டாவில் ஒரு சிறுவன் விழுந்து இறந்தது உண்மையா?

(ஆ) அதன் காரணமாக 3 பேர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா?

(இ) இதன் காரணமாக பள்ளி தலைமை ஆசிரியர் திரு. சூசை மாணிக்கம், உதவி தலைமை ஆசிரியர் திரு. புத்திசிகாமணி என்பவர்கள் மீது எந்தக் குற்றப்பிரிவின்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது?



1986 நவம்பர் 25]

விடை—

(அ) உண்மை.

(ஆ) ஆம்.

(இ) இந்தியக் குற்றப்பிரிவு சட்டம் 304(எ) பிரிவின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

## சுண்டைக்காமுத்தூர் சாலை இந்துக்கள் சுடுகாடு.

98—வினா 8229—திரு. மு. இராமநாதன், திரு. ஆ. நடராசன் மற்றும் திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகர எல்லையில் சுண்டைக்காமுத்தூர் ரோடு இந்துக்கள் சுடுகாட்டிற்கு (நொய்யல் கரையில்) போதுமான இடம் இல்லாதபடியால் அந்தப் பகுதியில் புதிதாக இடம் வாங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள மயானத்தை விரிவுபடுத்தும் பொருட்டு, மயானத்தை ஒட்டியுள்ள சுமார் 2 ஏக்கர் நஞ்சை நிலத்தை கையகப்படுத்தும் நடவடிக்கையை, கோவை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. மேற்படி நிலம் நஞ்சை நிலமானாலும் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக தரிசாக உள்ளது. விவசாயம் எதுவும் இன்றி செங்கல் சூளை வைத்து தரை மேடுபள்ளமாக உள்ளது. எனவே நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலரை கேட்டுள்ளது. இச்செயற்குறிப்பு மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வில் உள்ளது.

## கிண்டியிலுள்ள குழந்தைகள் பூங்கா.

99—வினா 8311—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கிண்டியில் உள்ள குழந்தைகள் பூங்காவில் மிருகங்களையும் பறவைகளையும் இனவிருத்தி செய்ய தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

விடை—

(அ) ஆம். இனவிருத்திக்காக நல்லமுறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) முயற்சிகளின் பலனாக கடந்த இரண்டு ஆண்டுகளில் இனவிருத்தி செய்துள்ள மிருகங்கள் மற்றும் பறவைகளின் விவரம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| **1984—85 :** | | | |
| யானை | .. | .. | 1 குட்டி |
| சிறுத்தை | .. | .. | 2 குட்டிகள் |
| பறவைகள் | .. | .. | 10 குஞ்சுகள் |
| மான் | .. | .. | 4 குட்டிகள் |
| **1985—86 :** | .. | .. | |
| சிறுத்தை | .. | .. | 2 குட்டிகள் |
| மான் | .. | .. | 3 குட்டிகள் |
| சிங்கவால் குரங்கு | | .. | 1 குட்டி |
| பெலிகன் பறவை | | .. | 2 குஞ்சுகள் |

### சத்தியமங்கலம் காடுகளிலுள்ள புலிக்குட்டிகள்

100—வினா 8378—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சத்தியமங்கலம் காடுகளில் எத்தனை புலிக்குட்டிகள் வாழ்கின்றன?

விடை—

சத்தியமங்கலம் வனக்கோட்டத்தைச் சேர்ந்த காடுகளில் புலிக்குட்டிகள் இல்லை. 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, இங்கு 3 ஆண் புலிகளும், 4 பெண் புலிகளும், ஆகமொத்தம் 7 புலிகள் உள்ளன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



### 2. ஒழுங்குப் பிரச்சினை
### அரசியலமைப்பு சட்டப் பிரிவை எரித்தோர் உறுப்பினர்கள் தகுதியை இழத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் 111 ஆவது விதியின் கீழ்......

**திரு. அ. ரகுமான்கான் :** சார் பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் என்னுடைய அறையில் வந்து கேட்டு விட்டு இங்கு எழுப்ப வேண்டும். We have not started the business. என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. என்னுடைய அறையில் வந்து கேட்டுவிட்டு எழுப்ப வேண்டும். ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கும்பொழுது இடையிலே நீங்கள் எழுப்புவதற்கு வாய்ப்பு உண்டு. We have not yet commenced the business.

(முற்பகல் 10—20)

**திரு. அ. ரகுமான்கான்:** சபை சம்பந்தமான விஷயத்தை, புரொசீடிங்ஸ் சம்பந்தமான விஷயத்தை எப்போது வேண்டுமானாலும் பேசலாம். என்ன என்று கேட்டுவிட்டு தயவு செய்து முடிவு செய்யுங்கள். மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து நான் சொல்வதைக் கேட்டுவிட்டு நீங்கள் உங்களுடைய கருத்தைத் தாராளமாகச் சொல்லலாம். அதற்கு மறுப்பு இல்லை. தயவுசெய்து எனக்கு இரண்டு நிமிஷங்கள் மட்டும் அனுமதி கொடுக்கவேண்டும். இங்கே உறுப்பினர்கள் திரு. பொன்னுரங்கம் மற்றும் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் இருக்கைகளில் ''வெற்றிடம்'' என்று போடப்பட்டிருக்கிறது. இது நெம்பர் ஒன்று. தங்களுடைய அறையில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்னுடைய அலுவலகம் சம்பந்தமான விஷயம். அறையில் வந்து கேளுங்கள். நான் இங்கே பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. It is not a matter concerned with the business of the House.

**திரு. அ. ரகுமான்கான்:** வெற்றிடம் என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன். என்னை தயவு செய்து அலவ் பண்ணுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. நேற்றைய தினம் நான் தீர்ப்பை வழங்கிவிட்டேன். They are not eligible to sit in the House என்று சொல்லியாகி விட்டது. ஆகவே ஆபீசில் செய்திருப்பார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் தங்கள் தீர்ப்பைப் பற்றி பேசவில்லை சார்.

MR. SPEAKER: They are inelgible to sit in the House. I have not enquired into it. When I said they are ineligible, my office would have automaticaly taken up follow up action based on my ruling. அது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இது அலுவலகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அல்ல, என் அலுவலகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை அதை இங்கே எழுப்ப முடியாது. It is not the business of the House. It is office routine. They are not eligible to sit in the House என்று சொல்லிவிட்டேன்.

திரு. கி. மனோகரன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றைக் கிளப்புகிறபோது அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று கிளப்புவதற்கு முன்னாலேயே ஒரு தீர்ப்பைக் கூறுவது நியாயம்தானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிளப்புவதற்கு முன் சொல்லவில்லை. What will follow, I can infer. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போதே உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் அட்டைகளை எடுத்துக் காட்டினார்கள். நான் நேற்றைய தினம் அளித்த தீர்ப்பில் they are ineligible to sit in the House என்று சொன்னேன். எனவே இங்கே கிளப்புவது முறையல்ல.

திரு. கி. மனோகரன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

* * *

(கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I am expunging your remarks.

என்ன கிளப்பப் போகிறார் என்று என்னுடைய அறையில் சொல்லியிருந்தால் அதை அனுமதித்திருப்பேன். இப்படிச் செய்வது முறையல்ல.

திரு. அ. ரகுமான்கான்: கோபப்பட்டு பிரச்சினையை திசை திருப்பப் பார்க்கிறீர்கள். நான் நியாயத்தைக் கேட்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவை என்றால் அதற்கு ஒரு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. அதைப்போல் எனக்கு நீங்கள் தான் துணையாக இருக்கவேண்டும். எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து எனக்குத் துணையாக இல்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்?

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. கி. மனோகரன்: மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லாம் கோபத்திற்கு ஆளாகக் கூடியவர்கள் அல்ல என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் சொல்லும்போது ஒன்றைச் சொன்னீர்கள். அதற்கு ஒரு சிறிய விளக்கம் எனக்கு தேவைப்படுகிறது. 'நான் இதற்கு பதில் சொல்லுகின்ற சூழ்நிலையில் இல்லை' என்று நீங்கள் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது நம் இரண்டு பேருக்கும் இந்தச் சபை என்றால் விவாதம் முழுமையாக இருக்கும். நான் பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. அதற்காகத்தான் என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டுமென்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள்தானே நேற்று சொன்னீர்கள், "You are a speaking Speaker" என்று.

திரு. அ. ரகுமான்கான் : You are the presiding officer. சபை சம்பந்தமாக நீங்கள்தான் சொல்லவேண்டும். மந்திரிகளுக்கு இதில் சம்பந்தமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் என்னுடைய அறையில் வந்து சொல்லலாம், பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலும் வந்து சொல்லலாம், பார்ட்டி லீடர்களிடமும் சொல்லலாம். அது தான் முறை. தனியாக நான் எப்படி பதில் சொல்ல முடியும்?

திரு. கி. மனோகரன்: சபாநாயகர் அவர்களே, "நான் பதில் சொல்லக்கூடிய நிலையிலே இல்லை" என்று நீங்கள் பத்திரிகை நிருபர்களிடம் பேசும்போது சொன்னீர்கள். என்னுடைய Power-க்கு "sky is the limit" என்று நீங்கள் தெரிவித்ததாகப் பத்திரிகையில் படித்தேன். அந்த அளவிற்கு அதிகாரம், பவர் பெற்றிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமருங்கள். இதே விவகாரத்தை நீங்கள் சொன்னீர்கள். நாட்டுக்குத் தெரியட்டும் என்று சொல்கிறேன். 1972 ஆம் ஆண்டு இதே நாற்காலியில் அமர்ந்திருந்த சபாநாயகரை இதே மாதிரி இதே பவரைப் பயன்படுத்தி வெளியேற்றி அவரை அங்கே அமர வைத்திருக்கிறீர்கள். சபாநாயகருக்கு முதல் இடம் உண்டு. முன்னாள் சபாநாயகருக்கு முதல் சீட் உண்டு. அவரை அங்கே தள்ளி உட்கார வைத்தீர்கள். அதே அதிகாரம்—அன்றைக்கு உங்களுக்கு sky was the limit. இன்றைக்கு அதேமாதிரி எனக்கு sky is the limit (மேசையைத் தட்டல்) அன்றைக்கு அண்ணன் மதியழகன் அவர்களை நீக்கினீர்கள் அரசியல் சட்டத்தைத் தூக்கிப்போட்டு (மேசையைத் தட்டல்) அவருடைய ஆவி உங்களைச் சும்மா விடாது. (மேசையைத் தட்டல்) அவருடைய ஆன்மா இந்த அவையில்தான் நடமாடிக்கொண்டிருக்கிறது, புரிந்து கொள்ளுங்கள், எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், sky was

the limit in 1972. Now also I have fc llowed that. *(குறுக்கீடு)* இதே நாற்காலியில் அமர்ந்திருந்த சபாநாயகரைப் பற்றி நான் பேசியாக வேண்டும். அன்றைக்கு அவைத் தலைவருக்குப் பக்கத்திலே நாற்காலியைப் போட்டு இரட்டை சட்டசபையை நடத்திவிட்டு அன்றைக்கு "sky was the limit". இப்போது கேள்வி கேட்கிறீர்கள். அதை வரலாறு மறக்காது. *(குறுக்கீடு)* நீங்கள் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் சரியல்ல. ஐம்பெரும் தலைவர்களில் ஒருவராக இருந்த அண்ணன் மதியழகன் அவர்கள் தன்னுடைய நோட்டுப் புத்தகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை எழுதியவர், அவரை அங்கே அமர வைத்திருக்கிறீர்கள். அவரை தூக்கி விட்டீர்கள். அந்த ஆன்மா சாந்தியடைய வேண்டுமானால் என்னுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் *(மேசையைத் தட்டல்).*

**திரு. அ. ரகுமான்கான்:** மதியழகன் சொன்னார்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மனசாட்சிக்கு உட்பட்டு பேசுகிறேன். டிசம்பர் மாதம், 1972 ஆம் ஆண்டு....

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் பேசுகிறாரா? அல்லது ரகுமான்கானா? இப்படி ஒவ்வொருவரும் அந்தப் பக்கம் பேசுவதைப்போல இந்தப் பக்கம் பேசினால் நிலைமை என்னவாகும்?

*(முற்பகல் .0-30)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகத்தான் சொல்லுகிறேன். நீங்கள் எல்லாம் காட்டிய முன்மாதிரியில் இன்றைக்கு இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நீங்கள் வகுத்த அதிகாரம்தான். 312-வது விதி. உங்களுக்கு வேண்டுமென்றால், பயன்படுத்தப்பட்டது. இப்போது பயன்படுத்தினால் அது சரியல்ல என்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* விளக்கமல்ல. *(குறுக்கீடு)* அலிகேஷன் அல்ல. மறைந்த முன்னாள் சபாநாயகர் திரு. மதியழகன் அவர்களை விதிகளைத் தளர்த்தி, மைக்கை எடுத்துவிட்டு, அருகாமையிலே உள்ள நாற்காலியில் துணைச் சபாநாயகரைஅமர வைத்து இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, சபாநாயகரை நீக்கி, அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறி, அமர வைத்தீர்கள், மூன்றாம்இடத்தில். அதை எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். பெரியபாவத்தைச்செய்திருக்கிறீர்கள். *(குறுக்கீடு).*

**திரு. இ. மனோகரன்:** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இவ்வளவு பேசியானதற்குப் பிறகு, நான் உங்களைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்க அனுமதியுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் கேள்வி வேண்டாம். இன்னும் விளக்கம் வேண்டுமா? *(குறுக்கீடு)* இது குற்றச்சாட்டு அல்ல, நாட்டுக்குத் தெரிந்த விவகாரம். அதாவது நீங்கள் எப்படி ஓர் உறுப்பினரைப் பாதுகாக்கின்றீர்களோ, அப்படி எனக்கு முன்னால் அமர்ந்துள்ளவர்களை நான்தான் பாதுகாக்க வேண்டும். அன்றைக்கு எந்த அளவுக்கு நடந்தது என்பதைச் சொல்லியாக வேண்டும். *(குறுக்கீடுகள்)* அண்ணன் மதியழகன் மீது அன்பும் பாசமும் இருக்குமேயானால், பேசாதீர்கள்.

**திரு. இ. மனோகரன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது ஒன்றே ஒன்று. அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கின்ற பொறுப்பை நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்று பேசிய உங்களைப் பார்த்து நான் பணிவோடு கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்று. வகுக்கப்பட்ட விதி 312 பவர்ஃபுல்லா அல்லது...... *(கூச்சல்—குழப்பம்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதியைப் பயன்படுத்தி, இங்கே இரட்டை சட்டசபை நடத்தினீர்கள் என்பதைத்தான் சொல்கிறேன், பதிலாக. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் 1972 டிசம்பர் மாதம் -ஆம் நாள் மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும் எங்களோடு இருந்தார்கள். அதுபற்றி அவரது கருத்தை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடு)* தயவுசெய்து அனுமதியில்லாமல் பேச வேண்டாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது கண்ணியத்திற்குரிய நாஞ்சிலார் அவர்களை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முறையல்ல, முறையல்ல, முறையல்ல. இதற்காகத்தான் இந்த விவாதம் வேண்டாமென்று சொன்னேன். *(குறுக்கீடு)* பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. *(குறுக்கீடு)* இது மக்களுக்காக அல்ல. மக்களுடைய பிரச்சனையல்ல. *(குறுக்கீடுகள்)* அரசியல் சட்டத்தைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். ஒரு கட்சி என்பதால், ஒரு கட்சியில் சேர்ந்துவிட்டதால் அரசியல் சட்டத்தை எதுவும் செய்யலாமா? சாதாரண மனிதனால் அரசியல் சட்டத்தை என்ன செய்ய முடியும்? அரசியல் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? Directive principles of State Policy உங்களுக்கு எல்லாம் தெரியும். அது பூராவும் சாதாரண மனிதனுக்குச் செய்துவிட்டீர்களா 40 ஆண்டுக்காலத்தில்? அது தனக்குக் கிடைக்கவில்லை என்பதால் அவன் அந்த பாகத்தை எரித்துக் கொண்டா இருக்கின்றான்? *(குறுக்கீடுகள்)* இது முறையே கிடையாது.

நீங்கள் அவையில் இருக்கிறீர்கள், ஒரு கட்சியில் இருக்கிறீர்கள் என்று எண்ணிக்கொண்டு.... (கூச்சல்–குழப்பம்). இது முறையல்ல. (கூச்சல்–குழப்பம்) அமருங்கள். இத்தோடு பிரச்சனை முடிந்துவிட்டது. (கூச்சல்–குழப்பம்) சபையை நடத்தவா, வேண்டாமா? மக்களுக்காக சபையா, இல்லையா? (கூச்சல்–குழப்பம்) சபாநாயகராக இருந்து, நான் உறுப்பினர்களை அமரச் சொல்லவேண்டும். (குறுக்கீடு) இது முறையல்ல.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சனை என்பதன் பெயரால் பேரவைத் தலைவர் ஏற்கனவே அளித்த தீர்ப்பையும், பேரவைத் தலைவரையும் விமர்சனம் செய்வதுபோல் அவர்கள் ஆரம்பிக்கின்றார்கள். அது எப்படி ஒழுங்குப் பிரச்சனையாக அனுமதிக்கப்படும்? ஆகவே இத்தகைய ஒழுங்குப் பிரச்சனையை அனுமதிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று அவையில் விவரமாகச் சொன்ன பிறகும் திரும்பவும் அதைப்பற்றி எடுத்துக் கொள்வது நல்லதல்ல.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தலைவர் தீர்ப்பைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.

**திரு. துரை கோவிந்தராசன்:** நீங்கள் இரண்டு பேர்களுமே பேசிக்கொண்டிருந்தால், 'அவுஸ் என்ன ஆவது?' (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விமர்சனத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை. (குறுக்கீடு) நான் அரசியலமைப்புச் சட்டத்தை இந்த அவையில் நிலைநாட்டுவதற்காகச் செய்கிறேன் என்று சொன்னேன். அதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்கிருக்கிறது (குறுக்கீடு).

**திரு. கி. மனோகரன்:** 'பாயின்ட் ஆப் ஆர்டர்' கேட்கிறபோது தயவு செய்து அலவ் செய்து, அதற்குப் பிறகு தீர்ப்பு வழங்குங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' தான் கேட்கிறேன், தீர்ப்பைப் பற்றி அல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி இரண்டு பேர்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) சரி. என்ன செய்வது என்று சொல்லுங்கள்? இஃப் யூ வாண்ட், ஐ வில் கோ. நீங்கள் செய்வது முறையல்ல என்பதல்லாமல் வேறு என்ன? நான் முறை தவறவில்லை. I am controlling everything.

**திரு. கி. மனோகரன்:** நீங்கள் உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் நீங்கள் எழுந்து நிற்கக் கூடாது என்று எப்படி சொல்கின்றார்கள்? பேரவைத் தலைவர் அவர்கள் எழுந்து நிற்பதற்கு நாஞ்சிலார் அனுமதி தேவையா, என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேண்டாம். விடுங்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் மறைமும் முழுவதையும் பிரதிபலிக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து நிற்கும் போது தான் அனுமதி தேவை. ஆகவே அவர் சொன்ன வாசகத்தை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்கிறேன். பேசுவதும் நீக்குவதும் சரியல்ல. அது தவறு. அதைத்தான் உங்களிடம் சொன்னேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவரவர்களே, தீர்ப்பு கூறுங்கள் என்று கேட்கிறேன். தவறாகக் கேட்கவில்லை. ஒன்றும் கேட்கவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களை நிற்கவைத்து, கீழே 200 பேர்கள் கேட்டால் உங்களுக்கு எப்படி இருக்கும் என்று நான் யோசித்துப் பார்க்கிறேன். வேறல்ல. வேறு என்ன நான் சொல்லமுடியும். (குறுக்கீடு). இப்படி நடப்பது முறையல்ல, என்னுடைய அறைக்கு வாருங்கள். பேசுவோம்.

**திரு. கு. ரமணி:** அலுவலகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவலகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு என் அறைக்கு வாருங்கள். நீங்களும் வாருங்கள். (கூச்சல்-குழப்பம்) ஒரு உறுப்பினருடைய பிரச்சினையைப் பற்றி, ஒரு உறுப்பினருடைய உரிமையைப் பற்றி பேசக்கூடியவனும், பாதுகாக்கக்கூடியவனும் நான்தான். நீங்கள் பேசி நான் அதைச் செய்யவேண்டுமென்ற அவசியம் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேர்தல் கமிஷனிடமிருந்து அறிக்கை வந்திருக்கின்றதா, கவர்னரிடமிருந்து வந்திருக்கின்றதா? எப்படி வெற்றிடம் என்று சொல்கிறார்கள் என்பதைக்கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்ன என்று சொல்லிவிட்டார்கள். இடம் வேக்கண்ட்டாக இருக்கிறது என்று....

[1986 நவம்பர் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே சொல்லிவிடுகிறேன். நேற்றையதினம் அளித்த தீர்ப்பிலே, 'They are ineligible to sit in this House and they have ceased to be Members of this House' என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அது follow-up action. As far as my Secretariat is concerned they can remove it. (குறுக்கீடு) அவையில் வெற்றிடம் என்றால் அந்த இடம் பற்றி யாரும் கேட்க முடியாது. அது அலுவலகம் சம்பந்தப்பட்டது. ஏற்கெனவே சொல்லிவிட்டேன். 'They are ineligible to sit in the House'. திரும்பத் திரும்ப அதைத்தான் நான் சொல்லவேண்டும். (குறுக்கீடு.)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒழுங்குப் பிரச்சினை என்பது அவையினுடைய நடைமுறை குறித்து ஏதாவது நடந்து கொண்டிருக்கும்போது கேட்பதுதான் ஒழுங்குப் பிரச்சினையே தவிர, சட்டத்தைப் பற்றியோ, விதிகளைப் பற்றியோ, ஒத்துழைப்பைப் பற்றியோ கேட்க விரும்பினால், எழுதித் தரட்டும். நீங்கள் விசாரித்து அப்படி நடந்திருக்கின்றதா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் தெரிந்துகொண்டு பின்னர் பதில் சொல்லலாம். அதை உரிமைப் பிரச்சினை என்று கிளப்பமுடியாது. அவர் ஏதோ இன்டென்சனில் சொல்லிவிட்டார். அதன் மேலே முடிவு சொல்லாம். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு சொல்லிவிட்டான் முடிந்து போயிற்று. யாருமே என்னுடைய அறைக்கு வரவில்லையே. (குறுக்கீடு) யாருமே என்னுடைய அறையிலே வந்து கேட்கவில்லை. ஒரு முறை வேண்டாமா? அதற்குத்நான் அறை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அறையிலே கேளுங்கள், அறையிலே கேளுங்கள் என்றால் அறையிலேயே சட்டசபை நடத்த முடியுமா? சேம்பர் என்று எதற்கு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் அறையில் எல்லோரும் உட்கார முடியாது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வந்தீர்கள். 'பாயின்ட் ஆப் ஆர்டர்' பற்றிச் சொன்னீர்களா? சொல்லவில்லை. நீங்கள் தீர்மானத்தைச் சொன்னீர்கள். நான் அன்றைக்கு சொன்னதைச் சொன்னீர்கள். தீர்மானத்தை நான் ஏற்கெனவே நிராகரித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) இன்று காலையில் உங்கள் அலுவலகத்திலிருந்து யாரோ வந்து கொடுத்திருக்கின்றார்கள். இன்றைக்கு இந்தக் கூட்டத்தொடரின் இறுதி நாள். $1\frac{1}{2}$ மணியோடு அலுவல்கள் முடிக்கப்படவேண்டும். ஆகவே எந்தத் தீர்மானத்தைப் பற்றியும் விவாதிக்க நேரமில்லை. உங்களிடம் கேட்டுக்கொண்டேன். ''ஐ காண்ட் டேக் இட் அப்'' என்று சொல்லிவிட்டேன். (கூச்சல்—குழப்பம்.)



1986 நவம்பர் 25] [பேரவைத் தலைவர்]
[முற்பகல் 10-40]

நம்மைப் பற்றிப் பேசவா சட்டமன்றம்? அது முறையல்ல. நீங்கள் மற்ற தனிப்பட்ட பிரச்சினைகள் வரும்போது இப்படி குறுக்கே பேசியிருப்பீர்களானால், உள்ளபடியே பாராட்டியிருப்பேன். இதிலே நீங்கள் எனக்குத் துணையாக இருங்கள்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, எங்களை ''டைவர்சன்'' செய்யக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களை நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இன்று இந்தக் கூட்டத்தொடரின் கடைசி நாள். 1.30 மணியோடு முடிகிறது என்று சொன்னேன். சாதாரணமாக கண்டனத் தீர்மானத்தை கூட்டத் தொடரின் முதல் நாளே கொடுப்பது வழக்கம். அதை உங்களிடத்திலேயே சொன்னேன். இறுதி நாளில் அல்ல. நாம் ஏற்கெனவே இரண்டு முறை அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி நம்முடைய அலுவல் முறைகளை முறைப்படுத்திவிட்டோம். ஆகவே இன்றைக்கு முடிக்கின்ற தருவாயில் இருந்து கொண்டிருக்கிறோம். தயவு செய்து ஒத்துழையுங்கள். இதில் ''பாயின்ட் ஆப் ஆர்டர்'' ஒன்றும் இல்லை. (கூச்சல்—குழப்பம்) அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கெனவே முடிவு எடுத்தபடி இன்றைக்கு முடிப்பதாக ஒத்துக் கொண்டோம். அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நீங்கள் தான், நீங்கள் எனக்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டாமா? (கூச்சல்—குழப்பம்) என்னை மட்டும் தனிமைப்படுத்தி விட்டால் எப்படிச் செயல்படமுடியும்? (கூச்சல்—குழப்பம்) இத்துடன் போதும். நான் ஏற்கெனவே ஞாபகப்படுத்தி விட்டேன். இன்று கூட்டத்தின் இறுதி நாள். 1.30 மணியோடு முடிக்கப்படவேண்டும். பல சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. ஆகவே, உங்கள் ஒத்துழைப்புடன் முடித்து விடுவோம். அடுத்த கூட்டத் தொடரில் இதைப்பற்றி நாம் விவாதிக்கலாம். (குறுக்கீடுகள்) தீர்மானம் கொடுத்தீர்கள். நான் நிராகரித்து விட்டேன். முதல் நாளிலேயே நீங்கள் கொடுத்திருக்க வேண்டுமென்று சொன்னேன்.

திரு. கு. ரமணி: அடுத்த நாள் கொடுக்கக் கூடாது என்று எதுவும் இல்லை. (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (இருக்கையிலிருந்து எழுந்து நின்ற உறுப்பினர்களைப் பார்த்து) உங்கள் எல்லோருக்கும் ஒரு 'ஃபுல் பெஞ்ச்' போட்டு மேலே உட்கார வைத்தால் நன்றாக இருக்கும். (குறுக்கீடுகள்) தயவு செய்து வேண்டாம். நான் ஏற்கெனவே சொன்னேன். கண்டனத் தீர்மானம் முதல் நாளே கொடுக்கவில்லை. நோட்டீஸ் முதல் நாள் கொடுப்பது வழக்கம். ஆகவே இன்றைக்கு கூட்டத் தொடரின் இறுதி நாள். நம்முடைய அலுவல் ஒத்துழையுங்கள். (கூச்சல்—குழப்பம்)

ஆய்வுக் குழுவில் நாம் முடிவெடுத்திருக்கிறோம். இன்றைக்கு அலுவலை முடித்தாக வேண்டுமென்று முடிவெடுத்திருக்கின்றோம். (கூச்சல்—குழப்பம்) இன்றோடு அலுவல்களை முடிப்பதாக முடிவெடுத்திருக்கிறோம்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கடைசி நாள். அன்று நிராகரித்தேன் என்று நீங்களாகவே தான் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடைசி நாளில் அல்ல. ஏற்கெனவே நிராகரித்து விட்டேன். இன்றைக்கு நீங்கள் கடைசியாக இன்னொரு நோட்டீஸ் கொடுத்தீர்கள். (கூச்சல்—குழப்பம்) சபையை நடத்த வேண்டுமா? இல்லையா? இல்லை, இதற்கு மேல், எப்படி பதிலை நான் சொல்லமுடியும்? சபையை நடத்த நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டாமா? (கூச்சல்—குழப்பம்) நிராகரிக்கப்பட்டது என்று சொல்லியிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தீர்மானத்தைப் பற்றி தங்கள் அலுவலகத்தில் சொல்கிறார்கள். தாங்கள் அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்ததற்குப் பின்னாலே ரொம்பவும் அனுபவம்...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். நீங்கள் எல்லாம் எனக்கு ஆலோசனை சொல்லி, அவையைச் சுமுகமாக நடத்துவதற்கு வழி சொல்ல வேண்டும். ஏற்கெனவே நாம் எடுத்த முடிவின் கீழ் தயவு செய்து ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பேச எழுந்தால் அவரை ஆட்டொமெட்டிக்காக அனுமதிக்கிறீர்கள். எங்களை உட்காரச் சொல்கிறீர்கள். இது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி இல்லை, அதெல்லாம் ஒரு கன்வென்ஷன். It is a convention. Whenever a Minister rises, we use to give him priority and preference. It is the convention everywhere தயவுசெய்து ஒத்துழையுங்கள். இதற்கு மேலே எப்படி கேட்கச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) தயவுசெய்து ஒத்துழையுங்கள்.

**திரு. கு. ரமணி:** நாங்களும் சமமானவர்கள் தான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு இறுதியாக நாம் முடிவெடுத்திருக்கிறோம். ஒன்றன்ர மணியோடு நம்முடைய சட்ட முன்வடிவுகளெல்லாம் ஆய்வுக்கு எடுத்துக்



கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். (கூச்சல்-குழப்பம்) இப்படி அனுமதியில்லாமல் ஐந்து உறுப்பினர்களும் ஒன்றாக எழுந்து கொண்டிருக்கிறீர்கள். நான் நின்று கொண்டு பேசும் போது....(குறுக்கீடு) அதிகாரத்தின் மீது மறுக்கிறேன். எப்படி என்று சொல்வது? (குறுக்கீடு) முதல் நாள் நோட்டீஸ் கொடுத்திருந்தால் நாம் ஒருவேளை அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து முடிவு எடுத்திருப்போம். முதல் நாளே நீங்கள் கொடுத்திருந்தால் அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்திருப்பேன். (கூச்சல்-குழப்பம்) ஜனங்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் நாம் இங்கே வந்திருக்கின்றோம். ஜனங்களின் பிரச்சினைகளைப் பற்றி பேசுகின்ற நேரத்தில் தனிப்பட்ட பிரச்சினைகள் உருவாகின்றன. அதுதான் விவகாரம்.

**திரு. கு. ரமணி :** ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சட்ட சபையைக் கூட்டுகிறீர்கள்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து ஒத்துழையுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுத்து நீங்களும் அதற்கு துணையாக இருந்தீர்கள். (குறுக்கீடு) திரு. ரமணியைக் கேட்டுக் கொள்கிறேன், இதற்கு மேலாக எனக்குச் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. நான் உங்களைக் கேட்டுக்கொண்டேன், அவ்வளவுதான்.

**திரு. கு. ரமணி.** நியாயம் இருப்பதற்கு வார்த்தைகள் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுக்கெல்லாம் கட்டுப்பட்டுவிட்டு, இன்றைக்கு இறுதியாகக் கூட்டத் தொடரை முடிப்பதற்கு ஒத்துக்கொண்டு, இங்கே வந்து எழுப்புவது முறையல்ல.

**திரு. கு. ரமணி:** அலுவல் ஆய்வுக் குழுவில் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவில் நடந்த விவாதத்தைத் தயவுசெய்து இங்கே நீங்கள் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, நம்பிக்கையின்மைத் தீர்மானம் அல்லது கண்டனத் தீர்மானம் என்பவை போதிய அவகாசத்தோடு முன்பே கொடுப்பதுதான் வழக்கம். அதைத்தான் தாங்கள் தெரிவித்தீர்கள். அதன்மூலம் பேரவையில் இருக்கின்ற உறுப்பினர்களும் பங்கெடுத்துக்கொண்டு உரையாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கண்டனத் தீர்மானம் ஒன்று கொடுத்ததாகக் கடந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே குறிப்பிட்டீர்கள். அதை எடுத்துக் கொள்ள

இயலாது. நாம் 25 ஆம் தேதியோடு சட்டப்பேரவையை முடிக்க வேண்டியிருக்கிறது. போதுமான அவகாசம் இல்லை என்பதைத்தான் நாங்கள் எங்கள் சார்பாகத் தெரிவித்தோம். தாங்களும், அந்தக் கண்டனத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நடைபெற்ற கூட்டத் தொடரில் எந்தெந்த மசோதாக்களை நிறைவேற்றித் தரவேண்டுமோ அதையெல்லாம் நிறைவேற்றித்தான் தந்து இருக்கிறார்கள்; எதிர்க் கட்சிக்கு எப்பொழுதுமே எங்களைக் கண்டிக்க உரிமை உண்டு. கண்டனத் தீர்மானததின் மூலம் தான் கண்டிக்க வேண்டும் என்று ஆசைப்படாமல், அதை வற்புறுத்த வேண்டாமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும், மற்ற கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல் அலுவல் ஆய்வுக் குழுவிலே நடந்த சம்பவங்களைப் பூராவும் இங்கே விளக்கக்கூடாது; அது பூராவும் பேசுவது என்பது முறையல்ல, நமக்கு ஒழுங்கல்ல என்பது என்னுடைய கருத்து. நான் கேட்டது. 19 ஆம் தேதி நாங்கள் தீர்மானம் கொடுத்தோம். எங்களிடத்தில் தவறு இருக்கின்றது என்றால் நீங்கள் எடுத்துக் காட்டுங்கள். நாங்கள் திருத்திக் கொள்ளமுடியும். 19 ஆம் தேதி தீர்மானம் கொடுத்தோம். தீர்மானம் கொடுத்து ஏதாவது பதில் வரும் என்று பார்த்தால் பதில் கிடைக்கவில்லை. அப்பொழுதுதான் நான் அலுவல் ஆய்வுக் குழுவிலே சொன்னேனே தவிர, நான் என்ன சொன்னேன் என்பதையெல்லாம் இப்போது இங்கே நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதும், நிராகரிப்பதும் என்னுடைய அதிகாரமாகும். 234 உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) இதற்காகத்தான் அலுவல் ஆய்வுக் குழு இருக்கிறது. (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் அமருங்கள். சொல்கிறேன். கேள்விகள் வருகின்றன. கேள்விகளை ஆய்வு செய்து, சில கேள்விகளை நான் அட்மிட் செய்கிறேன், சில கேள்விகளை நான் நிராகரிக்கின்றேன். அதைப் போலவேதான், கவன ஈர்ப்பு, அதுவும் வருகிறது. ஆய்வு செய்து முடிவு எடுக்கிறேன்.

திரு. கி. மனோகரன்: எந்த அடிப்படை என்று சொல்ல வேண்டும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அவை முன்னவராக இருந்திருக்கின்றீர்கள். (குறுக்கீடு) அந்த அதிகாரத்தைத்தான் நான் பயன்படுத்தியிருக்கிறேன். எப்படிக் கேள்விகளை நானே ஆய்வுசெய்து சிலவற்றை நிராகரிக்கிறேனோ, அதேமாதிரிதான். (குறுக்கீடு)





(முற்பகல் 10-50)

திரு. கி. மனோகரன் : எனக்கிருக்கிற ''அதிகாரம் அதிகாரம்'' என்று சொல்கிறீர்கள். நீங்கள் அந்த மாதிரி பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் சுமார் 10 ஆண்டுகளாக இங்கே இருக்கிறீர்கள். விதிகளை எடுத்துப் படியுங்கள். (கூச்சல், குழப்பம்). எல்லோருமே ஓரே நேரத்தில் இப்படிக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? எங்கே டைம்? நீங்கள் think செய்ய time இருக்கிறது. ஒருவர் பேசும் பொழுது இன்னொருவருக்கு there is time to think.

திரு. செ. ஆறுமுகம்: எங்களுக்கு think செய்ய time கிடையாது. வெளியிலும் கொளுத்துவோம், உள்ளேயும் கொளுத்துவோம். இந்தப் பதவியைப் பற்றி நாங்கள் கவலைப் படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து ஒத்துழை யுங்கள். (கூச்சல், குழப்பம்) இந்தப் பிரச்சினையை இதோடு முடித்து விடுவோம்.

திரு. கு. ரமணி: எங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய நிலை மையை விளக்கிய பிறகு, நீங்கள் வற்புறுத்தக் கூடாது. அது தான் ஜனநாயக முறை. (குறுக்கீடு) ஜனநாயகக் கடமையை நான் என்றைக்கும் தடுத்ததில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமோ, கண்டனத் தீர்மானமோ கொண்டுவருவதற்கு எதிர்க் கட்சிகளுக்கு உரிமை உண்டு. நம் விதி 72(1) (a)—ன்படி "Leave to make the motion must be asked for after question and before the further business set down in the list of business fof the day is entered upon" என்று இருக்கிறது. (குறுக்கீடு) எல்லாம் தெரிந்த பண்டிதர் நீங்கள் இருக்கும்போது நான் சொல்லக் கூடாதா? (குறுக்கீடு) என்னைவிட அதிகம் தெரிந்தவர் நீங்கள் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். மேலும், (b) the member asking for leave must 'before the commencement of the sitting of the day' leave with the Secretary a written notice என்று இருப்பதில் 'before the commencement of the sitting of the day' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி கேட்பது சரியல்ல.

**அமைச்சரின் அறிக்கை.**

விதி 111-ன் கீழ் மூளைக் காய்ச்சலைத் தடுப்பதற்கு எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கை குறித்த உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் 111-வது விதியின் கீழ் மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள். (கூச்சல்-குழப்பம்) kindly do not waste the precious time of the House. இப்படி எல்லோரும் எழுந்து பேசுகிறீர்கள். நாட்டு மக்களுக்கெல்லாம் தெரியட்டும், நாட்டுக்குத் தெரியட்டும். நீங்கள் அறிவிப்புக் கொடுத்த கண்டனத் தீர்மானத்தை நிராகரித்து விட்டேன். அதை நீங்கள் மீண்டும் எழுப்புவீர்களானால் ஜனநாயக நிறுவனத்தையே நீங்கள் தடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூளைக்காய்ச்சல் நோய்க்குக் காரணமாகிய பன்றிகளை ஒழிக்க நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

சென்னை. மதுரை மற்றும் கோவை மாநகராட்சிச் சட்டத்தில் லைசன்ஸ் இல்லாத அனைத்து பன்றிகளைப் பிடித்துக் கொன்றுவிட ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே நகராட்சிகள் சட்டத்திலே அத்தகைய பன்றிகளை ஒழிக்க (தொடர்ந்து கூச்சல்—குழப்பம்)

MR. SPEAKER: You are all behaving like school children.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** சென்னை மாநகராட்சியில் மூளைக் காய்ச்சலைத் தடுப்பதற்கு, கொசுக்களை ஒழிக்க, கால்நடைகள் மற்றும் பன்றிகள் பெருக்கத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சியின் அனுமதியின்றி இறைச்சி விற்பனையைத் தடுக்கும் பணியும், பன்றிகளைப் பிடிக்கும் பணியும் எப்பொழுதும் திட்டப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமீப காலத்தில் மூளைக் காய்ச்சல் நோய் சென்னைக்கு வடக்கில் ஆந்திரப் பிரதேசத்திலே.... (தொடர்ந்து கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மக்களுடைய பிரச் னையைப்பற்றி இங்கே அமைச்சர் படித்துக் கொண்டிருக்கிறார். மக்கள் மேல் அக்கறை இல்லாதவர்கள் எதிர்த்துக் கொண்டிருக் கிறீர்கள். மக்களுக்காகப் படித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் மக்களுக்காக அல்ல. அரசியல் செய்து கொண்டிருக் கிறீர்கள். இது அரசியல்தான். அமைச்சர் மக்களுக்காகப் படிக்கிறார். மக்கள் மன்றத்தில் மக்களுக்காகப் படிக்கிறார். மூளைக் காய்ச்சலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் படிக் கின்றார். (கூச்சல்—குழப்பம்)





**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பன்றிகளைப் பிடித்து அழிக்கும் திட்டம் 10-ந் தேதி முதல் சென்னையில் தீவிரமாக நடைபெற்று வருகிறது........(கூச்சல்—குழப்பம்)

**2. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.**

**அரசியலமைப்புச் சட்டப்பிரிவை எரித்தோர் உறுப்பினர் தகுதியை இழத்தல்—தொடர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக அமருங்கள், இல்லை என்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தயவுசெய்து எதிர்க்கட்சி உறுப்பினர்களை அமரும்படி கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமர மாட்டீர்களா? (குறுக்கீடு) பேசும்போது நீங்கள் குறுக்கே அதை மறித்தீர்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் மக்களுக்காக இல்லை என்று இப்போது ஆணித்தரமாகச் சொல்கிறேன். நீங்கள் தடுத்தீர்கள், தடுக்கக்கூடாது; (கூச்சல்-குழப்பம்) இந்த அவையில் ஒரே சபாநாயகர்தான். நான் அமரச்சொல்கிறேன்; அமருங்கள். (கூச்சல்-குழப்பம்) Mr. Ramani, Please don't make it a political issue. (Interruption) It is not a political issue. It is a constitutional issue.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (கூச்சல்-குழப்பம்) தயவு செய்து கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திரு. ரமணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் மூத்த உறுப்பினராக இருக் கிறீர்கள். அமைதியாக இருப்பதற்கு வழி காட்டுங்கள். (கூச்சல்-குழப்பம்) ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுக்கு நீங்கள் கட்டுப்படுங்கள். இன்றைக்கு கூட்டத்தொடரை முடிக்க விருக்கிறோம். (கூச்சல்-குழப்பம்) ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை சொல்கிறீர்கள். ஓட்டுப்போட்ட நாட்டு மக்கள் இதை எல்லாம் பார்க்க வேண்டும். எலெக்டட் ரெப்பிரசென்டேட்டிவ்ஸ் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, எதிர்க்கட்சியினர் பேசுவதற்கு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டாமா? அமைச்சர்களிடமிருந்து பதில் வரவேண்டாமென்று சொல்கிறார்களா? (கூச்சல்-குழப்பம்) அமைச்சர் எழும்போது அனுமதிக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். அமைச்சரை அனுமதிக்கவில்லை என்றால், அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படிப் பதில் கிடைக்கும்? அமைச்சர் எழுந்தால்தான், அனுமதித்தால்தான் பதில் கிடைக்கும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையை அரசியலுக்கு அனுமதிக்கமாட்டேன். இங்கே அரசியல் நடக்காது. விதியைப் பாருங்கள். நான் எழுந்திருக்கும்போது எல்லோரும் அமர வேண்டும். (கூச்சல்-குழப்பம்) உங்களைத் தேர்ந்தெடுக்க மக்கள் இதைப் பார்க்க வேண்டும். மக்களுக்கு இது தெரியவேண்டும். ஆகவே, நீங்கள் நன்றாகச் சொல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, கண்டனத் தீர்மானம் என்கிறார்களே, விதி 72(1) என்ன சொல் கிறது? 'பேரவைத் தலைவர் இசைவுடன்' என்று சொல்கிறது. இசைவு நீங்கள் தரவில்லை. அப்படி இருக்கும்போது எப்படி எழுப்ப முடியும்? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எல்லாம் முதலிலே விதியைப் படியுங்கள்; படித்துவிட்டு வாருங்கள். (கூச்சல்-குழப்பம்)

அடுத்து, கவன ஈர்ப்பு. இன்றைக்கு 17 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அவை எல்லாம் மக்களுக்காக வந்திருக்கின்றன. (கூச்சல்-குழப்பம்)

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு விதியைப் படித்துக் காட்ட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** படியுங்கள். அமைச்சர் அவர்கள் அதைப் படிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விதி 72(1)-ன் கீழ் அமைச்சரவையின் மீது நம்பிக்கை யின்மையைத் தெரிவிக்கிற........(கூச்சல், குழப்பம்)

(திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர்கள் நின்றுகொண்டு குரல் எழுப்பிக்கொண்டு இருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த வாசகங்களை எல்லாம் நன்றாகப் பிரசுரியுங்கள். அந்தந்த சட்டமன்ற உறுப்பினர் களுடைய பெயரையும், அந்தந்தத் தொகுதியின் பெயர்களையும் போட்டுப் பிரசுரியுங்கள். மக்களுக்குத் தெரியவேண்டும். (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விதி 72(1)-ன் கீழ் அமைச்சரவையின் மீது நம்பிக்கை யின்மைத் தீர்மானம் அல்லது அமைச்சரவையின் குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் பேரவையின் இசைவுடன்



பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டு கொண்டுவரவேண்டும். ஆனால் பேரவைத் தலைவர் இசைவு தரவில்லை. பிரச்சினை முடிகிறது. ஆகவே சட்டத்திற்கும் ஜனநாயக முறைகளுக்கும் உட்பட்டு மாண்புமிகு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் நடக் கிறார்களா என்பதை பாருங்கள். வேண்டுமென்று சட்ட மன்றத்தை நடக்கவிடாமல் செய்கிற காரியத்தைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். இது சரியா என்று நான் கேட்க விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஜனநாயக முறைக்கு அப்பாற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது. இதைவிட அதிகமாகச் சொல்வதற்கு வார்த்தை கிடையாது. இது நல்லதல்ல. (கூச்சல், குழப்பம்) இது நல்லதல்ல. உங்களுடைய மதிப்பைக் குறைக்கக்கூடாது என்று நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். (கூச்சல், குழப்பம்) நீங்கள் அரசியலை சட்டமன்ற நடவடிக்கையில் கலக்காதீர்கள். உங்களுடைய கட்சி நடவடிக்கைகளை சட்டமன்றத்தில் கலக்கா தீர்கள். சட்டமன்ற உறுப்பினராக என்னிடத்தில் பேசுங்கள். (கூச்சல், குழப்பம்) அடுத்து கவன ஈர்ப்பு.........(கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை........(கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒழிக என்று சொன்னால் நான் வாழ்வேன். நீங்கள்தான் அழிவீர்கள். ஆண்டவன்தான் உங்களைக் காப்பாற்ற வேண்டும். உங்களுக்கு எவ்வளவோ சொல்லியாகிவிட்டது. (கூச்சல், குழப்பம்) பழைய அவை முன்னவருக்கும் நான் சொல்லிவிட்டேன். இது சரியல்ல. இது முறையல்ல. கோயிலுக்குச் சமம் இந்தச் சட்டசபை. மக்கள் மன்றம் மகேசனுடைய இடம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான். (கூச்சல், குழப்பம்) 17 கவன ஈர்ப்புகளை இன்றைக்கு விதிக்கு அப்பாற்பட்டு நான் எடுத்து இருக்கிறேன் மக்களுக்காக. விதியைத் தளர்த்தி எடுத்து இருக்கிறேன். (கூச்சல், குழப்பம்) நீங்கள் ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறீர்கள். நான் தெரிந்து கொண்டேன். ஆகவே நடவடிக்கை எடுக்கப் போகிறேன். நீங்கள் ஒரு முடிவோடுதான் வந்து இருக்கிறீர்கள். எனக்கு உங்களைப் பார்த்தாலே தெரியும். (கூச்சல், குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களை வெளியேறும்படி நான் உத்தரவிடுகிறேன். (கூச்சல், குழப்பம்)

**திரு. அ. ரகுமான்கான் :** சட்டத்திற்கு புறம்பான தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். எனவே நான் வெளியேற மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவையெல்லாம் அவைக் குறிப்பிலே ஏற்றப்படுவது சரியில்லை என்றாலும் அவர்களுடைய நடவடிக்கைகள் மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அது அவைக் குறிப்பிலே இருக்கும். சட்டமன்ற நடவடிக்கையிலே இருக்கும். (கூச்சல்-குழப்பம்) Do not have this type of deliberations here. It is unfortunate. (கூச்சல்-குழப்பம்) திரு. ரகுமான்கான், நீங்கள் வக்கீலாகப் பதியும்போதுகூட அரசியல் சட்டத்தில் பிரமாணம் எடுத்து இருக்கிறீர்கள். Be careful. Do not behave like other members. I am cautioning you. I am interested in you. I do not like to spoil a person. I do not also want to spoil your profession. (கூச்சல், குழப்பம்) நான் இதற்காகத்தான் சொன்னேன், 72-வது வருட சட்டசபை நடவடிக்கைப்பற்றி இங்கே பேச வைக்காதீர்கள், (கூச்சல, குழப்பம்) (கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் தி.மு.க. உறுப்பினர்களும் நின்றுகொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.) அது நாட்டிற்கே தெரியும். (கூச்சல்-குழப்பம்) 1972 இல் நமது முதலமைச்சர் அவர்கள் இதே இடத்தில் 3 மணி நேரம் பேசினார். நான் மேலே இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அன்றைக்கு மைக்கை ஆஃப் பண்ணி வைத்தது நாட்டில் உள்ளோருக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) பேசாதீர்கள். 3 மணி நேரம் இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்கள். ஆனால் மைக் நிறுத்தப்பட்டிருந்தது. (ஆளும் கட்சியினர் கரவொலி)

அன்றைக்கு இந்த நாற்காலிக்குள்ள அதிகாரத்தை வைத்துத் தான் செய்தீர்கள். ஆகவே அதிகாரத்தை புரிந்துகொண்டவர்கள் நீங்கள். (கூச்சல், குழப்பம்) அது இந்த நாற்காலிக்குள்ள அதிகாரம். (குறுக்கீடு) 5 பேர்கள் ஒரே சமயத்தில் எழுந்து நின்றால் எப்படி யாருக்கு மைக் கொடுப்பது?

திரு. கு. ரமணி: ஜனங்கள் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜனங்கள் பிரச்சினைதான் மூளைக்காய்ச்சல் பிரச்சனையும். அதைப் படிக்க அனுமதிக்க வில்லையே....

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் 17 கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 17-ம் மக்கள் பிரச்சனை சம்பந்தப்பட்டவை, பொதுப் பிரச்சினை சம்பந்தப்பட்டவை. அவற்றிலே தொழிலாளர் பிரச்சினை இருக்கிறது; மாநகராட்சிப் பிரச்சினை இருக்கிறது; மற்ற அனைத்துப் பிரச்சினைகளும் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவை இப்போது விவாதிக்கப்பட இருக்கின்றன.



மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டனத் தீர்மானம் கொடுத்துவிட்டு, விதியின்படி அதை நீங்கள் நிராகரித்தால், அதை எடுத்துத்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் செய்வது எந்த முறையில் நியாயம்? அது எந்த ஜனநாயக முறையிலே என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவன ஈர்ப்பு. (கூச்சல்-குழப்பம்).

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) திட்டக்குடி வட்டம், வைத்தியநாதபுரத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திட்டக்குடி வட்டத்திலுள்ள வைத்தியநாதபுரம் கிராமத்தில் 1986 ஆம் வருடம் அக்டோபர்—நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தைக் குறித்தும் இம்மாதிரி திடீர் வெள்ளத்தை கிராமப்புறங்களில் தடுப்பதைக் குறித்துமான" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சரின் சார்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திட்டக்குடி வட்டத்தில் 31-10-1986 அன்று 190 மி.மீ. மழை பெய்தது. இப்பெரு மழையின் காரணமாக திட்டக்குடி வட்டத்திலுள்ள கீழ்க்கண்ட ஏழு கிராமங்கள் பாதிக்கப்பட்டன:—

1. வெங்கனூர்.
2. வைத்தியநாதபுரம்.
3. டி. ஏந்தல்.
4. தொழுதூர்.
5. தச்சூர்.
6. நங்கூர்.
7. பெண்ணாடம்.

வைத்தியநாதபுரம் கிராமத்திலோ மற்ற கிராமத்திலோ மேற்கூறிய பெருமழையினாலும் அதற்கு பிறகு பெய்த மழையினாலும் திடீர் வெள்ளம் ஏற்படவில்லை. மேற்கூறிய ஏழு கிராமத்தில் 35 குடிசைகள் முழுமையாகவும், 37 குடிசைகள் பகுதியாகவும் பெருமழையினால் பாதிக்கப்பட்டன. வைத்திய நாதபுரம் கிராமத்தில் மட்டும் 4 குடிசைகள் முழுமையாகவும் 11 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. இந்த வட்டத்தில் பயிர்ச் சேதம் எதுவும் இல்லை. பாதிக்கப்பட்ட 72 குடிசைகளுக்கும் குடிசை மானியங்கள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் வேட்டி/சேலை வழங்கப்பட்டன. திட்டக்குடி வட்டத்தில் ஒரு மாடும் நான்கு ஆடுகளும் மடிந்தன.

கீழ்க்கண்ட நீர்ப்பாசன நிலைகள் பாதிக்கப்பட்டு அவைகள் ரூ. 17,000 செலவு செய்து உடன் சரி செய்யப்பட்டுள்ளன:—

1. பேலன்துறை பிரதான கால்வாய்—15 மீட்டர் உடைப்பு.

2. தொழுதூர் குளம் — 25 மீட்டர் உடைப்பு.

3. வெல்லிங்டன் நீர்த்தேக்கம் அருகில் உடைப்பு.

4. எம். பாரூர் மண் கரை — 6 மீட்டர் உடைப்பு.

5. விருத்தாச்சலம் அணைக்கட்டு அருகில் உடைப்பு.

சாலைகள் உடைப்பு:

1. வெங்கனூர் கிராமத்தின் அருகில் வெப்பூர் — தொழுதூர் தேசிய நெடுஞ்சாலையில் 200 அடி மண் அரிப்பு ஏற்பட்டது. இதனை உடனே சரி செய்து போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.

2. தொழுதூர் — வடக்கரம்பூண்டி சாலையில் உடைப்பு ஏற்பட்டு உடனே சரி செய்யப்பட்டு போக்குவரத்து அனுமதிக்கப் பட்டது.

மேற்கூறிய நிவாரணங்கள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு மக்களுக்கு இன்னல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

பொதுப் பணித்துறை அலுவலர்களும், நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களும் பருவ மழை ஆரம்பிப்பதற்கு முன்பே நீர் நிலைகள், சாலைகள் வெள்ளம் ஏற்பட்டால் சேதம் அடையாமல் இருக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆகவே, திடீர் வெள்ளம் பொதுவாக கிராமப்புறங்களில் ஏற்படுவது இல்லை.



(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிப் பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜே. முகம்மது கனி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு நிதியமைச்சரின் சார்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டம் வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் வறட்சி நிவாரணத்தின் கீழ் குடிநீர்ப் பணிகளுக்கு ரூ. 107.15 இலட்சம் அனுமதிக்கப்பட்டு 20-11-86 வரை ரூ. 48.12 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர வடிமுனைக் கிணறுகள் இருந்த இடங்களில் ஆழ் துளைக் கிணறுகள் அமைக்க ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 50 இலட்சம் இதர ஊரகப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க நிதியினை திருப்பப்பட்டுள்ளது. இந்தப் பணிகளை இந்த மாத (நவம்பர்) கடைசி வாரத்தில் தமிழ்நாடு குடிநீர் வாரியம் மேற் கொள்ளவிருக்கிறது. மேற்குறிப்பிட்ட 48.12 இலட்சம் ரூபாயில் கீழ்க்கண்ட குடிநீர்ப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:—

1. ஊரகப் பகுதிகளில் 125 கைப்பம்புகளும், கரம்பக்குடி, அரிமளம், அன்னவாசல் மற்றும் கீரமங்கலம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் மொத்தம் 6 கைப்பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

2. லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ரூ. 1,39,000 செலவு செய்யப்பட்டுள்ளது.

3. குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அறந்தாங்கி நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 10 இலட்சத்தில், இதுவரை ரூ. 5 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

4. குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை நகராட்சிக்கு ரூ. 4.18 இலட்சம் செலவில் 14 கைப்பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

5. இம் மாவட்டத்தில் இதுவரை 163 ஆழ்துளைக் கிணறுகளும், 17 பதிலீட்டு ஆழ்துளைக் கிணறுகளும் அமைக்கப் பட்டுள்ளன.

விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புப் பணிகள் 30 9.86 வரை,

1. பொதுப் பணித் துறை.

இம்மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கீழ் 82 பணித் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றுள் 43 பணித் திட்டங்கள் ரூ. 32.45 இலட்சத்தில் ஊரகப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டன. இதன் மூலம் ரூ. 1.556 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டன.

2. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்.

இத்துறையின் கீழ் 60 பணிகள் ஊரகப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டன. ரூ. 64.71 இலட்சம் செலவு செய்யப்பட்டு 4.163 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

3. வேளாண்மை பொறியியல் துறை.

இத்துறையில் 10 பணித் திட்டங்கள் மொத்தம் ரூ. 9.18 இலட்சம் செலவில் ஊரகப் பகுதிகளில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

4. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்.

இத் திட்டத்தின் கீழ் ரூ. 46.68 இலட்சம் செலவில். 3.36 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

5. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்.

இத் திட்டத்தின் கீழ் 956 பணிகள் ரூ. 64.96 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு 4,026 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்லாது ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவை தங்களிடம் உள்ள 'உபரி நிதியினை' பயன்படுத்தி விவசாயத் தொழிலாளர்கள் பணித் திட்டங்களை உருவாக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார். இந்த வகையில் உபரி நிதியுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் ரூ. 18.52 இலட்சம் செலவிட்டுள்ளன.

மேலும் 30-9-86-க்குப் பின்னர் 19-11-86 வரை கீழ்க்குறிப்பிட்டவாறு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன,

| துறை. | செலவு செய்யப்பட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | உருவாக்கப்பட்ட மனித வேலை நாட்கள் (இலட்சத்தில்). |
|---|---|---|
| 1. பொதுப் பணித் துறை (விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புகள்) | 26.33 | 1.1630 |
| 2. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை. | 5.69 | 0.3591 |



| | | |
|---|---|---|
| 3. வேளாண்மைப் பொறியியல் துறை | 2.73 | 0.1989 |
| 4. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். | 12.64 | 0.3850 |
| மொத்தம் .. | 47.39 | 2.1060 |

முடிவுரை.

இம்மாவட்டத்தில் 19-11-86 வரை மொத்தம் ரூ. 265.37 இலட்சம் வரை விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது. குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 48.12 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், இம் மாவட்டத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் வகையில் ரூ. 50 இலட்சம் வேறு பணியிலிருந்து திருப்பப்பட்டதன் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## (இ). நாகர்கோவிலிலுள்ள நாகம்மாள் மில்ஸ் தொழிலாளர்கள் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச் சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

நாகர்கோவிலிலுள்ள நாகம்மாள் மில்ஸ் லிமிடெட் என்ற நூற் பாலையில் சுமார் 370 தொழிலாளர்கள் பணியில் உள்ளனர். இந்த ஆலையில் குமரி மாவட்ட மில் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யூ), குமரி, நெல்லை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் டி.என்.டி.யு.சி, நாகம்மாள் மில்ஸ் ஸ்டாப், ஜாபர்ஸ் அண்ட் எம்பிளாயீஸ் யூனியன், குமரி மாவட்ட நூற்பாலை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தொ.மு.பே) ஆகிய நான்கு தொழிற்சங்கள் இயங்குகின்றன.

1985-86ம் ஆண்டு போனஸ் பிரச்சினையில் தொழிற் சங்கங்கள் முன்னதாகவே வேலை நிறுத்த அறிவிப்புகள் கொடுத்து 27-10-1986 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்திருந்தன. இந்தப் பிரச்சினையில் நாகர் கோவில் தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) முன்பு முதலில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பயன் அளிக்காததினால், திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்

கிடையில் தொழிலாளர்கள் 28-10-1986 அன்று காலையிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து நிர்வாகம் 30-10-1986 முதல் ஆலையில் கதவடைப்பை செய்துள்ளது.

திருநெல்வேலி, தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தொழிற்சங்கத் தரப்பில் குறைந்த பட்சம் சைமா (Southern India Millowners Association) ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனஸ் மற்றும் வருகை நாள் ஒன்றுக்கு ரூ. 1.10 பைசா வீதம் கருணைத் தொகையும் கோரப்பட்டது. ஆனால் நிர்வாகத்தரப்பில் 8.33 சதவீதத்துக்கு உரிய தொகையை போனஸ் முன்பணமாக வழங்குவதைத் தவிர்த்து, வேறு எந்தவிதச் சலுகையும் கொடுப்பது சாத்தியமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு ஒரு முடிவு ஏற்படவில்லை.

எனவே இப்பிரச்சினையில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண சென்னை, தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) முன்பு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளது. வேலை நிறுத்தமும், கதவடைப்பும் தொடர்ந்து நீடிக்கிறது. நிலைமை அமைதியாக உள்ளது. அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறவில்லை.

(ஈ). பேட்டை ஆரல்வாய்மொழி போன்ற இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச் சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1. பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை போனஸ் பிரச்சினை.

திருநெல்வேலி பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையில் 'ஏ' ஆலை 'பி' ஆலை என்ற இரு ஆலைகள் உள்ளன. 'ஏ' ஆலையில் சுமார் 814 தொழிலாளர்களும், 'பி' ஆலையில் சுமார் 848 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர். இந்த இரு பிரிவு ஆலைத் தொழிலாளர்கள் ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, அண்ணா தொழிற் சங்க பேரவை மற்றும் இதர சுயேச்சையாக பல தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன.



1985-ம் ஆண்டுக்கான போனஸ் பிரச்சனை மீது ஒரு தொழிற் தகராறு எழுப்பப்பட்டு அதில் தொழிலாளர் துறை இணை ஆணையர், (சமரசம்) முன்பு 29-10-1986 அன்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தைகளின் போது, நிர்வாகம் கோவையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனசும், அதற்கு மேல் அதிகப்படித் தொகையாக வேலை செய்த நாள் ஒன்றுக்கு ரூ 1.35 வீதம் அளிக்க முன் வந்தது. ஆனால் தொழிலாளர்கள் தரப்பில் 20 சதவீதம் போனசும், அதிகப்படியாக வேலை செய்த நாள் ஒன்றுக்கு ரூ 1.70–ம் மற்றும் ரூ. 2,000/- முன்பணமாகவும் அளிக்க கோரப்பட்டது. நிர்வாகம் இதை ஏற்கவில்லை. மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நிலுவையில் இருக்கும்போது தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி 30-10-1986 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதன் பிறகு அடுத்த கட்ட பேச்சு வார்த்தைகள் சென்னை தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு 5-11-1986, 6-11-1986 மற்றும் 7-11-1986 ஆகியநாட்களில் நடைபெற்றது. இந்த பேச்சு வார்த்தைகளின் போது தொழிற்சங்கங்கள் சேலம் கூட்டுறவு நூற்பாலையில் அளிக்கப்படுவது போல 14 சதவீதம் போனசும் மற்றும் இனாம் தொகையும் வழங்க வேண்டுமென்றும் அல்லது போனஸ் பிரச்சனையில் தீர்வு காணும் வரை முன்பணமாவது அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால் நிர்வாகம் சேலம் கூட்டுறவு நூற்பாலையைப் பொறுத்தவரை செட் ஆன் (Set-on) தொகை இருந்ததால் 14 சதவீதம் போனஸ் மற்றும் இனாம் தொகை வழங்கப்பட்டது என்றும், தங்களது நிறுவனத்தில் தற்போது ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனஸ் அளிக்கவும் மற்றும் ரூ. 1.35 எக்ஸ்கிரேஷியா அளிக்கவும் போனஸ் தொகை பற்றி இறுதியாக நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட ஆவணங்களை தொழிலாளர் துறையின் முன்பு தாக்கல் செய்யவும் ஒப்புக்கொள்வதாக நிர்வாகம் தெரிவித்தது. ஆனால் முன்பணம் வழங்க நிர்வாகம் ஏற்கவில்லை. இந்நிலையில் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டு தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நீடிக்கிறது. பேச்சு வார்த்தைகளின் மூலம் இதில் தீர்வு காண எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகிறது.

2. ஆரல்வாய்மொழியிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை போனஸ் பிரச்சனை.

ஆரல்வாய்மொழியிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் சுமார் 834 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இந்த ஆலையில் கன்னியாஸ்பின் ஓர்க்கர்ஸ் யூனியன் (சி. ஐ. டி. யு.), கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஜனதா தொழிலாளர் சங்கம் (சி.என்.டி.யு.சி.)

யுனைடெட் பிரண்ட் பெடரேஷன் (மதுரை) மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை அண்ணா தொழிற்சங்கம் ஆகியவைகள் இயங்குகின்றன. கன்னியாஸ்பின் தொழிலாளர் சங்கம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர் முன்னேற்றசங்கம் ஆகியவை 1985ம் ஆண்டுபோனஸ் பிரச்சனையை குறித்து 25-10-86 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக வேலை நிறுத்த அறிக்கை கொடுத்தனர். இத்தொழிற் தகராறில் நாகர்கோவிலிலுள்ள தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாததால் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் இதில் தலையிட்டு தற்போது பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டுள்ளார். இப்பேச்சு வார்த்தைகள் நிலுவையில் இருக்கும்போது தொழிலாளர்கள் போனஸ் கோரிக்கையை வலியுறுத்தி 31-10-86 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். 1-11-86 விடுமுறையாகிவிட்டது. எனவே 2-11-1986 அன்று தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பி மீண்டும் 3-11—1986 முதல் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெற்ற முதல் சுற்று பேச்சுவார்த்தைகளின்போது தொழிலாளர்கள் தரப்பில் தற்போது 8.33 சதவீதம் போனசும் மற்றும் ரூ. 750/- முன்பணம் வழங்கி போனஸ் பேச்சு வார்த்தை முடிந்தபிறகு இத்தொகைகளை சரிசெய்து கொள்வது அல்லது 8.33 சதவீதம் போனஸ் மற்றும் வருகை நாள் ஒன்றுக்கு ரூ. 1-70 பைசா அதிகப்படி தொகையாகவும் கொடுக்க வேண்டுமென்று கோரப்பட்டது. நிர்வாகத் தரப்பில் ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனசும் மற்றும் வருகை நாள் ஒன்றுக்கு ரூ. 1.35 வீதம் அதிகப்படி தொகை வழங்க தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தொழிலாளர்கள் தரப்பில் ஒப்பந்த அடிப்படையை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றும் ரூ. 1,750/- முன்பணமாக தொழிலாளர்களுக்கு அளித்து பேச்சு வார்த்தைக்குப்பின் அதனை சரிசெய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. நிர்வாகத்தைப் பொறுத்தவரை சைமா (SIMA) ஒப்பந்தப்படி தான் போனஸ் மற்றும் அதிகப்படி தொகை வழங்கப்படும் என உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. இருதரப்பினரும் தங்களது நிலையை வலியுறுத்தி வருவதால் ஒரு உடன்பாடும் ஏற்படவில்லை. வேலை நிறுத்தம் அமைதியாக நடைபெறுகிறது. இப்பிரச்சனையில் ஒரு சுமுகமான முடிவு காண மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு மேலும் தொடர்ந்து நடைபெறும்.

**(2) திருச்சி சிம்கோ இன்ஜினியரிங் லிமிடெட் தொழிலாளர் பிரச்சனை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

திருச்சிராப்பள்ளியிலுள்ள சிம்கோ இஞ்சினியரிங் லிமிடெட் என்ற நிறுவனத்தில் 1985-86 ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை தொடர்பாக 3—11—86 முதல் சில அசம்பாவிதமான காரணங்களினால் பணி நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் தொழிலாளர் துறை சிறப்புத்துணை ஆணையர் அங்குள்ள நான்கு தொழிற் சங்கங்களுடனும்—1. சிம்கோ மீட்டர்ஸ் ஒர்க்கர்ஸ் யூனியன் (ஐ.என்.டி.யூ.சி) 2. சிம்கோ மீட்டர்ஸ் லேபர் யூனியன், (சி.ஐ.டி.யூ), 3. இஞ்சினியரிங் அண்ட் ஜெனரல் ஒர்க்ஸ் புராகிரசிவ் யூனியன் (டி.எம்.கே.) 4. சிம்கோ மீட்டர் ஸ்டாப் யூனியன் (சி.ஐ.டி.யூ.) மற்றும் நிர்வாகத்தினருடனும் 7.11.86 மற்றும் 10.11.86 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் பயனாக ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன் அடிப்படையில் தொழிலாளர் துறை துணை ஆணையர் நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அறிவுரைகள் வழங்கியுள்ளார். அதன் பயனாக தொழிலாளர்கள் 14.10.86-க்கு முன்பாக இருந்த நிலைக்கு உற்பத்தியைக் கொண்டு வருதல் என்றும் எல்லா வகையிலும் நிறுவனத்தில் ஒழுங்கு முறைகளை காப்பதென்றும், நிர்வாகம் பணி நிறுத்தி வைப்பினை நீக்கி 12.11.86 முதல் நிறுவனத்தில் பணி மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும் 1985-86-க்கான போனஸ் மற்றும் தொழிற்சாலையை நிறுத்தி வைத்ததினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும், 2 மாதத்திற்குள் தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு பேசி சுமுகமான முறையில் முடித்துக்கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இதனை இரு தரப்பினர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். நிறுவனத்தில் தற்போது பிரச்சினை ஏதுமில்லை. 12.11.86 முதல் பணி தொடங்கப்பட்டு தொழிற்சாலையில் சகஜ நிலை திரும்பியுள்ளது.

**(ஊ) கரும்புக்கு கட்டுபடியான விலை கோரி விவசாயிகள் உண்ணாவிரதம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கே. சுப்பராயன் பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மைய அரசு 1985-86 ஆம் பருவத்திற்கு 8.5% சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு குறைந்தபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 165 என அறிவித்தபோதே 1986-87 ஆம் பருவத்திற்கும் 8.5% சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு குறைந்தபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 170 என விலை நிர்ணயம் செய்துள்ளது.

2. 1982–83 முதல் 1985–86 வரை மைய அரசு கரும்பிற்கு டன் ஒன்றுக்கு அடிப்படை விலைகளை கீழ்க்கண்டவாறு நிர்ணயித்துள்ளது :

| | | ரூபாய் |
|---|---|---|
| 1982–83 | .. | 130 |
| 1983–84 | .. | 135 |
| 1984 85 | .. | 140 |
| 1985–86 | .. | 165 |
| 1986–87 | .. | 170 |

மேலே உள்ள விவரங்களினால் 1982–83 முதல் 1984–85 வரை ஆகிய இந்த 3 ஆண்டுகளிலும் ஆண்டுக்கு ஆண்டு ரூ. 5 தான் விலை நிர்ணயம் உயர்ந்துள்ளது. ஆனால், கடந்த ஆண்டுதான் (1985–86) மைய அரசு முந்தைய ஆண்டைவிட ரூ. 25 அதிகமாக நிர்ணயித்துள்ளது.

3. தமிழ்நாட்டில் (1985–86)-ல் கரும்பு பயிர் செய்ய டன் ஒன்றுக்கு ஆகும் செவு ரூ.173.06 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

4. தமிழக கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகள் மற்றும் தென் இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையையும், தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி செய்ய விவசாயிக்கு ஆகும் செலவையும் கருத்தில் கொண்டு சென்ற ஆண்டு மைய அரசு அறிவித்த சட்ட பூர்வ குறைந்தபட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ. 165 உடன் தமிழக அரசு கூடுதலாக டன் ஒன்றுக்கு ரூ. 30 வழங்க ஆணையிட்டது. 1986–87ஆம் ஆண்டில் மைய அரசு அறிவித்துள்ள கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 170 ஆகும். சென்ற ஆண்டைப்போல் கூடுதலாக டன் ஒன்றுக்கு ரூ. 30 மாநில அரசு அளித்து ஆணையிட்டதால் 1986–87 ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீத சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 200 என ஆகும்.

5. தமிழ்நாட்டில் 1985–86 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகள் அடைந்த உச்சபட்ச கட்டுமானம் 10.12% ஆக இருந்தது. இந்த உச்ச அளவு கட்டுமானத்துடன் இணைந்தால் கரும்பு விவசாயிகள் சராசரியாக டன் ஒன்றுக்கு ரூ. 230-க்கு மேலாகவே பெறுவார்கள்.



6. கரும்பு பயிரிடும் விவசாயிகளின் நலன்களை கருத்தில் கொண்டும் மற்றும் தமிழக சர்க்கரை ஆலைகள் நன்றாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும் அரசு கரும்பு விலையை மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

(எ) திருப்பூர் பனியன் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு வி. தங்கவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்றினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருப்பூரிலும் அதைச் சுற்றிலும் உள்ள நூல் மற்றும் துணி செய்முறைப்படுத்தும் தொழிற்சாலைகள் சிறிய தொழிற்சாலைகளாகவோ அல்லது மிகச்சிறிய தொழிற்சாலைகளாகவோ விளங்குகின்றன. செய்முறையில் வெளுப்புத் திரவம், எரிகாரம், ஹைட்ரோ-குளோரிக் அமிலம், கந்தக அமிலம், ட்ரை-சோடியம், ஃபாஸ்ஃபேட், ஹைட்ரஜன் பெராக்ஸைட், உப்பு பல்வேறு சாயங்கள் முதலியன மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. நூல்/துணிகள் வெளுப்பேற்றி, மெருகூட்டி சாயமிடப்பட்டு செய்முறையில் வெளிப்படுத்தப்படும் கழிவுநீரானது கரையாத திடப்பொருள்களையும், மிதக்கும் திடப்பொருள்களையும், இரசாயன உயிரகத் தேவையும், உயிரக இரசாயன உயிரகத் தேவையும் இன்னும் பலவும் கலந்து இயல்பாகவே சாரத்தன்மை உள்ளது. திருப்பூரிலுள்ள அநேக தொழிற்சாலைகள் தமது தொழிற்சாலை கழிவுநீர் மற்றும் பிற கழிவு நீரை நிலத்திலும், நொய்யலாற்றை நோக்கி ஓடும் நீரோடைகளிலும் வெளியேற்றுகின்றன.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 ஆவது பிரிவின்படி அனைத்துத் தொழிற்சாலைகளும் தொழிற்சாலைக் கழிவுநீர்/மற்றும் பிற நீரை வெளியிடுவதற்காக வாரியத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

இதுவரை திருப்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள 72 தொழிற்சாலைகள் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி வாரியத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளன. 41 தொழிற்சாலைகளுக்கு அனுமதி

அளிக்கப்பட்டு, வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளை திருப்தி செய்ய தேவையான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறுவுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளன. வாரியத்தின் அனுமதியைப் பெற்ற பிறகு 8 தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவியுள்ளனர். தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை 11 ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள தொழிற் சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தும் பணி உடனேயே மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின் கீழ் 31—5—1984-க்குள் அனுமதி கோரி விண்ணப்பிக்காததற்காக திருப்பூரிலுள்ள 7 தொழிற்சாலைகள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இப்பொருள் குறித்து கண்காணித்து வருகிறது.

(ஏ) கோவை நகரின் வடக்குப் பகுதியில் நில ஆர்ஜித நடவடிக்கையால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சின்னராசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ் வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கையை வைக்கிறேன்.

அறிக்கை.

கோவை நகரம் தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாக உள்ளதால் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளதால், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குறைந்த/நடுத்தர வருவாய் பிரிவினரின் வீட்டு வசதி தேவைகள் பூர்த்தி செய்யும் நோக்குடன், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அறிஞர் அண்ணா புறநகர்த் (வீட்டு வசதி) திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்காக கீழ்க்கண்ட கிராமங்களில் உள்ள சுமார் 1,120.66 ஏக்கர் புஞ்சை நிலங்களை கையகப்



படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தீர்மான எண் 370, நாள் 9—8—1974-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிலமெடுப்பு நடவடிக் கைகள் தொடரப்பட்டன.

| | ஏ. செ. |
|---|---|
| 1. கவுண்டம்பாளையம் கிராமம் | 174.86 |
| 2. தெலுங்குபாளையம் கிராமம் | 120.07 |
| 3. வடவள்ளி கிராமம் | 214.43 |
| 4. வீரகேரளம் மற்றும் வேடப்பட்டி கிராமங்கள் | 611.30 |
| | 1,120.66 |

2. மேற்கண்ட கிராமங்களில் சுமார் 1,072.70 ஏக்கர் புஞ்சை நிலங்களை கையகப்படுத்த நிலமெடுப்பு சட்டம் பிரிவு 4(1)-ன் கீழ் வரைவு அறிவிக்கைக்கு ஒப்புதல் அளித்து அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நிலமெடுப்புச் சட்டம் பிரிவு 6 மற்றும் 7-ன் கீழான அறிவிக்கைகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு 8 நேர்வுகளில் தீர்ப்பாணை வழங்கப்பட்டு விட்டன. தீர்ப்பாணைகள் வழங்கப்பட்டவைகளில் சுமார் 39.29 ஏக்கர் நிலம் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. இந்த ஆர்ஜிதத்தில் நஞ்சை நிலங்கள் எதுவும் உட்படுத்தப்படவில்லை. வருவாய் குறிப்புகளின்படி அனைத்து நிலங்களும் புஞ்சை நிலங்களே. சில நிலங்களில் மட்டும் கிணற்றுப் பாசனம் மூலம் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

பிரிவு 4 (1)-ன் கீழ் அறிவிக்கைகள் வெளியிடும்போது இந்நிலங்களில் குறைந்த அளவே வீடுகள் கட்டப்பட்டிருந்தன. ஏனைய வீடுகள் 4(1) அறிவிக்கை வெளியிட்ட பின்னரே கட்டப் பட்டுள்ளன. மேற்கண்ட நிலங்கள் நில ஆர்ஜிதத்திற்கு உட் படுத்தப்படுகிறது என்பது நில உரிமையாளருக்குத் தெரிந்த பின்னர் மேற்கண்ட நிலங்கள் மனை பிரிவு செய்யப்பட்டு தனியார்களுக்கு விற்கப்பட்டுள்ளது. இந்நிலங்களில் சுமார் 100 ஏக்கர் அளவு நிலங்களே மனைப்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளன. வரைபட அனுமதி பெற்றவர்களும் காலியிடத்தின் உரிமையாளர் களும் இந்நிலமெடுப்பிற்கு எதிராக பல்வேறு வழக்குகளை உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்து தடைஉத்தரவும் பெற்றுள்ளனர். ஆகவே, இந்நிலமெடுப்பு நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளது. இதுவரை எந்தக் கட்டிடமும் இடிக்கப்படவில்லை, இத்திட்டம் நிறை வேற்றப்படும்போது மனைச் சொந்தக்காரர்களுக்கு மனை ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்து அவர்களுக்கு மனை ஒதுக்கீடு செய்யலாமா என்பது பற்றி பரிசீலிக்கப்படும். (குறுக்கீடுகள்) (கூச்சல்) குழப்பம்,

திரு. கு. சுப்பராயன்: எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களுக்கு உரிமை கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்கள் பிரச்னை குறித்து அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதைத் தடுப்பதே குற்றம்.

அடுத்த கவன ஈர்ப்பு.

(ஐ) சிட்கோ தொழிலாளர்களுக்கு குடியிருப்புகளை உடமையாக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பொன்முத்து ராமலிங்கம், கே. சொர்ணலிங்கம், துரை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வந்தது. மத்திய அரசு, இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளுக்கு கடன் மற்றும் மானியத் தொகையை 1969-ம் ஆண்டு வரை தனிப்பட்ட முறையில் வழங்கி வந்தது. அதன் பின்னர், 1-4-1969-க்குப் பின்னர், இத்திட்டத்திற்கு மாநிலங்களின் வருடாந்திர திட்டத்தின் கீழ் (State Annual Plan) நிதியினை மைய அரசு அளித்தது.

(2) தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுறவுத்துறையின்கீழ் கீழ்க்கண்ட எண்ணிக்கையுள்ள வீடுகள் இதுவரை கட்டுப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| (1) | தனியார் துறை .. | 1,206 |
| (2) | வீட்டு வசதி வாரியத்தால் பராமரிக்கப் படுபவை .. | 3,046 |
| (3) | 'சிட்கோ' நிறுவனத்தால் பராமரிக்கப் படுபவை .. | 1,111 |
| (4) | கூட்டுறவுத் துறை | 2,459 |

(3) இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் தொழிலாளர்களுக்கு வாடகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. தொழிலாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அல்லது அவர்களது வருமான வரம்பு மாதம் ரூ. 500க்கு மேல் உயரும்பொழுது, தொழிலாளர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளை காலி செய்ய வேண்டும். ஆனால், நடைமுறையில் இதை பின்பற்ற இயலவில்லை. தற்பொழுது, மிக அதிக எண்ணிக்கையில், ஓய்வு பெற்ற மற்றும் வருமான உயர்வு பெற்ற தொழிலாளர்கள்



தொடர்ந்து வீடுகளில் இருந்து வருகின்றனர். ஆகவே மைய அரசு 1978 மற்றும் 1979ம் ஆண்டுகளில் பொதுத்துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை, அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்கே விற்று விடலாம் என்று மாநில அரசிற்குப் பரிந்துரை செய்தது. இவ் வீடுகளை அங்கு வசிக்கும் தொழிலாளர்களுக்கே விற்றுவிட்டால், அடுத்து புதிதாக வரும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கிடைப்பது கடினமாக இருக்கும் என்ற காரணத்தால், அவ்வீடுகளை அதில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு விற்கத் தேவையில்லை என்று இவ்வரசு முன்னர் முடிவு செய்தது என்றாலும், தற்பொழுது, அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்கள் அவ்வீடுகளை தமக்கே உடைமையாக்கித்தர வேண்டும் என்று திரும்பத் திரும்ப கோரிக்கையை வலுவாக எழுப்பி வந்ததால் அரசு, அவர்களின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலனை செய்து, இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை அங்கு குடியிருக்கும் உண்மையான, தகுதியுடைய தொழிலாளர்களுக்கு விற்று விடலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அது சம்பந்தமாக ஆணை வெளியிடுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஒ) புதுக்கோட்டை மாவட்டம் நமணசமுத்திரத்திலுள்ள லட்சுமி சண்முகா ஸ்பின்னிங் மில்லை விடுவிப்பு நிறுவனமாக அறிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் த. புஷ்பராசு, ஜே. முகம்மதுகனி, கே. கிருஷ்ணமூர்த்தி, மு. இராசாங்கம், ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் திர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கையை வைக்கிறேன்.

அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டம் நமணசமுத்திரத்திலுள்ள லட்சுமி சண்முகா ஸ்பின்னிங் மில்ஸ் லிட். என்னும் நூற்பாலையில் சுமார் 600 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த ஆலையில் சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., ஏ.டி.பி., எஸ்.பி.எப். ஆகியவற்றைச் சார்ந்த சங்கங்கள் இயங்கி வருகின்றன.

நிதி நெருக்கடி காரணமாக இந்த ஆலை 1985 ஆம் ஆண்டிலிருந்தே முழுமையாக இயங்குவதில்லை. 1985 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு சம்பளம் வழங்கப்படாமலும் 17-5-85 முதல் ஆலையில் வேலை நடைபெறாமலும் இருந்து வந்தது. எனவே

ஆலையில் மீண்டும் வேலை துவங்குவதற்கு வழி வகைகள் செய்யும் பொருட்டு அரசு தலையிட்டு சென்னை, தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) பேச்சு வார்த்தைகள் மேற் கொண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தினர். அதன் அடிப்படையில் திருச்சி தொழிலாளர்துறை துணை ஆணையர் முன்பு நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தை களின் பயனாக 3-7-85 அன்று இருதரப்பினருக்கிடையில் பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி தொழி லாளர்கள் 4-7-85 முதல் பணிக்குத் திரும்பினர்.

அதன் பிறகு 13-4-86 முதல் தொழிலாளர்களுக்கு லே ஆப் விடப்பட்டதாக கூறப்பட்டதின் பேரில் திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையர் தலையிட்டு பேச்சு வார்த்தைகள் மேற் கொண்டார். இதற்கிடையில் 20-7-86 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையில் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி புதுக் கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டு தொழிலாளர்கள் தரப்பிலும் மற்றும் நிர்வாகத்தரப்பிலும் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு ஆலோசனைக்குழு ஏற்படுத்தப் பட்டது.

மேலும் இந்த உடன்பாட்டின்படி லேஆப் ரத்து செய்து, ஆலையை தொடர்ந்து இயக்குவதென்றும் மாதந்தோறும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதென்றும் அவ்வாறு சம்பளம் கொடுக்க அல்லது ஆலையை இயக்கத் தவறினால் ஆலோசனைக் குழுவே ஆலையை இயக்க நிர்வாகம் ஒப்புக் கொள்வதென்றும் ஏற்கப்பட்டது. இதன் அடிப்படையில் 23-7-86 முதல் ஆலையில் வேலை துவக்கப்பட்டது. ஆனால் அதன் பிறகு ஆலை சரிவர இயங்கவில்லை. எனவே இது பற்றி மீண்டும் தொழிலாளர்கள் தரப்பில் முறையீடுகள் தற்போது பெறப் பட்டுள்ளன.

1986 பிப்ரவரி மாதத்திலிருந்து தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. இவை தவிர இ. எஸ். ஐ., இ. பி. எப். கூட்டுறவு பண்டகசாலை போன்ற பல சட்டப்படி செலுத்த வேண்டிய தொகைகளிலும் நிலுவை உள்ளதாக அறியப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ஆலோசனைக் குழுவும் தற்பொழுது இயங்க வில்லை. இப்பிரச்சினையில் ஒரு தீர்வு காணும் பொருட்டு திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையர் தற்போது பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டுள்ளார். அதன் முடிவு எதிர்பார்க்கப் படுகிறது, பேச்சு வார்த்தைகளில் முடிவு தெரிந்த பின்னர் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி தீர்மானிக்கப் படும்.



இந்த ஆலையினை அரசு ஏற்று நடத்தும் கருத்து ஏதும் பரிசீலனையிலில்லை. ஆனால் இந்நூற்பாலையை ''விடுவிப்பு நிறுவனமாக'' அறிவிக்க கோரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கும்படி வைக்கிறீர்கள். I want to have a smooth running of the House.

(ஏ) கோவை மாவட்டம் ஆதிவாசிகள் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு திரு. மா. சின்னராசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் சார்பாக, மாண்புமிகு வீட்டுவசதி துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஊரக நிலமற்றோர், வேலை வாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற மத்திய அரசு உதவித் திட்டங்கள் மூலமும், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மூலமும், வீடுகள் கட்டுவது; குடிநீர் வசதி, சாலைகள் போடுவது, மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதை மாநில வனத்துறை அதிகாரிகள் தடுத்து நிறுத்துவதாகக் கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

ஒதுக்கக் காட்டில், எந்தவித வனவளர்ச்சி சம்பந்தப்படாத வேலைகள் செய்ய வேண்டியிருந்தாலும், 1980-ம் ஆண்டு வனக் காப்பு சட்ட விதிகளின்படி, மைய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். இதற்காக, வன அலுவலர்கள் வனவளர்ச்சி சம்பந்தப்படாத பொருள்பற்றி ஆய்வு செய்து தக்க கருத்துருவை மாநில அரசு மூலம் மைய அரசுக்கு அனுப்பவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வேலைகள் எல்லாம் வன வளர்ச்சி சம்பந்தப்படாமலும், ஒதுக்கக்காடுகள் எல்லைகளுக்குள்ளும் இருப்பதால், அவ்வேலைகளை செய்வதற்கு, 1980-ம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி வேண்டிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு, தக்கதொரு கருத்துரு மைய அரசுக்கு அனுப்பவேண்டும். அதன்படி, கீழ்க்கண்ட நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1986 நவம்பர் 25

(i) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் சரக கோப்பநாரி ஒதுக்கக் காட்டில் கோவை மாநகராட்சி, 20 பேரூராட்சி, 476 குக்கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க முன்னோடி நிலஅளவு செய்வதற்காக அனுமதி கோரி விண்ணப்பித்ததின் பேரில், 31-12-1986 வரை மேற்கூறிய முன்னோடி நில அளவினை செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டு, இந்த வேலை தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செய்யப்பட்டு வருகிறது.

(ii) காரமடை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1985-86-ம் ஆண்டில் காரமடை வட்டாரம் குண்டூர், பரளிக்காடு, ரெண்டை மலைவாழ் ஆதிவாசிகளுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார். கோவை மாவட்ட வன அலுவலர் மேற்படி கோரிக்கையை ஆய்வு செய்து, மைய அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று கூறியுள்ளார்.

(iii) பில்லூர் அணை பழங்குடியினருக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுப்பது குறித்தும், ஒரு கருத்துரு கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கிடைக்கப்பெற்றது. இந்தக் கருத்துருவினை செயலாக்க, 1980-ம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி, மத்திய அரசின் ஒப்புதல் கோர முழு விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மாவட்ட வன அலுவலரிடமும் கேட்கப்பட்டு, அவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(iv) ஆதிவாசிகள் செட்டில்மெண்டுக்கு செல்லும் சாலைகளை பராமரிப்பது மற்றும் புதிய சாலைகள் அமைப்பது குறித்து நெடுஞ்சாலைத் துறையினர் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பிரேரணை அனுப்பியிருக்கின்றனர். மத்திய அரசுக்கு வழங்கப்படவேண்டிய விபரங்கள் அனைத்தும் கொடுக்கப்படாமல் இருந்ததால், நெடுஞ்சாலைத் துறையினரால் அனுப்பி வைக்கப்பட்ட பிரேரணையை, முழு விபரங்களுடன் திருப்பி அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. அவர்களது முழு அறிக்கை விபரங்களுடன் கிடைத்தவுடன், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுவாக மலைவாழ், ஆதிவாசியினருக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடியிருப்புகள், சாலை அமைத்தல், குடிநீர் வசதி போன்ற வசதிகளை செய்து கொடுப்பதில் வனத் துறை எப்போதும் ஆட்சேபணை செய்தது கிடையாது.

திரு. ரு. சுப்பராயன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் எதிர்க்கட்சிகளுக்காக பேச வேண்டாமா? விவசாயிகளுக்காக பேச வேண்டாமா?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவசாயிகளுக்காக நீங்கள் பேசவில்லை. நீங்கள் அடம் பிடிக்கிறீர்கள். இது முறையல்ல, (கூச்சல்-குழப்பம்)



1986 நவம்பர் 25]

(முற்பகல் 11-10)

(ஔ) சமயபுரம் மாரியம்மன் கோவில் நகைகள் திருட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கி. வெங்கடாசலம், என்.எஸ்.வி. சித்தன், ந. மாசிலாமணி, அ. மலர்மன்னன், செ. இரத்தினவேலு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் சார்பில் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் உள்ள மூலவர் அம்பாளுக்கு சாத்தப்பட்டு இருந்த தங்க கவசத்தில் 1-11-1986 அன்று திரு ஜெம்புநாத குருக்கள் முறை முடிந்து அடுத்த முறை குருக்களாகிய திரு வேம்பு குருக்கள் 2-11-86 அன்று காலை 5.30 மணிக்கு கதவு திறந்து நகைகளை சரிபார்த்த போது மூலவர் அம்பாளுக்கு சாத்தப்பட்டிருந்த தங்கக் கவசத்தில் இடது பாகத்தில் சிறிய விரல் நுழையும் அளவிற்கு ஒடிந்து இருந்தது என்றும், அதில் வளைந்திருந்த சுமார் 1/2 ரூபாய் சுற்றளவு தகடு எப்படியோ ஒடிந்து காணாமல் போய்விட்டது என்ற விபரத்தினை மணியத்திடம் திரு வேம்பு குருக்கள் தெரிவித்துள்ளதாக திருச்சி துணை ஆணையர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி இழப்பு குறித்து சம்பந்தப்பட்ட குருக்கள் விபரம்:

1. திரு ஜம்புநாத குருக்கள்
2. திரு வேம்பு குருக்கள்
3. திரு சுப்பிரமணிய குருக்கள்

2. மேற்படி இழப்பு தொடர்பாக மேற்படி குருக்கள் ஒரு மனுவை கொடுத்து செயல் அலுவலரிடம் ஒப்படைக்கும்படி மணியத்திடம் தெரிவித்துள்ளார். முறை ஒப்படைப்பவர்/முறை ஒப்புக் கொள்பவர்கள் கொடுத்த மனுக்களை உதவியாளர் திரு கந்தசாமியால் 3-11-86 அன்று பெற்று அலுவலகத்தில் 4-11-86-ந் தேதி ஒப்படைக்கப்பட்டது.

3. மேற்படி திருக்கோயில் செயல் அலுவலர் 5-11-1986-ம் தேதியில் நகைகளை நேரில் சென்று பார்வையிட்டு நான்கு பாகங்களைக் கொண்ட தங்க கவசங்கள் அனைத்தையும் எடுத்து வரச் செய்து அலுவலகத்தில் குருக்கள் முன்னால் எடை போடப்பட்டது.

4. எடைபோட்டதில் குறைவு ஏற்பட்டுள்ளது. குறைந்த எடையின் அளவு 70 கிராம் ஆகும். மூன்று குருக்கள்களும் மூலஸ்தானத்தில் தங்கள் மூவரையும் தங்களுக்கு ஒத்தாசையாக கைங்கர்யம் செய்பவர்களையும் தவிர யாரும் பிரவேசிப்பதில்லை எனவும், ஆதலால் மேற்படி கவசத்தில் இருந்து துண்டுகள் மூலஸ்தானத்தில் எங்காவது விழுந்திருக்கிறதா அல்லது தங்களுக்கு ஒத்தாசையாக கைங்கர்யம் செய்ய வந்தவர்கள் யாரேனும் தவறு செய்து விட்டார்களா என்பதை அறிந்து தெரிவிப்பதற்கு சிறிது அவகாசம் கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும் தங்களின் கவனக் குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்ட இந்த இழப்பிற்கு தாங்களே பொறுப்பு என்றும், அதற்குண்டான மதிப்பு மற்றும் புதுப்பிக்க ஆகும் செலவுவகையறாவுக்கு, தொகை ரூ. 25,000–யை மூன்று குருக்கள்களாலும் பலவகை ரசீது எண். 3282/11-1-86-ல் செலுத்தப்பட்டு ஆலயக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

5. இழப்பு ஏற்பட்டுள்ள தங்க கவசங்கள் புதியதாக செய்து கொடுப்பதற்கு கீழ்க்கண்ட விவரப்படி ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதசுவாமி திருக்கோயில் நகை செய்யும் தொழில் வல்லுநர் திரு ஆர். பாண்டுரங்கன் என்பவரால் மதிப்பீடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்க ஹஸ்தம் | 754 கிராம் |
| இடது பாதம் | 950 கிராம் |
| | 1704 கிராம் |

செய்வதற்கு கூலி 1 கிராமுக்கு ரூ. 4 வீதம் கூடுதல்—ரூ. 6,816.00
சேதாரம் 100 கிராமிற்கு 2 கிராம் வீதம்
1704 கிராமிற்கு சுமார் 34 கிராம்
இதற்கு கிராம் 1க்கு ரூ. 235-வீதம் கூடுதல்—ரூ. 7,990.00

கூடுதல்—ரூ. 14,806.00

மேற்படி இழப்புகள் குறித்து 14-11-86 அன்று செயல் அலுவலரால் காவல் துறையினரிடம் புலன் விசாரணைக்கு புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காணாமற் போயுள்ள பாகங்களை இரண்டு இனங்களிலும் கவசத்தினை உருக்கி புதியதாக செய்து கொடுக்க 20 நாட்கள் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## (ஃ) இரப்பர் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி உயர்வு வழங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரையன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் சார்பில் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்களுக்காக குறுமக்கூலி (Minimum Wages) கீழ்க்கண்டவாறு அரசு ஆணை எண் 1171, தொழிலாளர் துறை, நாள் 11-6-1985-ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| அடிப்படை ஊதியம் | .. | ரூ 6.35 |
| கிராக்கிப்படி | .. | ரூ. 4.80 |

ஆனால், அரசு ரப்பர் கழகத்தில் தொழிலாளர்களுக்கு [illegible]-8-85 முதல், கீழ்க்கண்டவாறு ஊதியமும், கிராக்கிப்படியும் கொடுக்கப்பட்டு வருகிறது:—

முதல் தரம்

| | ஊதியம். | கிராக்கிப்படி. | பொத்தம். |
|---|---|---|---|
| களப்பணியாளர் | ரூ. 6.94 | ரூ. 14.47 | ரூ. 21.41 |
| தொழிற்கூடத் தொழிலாளர். | ரூ. 7.69 | ரூ. 14.47 | ரூ. 22.16 |
| பால்வெட்டுத் தொழிலாளி. | ரூ. 7.24 | ரூ. 14.47 | ரூ. 21.71 |

இரண்டாம் தரம்

| ஊதியம் | கிராக்கிப்படி | மொத்தம். |
|---|---|---|
| ரூ. 6.56 | ரூ 14.47 | ரூ. 21.03 |
| ரூ. 7.26 | ரூ. 14.47 | ரூ. 21.73 |

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1986 நவம்பர் 25

தனியார் ரப்பர் தோட்டங்களில் கீழ்க்கண்டவாறு தொழிலாளர்களுக்கு மொத்த ஊதியம் (அகவிலைப்படியும் சேர்த்து) வழங்கப்படுகிறது:—

| | |
|---|---|
| களப் பணியாளர் | .. ரூ. 20.49 |
| தொழிற்கூடத் தொழிலாளர் | .. ரூ. 21.24 |
| பால்வெட்டுத் தொழிலாளர் | .. ரூ. 20.69 |

மேற்கண்ட விபரங்களிலிருந்து, அரசு நிர்ணயம் செய்துள்ள குறுமக் கூலியைவிட கூடுதலாகவும், தனியார் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலியைவிட அதிகமாகவும் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக் கப்படுவதைக் காணலாம்.

2. சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்கள் முன்பாக முன்னாள் அரசு ரப்பர் தோட்ட நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களின் சார்பில் கலந்து கொண்ட தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும், 4-12-1979—ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, மேற்கண்ட ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1, ஆகஸ்ட் 1, டிசம்பர் 1 ஆகிய தேதிகளிலிருந்து கிராக்கிப்படி மாற்றம் செய்து தர வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை 1939-ம் ஆண்டை அடிப்படை ஆண்டாகவும், அவ்வாண்டின் வாழ்க்கைச் செலவு புள்ளி 100 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் ஒவ்வொரு ஐந்து புள்ளிகளுக்கும் பைசா மூன்று வீதம் கணக்கிட்டு கிராக்கிப்படியை மாற்றியமைக்க வேண்டும். இம்முறையில் கணக்கிட்டு 1-8-1985 வரை கொடுக்கப்பட வேண்டிய கிராக்கிப்படியை அரசு ரப்பர் கழகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்டு வருகிறது. மேற்கூறிய ஒப்பந்தத்தின் மூலம், இம் மாநிலம் முழுவதிலுமுள்ள தனியார் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும்வி.. கூடுதலாக அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுவது மிகையாகாது. 1-12—85, 1—4—1986 மற்றும் 1—8—1986 தேதி களில் மாற்றியமைக்கப்பட வேண்டிய கிராக்கிப்படி நிதிநிலை நெருக்கடியின் காரணமாக இன்னும் கொடுக்கப்படவில்லை.

3. மேற்கண்ட, தொழிலாளர் துறை அரசு ஆணையில் கூடுதல் விலைவாசிப்புள்ளி ஒவ்வொரு ஐந்து புள்ளிகளுக்கும் 1.6 பைசாதான் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசு ரப்பர் கழக தோட்டத் தொழிலாளர் ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுக்கப்பட வேண்டியதோ கூடுதல் ஒவ்வொரு ஐந்து புள்ளிகளுக்கும் மூன்று பைசா.



1986 நவம்பர் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அரசு தொழிலாளர் துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட குறுமக்கூலியைவிட, அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு கூடுதலாக ஊதியமும் கிராக்கிப்படியும் வழங்கி வருவதால், மேலும் கூடுதலாக கொடுக்கப்பட வேண்டிய மூன்று தவணை கிராக்கிப் படியை நிதிநிலை நெருக்கடி காரணத்தால் கொடுக்க இயலாமையாலும், இதற்கு காரணமான ஒப்பந்தத்தை மாற்றியமைக்க தொழில் தகராறு சட்டம் பிரிவு 19-ன்படி கழகத்தின் சார்பில் 1—2—1986ல் நாகர்கோவில் உதவி ஆணையாளர், தொழிலாளர் துறை அவர்களுக்கு கோரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இது பற்றிய சமரச பேச்சு வார்த்தை கடைசியாக 8—10—1986 அன்று தொழிலாளர் துறையின் உதவி ஆணையாளர் நாகர்கோவில் முன் நடைபெற்றது. ஆனால் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இன்னமும் நிலுவையில் உள்ளது.

4. வழங்கப்பட வேண்டிய மூன்று தவணை கிராக்கிப்படிக்கும் தேவையான நிதிச் செலவீடு சுமார் ரூ. 4.60 இலட்சம் ஆகும். இது தவிர ஒவ்வொரு ஆண்டும் ஆகக்கூடிய தொடர் செலவிலும் ரூ. 1.5 இலட்சம் ஆகும். இயற்கை ரப்பருக்கு தற்போது மார்க்கெட்டில் கிராக்கி இல்லாததால், கழகத்தில் உள்ள ரப்பரை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு ரப்பர் கழகத்தின் தற்போதைய பொருளாதார நிலை, இப்பெரும் தொகையை செலவு செய்ய இடம் தரவில்லை. இந் நிலையிலும் மிகுந்த சிரமங்களுக்கிடையே இவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் தொழிலாளர்களுக்கு 1985-66 ஆண்டுக்கான உரிய குறைந்தபட்ச போனஸ் 8.33% கொடுக்கப்பட்டுள்ளது.

5. ஏற்கனவே, செய்துள்ள ஒப்பந்தத்திற்குப் பதிலாக வேறு ஒரு ஒப்பந்தம் ஏற்படும வரை முந்திய ஒப்பந்தத்திற்கு மதிப் பளிக்க வேண்டியுள்ளதால், அதன்படி கொடுக்கப்பட வேண்டிய கிராக்கிப்படி தவணைகளை இந்நிறுவனத்தின் நிதி நிலைமை சீரடைந்தவுடன், தொழிலாளர்களுக்கு தவணை முறையில் வழங்க அரசு ரப்பர் கழகம் முடிவு செய்துள்ளது.

(அஅ) இந்திரா காட்டன் மில்ஸ் தொழிலாளர் பிரச்சினை.

மாண்புமிகு பேரவை தலைவர்: திருவாளர்கள் ம. ஆபிரகாம், வி.பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்,

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1986 நவம்பர் 25

அறிக்கை.

சென்னை—44, குரோம்பேட்டையிலுள்ள இந்திரா காட்டன் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆலை தொழிலாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு ஊதியம், போனஸ், பிழைப்பூதியம் ஆகியவை வழங்கவில்லை என்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது இந்திரா பஞ்சாலை அண்ணா பணியாளர் சங்கம் தெரிவித்தது.

எனவே, தொழிலாளர் ஆணையரின் 11–11–86 மற்றும் 12–11–86 நாளைய கடிதங்கள் மூலம் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய மேற்குறிப்பிட்ட தொகைகளை வழங்குமாறு நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் சட்டப்படி சேரவேண்டிய ஈட்டிய விடுப்பு சம்பளம், பிழைப்பு ஊதியம் ஆகிய தொகைகளை நிர்வாகம் வழங்கவில்லை எனில் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் முன்பு மனு செய்து நிவாரணம் காணலாம், போனஸ் தொகை பற்றி முறையான தொழிற்தகராறு எழுப்பி நிவாரணம் காண வழி உள்ளது.

இந்திராகாட்டன் மில்ஸ் நிறுவனத்தில் 23–9–86 அன்று இணை ஆணையர் (சமரசம்) முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தை அடுத்து ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் குறித்து தொழிலாளர் தனித்துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தை நிலுவையில் உள்ளது தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமாக கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுப்பதற்கும் வேலை மறுக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் தனித்துணை ஆணையர் நிர்வாகத்திற்கு ஏற்கனவே ஆலோசனை கூறியுள்ளார். இதன் அடிப்படையில் 24–11–86 அன்று நிர்வாகத்தினருடன் நடைபெற உள்ள பேச்சுவார்த்தையில் இரு தரப்பினருக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்படுத்தி சகஜநிலை ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

தொழிலாளர்களின் உள்ளிருப்பு போராட்டம் பற்றி தகவல் ஏதும் தொழிலாளர் துறைக்கு தெரிவிக்கப்படவில்லை.

இந்த ஆலையின் பிரச்சனை தொழிலாளர் துறையால் கவனிக்கப்பட்டு வருகிறது.

**(ஆஆ) மந்தைவெளி, பட்டினப்பாக்கம் பகுதிகளில் திறந்தவெளி சாக்கடை அமைப்பதன் அவசியம்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பா. வளர்மதி ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.



1986 நவம்பர் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

மந்தைவெளி பேருந்து நிலையத்திலிருந்து பட்டினப்பாக்கம் செல்லும் வழியிலுள்ள இராமகிருஷ்ணா மடம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் தெற்கு ஓடைக்கரைச் சாலையில், தண்ணீர் தேங்குவதற்குக் காரணம் ஓசியாவிக் குப்பைத் திடலில் உள்ள பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான நிலத்தின் வழியாக தண்ணீர் வடிந்து செல்வதற்கு வசதியாக வாய்க்கால் வெட்டப் படாமல் இருப்பதாகும். இதற்காகச் சென்னை மாநகராட்சி சென்ற ஒரு வருட காலமாகப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் அனுமதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. சென்னை மாநகராட்சி ரூ. 1.30 இலட்சம் செலவில் தெற்கு ஓடைக் கரைச் சாலையில் மழைநீர் வடிகால்களை ஏற்கனவே வெட்டியுள்ளது. இது போக 4 அடி அகலமும், 4 அடி உயரமும் உடைய நான்கு தரை பாலங்கள் இந்த சாலையில் குறுக்காக ரூ 1.15 இலட்சம் செலவில் சட்டப்பட்டுள்ளன. இந்த சிறு பாலங்கள், ஓசியானிக் குப்பைத் திடலில், சாலையின் இரு மருங்கிலும் உள்ள மழைநீர் வடிகால்களை இணைக்கின்றன. பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான இடத்திற்கப்பால் அடையாறு உப்பங்கழியுடன் சென்று சேரும் இயற்கையான உப்பங்கழி வாய்க்கால் ஒன்று உள்ளது. சாலையின் ஓரத்தில் உள்ள மழைநீர் வடிகால்களை இந்த உப்பங்கழி வாய்க்காலுடன் சேர்ப்பதற்கு இடையிலுள்ள பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான பூமியில், மழைநீர் வடிகால்களை சென்னை மாநகராட்சி அமைப்பதற்கு அக்கழகம் 19-11-86 அன்று கூட்டாய்விற்குப் பின்பு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, தண்ணீர் எளிதில் வடிந்து செல்வதற்கு ஏற்ற வகையில், சாலையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்களிலிருந்து அடையாறு உப்பங்கழிவரை பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பூமியில், சென்னை மாநகராட்சி வடிகால்களை விரைவில் அமைக்கும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**(இஇ) கோவை மாவட்டத்தில் சில எஞ்சினியரிங் மற்றும் பனியன் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்காதது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட பொறியியல் மற்றும் பனியன் தொழிற்சாலைகளில் போனஸ் பிரச்சினை குறித்து தற்பொழுது நடைபெற்று வரும் வேலை நிறுத்தம் பற்றிய குறிப்புகள் கீழ்வருமாறு :

**கோவை லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் லிமிடெட் :**

கோவை, பெரியநாய்க்கன்பாளையத்தில் உள்ள லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் யூனிட்-1 என்னும் நிறுவனத்தில் பணிபுரியும் சுமார் 3,134 தொழிலாளர்கள் 1985–86 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சினையில் 27-10-1986 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிறுவனத்தில் ஐ.என்.டி.யு.சி., டி.என்.டி யு.சி., தொ.மு.ச.பே., எ.டி.பி., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி.: மற்றும் எச்.எம்.எஸ். லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்கள் இயங்குகின்றன.

இந்த தொழிற்தகராறில் கோவை, தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப் பட்டன. இந்தப் பேச்சுவார்த்தையின் ஆரம்பக்கட்டத்தில் தொழிற்சங்கங்களின் தரப்பில் 30% போனசும் ரூ. 200/– சருலைணத் தொகையும் கேட்கப்பட்டது. நிர்வாகத் தரப்பில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அடிப்படையில் ஒரு நீண்ட கால ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. கடைசியாக நடந்த பேச்சு வார்த்தைகளின் போது தொழிற்சங்கங்களின் தரப்பில் 30% போனஸ் அளிக்கப் பட வேண்டுமென்று கோரப்பட்டது. நிர்வாகத் தரப்பில் 13.25%க்கு மேல் அளிக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் கோவை, தொழிலாளர் துறை இணை ஆணையரால் ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் பற்றிய அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. வேலை நிறுத்தம் அமைதி யாக தொடர்ந்து நடைபெறுகிறது.

**சுப்பையா பவுண்டரி, கோவை :**

கோவை, சுப்பையா பவுண்டரி என்ற நிறுவனத்தில் சுமார் 120 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். 1985-86 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சனையை முன்வைத்து 28-10-1986 முதல் அனைத்து தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். தொழிலாளர்கள் தேசிய இன்ஜினியரிங் தொழி லாளர் சங்கம் மற்றும் கோவை ஜில்லா இன்ஜினியரிங் மற்றும் மெக்கானிக்கல் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற் சங்கங் களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். இப்பிரச்சனையில்



கோவை, 3-வது தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) தலையிட்டு பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார். பேச்சு வார்த்தைகளின் மூலம் ஒரு சுமூக முடிவு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது வேலை நிறுத்தம் அமைதி யாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**புளூ மவுண்ட் செராமிக்ஸ், கோவை :**

கோவையிலுள்ள புளூ மவுண்ட் செராமிக்ஸ் என்ற நிறுவனத் தில் சுமார் 130 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். கோவை மாவட்ட பொறியியல் பொதுத் தொழிலாளர் சங்கம் என்ற தொழிற் சங்கத்தில் தொழிலாளர்கள் பிரதிநிதித்துவம் செய்யப் படுகின்றனர். 1985–86 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சினையை முன்வைத்து 27-10-1986 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இப்பிரச்சினையில் கோவை 3-வது தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) முன்பு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது. பேச்சு வார்த்தை களின் மூலம் ஒரு சுமூக தீர்வு காண தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது வேலை நிறுத்தம் தொடர்ந்து அமைதியாக நடைபெறுகிறது.

**பனியன் தொழிலாளர்களின் வேலை நிறுத்த பிரச்சினை :**

திருப்பூரிலுள்ள பனியன் தொழிலாளர்களுக்கான 1985-86 ஆம் ஆண்டு போனஸ் பிரச்சினை இரு தரப்பினருக்குமிடையில் நிறுவன மட்டத்தில் (Unit-wise) நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டுவிட்டது. ஆனால் கிரிஸ்டல் குரூப் நிறுவனங்களைச் சார்ந்த கீழ்க்கண்ட நான்கு நிறுவனங்களில் மட்டும் போனஸ் பிரச்சினையில் ஒரு உடன்பாடு ஏற்படாததால் அந்நிறுவனங்களைச் சார்ந்த சுமார் 493 தொழிலாளர்கள் 27-10-1986 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(1) ஸ்ரீ பிரகாஷ் அண்டு கம்பெனி;
(2) சத்தியப்பிரியா அண்டு கம்பெனி;
(3) கிரிஸ்டல் கார்மெண்ட்ஸ்;
(4) கிரிஸ்டல் நிட்டர்ஸ்.

இத்தொழிலாளர்கள் பனியன் மற்றும் பொதுத்தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு.), பனியன் பாக்டரி லேபர் யூனியன் (ஏ.ஐ.டி.யு.சி.), பனியன் அண்ணா தொழிலாளர் சங்கம் (அ.தொ ச.பே.), பனியன் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தொ.மு.ச.பே.), ஆகிய தொழிற்சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். இப்பிரச்சனையில் கோவை, தொழி லாளர் துறை துணை ஆணையர் பேச்சுவார்த்தைகள் மேற் கொண்டுள்ளார். பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒரு சுமூக தீர்வு காண தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வேலை நிறுத்தம் நீடிக்கிறது. நிலைமை அமைதியாக உள்ளது.

128-296—20

(ஈஈ) சென்னையில் கொசு ஒழிப்பு நடடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1972-ம் ஆண்டு முதல் நகர்ப்புற மலேரியா தடுப்புத் திட்டம் சென்னை மாநகரில் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. இந்த வியாதி சென்னை மண்ணடி, முத்தியால்பேட்டை, வண்ணாரப் பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, மைலாப்பூர் மற்றும் திருவல்லிக் கேணி ஆகிய பகுதிகளில் பரவலாகக் காணப்படுகிறது. குடிசைப் பகுதிகள் உள்ள பகுதிகளில் இவ்வியாதி அதிகம் காணப்படுகிறது. இவ்வியாதி, கிணறுகள் மேல் நிலைத் தொட்டி ஆகியவற்றில் உள்ள தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலம் பரவுகிறது.

இந்த வியாதியைத் தடுப்பதில் ஏற்பட்டுள்ள தடைகள் பின் வருமாறு:—

மலேரியா தடுப்பு:

சென்னை மாநகர எல்லைக்குள் 77,000 கிணறுகளும், 51,000 தரைமட்ட தண்ணீர்த் தொட்டிகளும், 42,000 மேல் நிலைத் தொட்டிகளும், தண்ணீரைத் தேக்கி வைக்கப் பயன்படுத்தப் படுகின்றன. அந்தத் தேங்கும் தண்ணீரிலிருந்துதான் மலேரியாவைப் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகி இவ்வியாதியை தோற்றுவிக்கிறது. இந்தத் தண்ணீர்த் தேக்கங்கள் தனியார்களுடைய வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தப்படுவதால், கொசு உற்பத்தியை இந்தத் தண்ணீர் தேக்கங்களில் கட்டுப்படுத்துவது கடினமாக உள்ளது. தனியார் வீடுகளில் உள்ள கிணறுகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகள் ஆகியவைகளை கொசு உற்பத்திக்கு இடமளிக்கா வகையில் மூடுவதற்கு பொதுச் சுகாதாரம் மற்றும் மாநகராட்சி சட்டத்தின் கீழ் அறிவிப்புகள் அனுப்புவதுடன் இதனை வலியுறுத்தும் பொருட்டு இச்சட்டங்களிலுள்ள சரத்துக்களை தீவிர முறையில் செயலாற்றும்படியும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இந்தக் கிணறுகளை மூடுவதற்கு எடுத்த நடவடிக்கை, கிணறுகளின் சொந்தக்காரர்களின் எதிர்ப்பால் நிறைவேற்றப்படவில்லை. மலேரியா நோயால் பாதிக்கப் படும் மத்திய தரக் குடும்பத்தினர் தனியார் மருந்தகங்களில் சிகிச்சை பெறுகிறார்கள். எவ்வளவோ வேண்டுகோள் விடுத்தும், அவர்கள் இவ்வியாதி பற்றி அப்பகுதி சுகாதார அலுவலர்களுக்கு தெரிவிப்பது இல்லை. இதனால் இவ்வியாதியைக் குறித்து தக்க த ப்பு நடவடிக்கை எடுக்கத் தடங்கலாக உள்ளது. எனினும் டு ரியா மற்றும் கொசுக் கடியினால் பாதிக்கப்படுபவர்கள் மலே ார் மருத்துவர்கள்/மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் பொழுதே அவர்களைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன்



பாதிக்கப்பட்டவர்களின் இரத்தம் தெரிவிக்க வேண்டுமென்றும், அடங்கிய பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்றும் மருத்துவர்களுக்கும்/ சுற்றறிக்கை ஒன்றை எல்லா பதிவு பெற்ற அறிவுரை மருத்துவ மனைகளுக்கும் அனுப்பிவைக்கும்படி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு சிகிச்சை அளிக்கப்படாததாலும், இவ்வியாதி சமூகத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது. கொத்தவால் சாவடி, யானைக்கவுனி, பேசின் பாலம் ஆகிய பகுதிகளில் உள்ள நடைபாதை வாசிகளுக்கு தொடர்ந்தாற்போல் தேவைப்பட்ட மூன்று நாட்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவது இல்லை. ஆகையால், நடைபாதை வாழ்வோர் மற்றும் லாரி ஓட்டுநர்கள் போன்றவர்களுக்கு அவர்கள் வீடு திரும்பும் நேரம் அல்லது இரவு நேரங்களில் சென்று தீவிரமான முறையில் சிகிச்சை அளிக்கப்படுவதற்கு மாநகராட்சி அலுவலர் களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பல இடையூறுகள் இருந்த போதிலும், சென்னை மாநக ராட்சியால் மலேரியா தடுப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் இவ்வியாதி நடப்பு ஆண்டில் குறைந்துள்ளது. 1985-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, நடப்பு 86-ம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் இவ்வியாதியின் தாக்குதல் 30 சதவீத அள வுக்கு குறைந்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு. | மலேரியா நோயைக் கண்டு பிடிக்க இரத்தம் எடுக்கப் பட்ட நபர்களின் எண்ணிக்கை. | மலேரியா நோய் தாக்குதலுக்குள்ளானவர்கள். |
|---|---|---|
| 1983 | 4.23 இலட்சம் | 44,817 |
| 1984 | 3.92 இலட்சம் | 48,523 |
| 1985 | 4.90 இலட்சம் | 51,376 |
| 1985 அக்டோபர் வரை) | 4.16 இலட்சம் | 44,519 |
| 1986 (அக்டோபர் வரை) | 4.25 இலட்சம் | 31,427 |

கடந்த எட்டு ஆண்டுகளில், தற்போது மலேரியா நோய் பரவுவது குறைந்துள்ளது ஒரு நல்ல ஆரம்பமாகும். வரும் மாதங்களில், மேலும் இவ்வியாதியை தடுக்க முயற்சி மேற் கொள்ளப்படும்.

கொசுக்களை ஒழித்தல்:

கொசுக்கள் உற்பத்தியைத் தடுக்க பல உத்திகளைக் கையாள வேண்டியுள்ளது. சென்னை நகரில் பக்கிங்காம் கால்வாய், அடையாறு, கூவம் ஆறு, ஓட்டேரி நல்லா ஓடை மற்றும் மாம்பலம் ஓடை ஆகிய நீரோட்டங்களில் கொசு உற்பத்தியாகிறது. அந்த நீரோட்டங்களில் கொசு உற்பத்தியை 70-லிருந்து 80 சதவீதம் குறைத்து விட்டால், சென்னை நகரில் கொசுத் தொல்லையை சமாளிக்க இயலும். இந்த நீரோட்டங்களில் அதிக அளவு கழிவு நீர் விடப்படுவதால் கொசு உற்பத்தி அதிகமாக உள்ளது.

மழைநீர் போக அமைக்கப்பட்டுள்ள 500 கிலோ மீட்டர் அளவுக்கு மழை நீர் வடிகால்களும், கொசு உற்பத்திக்கு ஏதுவாக உள்ளது. எனவே, கொசு உற்பத்தியைத் தவிர்க்கும் பொருட்டு கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் அடையாறு போன்ற நதிகளில் தண்ணீர் ஓட்டம் சீரான முறையில் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பொதுப் பணித்துறை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மழை காலங்களில் தண்ணீர் தேங்குவதால் கொசு உற்பத்தி அதிகமாக இருக்கும். மக்கள் முழு ஒத்துழைப்பு அளித்தால்தான் கொசுத் தொல்லையை குறைக்க முடியும்.

கொசு ஒழிப்புக்காக, சென்னை மாநகராட்சி கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(1) கொசு கொல்லி மருந்து தெளிக்க தினசரி 220 முதல் 250 தெளிப்பான்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(2) கொசுக்கள் அதிகம் உள்ள பகுதிகளில், காலையிலிருந்து மாலை வரை புகை மூலம் கொசு கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது. இதற்காக ஒரு ஊர்தியில் பொருத்தப்பட்ட இயந்திரம் மூலம் நகரில் மருந்து அடிக்க ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

(3) சென்னை மாநகர், ஒவ்வொரு பகுதியும் ஐந்து வட்டங்கள் (Divisicns) கொண்ட 30 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, கொசு ஒழிப்பு வேலை நடைபெறுகிறது. ஒவ்வொரு வட்டத்திலும் வாரத்திற்கு ஒரு முறை கொசு ஒழிப்பு மருந்து அடிக்கப்படுகிறது. ஒவ்வொரு பகுதியிலும் 30-லிருந்து 40 பணியாளர்கள் இவ்வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்கள் ஒரு சுகாதார ஆய்வாளரின் கீழ் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு பத்து வட்டங்களுக்கும் ஒரு பூச்சி இயல் அலுவலர் இந்த வேலையை மேற்பார்வையிடுகிறார். இவ்வேலையை, மாநகராட்சி பகுதி முழுவதிலும் ஒரு உதவி சுகாதார அலுவலர் மேற்பார்வையிடுகிறார்.

(4) இம்மாதிரி, வாராந்திர மருந்து தெளிப்பு வேலையுடன் மாநகரில் உள்ள முக்கிய நீரோட்டங்களில் ஆகாசத்தாமரை செடிகளை அழிக்கும் பணியும் செய்யப்படுகிறது. ஏனெனில் இச்செடிகள் நீரோட்டத்தைத் தடைசெய்து கொசு உற்பத்தியை அதிகப்படுத்துகிறது.

மலேரியாவைத் தடுக்க ஒரு ஆண்டுக்கு கொசு ஒழிப்புக்காக சென்னை மாநகராட்சியால் சுமார் ரூ. 1.50 கோடி செலவழிக்கப்படுகிறது. சென்னை நகரில் மலேரியா தடுப்பு மற்றும் கொசு ஒழிப்புப் பணிகள், அவ்வப்போது சென்னை மாநகராட்சி அலுவலர்கள், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் பொதுப் பணித்துறை அலுவலர்கள் மற்றும் குடிசை மாற்று



வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய வாரியங்களின் அலுவலர்களுடனும் ஆய்வு நடத்தப்பட்டு, இப்பணிகளை தீவிரப்படுத்துவதற்கு தேவைப்படும் அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

(உஉ) பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டு அரசுத் துறைகளிடம் இருந்து அறிக்கைகள் வராதவற்றை குறித்த ஒரு பட்டியலும் அவையில் வைக்கப்பட்டுள்ளது. இவை மாண்புமிகு உறுப்பினர்கள் உரிய மாண்புமிகு அமைச்சர்களின் கவனத்தை ஈர்த்ததாகக் கொண்டு அவைக் குறிப்பேட்டில் பதியவைக்கப்படும். இவற்றிற்குத் துறைகளிடம் இருந்து அறிக்கைகள் வந்தவுடன் அந்த அறிக்கைகள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்த உரிய உறுப்பினர்களின் தகவலுக்காக அனுப்பிவைக்கப்படும்.

பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் குறித்த விவரப்பட்டியல்.

| வரிசை எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | பொருள். (3) | அமைச்சர். (4) |
|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், கோ. வீரைய்யன், ஜே. ஹேமச்சந்திரன் | சென்னையில் உள்ள தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அலுவலகத்தில் மஸ்தூர் பணியாளர்களாக பணியாற்றும் பணியாளர்களுக்கு கடந்த ஐந்து மாத காலமாக சம்பளம் வழங்கப்படாததால் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் பணியாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்து. | முதல் அமைச்சர் |
| 2 | திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். என். இராமசாமி, என்.எஸ்.வி. சித்தன், கு. சுப்பராயன், பொ. உத்திராபதி, எ.எஸ்.ஏ. ஆறுமுகம் | தமிழ்நாட்டில் இரண்டாம் முறையாக டிரான்சிஸ்டர் வெடிகுண்டுச் சம்பவத்தை தொடர்ந்து பிரபல இசையமைப்பாளர் படுகாயமடைந்துள்ளது குறித்து. | முதல் அமைச்சர் |
| 3 | திருவாளர்கள் கு. சுப்பராயன், பொ. உத்திராபதி | தஞ்சை மாவட்டத்தில் ஆட்சித் தலைவர் உட்பட பல உயர்மட்ட அதிகாரிகள் நியமிக்கப்படாதது குறித்து. | முதல் அமைச்சர் |
| 4 | டாக்டர் தே. குமாரதாஸ் | கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் தோட்ட விவசாயிகளுக்கு நிலவள வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகையின் வட்டியை மற்ற விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்ததுபோல் தள்ளுபடி செய்யாததில் அப்பகுதி விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து. | நிதி அமைச்சர் |



பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் குறித்த விவரப்பட்டியல்—(தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| 5 | திருவாளர்கள் மா. மணிமாறன், பொ. உத்திராபதி, இரா. தாமரைக்கனி, டி.ஆர். வேங்கடரமணன், ஜி. அனந்தகிருஷ்ணா, என்.எஸ்.வி. சித்தன், கே.எஸ் எம். சுப்பிரமணியன் | தமிழகத்தில் கூட்டுறவுக் கடன் தொகை திருப்பிச் செலுத்தாததற்காக ஜப்தியும் வரி வசூல் செய்வதில் கெடுபிடியும் மேற்கொண்டுள்ளதால் தமிழக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து. | நிதி அமைச்சர் |
| 6 | திருவாளர்கள் வி பி. சிந்தன், கோ. வீரைய்யன், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து | 18-11-1986-ஆம் தேதி இரவு கொருக்குபேட்டையில் பாரதி நகரில் தீ விபத்து ஏற்பட்டு 50 வீடுகளுக்கு மேல் எரிந்து முழுவதும் நாசமாகி இரண்டு பேர் உயிரிழந்திருப்பது குறித்து அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து. | நிதி அமைச்சர் |
| 7 | டாக்டர் க. நல்லமுத்து | திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியிலுள்ள வேப்பந்தட்டை ஒன்றியத்தில் அடங்கிய தம்பை கிராமத்தில் 20-11-86 அன்று தீ பிடித்து சுமார் 20 குடிசைகள் பாதிக்கப்பட்டு பெரும் பொருட்கள் சேதமடைந்து மக்கள் மத்தியில் ஏற்படும் கவலை குறித்து. | நிதி அமைச்சர் |

பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் குறித்த விவரப்பட்டியல். (தொடர்ச்சி)

| வரிசை எண். (1) | உறுப்பினர் பெயர்: (2) | பொருள். (3) | அமைச்சர். (4) |
|---|---|---|---|
| 8 | திரு. சா. ஜெயச்சந்திரன் | நெய்வேலி நிலக்கரி சுரங்க நிறுவனத்திலிருந்து ஆதி திராவிட மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த சுமார் 224 தொழில்நுட்பம் அல்லாத பணியாளர் வேலைக்கு ஆட்கள் தேவை என்றும் அதற்கான பட்டியல் உடனடியாக அனுப்ப கோரி கடலூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு கடிதம் மூலம் 7-3-1986 அன்று அனுப்பிய கடிதத்திற்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் உரிய பட்டியலை அனுப்பாத காரணத்தால் ஆதி திராவிட மக்களுக்கு கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து. | உணவு அமைச்சர் |
| 9 | திரு. என். சண்முகம் | காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் அரசின் விதிகளுக்குப் புறம்பாக 2.25 லட்ச ரூபாய்க்கு குழாய் விளக்குகள் வாங்கியுள்ளது குறித்து. | உள்ளாட்சித் துறை அமைச்சர் |
| 10 | திருவாளர்கள் எஸ். இராசாராமன் க. நல்லமுத்து பி. தீர்த்தராமன் | தமிழ் நாட்டிலுள்ள மக்கள் தொகை கணக்குகளை மட்டும் வைத்துக் கொண்டு அர்பன் டவுன் பஞ்சாயத்து என தரம் பிரித்து அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய என். ஆர். இ. பி., ஆர். எல்.ஜி. ஈ.பி., போன்ற மத்திய மாநில அரசுகளின் நிதி ஆதாரங்கள் கிடைக்கப் பெறாத பேரூராட்சிகளின் நிலை குறித்து. | உள்ளாட்சித் துறை அமைச்சர் |



| | | | |
|---|---|---|---|
| 11 | திரு. கு. சுப்பராயன் | பெரியார் மாவட்டம், அந்தியூர், தவிட்டுப் பாளையம் பவர்லூம் தொழிலாளர் போனஸ் பிரச்சினை முடியாததால் தொழிலாளர்களை முதலாளிகளின் ஆட்கள் தாக்கி கலவரத்தில் ஈடுபட்டது குறித்து. | உள்ளாட்சித் துறை அமைச்சர் |
| 12 | திரு. மா. சுந்தரதாஸ் | சென்னை நகரில் துப்புரவு முறை சரிவர நடைபெறாததால், கொள்ளை நோய் பரவுவதற்கு வாய்ப்பு உள்ளது. அந்நோய் வருமுன் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து. | உள்ளாட்சித் துறை அமைச்சர் |
| 13 | திரு. என். சண்முகம் | சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலையில் இரண்டு ஊழியர்கள் உயிரோடு கொளுத்தப் பட்டதால் தொழிலாளர்கள் மத்தியிலும், சுற்று வட்டார மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து. | உள்ளாட்சித் துறை அமைச்சர் |
| 14 | திருவாளர்கள் ஏ. தெய்வநாயகம் என்.எஸ்.வி. சித்தன் ஆர். ரங்கசாமி க. சோலைராசு | மதுரை மீனாட்சி மில், பறவை மில்ஸ், மணப்பாறை மில்லைச் சேர்ந்த 4,000 தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக 12-11-1986 தேதி முதல் வேலை நிறுத்தம் வருவது குறித்து. | உள்ளாட்சித் துறை அமைச்சர் |
| 15 | திருவாளர்கள் வி. பி. சிந்தன் ம. ஆபிரகாம் | சென்னை மீனம்பாக்கம், பென்னி ஆலை, மூடப்பட்டுள்ளதால் 1,500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் நிலை குறித்து. | உள்ளாட்சித் துறை அமைச்சர் |
| 16 | திருவாளர்கள் கே. ரமணி வி. பி. சிந்தன் கோ. வீரைய்யன் எம். செல்லமுத்து | கோவை, சேலம் மாவட்டங்களில் நீண்ட காலமாக மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறக்கக் கோரி தொழிலாளர்களும், தொழிலாளர்களின் தலைவர்களும் போராட்டத்தில் இறங்கியதன் பேரில் அரசு தலையிட்டு பேசி | உள்ளாட்சித் துறை அமைச்சர் |

பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் குறித்த விவரப்பட்டியல்—(தொடர்ச்சி)

| வரிசை எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | பொருள். (3) | அமைச்சர் (4) |
|---|---|---|---|
| | ஜே. ஹேமச்சந்திரன்<br>கு. சுப்பராயன்<br>பொ. உத்திராபதி<br>கே. பி. நாச்சிமுத்து | எடுக்கப்பட்டதின் முடிவுகளின்படி இன்னும் அவ்வாலைகள் திறக்கப்படாதது குறித்து. | |
| 17 | திரு. க. பாரமலை | மானாமதுரை தொகுதி, இராஜகம்பீரம் என்ற கிராமத்திற்கு அருகில் வைகை ஆற்றில் பல ஆழ்கிணறுகள் தோண்டி அதிக விசை சக்தி கொண்ட மோட்டார் மூலம் நிலத்தடி நீரை வெளியேற்றி கமுதி, முதுகுளத்தூர், கடலாடி, சாயல்குடி ஆகிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே தண்ணீர் பற்றாக்குறையினால் விவசாயம் பாதிக்கப்பட்டு அல்லல் படுகிற விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து. | தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் |
| 18 | திரு. கே. உச்சி | நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவலா, தோட்டக்கலை துறையைச் சேர்ந்த பண்ணையில் கடந்த 15-ந் தேதி முதல் போராட்டம் நடந்து வருவதால் பாதிக்கப்பட்ட 310 தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்து. | தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் |



| | | | |
|---|---|---|---|
| 19 | டாக்டர் ந. மாசிலாமணி | மதுரை ராஜாஜி மருத்துவமனையில் உள்ள 'ஸ்கேனர்' கருவி கடந்த சில மாதங்களாக இயங்காததால் நோயாளிகளிடத்தே ஏற்பட்டுள்ள கவலை குறித்து. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| 20 | திரு. கே. உச்சி | நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள அரசினர் மருத்துவமனையில் போதுமான படுக்கை வசதிகள் இல்லாததால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| 21 | டாக்டர் ந. மாசிலாமணி<br>டாக்டர் க. நல்லமுத்து | ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் 14-10-1986 அன்று ஒரு பெண்மணிக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை (லேப்ரேஸ்கோபி) செய்யும் போது அறுவை அரங்கிலேயே இறந்து விட்டதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| 22 | திருவாளர்கள்<br>கு. ரமணி<br>வி. பி. சிந்தன்<br>கோ. வீரைய்யன்<br>ஜே. ஹேமச்சந்திரன் | தமிழக அரசின் கீழ் பணியாற்றக்கூடிய உதவி மருத்துவர்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளுக்காக அடுத்த மாதம் முதல் போராட்டம் நடத்தவிருப்பதாக அறிவித்திருப்பதால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்து. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| 23 | திருவாளர்கள்<br>டி. ஆர். வேங்கடரமணன்<br>அ. ரகுமான்கான் | சென்னை அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள இருதயநோய் அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் நோயாளிகளின் அறையில் துர்வாயு புகுந்து கிருமிகள் பரவி நோயாளிகள் ஆறு பேர் இறந்தது குறித்து. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |

பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் குறித்த விவரப்பட்டியல்—(தொடர்ச்சி)

| வரிசை எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | பொருள். (3) | அமைச்சர். (4 |
|---|---|---|---|
| 24 | திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம் ஏ. கே. ஏ. அப்துல் சமத் வி. எஸ். டி. சம்சுல் ஆலம் | விருதுநகர் தொகுதி ஆவுடையாபுரத்தில் குடி தண்ணீரில் உள்ள நச்சுத்தன்மையால் பெரியோர்கள், குழந்தைகள் வாதநோய் மற்றும் நீர்கட்டு நோய் உண்டாகி இருப்பது குறித்து. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| 25 | திருவாளர்கள் சைதை சா. துரைசாமி என். எஸ். வி. சித்தன் | தனியார் தயாரிக்கும் தரம் குறைந்த குங்குமத்தை நெற்றியில் இடுவதால் ஏற்படும் தழும்பு போன்றவற்றால் தாய்மார்கள் படும் இன்னல்கள் குறித்து. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| 26 | திருவாளர்கள் கோ. வீரைய்யன் ஜே. ஹேமச்சந்திரன் எம். செல்லமுத்து | நாகை வட்டம், ஆழியூர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களுக்கு இரண்டு மாதகாலமாக சம்பளம் வழங்காமல் இருப்பது குறித்து. | கல்வி மற்றும் சட்ட அமைச்சர் |
| 27 | திரு. வை. பாலச்சந்திரன் | கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு மேல் நிலைப்பள்ளிகளில் டி.டி.சி பாடப்பிரிவை ஏற்று நடத்த போதிய ஆசிரியர்களும், இடவசதியும் இல்லை என்று தலைமையாசிரியர்கள் மறுத்துவிட்டபடியால் தனியார் பள்ளிக்கூடத்தில்மட்டுமே இருக்கும் அவ்வசதி அரசுப் பள்ளிகளில் இன்மையால் மாணவர்கள் அடைந்துள்ள கவலை குறித்து. | கல்வி மற்றும் சட்ட அமைச்சர் |
| 28 | திரு. கே. பி. கே. சேகர் | செங்கற்பட்டு மாவட்டம். திருவொற்றியூர்–பொன்னேரி-பஞ்சட்டி நெடுஞ்சாலையில் வெக்காடு என்னும் இடத்தில் பாலம் கட்டும் பணி துவக்கப்பட்டு அமைச்சர் பாதியிலேயே இப்பணி முடிக்கப்படாமல் விட்டுவிட்டதால் பாதிக்கப்படும் இப்பகுதி மக்களின் கவலை குறித்து. | போக்குவரத்துத் துறை அமைச்சர் |
| 29 | திருவாளர்கள் க. நல்லமுத்து சா. ஜெயசந்திரன் கு. தமிழரசன் எஸ். இராசாராமன் பி. தீர்த்தராமன் | தமிழ்நாட்டில், ஆதிதிராவிட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் பேருந்து வழிதடங்கள், ஸ்டேஜ் காரேஜ், பப்ளிக் காரியர், தேசிய பர்மிட்டுகள் ஆகியவைகளில் 18 சதவிகிதம் பர்மிட்டுகள் வழங்க வேண்டும் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தும், தமிழக அரசு போக்குவரத்துத் துறை அதிகாரிகள் அப்படி வழங்க மறுப்பதால் ஆதிதிராவிட மக்கள் மலைஜாதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்து. | போக்குவரத்துத் துறை அமைச்சர் |
| 30 | திருவாளர்கள் கு. சுப்பராயன் பொ. உத்திராபதி | சென்னை, அண்ணாசாலையில் பல்லவன் பஸ் ஒன்று தறிகெட்டு ஓடியதால் ஏற்பட்ட விபத்தால் ஒருவர் மரணமடைந்து பல வாகனங்கள் சேதம் அடைந்தது குறித்து. | போக்குவரத்துத் துறை அமைச்சர் |
| 31 | திரு. பூ. மு. நரசிம்மன் | செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் உள்ள கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை கொள்முதல் செய்யாமல் இருப்பது குறித்து. | வீட்டுவசதித் துறை அமைச்சர் |
| 32 | திரு. மா. சுந்தரதாஸ் | சென்னைக்கு அருகே அம்பத்தூரைச் சேர்ந்த வெங்கடபுரத்தில் உள்ள சமூகப் பணியாளர் பாதுகாப்பு அளிக்குமாறு காவலரைக் கேட்டுக் | சத்துணவு மற்றும் சமூக நலத் |

பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் குறித்த விவரப்பட்டியல்—(தொடர்ச்சி)

| வரிசை எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | பொருள். (3) | அமைச்சர். (4) |
|---|---|---|---|
| | | கொண்டதும், காவலர்கள் பாதுகாப்பு அளிக்க மறுத்தது குறித்தும், பொது வாழ்வில் முக்கியமான மனிதர்களுக்கு காவல் பாதுகாப்பு அளிக்க வேண்டியதுபற்றி பரிசீலிப்பதன் அவசியம் குறித்து. | துறை அமைச்சர் |
| 33 | திரு. டி. ஆர். வேங்கடரமணன் | செங்கோட்டை வட்டம், மேற்கு மலையில் குறிப்பாக ஜெமினி எஸ்டேட் பகுதியில் வரை முறை இல்லாமல் மரங்கள் வெட்டப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து. | சுற்றுலா ஆயத் தீர்வை மற்றும் மின் துறை அமைச்சர் |
| 34 | திரு. மா. சுந்தர தாஸ் | சென்னை மாநகரில் கஞ்சா அடைக்கப்பட்ட தனிவகை பீடா விற்பனை தடையின்றி நடை பெறுவது குறித்தும், இளைஞர்களும, பெண் களும் இதனைப் பயன்படுத்துவதை திறம்பட தடுப்பதன் அவசியம் குறித்தும். | சுற்றுலா ஆயத் தீர்வை மற்றும் மின் துறை அமைச்சர் |
| 35 | திருவாளர்கள் கு. சுப்பராயன் பொ. உத்திராபதி | காவிரி பிரச்சினை குறித்து கர்நாடக அரசோடு சுமுக தீர்வு காண்பதில் தொடர்ந்து ஏற்பட்டு வருகிற காலதாமதம் குறித்து. | பொதுப்பணித் துறை அமைச்சர் |
| 36 | திருமதி பா. வளர்மதி | அடையாற்றில் திரு. வி. க. பாலத்திலிருந்து மைலாப்பூர்வரை இரு கரையிலும தடுப்புச் சுவர் கட்டாததால் அங்கு குடியிருக்கும் குடிசைவாழ் மக்களுக்கு வெள்ளத்தால் ஏற்படும் அபாயம் குறித்து. | பொதுப் பணித் துறை அமைச்சர் |



| | | | |
|---|---|---|---|
| 37 | டாக்டர் தே. குமாரதாஸ் | கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இனையம் புத்தன்துறை, இராமன்துறை, மிடாலம், மேல்மிடாலம், முள்ளூர் துறை, குறும்பனை ஆகிய மீனவக் கிராமங்களில் கடல் அரிப்பின் காரணமாக மீனவர்கள் தொழில் செய்ய முடியாததினால் அப்பகுதி மீனவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பஞ்சம் குறித்து | பொதுப் பணித் துறை அமைச்சர் |
| 38 | திரு. வை. பாலச் சந்திரன் | கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை கிராமத் திற்குட்பட்ட மாங்கோடு மதகுளத்திலிருந்து தனியார் நிரந்தரமாக பம்ப் செட் அமைத்துத் தண்ணீர் இறைப்பதால் அக்குளத்தை பாசனத் தண்ணீருக்கு நம்பியிருக்கும் விவசாயிகள் பாசனத்திற்குத் தண்ணீரின்றி அடைந்துள்ள அளப்பறிய கவலை குறித்து. | பொதுப் பணித் துறை அமைச்சர் |
| 39 | திருவாளர்கள் ஏ. எஸ். ரவீந்திரன் இ. கிருஷ்ணமூர்த்தி வை. பாலச்சந்திரன் | வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் அமைந்துள்ள அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோவிலுக்கு 1-12-1986 ஆம் தேதி நடைபெறவிருக்கும் கார்த்திகை தீபத் திருவிழாவிற்கு வரவிருக்கும் பக்தர்களிடமிருந்து நபர் ஒன்றுக்கு கட்டணமாக ஒரு தொகை வசூலிக்கப்படவேண்டும் என்று அதிகாரிகள் மேற்கொண்டுள்ள முடிவினால் பக்தர்கள் கொண்டுள்ள கவலை குறித்து. | உள்ளாட்சித் துறை அமைச்சர் |

[1986 நவம்பர் 25

## 5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பில் நான் கீழ்க்கண்ட அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்:

''இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1972–73 ஆம் ஆண்டிற்கான சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதும் தமிழக அரசின் கணக்குகளின் மீதும் பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த நான்காவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீதும் மற்றும் இருபதாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) அளித்துள்ள பரிந்துரைகளின் மீதும் அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை. (கூச்சல்-குழப்பம்).

(ஆ) மதிப்பீட்டுக் குழு:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. குப்புசாமி, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர், குழுவின் அறிக்கையினை பேரவைக்கு அளிப்பார்.

திரு. கே. குப்புசாமி : தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்:

''மாவட்ட நிர்வாகம் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் ஐந்தாவது அறிக்கை எட்டாவது சட்ட மன்றப் பேரவை.'' (கூச்சல்–குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : $1\frac{1}{2}$ மணி வரையில் இப்படியே அவையை நடத்தப் போகிறேன். டி. வி. நிலையத்தாரை வரச் சொல்கிறேன். Let the T. V. people come and take photo by getting a special permission. மக்கள் இதையெல்லாம் பார்க்க வேண்டும். (கூச்சல்–குழப்பம்).

(இ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கையை அக்குழுவின் தலைவர் (திரு. பொன். முத்துராமலிங்கம் அவைக்கு அளிப்பார்.

(திரு பொன். முத்துராமலிங்கம் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்க முன்வராத காரணத்தினால் அறிக்கை பேரவையில் வைக்கப்பட்டதாக கருதப்பெற்றது.)



1986 நவம்பர் 25]

## 6. அறிவிப்பு.

சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவு, 1986. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1986 ஆம் ஆண்டு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 7. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986–ஆம் ஆண்டு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 73/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 36 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 73/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

* 18-11-86 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[1986 நவம்பர் 25

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 75/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 75/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன் வடிவு 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 76/1986) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

---

* 20–11–86 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1986 நவம்பர் 25]

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 76/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது. (கூச்சல்—குழப்பம்.)

Mr. SPEAKER: Don't Speak to me about law. (கூச்சல் குழப்பம்.)

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 77/1986) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 77/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

---

* 20–11–86 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1986 நவம்பர் 25

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 78/1986) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 78/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது. (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் செய்தது தான். (கூச்சல்—குழப்பம்)

* 20-11-86 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1986 நவம்பர் 25]

(முற்பகல் 11-20)

(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 83/1986) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 25 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 83/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

* 24-11-86 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 84/1986) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 84/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

8. அரசினர் தீர்மானம்.

பேரவையை ஒத்தி வைக்கப் பெறுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சார்பாக தீர்மானம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, a drastic situation requires a drastic remedy என்பார்கள். முள்ளை முள்ளால் எடுத்ததற்காக உங்களை பாராட்டி, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

பேர்வை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

* 24-11-86 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் முற்பகல் 11.22 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

169. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு-1) துறையின் 4-9-1986 ஆம் நாளிட்ட 1691 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1986) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

170. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு சாராயக் கடைகள் (ஏலத்தில் தீர்வு செய்தல்) விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 4-6-1986 ஆம் நாளிட்ட 666 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு சட்டம் 10/1986) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

171. தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை. (தமிழ்—ஆங்கிலம்) 1955 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1955) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

172. தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

42. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1972-73 ஆம் ஆண்டிற்கான சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதும் தமிழக அரசின் கணக்குகளின் மீதும் பொதுக் கணக்குக் குழு (1977-78) அளித்த நான்காவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீதும் மற்றும் இருபதாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) அளித்துள்ள பரிந்துரைகளின் மீதும் அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை.

43. மாவட்ட நிர்வாகம் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (எட்டாவது சட்டமன்றப் பேரவை).

44. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை. (தமிழ்)

45. கீழ்க்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 27–8–1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது).

31–3–1969 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்.

1. திரு. எம். சண்முகயா பாண்டியன்

2. திரு. ச. கோவிந்தசாமி

3. திரு. துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம்

46. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை) (முதலாவது பட்டியல்).



## இணைப்பு I.

(287–ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 15-க்கான விடையைக் காண்க).

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்திலுள்ள பெரிய நடுத்தர தொழிற்சாலைகளின் விவரங்கள்.

| தொடர் எண்ணும் தொழில் பிரிவின் பெயரும், முகவரியும். | முதலீடு. | வேலை வாய்ப்பு. | தயாரிப்புப் பொருள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **தனியார் துறை நிறுவனங்கள்.** | | | |
| 1 கிங் பிளவர் யூனிட் (பிரைவேட்) லிமிடெட், மாத்தூர். | 35.00 | 33 | கோதுமை தயாரிட்டப் பொருள்கள். |
| 2 சிதார் கெமிகல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், நி.அ.பு. எண் 113/2, திருச்சி, மதுரை, முக்கிய சாலை விராலிமலை. | 53.55 | 32 | பொட்டாசியம் குளோரைடு. |
| 3 சதர்ன் ஹைடிரோ கார்பன் லிமிடெட், தொண்டமாநல்லூர் அஞ்சல். | 234.43 | 51 | அசிடிக் அமிலம், அசிடிக்-அன்-ஹைடிரேடு. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4 நேஷனல் ஆக்சிஜன் லிமிடெட், திருச்சி, புதுக்கோட்டை முக்கிய சாலை, மாத்தூர்-622 515. | 86.50 | 34 | தொழில்கள் மருத்துவப் பயன் வகை ஆக்சிஜன் வாயு. |
| 5 சுந்தரம் இன்டஸ்ட்ரீஸ் (கோச் டிவிஷன்), திருச்சி சாலை, விராலிமலை-621 316. | 60.00 | 308 | பேருந்துக்கூடு கட்டுமானம், மோட்டார் வண்டி அடிச்சட்டம். |
| 6 சிம்கோ மீட்டர்ஸ் லிமிடெட், உயர்சக்தி மின்கலத் தொழிற்கூடம் (ஹை-எனர்ஜி பாட்டரி பிளாண்ட்), பாக்குடி சாலை, மாத்தூர். | 52.00 | 48 | உயர்சக்தி மின்கலம். |
| 7 ஃபிஷ்நட் இந்தியா (பிரைவேட்) லிமிடெட், நி.அ.பு. எண் 28414, ஆவூர் சாலை, மாத்தூர் அஞ்சல். | 58.57 | 40 | நைலான் ஃபிஷ்நட். |
| 8 சிதார் வெஸல்ஸ் லிமிடெட், மாத்தூர்-622 515. | 116.09 | 100 | அழுத்தக் கலன்கள், வெப்பமாற்றிகள், கொதிகலன்கள், குழாய் கட்டுமானங்கள். |
| 9 எஸ். ஆர். எப். இன்டஸ்ட்ரீஸ் பைபர், விராலிமலை | 512.37 | 200 | தொழில்வகை பைபர்கள். |
| 10 மூன்கு இன்டியா (பிரைவேட்) லிமிடெட், 89/4, வடுகபட்டி கிராமம், விராலிமலை-621 316. | 124.00 | 36 | அழுத்தக்கலன் வால்வுகள். |
| 11 டப்லின் இந்தியா லிமிடெட், விராலிமலை-621 316. | 83.50 | 38 | டப்லிங் வால்வுகள். |

அரசு நிறுவனங்கள்—இல்லை.



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்திலுள்ள
சிறுதொழில் பிரிவுகளின் விவரங்கள்.

| குறியீடு எண். | தொழில் பிரிவு. | தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை. | வேலை வாய்ப்பு. | முதலீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| | தனியார் துறை நிறுவனங்கள். | | | |
| 20–21 | உணவுப் பொருள்கள் .. .. .. | 53 | 196 | 21.47 |
| 22 | மதுபானம் .. .. .. | 5 | 23 | 1.38 |
| 26 | உள் ஆடைகள், ஆடைகள் .. .. .. | 5 | 40 | 4.18 |
| 27 | மரத் தயாரிப்புப் பொருள்கள் .. .. | 23 | 99 | 6.35 |
| 28 | தாள் தயாரிப்புப் பொருள்கள், அச்சு வேலை .. | 13 | 198 | 23.38 |
| 29 | தோல் தயாரிப்புப் பொருள்கள் .. .. | 1 | 6 | 0.06 |
| 30 | ரப்பர்-பிளாஸ்டிக் தயாரிப்புப் பொருள்கள் .. | 15 | 118 | 18.66 |
| 31 | இரசாயனமும், இரசாயன தயாரிப்புப் பொருள்களும் | 40 | 588 | 28.05 |
| 32 | உலோக வகையல்லாத கனிப்பொருள் தயாரிப்புகள் | 196 | 1,008 | 23.42 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 33 | அடிப்படை உலோகத் தொழிற்சாலை .. .. | 10 | 103 | 26.03 |
| 34 | உலோகத் தயாரிப்பு பொருள்கள் .. .. | 47 | 305 | 44.52 |
| 35 | மின் இயந்திர சாதனங்கள் நீங்கலாக பிறவகைச் சாதனங்கள். | 36 | 292 | 49.67 |
| 36 | மின் இயந்திரமும் சாதனங்களும் .. .. | 2 | 20 | 1.02 |
| 37 | போக்குவரத்துச் சாதனங்களும் பாகங்களும் .. | 1 | 10 | 2.00 |
| 38 | பல்வகை பொருள் தயாரிப்பு தொழிற்சாலைகள் .. | 5 | 17 | 3.76 |

அரசுத்துறை நிறுவனங்கள்—இல்லை.



## இணைப்பு II.

(302-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 32-க்கான விடையைக் காண்க.)

மதுரை மாவட்டத்தில் கிடைக்கும் கனிவளங்களின் விவரங்கள்.

| வரிசை எண்ணும், கனிவளங்களின் பெயர்களும். (1) | கிடைக்கும் இடங்கள். (2) | கனிவளங்களின் இருப்பு. (3) (டன்களில்.) | குறிப்புரை. (4) |
|---|---|---|---|
| 1 சுண்ணாம்புக்கல் .. | மேலூர் வட்டம்— | | |
| | (1) பூவாண்டி .. | 37,000 | இவற்றில் பெரும் பகுதியில் சுரங்கக் குத்தகை வழங்கப்பட்டுள்ளது. |
| | (2) சுண்ணாம்பூர் .. | 11,00,000 | |
| | (3) தட்டாம்பட்டி .. | 12,00,000 | |
| | (4) சிறுகுடி .. | 1,00,000 | |
| | மதுரை மாவட்டம்— | | |
| | எலியார்பட்டி .. | 29,00,000 | இவற்றில் பெரும் பகுதியில் சுரங்கக் குத்தகை வழங்கப்பட்டுள்ளது. |
| | திருமங்கலம் வட்டம்— | | |
| | திருமால் .. | 20,00,000 | ...... |

128—296—24

| வரிசை எண்ணும் கனிவளங்களின் பெயர்களும். (1) | கிடைக்குமிடங்கள். (2) | கனிவளங்களின் இருப்பு. (3) | குறிப்புரை. (4) |
|---|---|---|---|
| | | (டன்களில்) | |
| | உசிலம்பட்டி வட்டம்— உத்தப்பநாயக்கனூர். | 2,00,000 | .... |
| | பெரியகுளம் வட்டம்— போடிநாயக்கனூர் .. | 3,99,47,000 | .... |
| | வேடசந்தூர் வட்டம் (தற்போது அண்ணா மாவட்டம்)— உசிலாம்பட்டி, டோலிபட்டி மற்றும் முத்தம்பள்ளி. | 7,90,000 | இவற்றில் பெரும் பகுதியில் சுரங்கக் குத்தகை வழங்கப்பட்டுள்ளது. |
| 2 கிராபைட் .. | திருமங்கலம் வட்டம்— செட்டிகுளம், உராண்டுரப்பனூர், சோசியர் ஆலங்குளம். பொன்மங்கலம், பொருப்புமேட்டுப்பட்டி. | 17,500 | தமிழ்நாடு கனிவள நிறுவனத்திற்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | உசிலம்பட்டி வட்டம்— கல்லூத்து .. .. | இருப்பு கணக்கிடப் படவில்லை. கனிவளம் மிகவும் தரம் குறைந்தது. | |
| 3 பாக்சைட் .. | கொடைக்கானல் (தற்போது அண்ணா மாவட்டம்.)— கொடைக்கானல், பழனி மலைச்சரிவுப் பகுதியைச் சுற்றிலும் பெரிஜாமச் ஹொமில்டன் கோட்டை முதலிய பகுதிகளில். | 2.23 | இவற்றில் ஒரு பகுதி மெட்ராஸ் அலுமினியம் கம்பெனிக்கு சுரங்கக் குத்தகை வழங்கப் பட்டுள்ளது. |
| 4 மாலிப்டெனைட் .. | பழனி வட்டம் (தற்போது அண்ணா மாவட்டம்)— காடிகுட்டம். | 1,600 | .... |
| 5 காப்பர் .. .. | திருமங்கலம் வட்டம்— சோசியர் ஆலங்குளம். | 3,61,774 | .... |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 6 அபடைட் .. | பெரியகுளம் வட்டம்— கோட்டகுடி .. | டன்களில் இருப்பு கணக்கிடப் படவில்லை. | |
| 7 குவார்ட்ஸ் மற்றும் ரோஸ் குவார்ட்ஸ் | நத்தம் மற்றும் மேலூர் வட்டங்கள்— முகையூர் .. | 40,000 | சில பகுதிகள் தமிழ்நாடு கனிவள நிறுவனத்திற்கு ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது. |
| 8 கெம்ஸ் ஸ்டோன் | மேலூர், திண்டுக்கல் மற்றும் பழனி வட்டங்களில் கிடைப்பதாகத் தெரிகிறது. | இருப்பு கணக்கிடப் படவில்லை. | .. |
| 9 கட்டிட கற்கள் மற்றும் சாலைகள் அமைக்க உதவும் கற்கள். | திருப்பரங்குன்றம், மதுரை, திருமங்கலம், திண்டுக்கல், பழனி, கொடைக்கானல் பகுதிகளில் பல நிறமுள்ள கிரானைட் பாறைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. | .... | .... |



## இணைப்பு III.ர

(305-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 42-க்கான விடையைக் காண்க.)

(அ) சென்னையிலிருந்த உந்த மிருகக் காட்சி சாலை இப்போது வண்டலூருக்கு அருகிலுள்ள வண்டலூர் ஒதுக்கக் காட்டில் 1,275 ஏக்கர் பரப்பளவில் ''அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவாக'' அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த உயிரியல் பூங்காவில் தற்போது கீழ்க்கண்ட எண்ணிக்கையில் மிருகங்கள் மற்றும் பறவை இனங்கள் இருக்கின்றன:—

| இனம். | வகை. | எண்ணிக்கை. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 1 பாலூட்டிகள் .. .. | 45 | 294 |
| 2 பறவைகள் .. .. | 69 | 340 |
| 3 ஊர்வன .. .. | 12 | 61 |
| மொத்தம் .. | 126 | 695 |

(இ) விலங்குகள் மற்றும் பறவைகளின் தீவனத்திற்காக அன்றாடம் ரூ. 2,650 செலவு ஆகிறது.

(ஈ) நாள்தோறும் வழங்கப்படும் உணவு வகைகளின் மொத்த விலை மதிப்பு ரூ. 1,918.35. இது தவிர, உயிரியல் பூங்காவிலுள்ள தீவனத் தோட்டங்களில் பயிர் செய்யப்பட்டு நாள்தோறும் மிருகங்களுக்கு வழங்கப்படும் 2,100 கிலோ எடையுள்ள தீவனப் புல் மற்றும் பசுந்தழைகளின் விலை மதிப்பு ரூ. 731.50 ஆக நாள் ஒன்றிற்கு தீவனத்திற்கு என மொத்தம் ரூ. 2,650 செலவு செய்யப்படுகிறது.

## இணைப்பு IV.

(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 85-க்கான விடையைக் காண்க.)

**விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் இளநிலை ஆய்வாளர், தனி அலுவலர்கள் நியமனம் விவரம்.**

| வரிசை எண்ணும் மாவட்டமும். | மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்யப் பட்டது. | நவம்பர், டிசம்பர் 1985 திங்களில் நியமனம் செய்யப் பட்ட இளநிலை ஆய் வாளர்கள். | கலம் (4)-ல் உள்ளவர் களில் தாழ்த்தப் பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 செங்கல்பட்டு .. | 66 | 66 | 12 |
| 2 வட ஆற்காடு .. | 66 | 66 | 11 |
| 3 சேலம் .. | 72 | 72 | 13 |
| 4 தர்மபுரி .. | 49 | 49 | 9 |
| 5 பெரியார் .. | 44 | 44 | 7 |
| 6 நீலகிரி .. | 15 | 15 | 2 |
| 7 தென்னாற்காடு .. | 77 | 77 | 13 |
| 8 தஞ்சாவூர் .. | 100 | 00 | 18 |
| 9 புதுக்கோட்டை .. | 26 | 26 | 4 |
| 10 திருச்சிராப்பள்ளி .. | 66 | 65 | 12 |
| 11 மதுரை .. | 88 | 88 | 16 |
| 12 காமராஜர் .. | 36 | 36 | 6 |
| 13 இராம்நாதபுரம் .. | 25 | 25 | 5 |



| வரிசை எண்ணும் மாவட்டமும். | மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்யப் பட்டது. | நவம்பர், டிசம்பர் 1985 திங்களில் நியமனம் செய்யப் பட்ட இளநிலை ஆய் வாளர்கள். | கலம்(4)—ல் உள்ளவர் களில் தாழ்த்தப் பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 14 பசும்பொன் முத்து ராமலிங்கம் | 24 | 24 | 4 |
| 15 திருநெல்வேலி .. | 66 | 86 | 12 |
| 16 கன்னியாகுமரி .. | 23 | 23 | 4 |
| 17 கோயம்புத்தூர் .. | 57 | ** | — |
| மொத்தம் .. | 900 | 842 | 148 |

** 51 இளநிலை ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கு நபர்களை 2—1—1986-க்கு பிறகு தெரிவு செய்யப்பட்டதால், நவம்பர் டிசம்பர் 1981 திங்களில் இப்பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 55, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationary and Printing, Madras

வெளியீடு 26-3-1988

Issued 26-3-1988

2955
529/A4

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, டிசம்பர் 22, 1986-தொகுதி 31-எண் 4

Monday, the 22nd December 1986-Volume 31-No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat Fort St. George, Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்]

[Price Rs-3.00 paise

*22-12-1986*


| | பக்கங்கள் |
|---|---|
| ***1. அமைச்சரின் அறிக்கை—*** | |
| கூட்டுறவுக் கடன்களைச் செலுத்த வேண்டிய காலக்கெடுவை நீட்டித்தல் | 421—423 |
| **2. தீர்மானம்:—** | |
| அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர் உறுப்பினர் தகுதியை இழத்தல் | 423—517 |
| **3. அரசினர் தீர்மானம்:—** | |
| பேரவை ஒத்தி வைக்கப்பெறுதல் | 518 |
| 4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 518—520 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### 1986, டிசம்பர் 22, திங்கட்கிழமை

### மார்கழி 7, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து''

செய்த குற்றத்தை தக்கவாறு ஆராய்ந்து, மீண்டும் அக்குற்றம் செய்யாதபடி குற்றத்திற்குப் பொருந்துமாறு தண்டிப்பவரே அரசன் ஆவான்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. அமைச்சரின் அறிக்கை:

### கூட்டுறவுக் கடன்களைச் செலுத்தவேண்டிய காலக்கெடுவை நீட்டித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் கூட்டுறவுக் கடன்கள் குறித்து விதி 111-ன் கீழ் அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையிலும்....

**திரு. அ. ரகுமான்கான் :** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையிலும், குறுகிய காலக் கடன்கள், மத்திய காலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள், 10, 12 ஆண்டுக்காலமாக அசலும், வட்டியும், கூடுதல் வட்டியும், அபராத வட்டியும் செலுத்தப்படாத சூழ்நிலையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரும் கடன் சுமையாக அமைந்த சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு, மாண்புமிகு

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முதல்வர் அவர்கள் 31-3-1986 வரையிலுள்ள அசலை அப்படியே 31-12-1986-க்குள் செலுத்தி விடுவார்களேயானால் அதுவரையில் உள்ள வட்டி, கூடுதல் வட்டி அபராத வட்டி ஆகிய அத்தனையும் தள்ளுபடி செய்யப்படும் என்ற ஒரு அறிவிப்பை முதலிலே கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பலரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரே தடவையில் அத்தனை அசலையும் செலுத்துவதற்கு இயலாத ஒரு சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தால்தான் 31-12-1986 வரையில் பாதியை செலுத்தவும் 31.6.1987-க்குள் மீதி பாதியை செலுத்துகின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் அந்த வட்டி, கூடுதல் வட்டி, அபராத வட்டி ஆகியவை தள்ளுபடி செய்யப்படும் என்று எடுத்துச் சொன்னார்கள். இப்போது விவசாயப் பெருங்குடி மக்கள் உடனடியாக இப்போது இருக்கின்ற தவணையைப் பொறுத்தவரையிலும் அந்த அசலைக் கட்டுவதற்கான சூழ்நிலைகள் இந்த ஜனவரி மாதம் ஏற்படுகின்ற அறுவடையைப் பொறுத்துத்தான் ஓரளவிற்குத் தங்களுக்கு வருமானமும், மற்றவையும் கிட்டும் என்றும், அந்தக் காலக்கெடு தாண்டுகின்ற அளவிற்குத் தங்களுக்குச் சலுகைகள் அளிக்கப்படுமேயானால் இந்தச் சலுகைகள் முழுவதையும் பயன்படுத்தி அசலைக் கட்டமுடியும் என்றும் பல்வேறு தரப்பினரும் முறையிட்டதன் பேரில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த முடிவிற்கு இணங்க இந்த அறிவிப்பு தரப்படுகின்றது.

விவசாயிகளின் பிரச்சினைகளைக் கவனித்து அவர்களின் குறைகளை நீக்க நடவடிக்கைகள் எடுத்து வருவது இந்த ஆட்சிக் காலத்தில்தான் என்பதை யாராலும் மறுக்க இயலாது. விவசாயிகளுக்கான மின்சாரக் கட்டணத்தை முதலில் குறைத்ததோடு மட்டுமின்றி, பின்னால்சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும் பெரு விவசாயிகளுக்குக் குறைந்த கட்டணத்திலும் மின்சாரம் வழங்கி இந்தியாவிலேயே சாதனையை ஏற்படுத்தியது இந்த அரசு தான். இதுவரை எந்த ஆட்சியினரும் செய்யாத வகையில் 1979-80 ஆம் ஆண்டில் இந்த அரசு சுமார் ரூ. 200 கோடிக்கு கடன் தள்ளுபடி சலுகைகளை விவசாயிகளுக்கு அளித்தது. கடந்த 13-7-1986 அன்று தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரை மாநாட்டில் பேசும்போது, 31-3-1986 அன்று நிலவரப்படி உள்ள கடன் நிலுவையில் அசலை மட்டும் திருப்பிச் செலுத்தினால் போதும் என்றும், விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி, கூடுதல் வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை அரசு தள்ளுபடி செய்யும் என்றும் அறிவித்தார்கள். இவ்வாறு தள்ளுபடி செய்யப்படும் தொகை ரூ. 125 கோடி என்று கணக்கிடப்பட்ட போதிலும் இந்த இழப்பைப் பொருட்படுத்தாமல் விவசாயிகள் நன்மை ஒன்றையே கருத்தில் கொண்டு, மேலே குறிப்பிட்ட சலுகையை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த 125 கோடி ரூபாயைப் பெறவேண்டுமானால் விவசாயிகள் ரூ.295.75 கோடி அசல் தொகையைச் செலுத்தியாக வேண்டும். அசல் தொகை முழுவதையும் ஒரே தவணையில் கட்டுவது கடினமாக இருக்கும் என்பதால் 31.12.1986-க்குள் முதல் தவணையையும், 30-6-1987-க்குள் இரண்டாவது தவணையையும் ஆக இரண்டு





தவணைகளையும் செலுத்த வாய்ப்பு அளிக்கப்பட்டது. இந்த அறிவிப்புக்குப் பிறகு 10-12-1986 வரை 5.42 இலட்சம் விவசாயிகள் ரூபாய் 79 கோடியே 41 இலட்சம் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்தியுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது. இவர்களுள் பெரும்பாலோர் அசல் தொகையை ஒரே தவணையில் செலுத்தி, அடுத்த கடனை ஒரு வாரத்திற்குள் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நேற்று, 21-12-1986 அன்று, தமிழ்நாட்டில் உள்ள தலைவர்கள், தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் பிரச்சினைகளைச் குறித்து முதல்வர் அவர்களைச் சந்தித்தனர். ஏற்கனவே தமிழக அரசு, விவசாயிகளுக்கு அளித்துள்ள சலுகைகளை அவர்கள் மனப்பூர்வமாக வரவேற்றனர். ஆனாலும் தமிழ்நாட்டில் பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும், காலம் தாழ்ந்து பெய்த மழையின் காரணமாகவும், தமிழ்நாட்டின் பல இடங்களில் அறுவடை பிப்ரவரி மாதம் வரை தள்ளிப்போகும் என்பதாலும், விவசாயிகள் 31-12-1986-குள் கடன் தொகையில் பாதியை முதல் தவணையாக செலுத்த இயலாத நிலைமையைக் கருத்தில் கொண்டு, மேற்படி விவசாயிகள் செலுத்த வேண்டிய முதல் தவணையின் காலக்கெடுவை 31-12-1986க்குப்பின் நீட்டிக்க வேண்டும் என்று முறையிட்டனர். விவசாயிகள் நலனில் அக்கறையுள்ள முதல்வர் அவர்கள், அக்கோரிக்கையை பரிசீலித்து, விவசாயிகள் செலுத்த வேண்டிய முதல் தவணையின் காலக்கெடுவை 28-2-1987 வரை நீட்டிக்க முடிவு செய்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) மீதித் தொகையை ஏற்கனவே அளித்தவண்ணம் 30-6-1987க்குள் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இது பற்றிய ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும். கடன் தொகை முழுவதும் வசூலானால்தான், வரும் ஆண்டுகளுக்கும் கடன் வழங்க இயலும். எனவே அனைத்து விவசாயிகளும் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள, புது சலுகையையும் மனதில்கொண்டு அதைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

## 2. தீர்மானம்

### அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர் உறுப்பினர் தகுதியை இழந்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது இடத்தில், இந்திய அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியின் நகலொன்றை (எழுதப்பட்ட வடிவத்திலோ அல்லது அச்சடிக்கப்பட்ட வடிவத்திலோ அல்லது வேறெந்த வகையான வெளிப்பாடு (representation) அல்லது மறுபடைப்பு (reproduction) வடிவத்திலோ அமைந்த இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு

ஏதொன்றின் முழுமையான எடுபகுதிகள் (excerp's) அல்லது அதன் பகுதி ஏதொன்றின் எடுபகுதிகள் அடங்கிய ஆவணம் அல்லது தாள் எதையேனும்) தீ வைத்து கொளுத்திய இப்பேரவையின் சில உறுப்பினர்களை பதவி நீக்கம் (expulsion) செய்வது குறித்து''.

**திரு. கு. ரமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதே தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன் மொழிவது தவறு என்று நீங்கள் இப்போது பேச முடியாது. இப்போது கிளப்ப முடியாது.

**திரு. கு. ரமணி:** விதிகளின்படி..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தை மொழிய நான் அனுமதி வழங்கி இருக்கிறேன். இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள இசைவு வழங்கியிருக்கிறேன். படிக்கின்றார். படித்தும் விட்டார்கள். ஒவ்வொரு கட்சியின்ரும் பேச வாய்ப்பு இருக்கிறது. பேச வேண்டாம் என்றால் பாஸ் பண்ணுவோம்.

**திரு. கு. ரமணி:** பர்ஸ்ட் ஸ்டேஜிலேயே எங்களுடைய ஆட்சேபணையை தெரிவிக்கக் கூடாது என்று சொல்கிறீர்கள்.

(மூற்பகல் 10–10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே ஆட்சேபணை இல்லை. ஆட்சேபணை தெரிவிக்க முடியாது. முதலில் தீர்மானம் முன் மொழிவதைத் தடுக்க முடியாது. இதிலே ஒன்றும் விதி மீறல் கிடையாது. There is no violation of Rules. இது எப்படி ஆட்சேபணைக்குரியது? எந்த விதியின் கீழ் நீங்கள் இப்போது எழுந்திருக்கிறீர்கள்?......(குறுக்கீடு) அதுதான் சொன்னேன். பாராளுமன்ற உறுப்பினராக ரொம்ப காலம் இருந்திருக்கிறீர்கள். தயவு செய்து நீங்கள்.. (குறுக்கீடு) திசை திருப்பவில்லை. முன்மொழிந்திருக்கிறார்கள். உங்களது கட்சியினர் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசுவதை அவைக் குறிப்பிலே ஏற்ற வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு) நானும் உங்களோடுதான். (குறுக்கீடு) I want to take the entire House with me. பேசும்போது உங்களுடைய கருத்தைச் சொல்லலாம், கருத்தைச் சொல்லவேண்டிய நேரத்தில், உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது தடுக்க மாட்டேன். நீங்கள் சொல்லலாம். முன்னாலே நீங்கள் கிளப்ப முடியாது.

**திரு. கி. மனோகரன்.** அது சப்–ஜுடிஸ்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** It is not sub judice.

**திரு. கி. மனோகரன்:** எப்படி, விளக்குங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ரூலிங் கொடுக்கிறேன். விளக்க வேண்டுமா? (குறுக்கீடு) It is a criminal case. We are not concerned with that. We are concerned with the breach of Constitutional obligation. There is a Constitutional violation.

THIRU K. MANOHARAN: It is in the Court.

MR. SPEAKER: Members have violated the oath.

THIRU K. MANOHARAN: Courts can decide it.

MR. SPEAKER: It is a criminal case pending before the Magistrate. Inside the House the Speaker is competent to decide.

**மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்த குற்றங்களைப் பற்றி (குறுக்கீடு) நீதிமன்றங்கள் தண்டனை அளிக்கின்றன. இங்கே வந்திருக்கிற தீர்மானம் உறுப்பினர்களுடைய நடத்தையைப் பற்றி. This is about the conduct of the Members. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். ஒரு நிமிடம் இருங்கள். ரூலைச் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் அந்த விதியைச் சொல்கிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் கேட்டதற்காக நான் சொல்லியாக வேண்டும். சொல்கிறேன்.

அதாவது 1973-வது ஆண்டு (குறுக்கீடு) நான் படித்து விடுகிறேன். I will give you a chance. நான் படிக்கிறேன். உட்காருங்கள். This is a Report of the Rules Committee. சபாநாயகருக்கு அதிகாரம் உண்டா என்று கேட்டதனால் சொல்கிறேன். The residuary power is here in this House right from 1952. 1973-வது ஆண்டு விதிகள் குழு அன்றைக்கு இருந்த சபாநாயகரின் கீழ் நியமிக்கப்பட்டு, இந்த அதிகாரம் எடுக்கப் படுகிறது. சபாநாயகருக்கு வழங்கப்பட்ட அந்த அதிகாரம், ரெசிடுவரி பவர் எடுக்கப்படுகிறது. நவம்பர் 1979 நீங்கள் அவை முன்னவர். நான் இதிலே உறுப்பினர். நாம் எல்லோரும் சேர்ந்து இந்த அதிகாரத்தை இந்த நாற்காலிக்கு வழங்கியிருக்கிறோம். சபாநாயகருக்கு ரெசிடுவரி பவர் (குறுக்கீடு) அதைப் படிக்கிறேன். (குறுக்கீடு) நோ. நோ, நான் சொல்வதைக் கேளுங்கள். It would be better if the Chair was vested with the powers on matters not specifically provided for in the Constitution also. அப்போது நீங்கள் அவை முன்னவர். நான் உறுப்பினர். இந்த அவை ஏற்றுக் கொண்டு வழங்கப்பட்ட அதிகாரம், நம்முடைய சட்ட மன்றத்திலே இந்த அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில்—தெரியாது. அதனாலேதான் அதிகாரம் இருக்கிறது என்று சொன்னேன். எனவே உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, இது அதிகாரத்தை மீறிச் செய்த செயல் அல்ல. இங்கே வந்து oath எடுக்கிறீர்கள். violate பண்ணிவிட்டால் Speaker has to decide. Decide என்றுகூடச் சொல்லவில்லை. (குறுக்கீடு) Speaker has to say.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சிறு விளக்கம் மட்டும் சொல்கிறேன். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை இந்த அவையைப் பொறுத்தும், நடத்தையைப் பொறுத்தும், இந்த அவையினுடைய உரிமையைப் பொறுத்தும் உள்ள ஒன்றே தவிர, வழக்குமன்றத்திலே தொடுத்திருக்கிற குற்றவியல் வழக்கு பற்றியது அல்ல. 'Practice and Procedure of Parliament' என்பதிலே, திரு. எம். என். கவுல் மற்றும் திரு.எஸ்.எல்.ஷக்தர் அவர்கள் "So far as the privilege matters are concerned a Legislature is the sole Judge in respect of its privileges and the rule of sub judice does not apply" என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது சப்ஜூடிஸ் ஆகாது. (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவையினுடைய நடவடிக்கை. இந்த அவையினுடைய நடவடிக்கையை எந்த நீதிமன்றமும் தடுக்க முடியாது. (கூச்சல், குழப்பம்) ஒவ்வொருவரும் பேசும்போது பேசலாம். The conduct of a Member both inside the House and outside the House should be taken into consideration. (கூச்சல், குழப்பம்).

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் கோர்ட்டின் தீர்ப்பு வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினாரே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பற்றித்தான் 24 ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. (கூச்சல், குழப்பம்) நான் ஏதாவது சொன்னால் you will be wounded.

**திரு. கி. மனோகரன்:** நீங்கள் கொஞ்சம் அதிகமாகவே பேசியிருக்கிறீர்கள். எனக்கும் கொஞ்சம் நேரம் தர கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது உங்கள் கட்சியின் சார்பில் சொல்லலாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கி. மனோகரன்:** Residuary power of the Speaker;–Rule 312. "All matters not specially provided for in the Constitution or in these rules and all questions relating to the detailed working of these rules shall be regulated in such manner as the Speaker may from time to time direct." இது எப்படி தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறதென்றால் 'எஞ்சிய அதிகாரம்', அந்த எஞ்சிய அதிகாரத்தை, மிஞ்சிய, மிதமிஞ்சிய அதிகாரமாக மாற்றிக்கொண்டு நீங்கள் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னுடைய தீர்ப்பைப்பற்றி பேச வேண்டாம்.



**திரு. கி. மனோகரன்:** உங்கள் தீர்ப்பைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதால் சொல்கிறேன். நீங்கள் அமருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) அதாவது நான் சொல்லியதற்குப் பிறகு சொல்லுங்கள். Rule 312 நீங்கள் இப்பொழுது படித்தீர்கள். All matters not specially provided for in these rules and all questions relating to the detailed working of these rules. Let me read it. Rule 4—What does it say It says–4. (1) Every Member of the Assembly shall before taking his seat, make and subscribe an oath or affirmation as provided for in article 188 of the Constitution.

Art. 188–லே சொல்லப்படக்கூடிய அந்த ஷரத்து Rule 4-லே வருகிறது. Rule 4-ல் there is no provision for action in the case of repudiation of the oath. It is not provided for in any of the Rules. I have to take recourse to Rule 312.

**திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 4-வது விதியை இங்கே சுட்டிக்காட்டி Every member.... shall take an oath or affirmation in the name of God or something அரசியல் சட்டத்தின் அடிப்படையில் பதவிப் பிரமாணம் எடுத்ததற்குப் பிறகு அந்த அரசியல் சட்டத்தின் புனிதத்துவத்தைக் காப்பாற்றுவதற்காக நான் இருக்கிறேன் என்று பல முறை நீங்கள் இந்த மன்றத்திலே பேசி இருக்கிறீர்கள். மதிக்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் அரசியல் சட்டத்தை மதிக்கின்ற ஒரு கட்சி என்பதை இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.** (கூச்சல், குழப்பம்) நான் தெரிவிக்க விரும்புவது அரசியல் சட்டத்தை தாங்கள் மதிக்கிறோம். அரசியல் சட்டம் திருத்தப்படக்கூடிய ஒன்று என்பதில் எங்களுக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு. The Constitution of this country is amendable. It does not remain as it is for ever.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமென்ட்மெண்ட்சுக்கு கான்ஸ்டிட்யூஷன் வழி செய்கிறது. There are provisions made for the amendment of the Constitution.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட வேண்டாம் என்றுதான் விரும்பினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு.மனோகரன் அவர்கள் தடிப்பான ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். அதை அவர் வாபஸ் வாங்க வேண்டும்* * * அதை வாபஸ் வாங்கினாலொழிய விட மாட்டோம்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வார்த்தைகள் அதிகமாக வேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தர விடுகிறேன்.

திரு. கி. மனோகரன்: சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக இருப்பதன் அர்த்தம் என்ன? அவ்வளவு பெருந்தன்மையோடு அமர்ந்திருக்கிறார்கள். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். அந்த மாதிரி வார்த்தையை தயவு செய்து பயன்படுத்த வேண்டாம். பொதுக் கூட்டங்களில் பேசுகிற விவகாரம் வேறு. இங்கே வேறு. தெரிந்துதான் சொல்லுகிறேன்.

(ஆளும் கட்சி உறுப்பினர்கள்: அவருக்கு இருக்கிற உரிமை எங்களுக்கும் இருக்கிறது...)

அந்த வார்த்தை சரியில்லை என்பதால் வாபஸ் வாங்கத்தான் வேண்டும். அது முறையல்ல தவறு. You please withdraw the word. You have, to withdraw that word. உங்களுடைய மனதுக்கு எது தவறு என்று தோன்றுகிறதோ அதை வித்டிரா செய்யுங்கள். நீங்கள் *** என்ற வார்த்தையைச் சொன்னதற்காக நீக்கச் சொல்கிறேன்.

திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, உங்களுக்கு ஆங்கிலம் கொஞ்சம் தெரியும் என்ற நம்பிக்கையோடு தெரிவிக்க விரும்புகிறேன்....

(ஆளும் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து ''வாபஸ் வாங்க வேண்டும்'' என்று குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர்.)

(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது தவறு. அதை வித்டிரா செய்கிறேன் என்று சொல்வதில் என்ன தவறு.. அவர்களும் திரும்பப் பேசினால் என்ன ஆகும் என்று எண்ணிப் பாருங்கள். அது முறையல்ல. அதை நீங்கள் வாபஸ் வாங்கித்தான் ஆக வேண்டும். வாபஸ் வாங்குங்கள். வாபஸ் வாங்க வேண்டும், வாபஸ் வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் கேட்கிறேன். நீங்கள் அமருங்கள். அந்த வார்த்தையை தயவு செய்து வாபஸ் வாங்கி விடுங்கள். வாபஸ் வாங்கி விடுங்கள்.

திரு. கி. மனோகரன்: நான் அந்த வார்த்தையை ஏன் பயன்படுத்தினேன் என்று கூறுகிறேன். ஆங்கிலத்தில் எந்த அடிப்படையில் அந்த வார்த்தையைச் சொன்னேன் என்றால், சீரியசாகஇருக்க வேண்டும் என்று....

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாங்கள் தமிழில் பேசுகிறோம். இங்கே எல்லோரும் தமிழ் தெரிந்த உறுப்பினர்கள், எனவே அந்த வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டும். வாபஸ் வாங்காமல் விளக்கம் தேவையில்லை. You first withdraw that word. வித்டிரா பண்ணிவிடுங்கள். ஒரு முறையோடு பேசுவது நல்லது. Kindly withdraw that word.

திரு. கி. மனோகரன்: எனக்கு முறை தெரியும். நான் என்ன சொன்னேன் என்றால், சீரியசாக இருக்க வேண்டும் என்றுதான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Kindly withdraw that word Why are you adamant?

திரு. கி. மனோகரன் : இது சாதாரண பிரச்சினையல்ல. நான் முதல்வரைப் பார்த்து ''சீரியசாக இருக்க வேண்டும்'' என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குப் பதில் சொல்லுங்கள். வாய்ப்பு அளித்தால் ஒரு பிரச்சினையிலிருந்து இன்னொரு பிரச்சினைக்கு போவது முறையல்ல. இந்தப் பிரச்சினை வந்திருக்கவே தேவையில்லை.

திரு. கி. மனோகரன்: முதல்வர் எனக்கும் முதல்வர், உங்களுக்கும் முதல்வர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Then, I will not allow you. I have to protect the Hon. Chief Minister because he is a Member of the Legislative Assembly. உங்களைப் பார்த்து ஒரு உறுப்பினர் வேறு வார்த்தையைச் சொன்னால் நீங்கள் கேட்கிறீர்கள் அல்லவா? The hon. Member has to withdraw that word; otherwise, he cannot continue his speech. The hon. Member has to withdraw that word. With all seriousness he has to come to the Assembly. Seriousness இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறார்.

திரு. கி. மனோகரன்: அவமானப்படுத்த வேண்டுமென்றோ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறையல்ல. நீங்கள் வித்டிரா பண்ண வேண்டும். அந்த வார்த்தையை வித்டிரா பண்ண வேண்டும். Otherwise, the hon. Member cannot continue his speech.

THIRU K. MANOHARAN: I cannot withdraw that word. தயவு செய்து கொஞ்சம் கேளுங்கள். பின்னர் வேண்டுமென்றால் எக்ஸ்பஞ்ச் செய்துகொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''வித்டிரா பண்ணுங்கள்'' என்று நான் சொல்வதைக் கேட்காவிட்டால் எப்படி? எந்த முறையைக் கையாள்வது?

திரு. கி. மனோகரன்: இந்த அவையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினரை பேச அழைக்கப் போகிறேன். ஆகவே, தயவு செய்து நீங்கள் அமருங்கள். முதலாவதாக....

திரு. கி. மனோகரன்: (கூச்சல், குழப்பம்) உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முறையல்ல. தயவு செய்து, எல்லா உறுப்பினர்களும் அமருங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. நாஞ்சில் மனோகரன் பேசும்போது, ** என்ற வார்த்தையைச் சொன்னார். இப்படிச் சொல்லும் போது முதலமைச்சர் அமைதியாக இருக்கிறார் என்றால் அதை அவர் ஏற்றுக்கொண்டார் என்று பொருள் அல்ல. அது இந்த அவையில் உள்ளவர்களை மட்டுமல்லாமல் மக்களுடைய மனதையும் புண்படுத்துகிறது என்பதை அவர் மறந்துவிடக் கூடாது அவர் தமிழகத்தின் முதலமைச்சர். நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்ற முதலமைச்சரைப் பற்றி இப்படிப் பேசுவது மிகவும் தவறு. ஆகவே அதை அவர் திரும்பப் பெற வேண்டும் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரும்பப் பெற வேண்டுமென்று நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அவர் அதைத் திரும்பப் பெறவில்லையென்றால் பேச அவருக்கு வாய்ப்பு கிடையாது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன். ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் ஒவ்வொரு உறுப்பினரை அழைக்கப்போகிறேன் ஒவ்வொருவராகப் பேசப் போகிறார்கள்.

திரு. கி. மனோகரன் : தயவு செய்து நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, முதலமைச்சரைப்பற்றி தனி மரியாதையும், தனி ஆசையும் வைத்திருப்பவன் நான் என்பது முதலமைச்சருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். புதிதாக வந்தவர்கள் முதலமைச்சரைத் திருப்திபடுத்த......(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு வாய்ப்பு கிடையாது. The hon. Member has not withdrawn the word. மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன்.

THIRU K. MANOHARAN : I can never withdraw that word.

MR. SPEAKER : No, no. Then I cannot give you a chance.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் தீர்மானத்தின் மீது பேசலாம்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். அரசியல் சட்டம் என்பது புனிதமானதல்ல, வேண்டுமானால் திருத்திக் கொள்ளலாம். இதுவரை 45 முறை அரசியல் சட்டம் திருத்தி, மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

(திரு. கு. ரமணி எழுந்தார்)

Mr. SPEAKER : A Member is addressing the House. Do not prevent the Member. He is a Member and he is entitled to speak and he is entitled to be heard. I have to protect his rights.

THIRU K. MANOHARAN : Point of order.

Mr. SPEAKER : There is no Point of Order.

திரு. கு. தமிழரசன் : நம்முடைய அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்கும் நேரத்தில் ஒரு விவாதத்தின்போது அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைமைச் சிற்பியான டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 10–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுகின்ற உறுப்பினருடைய பேச்சுரிமையைப் பாதுகாத்து தாருங்கள் (குறுக்கீடு) ஒருவர் மட்டும் பேசுவதற்காக அல்ல, எல்லாக் கட்சித் தரப்பிலும் பேச வேண்டும், அவர்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) இது முறையே அல்ல. (குறுக்கீடு) இது முறையல்ல. உங்களுக்கு வாய்ப்பு கிடையாது.

திரு. கு. தமிழரசன் : 6 ஆம் முறை அரசியலமைப்புச் சட்டம் நம்முடைய பாராளுமன்றத்திலே திருத்தி அமைக்கப்பட்ட வேளையிலே, "அரசியலமைப்புச் சட்டம் என்பது புனிதமானதா" என்று அன்றைக்கு உள் துறை அமைச்சராக இருந்த படேல் அவர்கள், அரசியல் அமைப்புச் சட்ட சிற்பியாக இருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களைக் கேட்டார்கள்.

(திரு. கு. ரமணி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாய்ப்புத் தரும்போது நீங்கள் பேசலாம்.

திரு. கு. தமிழரசன் : இந்த அரசியலமைப்புச் சட்டத்தை ஒரு கோவிலாக மாற்றுவதற்காகக் கட்டினேன். நான் கட்டி முடிப்பதற்குள்ளாக சில சாத்தான்கள் உள்ளே நுழைந்துவிட்டன.

(திரு. கி. மனோகரன் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்ன அந்த வார்த்தையை 'வித்டிரா' பண்ணிய பிறகுதான் பேசுவதற்கு வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

திரு. கு. தமிழரசன் : பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் அன்றைக்கு உள் துறை அமைச்சராக இருந்த படேல் அவர்களுக்குச் சொல்கிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் இந்த அரசியலமைப்புச் சட்டத்தை ஒரு கோவிலாகக் கட்டுவதற்கு முயற்சித்தேன். ஆனால் இந்தக் கோவிலைக் கட்டி முடிப்பதற்கு முன்பாகவே சில சாத்தான்கள் உள்ளே நுழைந்துவிட்டன.

(மேசையைத் தட்டும் ஒலி.)

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொல்லும்போது, அரசியலமைப்புச் சட்டத்தை ஒரு கோவிலாகக் கட்டுவதற்கு முயற்சித்தேன், நான் கட்டி முடிப்பதற்குள்ளாக சில சாத்தான்கள் உள்ளே நுழைந்துவிட்டன. வேண்டுமென்றால் அந்தச் சாத்தான்களை வெளியேற்றிவிட்டு, உள்ளே விக்கிரகங்களை வைக்கலாமே தவிர, கோவிலையே இடிக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்குச் சில உறுப்பினர்கள் அந்தச் சாத்தான்களை வெளியேற்றிவிட்டு, விக்கிரகங்களை வைப்பதற்குப் பதிலாக, கோவிலையே இடிப்பதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள். இது ஒரு மிகப் பெரிய குற்றமாகும்.

(திரு. கு. ரமணி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : There is no point of order. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது யார் இடைமறித்தாலும் உங்களுடைய பேச்சு கேட்காத அளவுக்கு ஆகிவிடும். தயவு செய்து அம ங்கள். (குறுக்கீடு) அமருங்கள். அந்த உறுப்பினர் பேசும்போது இடைமறித்தால், உங்களுடைய பேச்சை யாரும் கேட்கமாட்டார்கள். கேட்க விடமாட்டேன். (குறுக்கீடு) I have to protect him. He is a Member. He has got a right. When you get a chance, you can speak.

THIRU K. RAMANI : On a point of order......

Mr. SPEAKER : There is no point of order. இந்தத் தீர்மானத்தில் 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' வர எந்த விதத்திலும் இடமில்லை.

திரு. கு. தமிழரசன் : இந்தச் சட்டப் பேரவையில் கூட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால்...... (குறுக்கீடு)



மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வது எல்லாம்
தீர்ப்பாகும். நீங்கள் ஜனநாயக புத்தகங்களை எல்லாம் கொஞ்சம்
படித்துவிட்டு வாருங்கள். இன்னும் கொஞ்சம் ஜனநாயகத்தைப்
பற்றிப் படியுங்கள். நான் சொல்வதுதான் தீர்ப்பு. நான்
சொல்வதுதான் இந்தச் சட்டசபையில் தீர்ப்பாக வரும். இல்லை
என்றால், நீங்கள் வாருங்கள், தீர்ப்பு வழங்குங்கள் (குறுக்கீடு).
ஸ்பீக்கர் என்று உட்கார்ந்து தீர்ப்பு சொல்கிறேன்.

திரு. கு. தமிழரசன் : அரசியல் சட்டம் திருத்தி
அமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு தமிழ் மொழிக்
குரிய மரியாதை தரப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தச்
சட்டப் பேரவையில் கூட அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்
பட வேண்டுமென்ற தீர்மானம் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களால் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. எனவே
அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பதில் எங்களுக்கு
ஆட்சேபணையில்லை. ஆனால் அரசியல் அமைப்புச் சட்டத்தைக்
கொளுத்துவது என்பது—நாம் எந்த அரசியல் அமைப்புச்
சட்டத்தின் பேரிலே உறுதி எடுத்துக்கொண்டு இந்த மன்றத்திற
குள்ளே வந்திருக்கிறோமோ, அந்த அரசியல் அமைப்புச்
சட்டத்தைக் கொளுத்துவது என்பது, இந்த மன்றத்திற்குள்ளே
இருப்பதற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று நிருபணம் செய்
கிறது. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் அமைப்புச்
சட்டத்தின் பேரிலே உறுதி எடுத்துக்கொண்டு, அரசியல்
அமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றுவோம் என்றும், அரசியல்
அமைப்புச் சட்டத்தின்படி நடப்போம் என்றும் உறுதி எடுத்துக்
கொண்டு உள்ளே நுழைந்தவர்கள் அரசியல் அமைப்புச்
சட்டத்தைக் கொளுத்துவது என்பது அரசியல் அமைப்புச்
சட்டத்தை மீறிய செயலாகும். எனவே அவர்களை இந்த
மன்றத்திலேயிருந்து நீக்கியதை நான் இந்தியக் குடியரசுக்கட்சியின்
சார்பிலே வரவேற்கிறேன்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றைக்கு அவை முன்னவர் அவர்கள்
கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தையொட்டி, நான் சார்ந்
திருக்கின்ற பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பிலே என்னுடைய
கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்குச் சட்ட
மன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள் இந்திய அரசியல்
அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு உறுதிமொழிகளை எடுத்துக்
கொண்டு சட்டமன்றத்திலே நுழைகிறார்கள் என்பதும்,
அப்பேர்ப்பட்ட சட்டதிட்டத்திற்கு உட்பட்டு அவர்கள் நடந்து
கொள்ளவேண்டும் என்பதும் உண்மையிலேயே ஏற்புடைய
ஒன்றாகும். அப்பேர்ப்பட்ட ஒரு நிலையிலே நம்முடைய இந்திய
அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பகிரங்கமாகக் கொளுத்தி
விருக்கிறார்கள் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி ஏற்கெனவே
7 சட்டமன்ற உறுப்பினர்களையும் அதற்குப் பின்னர் 3 சட்ட
மன்ற உறுப்பினர்களையும் அவை உறுப்பினர் பதவியிலிருந்து
நீக்கக்கூடிய தீர்மானத்தை இன்றைக்கு முன்மொழிந்திருக்கின்
றார்கள்.

உள்ளபடியே அவர்கள் செய்தது குற்றமாக இருந்தாலும், இன்றைக்கு அவையிலே தம்முடைய தலைவர் அவர்களுக்கு முழுமையான அதிகாரம் அதிலே இருக்கிறது என்றாலும், ரெசிடுவரி பவர் என்ற நிலையிலே அந்த எஞ்சிய அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது என்றாலும் அவர்கள் செய்த தவறு உண்மைதானா என்பதை நீதி மன்றம் முடிவு செய்யட்டும் என்று அவை முன்னவர் அவர்கள் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள் என்ற நோக்கத்திலேதான் நாங்கள் அந்த முடிவை அமைதியாக எதிர்நோக்கி இருந்தோம். அப்பேர்ப்பட்ட முடிவு வந்ததற்குப் பின்னாலே, அந்த உறுப்பினர்களுக்கு என்ன நீதி வழங்கப்படுகிறது என்பதை நாங்கள் கேட்பதற்கு ஆவலாக இருந்தோம். ஆனால் இன்றைக்கு, சபாநாயகர் அவர்கள், அவருக்கிருக்கின்ற எஞ்சிய அதிகாரத்தைக் கொண்டு, அவர்களை நீக்குவதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். எனவேதான், இப்பேர்ப்பட்ட ஒரு நிலையிருக்குமானால், சட்ட மன்றத்திலே அதிகமான பலம் கொண்டவர்கள் என்ற நிலையில் இருக்கிறோம், எனவே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி விடுவோம் என்ற ஒரு கருத்தோடு இருந்தால், உள்ளபடியே மற்றும் இருக்கும் எதிர்க்கட்சிகளுக்குப் பயங்கரமான அடியாகத் தான் இருக்குமே தவிர....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த மாதிரி வார்த்தை எல்லாம் வேண்டாம். நாம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அரசியல் சட்டத்தை எரித்த காரணத்தினால்தான். I am not concerned about the Criminal case. You have taken oath under the Constitution. According to the Constitution you have stepped in. You have to protect that book. (குறுக்கீடு) இந்தி எழுத்து பற்றிச் சொல்கிறார்கள். ரெயில்வே டிக்கெட்டிலே இந்தி எழுத்துக்கள் இருக்கின்றன. ரெயில்வே ஸ்டேஷனில் அழித்தால் போதாது. அந்த டிக்கெட்டை பாக்கெட்டிலேதான் வைத்திருக்கிறோம். ரூபாய் நோட்டிலே இருக்கிறது. அதை இந்த விவாதத்தில் எழுப்பவேண்டாம். அதற்காகத்தான் சொல்கிறேன். என்னுடைய தீர்ப்பைக் குறித்து நீங்கள் கேட்கலாமா? அரசியல் சட்டத்தைத் தீண்டிய காரணத்திற்காகத்தான் நான் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. நீங்கள் வேறு எந்தச் சட்டத்தைத் தீண்டினாலும், அதன்மீது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். அதற்கு அரசாங்கம் இருக்கிறது. That is for criminal prosecution (குறுக்கீடு). There is no provision for a second oath.

**THIRU P. K. M. MUTHURAMALINGAM:** I want you to reconsider this matter. You have power to take action. But I want you to reconsider your decision. எனவேதான் சொல்கிறேன். இன்றைக்கு இதுமாதிரியான முடிவை, சட்ட மன்ற உறுப்பினர்கள் பதவி இழக்கக்கூடிய முடிவை நீங்கள் மறு



பரிசீலனை செய்யவேண்டும் என்று அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பிலே கேட்டுக்கொண்டு, இந்த மாதிரி முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

[முற்பகல் 10–40]

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய முன்னவர் அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை என்னிடத்தில் இருக்கக்கூடிய சக்திகள் அனைத்தையும் பயன்படுத்தி நான் எதிர்க்கிறேன். (சிரிப்பு) சிரிக்காதீர்கள். சிரிக்க வைக்கப்போகிறார்கள். இந்த அவை மிகப் புனிதம் வாய்ந்தது. ஒரு புனிதமான பாரம்பரியம் பெற்றது. ஒரு நீண்ட வரலாற்றுக்கு உரியது. இந்தியத் துணைக் கண்டத்திலே மாத்திரமல்ல, உலகத்திலே இருக்கக்கூடிய சட்ட மேதைகளால் கூட மிகச் சிறப்பான முறையிலே ஜனநாயகம் கடைப்பிடிக்கப்பட்ட ஓர் அவை என்ற பாராட்டைப் பெற்றது. அந்த நல்ல மரபுகள் நம்முடைய காலத்திலே பேணப்பட்டு, எதிர்காலத்திலேயும் நிலைநாட்டப்பட வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

சென்ற முறை நாம் கூடிக் கலைந்தபோது இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் 7 பேர் பதவி இழந்தார்கள் என்று, தாங்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தெரிவித்தபோதே என்னுடைய மன வேதனையை நான் வெளியிட்டு, அன்புகூர்ந்து நீங்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவோடு உங்களிடத்தில் கேட்டுக்கொண்டேன். இந்த முறை நாங்கள் எல்லாம் ஜனவரி மாதத்திலே சட்டமன்றம் கூடும் என்று எதிர்பார்த்து, அரசியலில் ஈடுபட்டிருப்பவர்கள் என்ற முறையில் எங்களுடைய பிரயாணங்களை எல்லாம் நிர்ணயித்து நாங்கள் பல்வேறு ஊர்களுக்குப் போய் வந்து. அதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய நேரத்தில், 22 ஆம் தேதி சட்டமன்றம் கூடும் என்று தங்களிடமிருந்து தந்தி வந்தபோது எங்களுக்கு ஒரு நம்பிக்கை துளிர்த்தது. எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, தாங்கள் மறுபரிசீலனை செய்து, யார் யார் எல்லாம் இந்த அவையிலே இருப்பதற்கு உரிமையற்றவர்கள் என்று தீர்ப்பு வழங்கினீர்களோ அவர்கள் எல்லாம் இந்த அவையிலே இருப்பதற்கு உரிமை பெற்றவர்கள் என்ற நல்ல தீர்ப்பை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு வந்தோம். ஆனால் இன்று மேலும் 3 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையில் இருப்பதற்கு உரிமையற்றவர்கள் என்ற தீர்மானம் அவை முன்னவர் அவர்களாலே முன்மொழியப்பட்டு, இந்த அவையிலே இருக்கிற பெரும்பான்மை உறுப்பினர்களாலே நிறைவேற்றப்படுவதற்காக கொண்டு வந்திருப்பது எனக்கு மிகவும் வேதனையைத் தருகிறது. இதிலே இருக்கிற முரண்பாடு ஒன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சபையினுடைய 7 உறுப்பினர்கள் அரசியல் சாசனத்தினுடைய ஒரு பிரிவைக் கொளுத்தினார்கள் என்று சொல்லப்படக்கூடிய ஒரு குற்றத்தைச் சாக்காகக் கொண்டு

அவர்கள் பதவி இழந்தார்கள் என்று உங்களிடத்தில் இருக்கக் கூடிய அதிகாரத்தை வைத்துத் தீர்ப்பு வழங்கினீர்கள். அதே குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய மற்ற மூன்று உறுப்பினர்களையும் ஏன் உங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் பதவியை இழந்தார்கள் என்று தீர்ப்பு வழங்காமல், முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து, அதை நாங்கள் எல்லாம் ஏற்க வேண்டுமென்று எதிர்பார்த்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒன்றும் பிரச்சினை அல்ல. டிசம்பர் 4, 1972 ''இந்து'' பத்திரிகையைப் பாருங்கள். அவையில் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். Was it valid or not? அப்போது உங்களுக்கு The ruling of the Deputy Speaker was valid. சபாநாயகர், துணை சபாநாயகரை மாற்றுவது என்பது குறித்தது. ''Removal of the Speaker'' குறித்தது அது. ஒரு டெப்டி ஸ்பீக்கர் ஒரு ஸ்பீக்கரை பதவியிலிருந்து நீக்குகின்ற அளவுக்கு அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டு விவகாரங்கள் முடிந்திருக்கின்றன. The Deputy Speaker has given a clear ruling. ஆகவே, அதுபோன்ற பிரச்சினைகளுக்குள் போக வேண்டாம். சில கருத்துக்களைச் சொல்லும் அளவுக்கு என்னை நிர்ப்பந்திக்க வேண்டாம்.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** அதற்காகத்தான் இப்படிச் செய்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கு அந்த அதிகாரம் இந்த நாற்காலிக்கு வழங்கப்பட்டிருக்கிறது, வழங்கி இருக்கிறீர்கள். தயவு செய்து உள்நோக்கம் கற்பிக்காதீர்கள். நீங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் உள்நோக்கம் கற்பிக்காதீர்கள். செய்த தவறை இன்னும் நீங்கள் எண்ணிப் பார்க்கவில்லை. இனி மேலாவது நீங்கள் திருந்துங்கள்.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** அந்த ஒரே காரணத்திற்காக உள்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டது இத்தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி என்றால் 1972, டிசம்பர் 2 அன்று நடைபெற்ற இந்த அவையின் நடவடிக்கைகள் குறித்து நான் தீர்ப்பு அளிக்க வேண்டி வரும். டிசம்பர் இரண்டாம் தேதி நடைபெற்ற இந்த அவை கான்ஸ்டிடியூஷனலாக நடைபெறவில்லை என்று என்னைச் சொல்ல வைத்து விடாதீர்கள். அன்றைக்கு எலக்ட்ரிசிட்டி போர்ட் பட்ஜெட் தான் நடைபெற்று இருக்கிறது. There is no harm in restoring that. I can declare it unconstitutional. (குறுக்கீடு) இருக்கிறது. அவையிலே இருக்கிறது. நாட்டுமக்களுக்குக் தெரிய வேண்டும் அல்லவா? ஆகவே இதையும் சொல்லி விடுகிறேன். ''There shall be a Speaker'' என்று இருக்கிறது. அரசியல் சட்டத்திலே ''There shall be a Speaker''. Only in his absence the Deputy Speaker can preside என்றுதான் இருக்கிறது. இரண்டு சபை, இதையே நீங்கள் கான்ஸ்டிடியூஷனலாக ஆக்குகிறீர்கள். இங்கே அந்தமாதிரி தவறு நடக்கவில்லை. நீங்கள் தவறு செய்து இருக்கிறீர்கள்.



நீங்கள் அரசியல சட்டத்தை எரித்து இருக்கிறீர்கள். அதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறேன். வேண்டாமென்றால் அவையினர் முடிவு எடுத்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, ஏற்கனவே இந்த அவைக்கு அல்லது அவையினுடைய தலைவராக இருக்கக்கூடிய உங்களுக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறைகூவி நான் எதையும் கேட்கவில்லை. ஆனால் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இதற்கு 1972—ஐயே உதாரணம் காட்டிக் காட்டி பேசப்பேசத்தான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அந்த ஒரு பிரிசீடென்ட்தான் இந்த அவையில் இருக்கிறது. You have set up a practice and precedent.

THIRU A.K.A.ABDUL SAMAD: Why don't you take it as a bad precedent?

Mr. SPEAKER: The whole Proceedings of 2nd December was unconstitutional.

THIRU A. K. A. ABDUL SAMAD: That ruling was by a Deputy Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. இப்பொழுது அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்து இருக்கிறார்கள். ஏழு உறுப்பினர்களுடைய விவகாரத்தை நீங்களே இணைத்து எடுத்துப் பேசலாம். முடிவு எடுத்துக்கொள்ளுங்கள். I will transfer my ruling to the full House. You can decide. Now, I will transfer it to the House. Let the House decide.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** நான், நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டபொழுது....

Mr. SPEAKER: Why should I alone take up that onerous responsibility? Let the House decide.

**டாக்டர் கே. சமரசம்:** தவறுக்குத் தவறு பரிகாரம் என்று சொல்லலாமா?

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச வந்திருக்கக்கூடிய நோக்கமே வேறு நான் எடுத்து இருக்கக்கூடிய கருத்தே வேறு. எங்கோ நடக்கக்கூடிய விவாதங்களை நீங்கள் மனதிலே வைத்துக்கொண்டு, நான் எடுத்து இருக்கக்கூடிய கருத்துக்குக்கூட பதிலாகச் சொல்லி கொண்டு இருப்பீர்களேயானால் என்னையும் எங்கோ கொண்டு போய்ச் சேர்க்கிறீர்களோ என்று ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை இல்லை. நான் அந்த நேரங்களிலே உள்ள பத்திரிகைத் தாள்களைப் பார்க்கும் போது இவ்வளவு விமர்சனம் வரவில்லை. அன்றைக்கு எங்கே போனார்கள் இந்த சட்ட நிபுணர்கள் என்று எனக்குத் தெரிய வில்லை, எங்கே இருந்தார்கள் இந்த அரசியல்வாதிகள் என்று தெரியவில்லை.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** இப்பொழுது இந்த அவையே முடிவு செய்யட்டும் என்று நீங்கள் சொல்லும்பொழுது, நீங்கள் செய்த தீர்ப்பு ஒரு சமயம் சரியல்ல என்று நீங்களே மறைமுக மாக ஒத்துக்கொள்கிறீர்களோ என்று......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தீர்ப்பு சரி, எனக்குத் தெரியும். அந்தத் தீர்ப்பை உங்களுக்குப் புரிய வைக்கின்ற நேரத்திலேதான் பிரச்சினையே. ....

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** நானும் மரியாதையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இருபதாண்டுக் காலம் பாராளு மன்றத்திலே இருந்திருக்கிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை யெல்லாம் நேரிலே கண்டிருக்கிறேன். இதைவிட மோசமான நிகழ்ச்சிகளையும் கண்டிருக்கிறேன்.

இந்திய நாட்டினுடைய பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நாடாளுமன்றத்திலே, வெற்றி பெற்று அவையிலே வந்து அமர்ந்தபொழுது, இருந்த பெரும்பான் மையைக் கொண்டு இப்படித்தான் தீர்மானத்தை வைத்து அவர்கள் வெளியேற்றினார்கள். பிறகு சரித்திரம் மாறி வேறு விதமான தீர்ப்பு இந்த நாட்டிலே வழங்கப்பட்டது.

நான் இதையெல்லாம் நினைவூட்டுவதற்கு வரவில்லை. நீங்களே சென்ற அவையிலே, ஏழு பேர் தகுதி அற்றவர்கள் என்று ஆக்கிவிட்டு, இப்பொழுது தீர்மான உருவத்தில் கொண்டு வரும்பொழுது இதிலே இருக்கக்கூடிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொன்னதனாலே சொன்னேன். நீங்கள் வேண்டுமானால், நான் எடுத்தது சரி என்று சொல்லிவிடுங்கள். We will leave it. We will consider it.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** தலைவர் அவர்களே, என்றைக்குமே பேரவைத் தலைவர் அவர்களோடு விவாதத்திலே ஈடுபடுவது என்னுடைய மரபு அல்ல, பழக்க வழக்கம் அல்ல. ஆனால் நான் உங்களிடத்தில் வேண்டிக் கொள்கிறேன். அரசியல் சட்டத்தின் ஒரு பிரிவை எரித்த காரணத்திற்காக என்று குறிப்பிட்டு இந்தத் தீர்மானத்திலே போடப்பட்டிருக்கிறது.



(முற்பகல் 10-50)

நான் கேட்கிறேன். எங்காவது அரசியல் சாசனத்தை எரித் தார்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? (குறுக்கீடு) ஏனென்றால் அது எரிந்துவிட்டது. எரிந்தது இன்னது, எழுதப் பட்டது இன்னது என்று இதுவரையிலே எந்தக் கோர்ட்டிலும் நிரூபிக்கப்பட முடியாமல் இருக்கும்போது அவர்கள் அந்தக் காரணத்திற்காகப் பதவி இழக்கிறார்கள் என்று சொல்வது ஒரு நல்ல மரபு ஆகாது. நான் ஆழமாக இதிலே செல்ல விரும்பவில்லை. உணர்ச்சிகள் கிளறிவிடப்பட்டிருக்கின்றன. இன்று அரசியல் பூர்வமாக, கட்சி பூர்வமாக பிளந்து நிற்கிறோம். ஆனால் அண்ணா அவர்களே ஒரு காலத்திலே இந்தச் சட்டப் பிரிவை எரித்தார்கள். எரித்த பிறகுதான் அவர்கள் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக வந்தார்கள். (குறுக்கீடு). அண்ணாவின் சரித்திரத்தைத் தெரியாதவர்கள் இப்படிச் சொல்லக்கூடும்.

**Mr. SPEAKER:** He was arrested before burning (குறுக்கீடு).

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். ஆயிரம் ஆயிரம் பேர்கள் எரிப்பதற்கு அண்ணா அவர்கள் தூண்டுகோலாக இருந்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடி யாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர் களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதற்கு வந்தார்கள். கைது செய்யப்பட்டார்கள். ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. அதே அரசியல் சட்டத் தின்மீதுதான் அண்ணா அவர்கள் ஆணை எடுத்து முதலமைச் சராக வந்தார்கள். கொளுத்தப்பட்டு, அதன் பிறகு தேர்ந்தெடுக் கப்பட்டு, அதே அரசியல் சட்டத்தின்மீது பதவிப் பிரமாணம் எடுத்து, முதலமைச்சராக வந்தார்கள். (குறுக்கீடு) பொன் முத்து ராமலிங்கம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அவ சியம் எனக்கு இல்லை. அவர்களுடைய தலைவரிடம் போய் கேட்டுப் பார்க்கட்டும். நான் சொல்வது சரியா? தவறா?

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** அண்ணா செய்தது சரியா? தவறா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்துல் சமத் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகவி சொன்னதைப்போல நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். நான் ஒன்றை உங்கள் மூலமாக இந்த அவையை வேண்டுகிறேன். இந்திய அரசியல் சாசனத் தினுடைய ஒரு பிரிவை எரித்தார்கள் என்பதற்காக மாண்புமிகு நம்முடைய தோழர்கள், உங்களுடைய தலைமையை ஏற்றுக் கொண்டு இந்த அவையிலே அமர்ந்திருப்பவர்கள் You are the custodian of this House. இந்தச் சபையினுடைய கண்ணியத்தை யும் இந்தச் சபையில் இருக்கிற உறுப்பினர்களுடைய கண்ணியத்

தையும் காப்பாற்றுவதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கக் கூடிய உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அன்புகூர்ந்து இந்தத் தீர்மானத்தை திரும்பப்பெற்று, ஏற்கனவே நீங்கள் பதவி இழந்தார்கள் என்று அறிவித்திருக்கிற அந்த 7 மாண்புமிகு உறுப்பினர்களும் மீண்டும் இந்த அவையிலே வந்து செயலாற்றக் கூடிய சூழ்நிலையை நீங்கள் தோற்றுவிக்க வேண்டுமென்று இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாகக் கேட்டு, அமர்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே மரியாதைக்குரிய அவை முன்னவர் அவர்களால் முன்மொழியப் பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புவது ஜனநாயக நெறிமுறைகளை நடைமுறையில் காப்பாற்ற வேண்டுமென்கிற அக்கறையோடும், அவற்றின் மெய்யான உள்ளடக்கம் சேதாரப்படுத்தப்படக் கூடாது; ஜனநாயகக் கட்டமைப்புக்கு உள்ளேயே இத்தகைய சேதாரம் ஏற்படக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடும் தான் சில கருத்துக்களை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்ற பிரச்சனையை இரண்டாம் பட்சமாகத்தான் பார்க்க வேண்டும். ஆயுதம் இருக்கிறது என்பதாலேயே ஆயுதத்தை நாக்கப் பயன்படுத்தி விட முடியாது. அதிகாரம் இருக்கிறது என்பதாலேயே அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியே தீரவேண்டுமென்ற தேவையோ அவசியமோ இல்லை.

அதிலும் குறிப்பாக, இங்கே நமக்கு முன்னால் பிரதான பிரச்சினையாக இருக்கிற விஷயம் தகுதியின்மை என்று அறிவிக்கிற அதிகாரம் யாருக்கு இருக்கிறது என்பது. இதுகுறித்து பேரவைக்குள் மட்டுமல்ல; பாராளுமன்றத்திலே ஊறி, திளைத்து கரைகண்டிருக்கிற பல விற்பன்னர்கள் வெளியேயும் சொல்லி யிருக்கிறார்கள்.

அதைப்போன்றே அரசியல் சட்டத்தில் கரைகண்ட மேதைகள் பலரும் சொல்லியிருக்கிறார்கள். தகுதியின்மையை அறிவிக்கிற அதிகாரம் யாருக்கு இருக்கிறது என்பது மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பரவலாக, வெளிப்படையாகச் சொல்லப்பட்ட பின்னாலே அத்தகைய ஒரு தகுதியின்மை என்கிற தீர்மானத்தை இங்கே முன்மொழிவது பொருத்த மாகவோ சரியாகவோ இருக்குமா என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.



அதுவும் வேதனையோடு ஒரு விஷயத்தை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். பதில் அளிப்பதற்காக இதைச் சொல்லவில்லை. என்னுடைய மரியாதைக்குரிய அவை முன்னவர் அவர்கள் கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் தேதி இதே பேரவையில் ஒரு ஒழுங்குப் பிரச்சினை கிளப்பப்பட்ட போது என்ன சொன்னார்கள்? இந்தப் பிரச்சினை நீதி மன்றத்தில் இருக்கிறது. அவர்கள் குற்றம் புரிந்தார்கள் என்று நீதிமன்றத்திற்கு முன்னால் காவல் துறை நிறுத்தி இருக்கிறது. அவர்கள் குற்றம் புரிந்தார்களா இல்லையா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படாத நிலையில், இது பற்றி இந்தப் பேரவை ஒரு முடிவுக்கு வர முடியாது என்று சொன்ன நாவலர் அவர்களே இப்படி ஒரு தீர்மானத்தை முன்மொழியலாமா? இப்படி முன்மொழிவது ஒரு விபத்தல்லவா? இந்த ஜனநாயக விபத்துக்கு யார் காரணம்? ஏன் இத்தகைய விபத்துக்கு ஆட்படு கிறது இந்த மாநில அரசு என்று நான் கேட்க விரும்புகிறேன்.. (குறுக்கீடு) தயவுசெய்து இதிலே குறுக்கிடுவது என்பது சரியான முறையோ அல்லது பொருத்தமோ அல்ல. தேவையும் அல்ல. நான் ஸ்பீக்கர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன், பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தரப்பிலே நாங்கள் பேசுகிறபோது அவர்கள் தலையிடுவது நியாயம்தானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைத்தான் நான் அப்போதே சொன்னேன். அமைதியாக இருங்கள் என்று சொன்னேன். அப்போது அமைதியாக இருந்திருந்தால் அந்தப் பிரச்சினை வந்திருக்காது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** பேரவைத் தலைவர் அவர்களே, உறுதிமொழி மீறப்பட்டதற்காக அவை எடுத்த நடவடிக்கையை ஜனநாயக விபத்து என்று அருமை நண்பர், வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. சுப்பராயன் அவர்கள் கூறுகிறார்கள். செய்யாத ஒன்றுக்காக தான் செய்யவில்லை என்று திரு பால கிருஷ்ண பிள்ளை மறுக்கிறார். அதைப்பற்றி கேரள உயர் நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சில் வழக்கு இருக்கிறபோதே அந்த உறுதிமொழியை மீறியதற்காக அவரை அமைச்சரவையி லிருந்து விலக்க வேண்டுமென்று கேரள மாநிலத்தின் சட்ட மன்றத்தில் இடது கம்யூனிஸ்ட் கட்சியும், வலது கம்யூனிஸ்ட் கட்சியும் கேட்டார்களே; ஏன் இப்படி இரட்டை வேடம் போடு கிறீர்கள் என்பதற்கான விளக்கத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.... (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் கேட்கிற போது இன்னொரு உறுப்பினர் பதில் சொல்லலாம். அது அவைக்கு சம்பந்தப்பட்டது.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே' அவர் சொன்னது தவறான கருத்து.. (குறுக்கீடு) நம்முடைய துணைச் சபாநாயகர் அவர்கள் கேரள மாநிலத்தைச் சேர்ந்த

திரு. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். பதவிப் பிரமாணத்தை மீறிவிட்டார் என்று நீதிமன்றத்திலே தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகு சட்டசபை வெளியேற்றவில்லை. இந்திரா காங்கிரஸ் கேட்கவில்லை.....(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒன்றும் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சிங்கிள் பெஞ்ச் தீர்ப்பில் there is no operative portion of the Judgement. The Judge says I am referring the matter to the full bench. So the matter is not settled. But even then both the Communist parties have asked the Kerala State Assembly Speaker to expel the Minister Mr. Balakrishna Pillai. That is what you do there. But here you talk against expulsion. Why this double stand I am asking you this straight question. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Oath violate பண்ணப்பட்டு விட்டது என்று சொல்வதற்குரிய உரிமை சட்டசபைக்குத்தான் இருக்கிறது.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இங்கே அரசியல் சட்ட எரிப்பு பற்றி ...... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பராயன் அவர்கள் பதில் சொல்லவேண்டும். எனக்கும் தெரியவேண்டும் அல்லவா?

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன பேச வேண்டும் என்று தீர்மானிக்கவேண்டியது நான்தானே தவிர மற்றவர்கள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசியதற்கு பதில் சொன்னால் அவையில் விவாதம் நடத்துவதற்கு இலகுவாக இருக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாதம் கசாப்புக்கடை வைத்துக்கொண்டு காருண்யவாதம் பேசக்கூடாது என்பதுதான். எனவே கசாப்புக் கடை வைத்துக்கொண்டு காருண்யவாதம் பேசாதீர்கள். ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் என்று சொல்பவர்களுக்கு கேரளாவில் ஒரு நிலை, இங்கே ஒரு நிலையா? இரட்டை வேடம் ஏன் போடுகிறீர்கள் என்று நேரடியாகவே நான் கேட்டேன். எனவே நேரடியான கேள்விக்கு அருள்கூர்ந்து பதில் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)



(முற்பகல் 11-00)

திரு. கே. சுப்பராயன்: அமைதியாக கருத்துக்களைச் சொல்லுங்கள். ஆத்திரப்பட வேண்டிய அவசியமில்லை. அமைதியாக கேள்விகளைக் கேட்கட்டும். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம் அமருங்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதற்கு அவர்கள் பதில் வழங்கினால் சபையின் விவாதத்தற்கு நல்லது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: டெபுடி ஸ்பீக்கர் எழுப்பிய பிரச்சினைக்கு நான் ரிப்ளை பண்ணுகிறேன்.

திரு. கே. சுப்பராயன்: நானே பேசுகிறேன். கேரளத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆத்திரம் அறிவுக்குச் சத்துரு என்பதைச் சொல்லிவிட்டு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தடித்த வார்த்தையைப் பேசினால் அது திரும்ப வந்தால் அதைத் தாங்கிக் கொள்ளக்கூடிய மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். எறிந்தால் திரும்ப வரும்.

திரு. கே. சுப்பராயன்: தாங்களே வழிகாட்டுவது குறித்து மகிழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தடித்த வார்த்தையைப் பயன்படுத்தாதீர்கள். தடித்த வார்த்தையைப் பேசினால் மற்ற உறுப்பினர்களும் அதைப் பயன்படுத்துவார்கள்.

திரு. கே. சுப்பராயன்: எது தடித்த வார்த்தை என்பதைத் தாங்களே சொல்லுங்கள். ஆத்திரம் அறிவுக்குச் சத்துரு என்பது தடித்த வார்த்தையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது உங்களை ஒருவர் பார்த்து Mr. Subbarayan, Is there any sense in your argument என்று சொன்னால், What does it mean? You are talking nonsense என்றுதான் அர்த்தம். So, kindly adjust your language.

திரு. கு. ரமணி: கசாப்புக்கடை என்று சொல்வது சரிதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அமருங்கள். அறிவு என்று சொல்வது வேறு, கசாப்புக் கடை என்பது வேறு. இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

திரு. கு. ரமணி: கசாப்புக் கடை என்பது இருக்கலாமா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கசாப்புக் கடை என்பது நம்முடைய நாட்டிலே புழக்கத்திலே இருக்கிற வார்த்தை தான். கறிக்கடை என்றால் வெஜிடெபிள்ஸைக் குறிக்கும். கசாப்புக் கடை என்றால் ஆட்டுக் கறியைக் குறிக்கும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** நான் சொல்லிய இந்த உவமையை பல தடவை இதே சட்ட மன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். கசாப்புக் கடையை வைத்துக்கொண்டு காருண்யத்தைப் பேசக்கூடாது என்பது இதே அவையில் உங்களாலேயே பேசப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் குறிப்புகளைக் காட்டுகிறேன்.

**திரு. கே.சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்தில் திரு. பாலகிருஷ்ண பிள்ளை, பதவிப் பிரமாணத்தை, உறுதிமொழியை மீறியிருப்பதாக நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கிறது. ஆனால் இன்னமும் இங்கே அந்த நிலை இல்லை. அந்த நிலையில்லாதபோது இதை எப்படிச் செய்யலாம் என்பதுதான் எங்களுடைய நிலை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிங்கிள் நீதிபதி, ஒரு தனி நீதிபதி ஒரு கருத்தைச் சொல்லி, இதுபற்றிய இறுதி முடிவினை டிவிஷன் பெஞ்ச்தான் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த சிங்கிள் நீதிபதியினுடைய ஜட்ஜ்மெண்டில் There is no operative portion. அதை மாண்புமிகு திரு சுப்பராயன் அவர்கள் புரிந்து கொண்டால் நான் சொன்னதை நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்வார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே. நீதிபதி தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். நீதிபதி தீர்ப்பளித்து விட்டதால் பதவிப் பிரமாணத்திற்கு விரோதமாக அவர் நடந்திருக்கிறார் என்ற முறையில், அவர் விலக வேண்டுமென்றுதான் கம்யூனிஸ்ட் கட்சி அங்கே கோருகிறது. (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் வாதப் பிரதிவாதம் தேவையில்லை. இந்தத் தீர்மானத்தின் மீது பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையிலும் அரசியல் சட்டத்தை எரிப்பது பற்றி என்ன நிலை என்பது பற்றி வெகு தெளிவாக வெளியே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்ட எரிப்பைப் பொறுத்தவரையிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்னவென்பது பற்றி இங்கே பேசுவதற்கு அவசியமில்லை. ஆனால் அந்த நடவடிக்கைக்காக இங்கே இத்தகைய தண்டனை அளிப்பது என்பது சரியல்ல.



**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க தலைவர் அவர்களே, அரசியல் சட்டம் எரிப்பது சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கை என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கவில்லை. ஆனால் அரசியல் சட்ட எரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது என்பது அவர்கள் கொள்கை நிலையிலிருந்து அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையிலும் அத்தகைய நிலையை ஆதரிக்கவில்லை. ஆனால் அதற்காக இங்கே தகுதியின்மை என்று சொல்லி நடவடிக்கை எடுப்பது என்பது, அரசியல் பிரச்சினையை, அரசியல் ரீதியாகச் சந்திக்கவேண்டுமே தவிர, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன். ஒன்றை நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் உங்களுடைய வாதத்தைச் சொன்னீர்கள் திரு. சித்தன் அவர்கள் கேட்டதற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டத்தை மீறினால் அவர்களுக்காக இங்கே நாம் பேச வேண்டும். ஆனால் சாதாரண குடிமகன் வெளியே சட்டத்தை மீறிவிட்டால், அவனுக்காக நீங்கள் இங்கே பேசமாட்டீர்கள். அவன் மட்டும் வழக்கிற்காகச் சென்று, சிறைக்குச் சென்று அனுபவித்து சிறைச்சாலையிலே மடிய வேண்டும். அவனுக்கு நாம் 'ஏ' கிளாஸ் கொடுப்பது கிடையாது. அவன் சமுதாயச் சீர்கேட்டினால் குற்றத்தைப் புரிகிறான். அங்கே சிறைச்சாலைக்குச் செல்கிறான். அவனுக்கு அங்கே கிடைக்கக்கூடிய வசதிகள் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து, அவர்களுக்கு 'ஏ' கிளாஸ் வழங்கி இருக்கிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அவமதிப்பு செய்தார்களானால் அவர்களைத் தண்டிப்பதற்கு தேசிய அவமதிப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் தண்டிக்க இருக்கிறபோது, இங்கே அந்தச் சட்டத்தினுடைய உரிமையை நீங்கள் கையிலே எடுத்துக் கொள்வது சரியல்ல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேசிய அவமதிப்பை காவல் துறையினர் கண்காணிக்கிறார்கள். அரசியல் சட்டத்தை மீறிவிட்டார்களா, அரசியல் சட்ட உரிமையை மீறிவிட்டார்களா என்று பார்ப்பதற்கு அவைக்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** அரசியல் சட்டத்தினுடைய உரிமையை மீறியிருக்கிறார்களா என்பதைப் பற்றி முடிவு எடுக்காமல் இருக்கிறபோது........

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொளுத்திய அன்றே மீறி விட்டார்கள். அறிவித்த அன்றே மீறி விட்டார்கள். இன்னமும் கேட்கிறேன். நீங்கள் இதை முழுமையாக ஆதரிக்கிறீர்களா? எரிக்கலாமா? நான் இப்போது ஒவ்வொரு உறுப்பினரையும் கேட்கிறேன். அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கப் போகிறீர்களா, எரிக்கப் போகிறீர்களா? எரித்தால் என்ன நடவடிக்கை? எரித்த விவகாரத்தைப் பற்றி இங்கே பேசாமல் இப்போது எடுக்கப் படக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டு இருக்கிறீர்கள். இது முறையல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டத்தை மதியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இறுதி யாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எரித்தது சரியா, தவறா என்று திசை திருப்புவது என்பது சரி யான வழிமுறையல்ல. நாம் இங்கே விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு இருப்பது, அவர்களைத் தகுதியின்மையாக ஆக்குவது என்ற பிரச்சினை பற்றித்தான். அவர்கள் என்ன தவறு செய்திருக் கிறார்கள் என்பதைப் பார்த்து, அந்தத் தவறை தண்டிப்ப பதற்கு உரிய சட்ட வாய்ப்புகள் இருக்கிறபோது, அந்த வாய்ப்புக்கு தண்டிக்கிறவரை காத்திருக்காமல், அள்ளித் தெளித்து அவசரக் கோலத்திலே இங்கே ஒரு முடிவுக்கு வருவது, காலம் காலமாக பதித்து வைக்கக்கூடிய சட்டமன்றப் பேரவைக் குறிப்பேட்டில் ஒரு களங்கத்தை ஏற்படுத்தும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எரித்தது இந்தக் குறிப்பேட்டில் இருக்கும், அதை நான் எடுக்கப் போவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு உள்ளே வந்து பேசியிருக் கிறார்கள். வெளியிலேயும் எரித்து இருக்கிறார்கள். உறுதி மொழியை இந்திய அரசியல் சட்டத்தின்படி எடுத்தார்கள். குறிப்பில் இருக்கப்போகிறது. பார்க்கப் போகிறீர்கள், வருகின்ற காலத்தில் எல்லோரும் பார்ப்பார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** தாங்கள் முன்னரே வழங்கிய தீர்ப்பை ஒட்டியும், இன்றைக்கு முன்மொழியப்பட்டு இருக்கிற நடை முறை என்பது அடிப்படையான ஜனநாயக உரிமைகளைப் பறிப்ப தோடு, நடப்பில் தண்டிப்பதற்கு உரிய சட்டங்களை நிச்சயமாக கேவலப்படுத்துகிறது என்கிற முறையில், இந்த நடவடிக்கைகளை வாபஸ் பெறவேண்டும், புனர் பரிசீலனை செய்து, முழுவதையும் 'வித்ட்ரா' செய்யவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வலியுறுத்திக் கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்மொழிந்த, சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்யக்கூடிய இந்தத் தீர்மானத்தை ஜனதா கட்சி எதிர்க்கிறது. (கூச்சல்—குழப்பம்.) இந்தத் தீர்மானத்தை ஜனதா கட்சி எதிர்க்கிறது.



அரசியல் சட்டத்தினுடைய ஒரு பகுதியை எரிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு எடுத்து, அந்தச் சட்டத்தின் ஒரு பகுதியை எரித்ததை ஜனதா கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அதைக் காரணம் காட்டி, இந்தப் பதவி பறிப்பு செய்வது என்பதை ஜனதா கட்சி எதிர்க்கிறது. சட்டத்தின் ஒரு பகுதியை எரிக்கப் போவதாக சென்ற 9–11–1986 அன்று கோவையிலே கூடிய திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிலே திட்டம் திட்டப்பட்டு, ஒவ்வொரு இடத்தி லேயும் யார் யார் சட்டத்தை எரிக்கப் போகிறார்கள் என்று விளம்பரம் செய்யப்பட்டு, அதனுடைய கட்சித் தலைவர் கருணாநிதி அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எரிக்கின்ற இடத்திற்கு முதல் நாள் சென்று, அங்கு மேடை போட்டு, இவர்கள்தான் சட்டத்தை எரிப்பார்கள் என்று சொல்லி, அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து 'தம்பி சென்று வா, வென்று வா' என்று வழி அனுப்பி வைத்த போதெல்லாம் இந்த அரசு சும்மா இருந்துவிட்டு, அவர்கள் சட்டத்தை எரித்த பிறகு கைது செய்திருப்பதால்தான் இந்த நிலைமை வந்திருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்) அவர்களை அதற்கு முன் பாகவே கைது செய்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது, அவர்கள் பதவி இழக்கமாட்டார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

[முற்பகல் 11–10]

**திரு. பி. முசிறிபுத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா கட்சியின் சார்பில் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த இந்தி விஷயத்தில் அவர்கள் சட்டத்தை எரித்ததை ஜனதா கட்சியினர் ஏற்றுக் கொள்கிறார்களா? ஜனதா கட்சியினர் ஏற்றுக்கொள் கிறார்கள் என்றால் இந்தப் பிரச்சினையில் அவர்களுடைய கொள்கை என்ன என்பதை அவர்கள் மீண்டும் ஒரு தடவை சொன்னால் சிறப்பாக இருக்கும்

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின் ஒரு பகுதியை எரித்ததை ஜனதா கட்சியினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். (கூச்சல்-குழப்பம்).

**திரு. பி. முசிறிபுத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியபடி அரசியல் சட்டத்தை அவர்கள் எரித்தார்கள் என்பதற்கு ஜனதா கட்சித் தலைவர் திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர் களும் சாட்சியாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன் (கைத்தட்டல்)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரித்ததற்குப் பிறகு கைது செய்ததால் தான் இந்த நிலை வந்திருக்கிறது.

இன்னும் ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கைது செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் நான் எரிக்கச் சென்றது வாஸ்தவம்தான். எரிப்பதற்கு தீப்பெட்டியை கொளுத்தினேன், ஆனால் எரிப்பதற்கு முன்பாகவே போலீஸார் என்னை பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று சொன்னால் நீங்கள் என்ன செய்ய இருக்கிறீர்கள் என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் இந்த நேரத்தில். ஏன் என்று கேட்டால் வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது. அப்படி வழக்காடும் போது எப்படி எப்படியோ திசை திரும்பலாம். இப்போது எரித்தார்கள் என்று சொல்லுகிறீர்கள். அவர்கள் நாங்கள் எரிக்கவில்லை, போலீஸார் எங்களைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொன்னால் என்ன செய்ய இருக்கிறீர்கள் இப்போது பதவியிலிருந்து நீக்கிவிட்டவர்களை.

அதேபோல் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் எனக்கு இந்தக் கோட்டைக்குள் தான் அதிகாரம் இருக்கிறது என்று பலமுறை சொல்லியிருக்கிறார்கள். இது கோட்டைக்கு வெளியே நடந்த சமாச்சாரமாக இருக்கிறது. இதில் தீர்ப்பளித்து இருக்கிறீர்கள்.

இன்னும் ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சபாநாயகர் அவர்கள் பலமுறை நான்தான் உங்களுக்கு எல்லாம் கார்டியன், உங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகின்ற சபாநாயகர் அவர்கள் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படி இந்தச் சட்டத்தை எரித்தால் நீங்கள் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்று முன்கூட்டியே அறிக்கை விட்டு இருக்கலாம். ஏன் என்றால் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் பாதுகாக்கக்கூடிய ஒரு சபாநாயகர் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்களிடம் முதலிலேயே 8-ஆம் தேதியே சொன்னேன். சட்டப் பிரச்சினை. எரிக்காதீர்கள். எரித்தால் பிரச்சினை உண்டு என்று அவரிடம் சொன்னேன். சட்டமன்றம் கூடுவதற்கு முன்பே சொல்லி விட்டேன். தி.மு.க.வின் சீப் விப்பான திரு. பாலன் அவர்களையும் கூப்பிட்டுச் சொன்னேன். (குறுக்கீடு) ரைட்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தவிர நீங்கள் இப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களைத் தொடர்ச்சியாக முன்பு 7 பேர்; இப்போது 3 பேர் என்று



பதவி நீக்கம் செய்து கொண்டு வருவதைப் பார்க்கும் போது சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியின் குரல் இல்லாமல் செய்து விடுவதற்கு முயற்சி செய்கிறீர்களோ என்று கூட எனக்கு நினைக்கத் தோன்றுகிறது.

இன்னும் ஒன்றைக் கூட நான் சொல்ல வேண்டும்** (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். நீங்கள் சீக்கிரமாக முடித்து விடுங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உரிமைக் குழு என்று ஒன்று இருக்கிறது. அந்த உரிமைக் குழுவிற்கு இதை விடலாம். அல்லது சட்டமன்றமே ஒரு சிறப்புக் குழுவைக் கூட நியமிக்கலாம், அப்படி ஒரு குழுவை நியமித்து அந்தக் குழு சொல்லுகின்ற முடிவை வைத்து—குற்றம் செய்தவர்கள் என்று சொல்லுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நிலையை விளக்குவதற்கு வாய்ப்பு அளித்து—அதன் பிறகு இந்தப் பேரவை முடிவு செய்யலாம் என்று கேட்டு இந்தத் தீர்மானத்தை வாபஸ் பெற வேண்டும் என்று ஜனதா கட்சியின் சார்பில் கேட்டு, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நீங்கள் சத்தம் போடுவதாக இருந்தால் வெளியே போய் போடலாம். நீங்கள் என்ன ரிமார்க் வேண்டுமென்றாலும் சொல்லலாம். நாங்கள் இங்கே பேச முடியவில்லை என்றால், வெளியே போய்ப் பேசப் போகிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் கடுமையாக எதிர்க்கிறேன். இந்தத் தீர்மானம் முறையற்றது. நியாயம் அற்றது. நீங்கள் என்ன பேசினாலும் இது ஜனநாயகத்திற்கு ஒத்தது அல்ல என்று கூற விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவருவது ** என்று முதலிலே சொல்வதற்கு நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கப் பார்த்தேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தையை நீங்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கு. ரமணி: இது உங்கள் உரிமை. நான் சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். தலைவர் அவர்களே, நான் எனக்குச் சரி என்று பட்டதைச் சொல்கிறேன். இது ** என்று நீங்கள் தீர்ப்புச் சொல்லுங்கள். நான் சொல்லவில்லை. நம்முடைய சபையினுடைய விதிகள் 76 (6) 82 இவைகளை நீங்கள் எடுத்துப் பார்த்தால், நிச்சயமாக, இப்படி ஒரு தீர்மானத்தை இந்த நேரத்திலே இங்கே கொண்டு வருவது சரியானதல்ல என்பது தெரியும். அப்படியானால் இதை முன்னாலேயே கொண்டு வந்திருக்கலாம். ஏன் முன்னாலேயே கொண்டுவரவில்லை? அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் நம் கையில் இருக்கிறது என்று பேசவில்லை, நிலைமை வேறு விதமாகப் போனது. ஆக எங்களுக்கு வழி காட்டியாக இருக்கக்கூடிய தலைவராகிய நீங்கள் விளக்கியிருக்கலாம். தீர்மானம் 7 பேருக்கு வராமல் இந்த 3 பேருக்கு வருகிறது என்று சொல்லியிருக்கலாம். இந்தத் தீர்மானம் முழுமையாகவும், ஒழுங்காகவும் அமையவில்லை. தீர்மானத்தினுடைய ஒரு துண்டு முதலில் வந்தது. வேறு ஒரு துண்டு பிறகு இணைக்கப்பட்டது. பேசி முடிப்பதற்குள்ளே இன்னொரு துண்டும் இணைக்கப்படலாம். எது வந்தாலும் நியாயமானதாகவும், ஜனநாயகத்திற்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

குற்றம் செய்தவர்கள் இந்தச் சபையில் இல்லை. அவர்கள் சிறையில் இருக்கிறார்கள். என்ன குற்றம் என்பது— இந்தச் சபையினுடைய எல்லைக்குள்ளேயிருந்து செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சி மீது இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டது அல்ல— வெளியிலே செய்யப்பட்ட ஒன்று. அரசியல் சட்டம் வகுக்கப்பட்ட பிறகும் பாராளுமன்றத்தில் அரசியல் சட்டத்தில் சொல்லப்படாதனவகளுக்கு வேறு விதமான சட்டங்கள் இயற்றப்பட்டன. இங்கேயும் நாம் அப்படித்தான் செய்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினரை அந்த மாநிலத்திலே உள்ள சட்டமன்ற சபாநாயகர் 'எக்ஸ்பல்' பண்ணலாம் என்று அரசியல் சட்டம் முழுவதிலும் எங்கும் இல்லை. நாங்கள் எல்லாம் சட்டம் படிக்காதவர்கள். அதனாலே நீங்கள் எங்களுக்கு எடுத்துக் காட்டலாம். அரசியல் சட்டத்தில் ஒரு தலைவர் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை 'எக்ஸ்பல்' பண்ணலாம், இந்த பயங்கரமான தவறு செய்தால், என்று எடுத்துக்காட்டுங்கள். தமிழகத்தினுடைய தொன்மை வாய்ந்த சட்ட மன்றத்தில் பல நல்ல காரியங்களுக்கு இன்றைக்கும் எடுத்துக்காட்டாக இருக்கின்ற இந்தச் சட்டமன்றத்தில்—எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினை மற்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாநிலங்களிலும் கிளப்பப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் கூட ஒரு தீர்ப்பு என்று கிளிஞ்ச் பண்ணி நமக்குக் கொடுக்கவில்லை. அப்படியானால் அரசியல் சட்டத்தின் கீழ் இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை எடுத்து, இங்கே தீர்ப்பு கொடுக்க முடியாது. நம்முடைய சபைக்குள் ஏற்பட்ட நடவடிக்கை விஷயங்களில் நாம் செய்யலாம். சபைக்கு அப்பாற்பட்டு வெளியிலே நடக்கின்ற நிகழ்ச்சி இது. இதிலே தீர்ப்பு கூறமுடியாது. மரியாதையைக் காப்பாற்றக் கூடிய, தேசத்தினுடைய அரசியல் சட்டத்தையும், தேசியக் கொடியையும், மற்றவிதமான தேசத்தினுடைய மதிப்பு வாய்ந்த எந்த விஷயத்தையும் நாம் அவமதிப்பதைக் கட்டுப்படுத்த என்று நடவடிக்கை வந்தால், நிச்சயமாக அதன் பேரில் நடவடிக்கை எடுக்க சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ்தான் இது வரும். அந்தச் சட்டத்தின் கீழ் வந்தால்தான் இங்கே வந்து அது எடுக்க வேண்டிய நடவடிக்கை ஆகும். அப்போது என்ன வரும்?

(முற்பகல் 11-20)

நமது அவை முன்னவர் அவர்கள் நவம்பர் 21 ஆம் தேதி அன்றைக்கு இந்தப் பிரச்சினை இங்கே கிளப்பப்பட்ட போது அவருக்கே உரித்தான பாணியில் சொன்னார். அவர் சொன்னது நியாயமானது என்று கருதுகிறேன். அவர்கள் குற்றம் செய்தவர்கள் என்று கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் சிறையில் இருக்கிறார்கள். வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த வழக்கை அவர்கள் எப்படி நடத்தப் போகிறார்கள் என்பதில் கூட பிரச்சினை இருக்கிறது. அப்படி அந்த வழக்கு நடத்தப்பட்டு அதில் தீர்ப்பு வெளியாகி அந்தத் தீர்ப்பிலே சாதக பாதகங்கள் என்ன என்பதை நாம் பார்த்து இந்தச் சட்டமன்றத்தில் அந்தச் சமயத்தில் அல்லது அதற்குப் பிரகுதான் அந்த விஷயத்தை எடுத்துக்கொள்ள முடியும் என்று அவர் அன்றைக்குச் சொன்னார். சொல்லி, அந்த விஷயம் அப்படியே நின்றது. அதற்குப் பிறகு நாம் இங்கே பர்சியூ பண்ணவில்லை அப்படிப் பண்ணினதற்குப் பிறகு அதே விஷயம் இன்றைக்கு வந்திருக்கிறது. அப்படியானால் இந்த இடைக்காலத்திலே என்ன மாற்றம் சம்பவித்தது என்பது எங்களுக்குப் புரியவில்லை. கோர்ட்டில் வழக்கு தீரவில்லை, நடந்து கொண்டிருக்கிறது. எதிலும் ஜட்ஜ்மெண்ட் வரவில்லை. அப்படி இருக்கும் பொழுது எப்படி மறுபடியும் இந்தப் பிரச்சினை இந்த ரூபத்திலே இங்கே எப்படி வந்தது என்பதுதான் பிரச்சினை. அதனால்தான் நாங்கள் சொல்கிறோம். இது சரியல்ல; 24-ந் தேதி நம்முடைய அவைத் தலைவர் அவர்கள் முடிவு எடுத்து

அறிவித்தார்கள். அவருடைய முடிவில் நாம் ஒன்றும் கேள்வி கேட்க முடியாது. அவருடைய முடிவு என்ன? அவருடைய முடிவு 7 பேர்கள் பதவி இழக்கிறார்கள் என்பது. அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன்.

அரசியல் சட்டம் 191, 192 பிரிவில் டிஸ்குவாலிபிகேஷன் என்பது என்ன என்று தெளிவாகச் சொல்லப்படுகிறது. அந்த டிஸ்குவாலிபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஆர்ட்டிகிள் 192-லே 5 அம்சங்கள் இருக்கின்றன. அது எப்படி இங்கே வரும்? அது இங்கே வரவில்லை. நம்முடைய தலைவர் அவர்கள் அந்த அடிப்படையிலே சொல்கிறார்கள். அது வந்துவிட்டது என்று சொன்னால் அதற்கு அப்பாற்பட்டுதான் பிறகு பேச வேண்டி வரும். அது அல்ல பிரச்சினை. மறுபடி இந்தமாதிரி வந்துவிட்டது என்று சொன்னால் என்ன செய்ய வேண்டும்? ஒரு டிஸ்குவாலிபிகேஷனுக்கு தேவையான குற்றத்தை ஒரு உறுப்பினர் செய்துவிட்டால் அந்த விஷயத்தை இந்த அவையிலே நாம் விவாதிக்க வேண்டும். தலைவர் அவர்களே, இந்தச் சட்ட ஷரத்துக்களினுடைய எண்ணிக்கையை நான் சொல்லும்போது, என்னுடைய ஞாபகத்திலிருந்துதான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஏதாவது எண்ணிக்கை மாற்றம் இருக்குமென்றால் it is subject to correction, அதையும் நான் சொல்லிவிடுகிறேன். இங்கே அந்த விஷயத்தை சபைக்கு முன்னால்—சபையினுடைய உறுப்பினர்கள் நல்லதைச் செய்தார்களோ, கெட்டதைச் செய்தார்களோ, என்ன செய்தார்கள் என்ற குற்றச்சாட்டை நாம் வைத்து—விவாதிக்க வேண்டும். அந்த விவாதத்திலே குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அது முடிந்த பிறகு இந்தச் சபை குற்றவாளிதான் என்று சொன்னதற்கு பிறகு அல்லது இவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டியவர் என்று சபை முடிவிற்கு வந்ததற்குப் பிறகு நமது தலைவர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுக்கு அனுப்பி வைத்து, அதே மாதிரி எலக்ஷன் கமிஷனுக்கும் அனுப்பி வைத்தாக வேண்டும். நாமாகவே, இந்த மெம்பர் பதவி இழந்துவிட்டார், அவரும் இல்லை, அவர் இருக்கின்ற இடமும் காலி என்று சொல்லிவிட்டால், அதை எலக்ஷன் கமிஷன் ஒத்துக்கொள்ளவில்லை என்றால், அந்த காலி இடத்திற்கு நாம் தேர்தலை நடத்த முடியாது. எப்படி அந்த காலி இடத்தை நிரப்புவது? ஆகவே, இது அரசியல் சட்டத்திலும் வகை செய்யப்பட்டு இருக்கக்கூடிய விஷயம். நமது மதிப்பிற்குரிய தலைவர் அவர்களுடைய அதிகாரம் ஒரு ஸ்டேட் லெஜிஸ்லேச்சர் என்ற முறையில் எந்த எல்லைக்குள் இருக்கிறது என்பது தெளிவாகும். அதை மீறி நாம் போக முடியாது. இந்த விஷயம் நாம் சபைக்கு முன்னால் விவாதிக்கவும் இல்லை. விஷயம் அப்படி வந்தாகி விட்டது. ஆனால் அவரே இங்கே சொல்லிவிட்டார். இந்த என்னுடைய முடிவை நான் மேன்மைதங்கிய கவர்னர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். எலக்ஷன் கமிஷனுக்கு இதைச் சமர்ப்பிக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். Otherwise it will give a different impression. அதாவது எலக்ஷன் கமிஷனுக்கு, கவர்னருக்கு அனுப்புவது என்பது to take note of the vacancies that have arisen under Art. 194(3) of the Constitution of India. நான் இங்கே சொல்லும்போது they cease to be Members of this House. They have voluntarily relinquished their rights to sit in this House by their own acts as they have burnt the Constitution. அதாவது 194 கிளாஸ் 3-லே வேகன்சி—காலியிடம் என்பது கவர்னர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பாலோ-அப். திரும்ப, இங்கே வந்து நீங்கள் அவைக்குள் நுழையும்போது, உறுதிப்பாடு எடுத்துக் கொண்டு வருகிறீர்கள். நீங்களே வாலண்டரியாக உறுதிப்பாட்டை மீறுகிறீர்கள் என்றால், நீங்களே, you have abandoned your right to sit in the House. Before taking the seat you should take oath என்றிருக்கிறது. So, you have voluntarily relinquished your right. You have abandoned the right to sit in the House. நீங்கள் செய்ததுதான். நான் செய்யவில்லை. This is by way of further explanation.

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** After taking oath. கான்ஸ்டிடியூஷனிலே என்ன இருக்கிறது என்று சொல்லுங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுதான் ரூல்—4 ரெட் வித் 312. (குறுக்கீடு)

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே விவாதம் இப்படி போயிருந்தது என்றால் நமக்கு ரொம்பப் பிரயோஜனப்பட்டிருக்கும். இப்போது தலைவர் அவர்கள் சொல்லக்கூடியதிலே எனக்கு டிஸ்—அக்ரிமெண்ட் இருக்கிறது. உங்களுடைய தீர்ப்பை நான் கேள்வி கேட்கவில்லை. ஆனால் அவர்கள் சீட் 'வேக்கண்ட்' ஆகிவிட்டது என்று தீர்மானித்து நமது சபைக்கு அறிவிப்பது யார்? அதுதான் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாங்களே இங்கே இருந்து போய்விடுகிறோம் என்று சொல்லிவிட்டுப் போவது மாதிரிதான். You have voluntarily abandoned your right to sit in the House. கான்ஸ்டிடியூஷனிலே இருக்கிற 'லாங்குவேஜைப் பார்த்து don't mean it உள்ளே வந்து உட்காரும்போது 'ஒத்' எடுத்துக்கொண்டு வந்து உட்காருகிறீர்கள். நீங்களே வெளியே போய்விடுகிறீர்கள். நாங்கள் oath-ஐ violate பண்ணிவிட்டோம் என்று. You have voluntarily relinquished your right. (குறுக்கீடு)

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, ஒருவர் தானே 'வெக்கேட்' பண்ணும் விஷயம் வேறு. அதுவும் கான்ஸ்டிடியூஷனிலே இருக்கிறது, நமது விதிகளிலும் இருக்கிறது. வெக்கேஷன் என்பது டிஃபரண்ட், டிஸ்குவாலிபிகேஷன் என்பது டிஃபரண்ட். யார் அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினையைப் பற்றித்தான் நாம் சொல்கிறோம். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். தயவுசெய்து at the end of my speech

சொல்லுங்கள். இந்த விஷயம் வந்ததற்குப் பிறகு, எலெக்ஷன் கமிஷனுக்கும் போய் ஆகிவிட்டது. மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுக்கும் போய் ஆகிவிட்டது. கவர்னரும், எலெக்ஷன் கமிஷனும் என்ன பதில் சொன்னார்கள், நம் கைடன்சுக்கு உங்கள் கைடன்சுக்கு, எங்களுடைய கைடன்சுக்கு, சபையினுடைய கைடன்சுக்கு—ஏனென்றால், நீங்கள் எங்களோடு சேர்ந்தவர்தானே? கண்ணும், மூளையும், காதும் இந்த சபைதான் உங்களுக்கு. அப்படித்தானே நிலைமை? நாங்கள் இல்லாமல் உங்கள் ஆக்ஷன் இல்லை. நீங்கள் இல்லாமல் எங்கள் ஆக்ஷன் இல்லை. 'It is so integrated'. அப்போது நீங்கள் எங்கள் தீர்மானம் மாதிரிதானே அனுப்பியிருக்கிறீர்கள்? அதைப்பற்றி நாங்கள் இங்கே விவாதிக்கவில்லை. நாங்கள் விவாதிக்கவேண்டும் என்று கேட்டோம். என் தீர்ப்பைப்பற்றி நீங்கள் விவாதிக்கவேண்டாம் என்று சொன்னீர்கள். நாங்கள் விட்டுவிட்டோம். வேறு வழி என்ன இருக்கிறது? அங்கே போனதற்குப் பிறகு மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் என்ன முடிவு கொடுத்தார் என்று நாங்கள் கேட்கமுடியாதா? கேட்கவேண்டும் என்று எனக்குப்படுகிறது. In the interest of democracy we want that information. நாங்கள் இங்கே கேட்கிறோம். வெளியிலே இருந்து கேட்கவில்லை. வெளியிலிருந்து ஜனங்கள் கேட்கலாம். அதற்கு நாம் ஒன்றும் செய்யமுடியாது.

இங்கே நமக்கு கவர்னர் என்ன தீர்ப்பு கொடுத்தார், என்ன செய்திருக்கிறார் என்று தெரியவேண்டும். அப்போதுதான் இப்போது விவாதிக்க வந்திருக்கிற விஷயம்—சரியான இடத்திற்குப் போகமுடியும். அதேமாதிரி, எலெக்ஷன் கமிஷனுடைய முடிவு என்ன? கவர்னரும் தானாகப் பார்த்து எது வேண்டுமானாலும் செய்துவிடமுடியாது. அதற்கும் இந்தச் சட்டத்திற்குள்ளே கட்டுப்பாடு இருக்கிறது. எலெக்ஷன் கமிஷன் சொல்லக்கூடிய ஆலோசனையை அவர் பிரகடனப்படுத்துவதைத் தவிர, அந்த ஆலோசனையை எடுத்தெறிவதோ, அதை வேண்டாம் என்று சொல்வதோ, இது சரியல்ல என்று வேறு முடிவோ கவர்னர் அவர்கள் செய்யமுடியாது.

நாம் சொல்வதை கவர்னர் அவர்கள், அவர்களுக்கு கம்யூனிகேட் பண்ணுகிறார். அங்கே எலெக்ஷன் கமிஷன் தீர்மானம் செய்து என்ன முடிவு எடுக்கிறார்கள்? That action attracts the Peoples Representation Act also. இப்போது அப்படி வருகிறது. அங்கேயிருந்து பதில் வரவேண்டும். அந்தப் பதிலை கவர்னர் வெளியிடுகிறார். சரியா, தப்பா என்று வெளியிடுகிறார்.

அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்திலேதான். இப்போது நாம் இந்த விஷயத்தைப் பற்றி, இரண்டாவது தீர்மானத்தை முதலாவது முடித்து, இப்போது மூன்று பேரைப் பற்றிய தீர்மானத்தை நாம் விவாதிக்கிறோம். இவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றனவா, இல்லையா? அதனாலேதானே நாம் சொல்கிறோம்? இந்தச் சபைக்கு, நமக்கு ஒருவரை 'எக்ஸ்பெல்' பண்ணுவதற்கு உரிமை



(முற்பகல் 11-30)

இருக்கிறதா என்று கேட்டால்—திருமதி இந்திராகாந்தி அவர்களை 'எக்ஸ்பெல்' பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள், பாராளு மன்றத்திலே, உரிமைக் குழுவுக்கு அனுப்பி, விவாதம் செய்து, அந்த எக்ஸ்பெல்ஷனை நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். தவறு என்று சொன்னோம், மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கும் படியான ஒரு பிரதிநிதியை நாம் நினைத்தபடி 'எக்ஸ்பெல்' பண்ணி வெளியேற்றுவது சரியல்ல என்று சொன்னோம். கெடுதல் செய்யக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடந்தால், இந்தச் சபைக்கு முடிவு எடுக்கமுடியவேண்டும். அந்த முறையிலேதான், அப்படிப்பட்ட நடவடிக்கைகள் அங்கேயும் நடந்திருக்கின்றன. இதுமாதிரி வேறு மாநிலங்களிலும் வந்திருக்கிறது. நான் அதற்கெல்லாம் போக வில்லை. இந்த 'எக்ஸ்பெல்ஷன்' என்ற விஷயம் எப்படி இவ்வளவு துரிதமாக, நம் சபையிலே விவாதிக்காமல் நடக்கமுடியும்? நடக்க முடியாது என்பது எங்களுடைய கருத்து. அப்படி ஒன்றும் நடந்து விடவில்லை. அதுபற்றிதான் இப்போது பிரச்சினை வந்திருக் கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் செய்திருக்கக்கூடிய தவறுகளுக்கு மெக்கானிக்கலாக ரூல்ஸை அப்ளை பண்ணுவதா என்பதுதான் பிரச்சினை. இந்த அவையினுடைய ஜீவன் என்ன? சத்து என்ன? இங்கே வரக்கூடிய முக்கியமான பாயின்டாக இருப்பது, அரசியல் சட்டம் அவமதிக்கப்பட்டதா? அது மீறப் பட்டதா? இல்லையா என்பது. அது எங்கெங்கே மீறப்பட்டாலும் அங்கங்கே நடவடிக்கை எடுப்போம் என்றால் மீறப்பட்டதா, இல்லையா என்பதை யார் தீர்மானிக்கவேண்டும்? அது கோர்ட்டிலே தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம். நம்முடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட இடத்தில் நடந்திருக்கிறது. அதற்குத் தனிச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்போம். நீதிமன்றத்தின் தடைக்கு மேலே you cannot sit in judgement. அரசு அமைப்புக்கே அது சரியல்ல. அதை நாம் நினைவூட்ட வேண்டியிருக்கிறது. இந்தத் தீர்மானத் திலே ஒரு வார்த்தை இருக்கிறது. அதிலே என்ன சொல்லப் படுகிறது? தீ வைத்து கொளுத்தப்பட்டதென்று. கோர்ட்டிலே இருக்கக்கூடிய ஒரு விஷயம் அது. விவாதம் நடந்து சட்ட நுணுக்கங்கள், தேசிய கௌரவத்தைப் பாதுகாக்கின்ற சட்டம் People's Representation Act அரசியல் சட்டம், நமது விதிகள்—இத்தனையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு விவாதித்து தீர்மானிக்கப்படவேண்டிய ஒரு விஷயம் அது. வெளியில் நடந் திருக்கக்கூடியதன் பேரிலே எடுக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு கிரிமினல் நியூசன்ஸ் மாதிரி. இந்தப் பக்கத்திற்கு வராதே என்கிறோம். வந்துவிட்டால், நான் கேட்கிறேன், நம் நாட்டினுடைய பாரம்பரியம் இப்படியானால் மகாத்மா காந்தி என்னவாகி இருப்பார் என்றே நாம் சொல்ல முடியாது. எத்தனை சட்டங்கள் மீறப்பட்டிருக்கின்றன? என்னுடைய 55 வயது அரசியல் வாழ்வில் எத்தனை வழக்குகள் போட்டிருக்கிறார்கள் என்பது எனக்கே தெரியும். ஆனால் ஒரு நாட்டினுடைய விடுதலைக்காக நடக்கிற போராட்டத்தில் சட்டங்களை மீறவேண்டி

யிருக்கிறது. சட்டங்களை மீறுவது இங்கே இப்போது ஒரு வழக்கம். ஒரு நாட்டிலே சட்டம் மீறப்படவில்லையென்றால் கூட்டத்தை நடத்தவில்லையென்று ரெபரன்ஸ் வந்திருக்கிறது. சட்டம் மீறுவதை கோர்ட் தீர்மானிக்கும்; சின்ன கோர்ட்டோ, பெரிய கோர்ட்டோ. இது நெம்பர் 1 கான்ஸ்டிடியூசனல் இஷ்யூ. அதே மாதிரி லெஜிஸ்லேச்சர். இன்றைக்கு இருக்கக்கூடிய உறவு இப்படிப் பட்டது. இதெல்லாம் இதில் வரும்; அப்படிப்பட்ட விஷயம். இது ஒரு முக்கியமான விஷயமாக விவாதிக்கப்பட இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், நீதிமன்றம் தீர்ப்பு அளிப்பதற்கு முன், இங்கே நாம் தீர்ப்பு அளிப்பது என்பது அவர்கள் அந்தக் குற்றத்திற்கு ஆளாககப்படுவார்கள் என்று சொல்லக்கூடிய நமது அவையினுடைய உறுப்பினர்கள், இன்றைக்கும் அவையினுடைய உறுப்பினர்கள்தான். அவர்களுடைய கணக்கைத் தீர்க்கிற வரைக்கும் அவர்கள் அவையின் உறுப்பினர்கள். அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய மிகப் பெரிய கெடுதலான, ஜனநாயக விரோதமான நடவடிக்கை அல்லவா? அன்றைக்கு அவை முன்னவர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட வார்த்தைகள் என்ன? அந்த வழக்கை எப்படி நடத்திக்கொள்ளப் போகிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டி இருக்கிறது என்று சொன்னார்கள். கரெக்ட். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? அரசியல் சட்டத்தை நாங்கள் மதிக்கிறோம். அரசியல் சட்டத்தை நாங்கள் டிஸ்-ஆனர் பண்ண விரும்பவில்லை. இந்தி ஒரு லிங்க் லேங்குவேஜ் என்று 17-வது பிரிவில் பொறிக்கப் பட்டதால் ஏற்பட்ட குழப்பம் நாட்டிலே உருவாக்கப்பட்டது. நமது மக்களை அடிமைத்தளத்திற்கு இது கொண்டு வருகிறது. இந்தித் திணிப்பைத்தான் எதிர்க்கிறோம். மொழி எதிர்ப்பை நாங்கள் விரும்பவில்லை. நான் கான்டிரவர்ஸியலாகச் சொல்ல வில்லை. எங்களுடைய கருத்து, அரசியல் சட்டத்தினுடைய வாக்கியங்கள், வாசகங்களை வேறு ஒரு காகிதத்தில் எழுதி அதை நாங்கள் வெளியிலே எரிக்கிறோம் என்பதை, கடைசியில் நெஞ்சிலே எழுதியிருந்தால் அப்போது என்ன செய்வது? நேராகச் சுடுவதா? என்ன பதில்? மற்ற நாடுகளில் பார்க்கிறோம், அட்டைகளை எழுதி மாட்டிக்கொண்டு போவார்கள். இப்படிப்பட்ட நிலையிலே அந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வரட்டும். அதுதான் சரியே தவிர, இங்கே ஒரு தீர்மானத்தை அரசின் சார்பில் கொண்டு வரக்கூடாது. அப்படிக் கொண்டு வந்தால் சரியில்லை என்பது தான் எங்கள் அபிப்பிராயம். நியாயமான தீர்மானம் என்றால் நியாயம் என்கிறோம். தப்பு என்றால் தப்பு என்கிறோம். கோர்ட்டு தீர்ப்பு அளிக்கட்டும். இது டிஸ்குவாலிபிகேஷன் என்று சொல்லட்டும். இது அரசியல் சட்டத்தை அவமதித்த சமாச்சாரம் என்று சொன்னால் அன்றைக்கு அதைப் பேசிக் கொள்ளலாம். அப்படியில்லாமல் அரசியல் சட்டத்தை எரிப்பது கரெக்ட்டா, தப்பா என்று ரிட்டாரிக்கலாகப் பேசுவது சரியில்லை. ஏற்கெனவே அரசியல் சட்டத்திற்கு இருக்கிற வடிவத்தை எடுத்துவிட்டு வேறு வடிவம் தர வேண்டும் என்கிறோம். அதைச் செய்வோம். அரசே கூட அப்படித்தான். இன்றைக்கு இருக்கும் அரசு நாளைக்கு



இருக்காது. மக்கள் கையாளுகிற வடிவங்களைப் பார்த்து சட்ட சபையில் இருப்பவர்கள் இந்த வடிவத்தில்தான் இது இருக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. நமக்கு அந்த அதிகாரம் இல்லை. அது ஜனங்களுடைய சமாச்சாரம். நான் அதற்குள் போகவில்லை. ஆகவே கோர்ட்டில் இந்த வழக்கு இருப்பதால் தான் நான் 67 கிளாஸ் 6 பற்றியெல்லாம் குறிப்பிட்டேன். உபவிதி 82 பற்றி சொன்னதற்குக் காரணம் ஒரு தீர்மான வடிவத்தில் இதுஇங்கே வைக்கப்பட்டிருப்பது சரியில்லை, இது தப்பு என்பதால்தான். இது ஜனநாயக முறையல்ல. சட்ட விரோதமானது என்பதுதான் என்னுடைய கருத்து. இதில் தலைவருக்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம். அவர் ஆட்சேபனை தெரிவிக்கலாம், அது அவருக்குள்ள உரிமை. என்னைப் பொறுத்த வரையில் இது சட்ட விரோதமானது இல்லை என்று மற்றவர்கள் சொல்லட்டும். ஆகவே இந்த முறையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடாது. பொறுமையாக இருந்திருக்க முடியும். ரொம்ப நாளைக்கு இது போகப் போவதில்லை. நீதிமன்றத்தில் என்ன நடக்கப் போகிறது என்று இங்கே foresee பண்ணி நாம் முதலில் அவர்களைக் குற்ற வாளிகள் என்று இங்கே டிக்ளேர் பண்ணிய பிறகு நீதிமன்றம் இல்லை என்று சொல்லிவிட்டால் நிலைமை என்ன ஆவது? ஆகவே போலீஸ் ரிப்போர்ட்டை வைத்துச் செய்கிற விஷயமல்ல இது. அப்படிப்பட்ட நிலைமை வந்திருப்பதால் எங்களைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்மானம் சரியல்ல. இதுதான் எங்களுடைய வேண்டுகோள். இந்தத் தீர்மானத்தைத் தயவு செய்து அரசு ஒரு கௌரவப் பிரச்சினையாகப் பார்க்கக்கூடாது. அரசியல் சட்டத்தை நாங்களும் நீங்களும் பாதுகாக்க முடியும். அதில் யாருக்கும் வித்தியாசமில்லை. அது சரியாக இல்லை என்றால் திருத்துகிறோம். 56 முறை மாற்றித் திருத்தியிருக் கிறோம். அது மாதிரி இன்னும் திருத்தவேண்டிய நிலைமை ஏற்படலாம். நாளைக்கே ஒரு புதிய கான்ஸ்டிடுயென்ட் அசெம்பிளி இந்தியாவுக்கு வரலாம். இப்போதிருப்பது சரியில்லை என்று சொல்லலாம். எனவே இந்தச் சமயத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால் நீங்கள் தயவுசெய்து இந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்க வேண்டும். அந்த 7 பேர் களின் டிஸ்குவாலிபிகேஷனைப் பொறுத்த வரையில் மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள் எடுத்திருக்கிற முடிவை அவர்தான் அதை மாற்றமுடியும். எனவே அது குறித்து அவர் யோசிப்பது அவசியம், ஆகவே இந்தத் தீர்மானம் கைவிடப்பட வேண்டிய ஒன்று, இது தவறான ஒன்று. ஜனநாயக விரோதமானது, எதிர்க்கட்சிகளை தயவுசெய்து இந்த மாதிரியான நிலைமைகளில் தண்டிக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்,

திரு. செ. செம்மலை : பேரவையின் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் அரசியல் சட்டத்தை எரிப்பது தவறு என்று சொல்லிவிட்டு, கோர்ட்டு தீர்ப்புக்குப் பிறகு இப்படிப்பட்ட முடிவை எடுக்கலாம் என்று சொல்லு கிறார்கள். தாங்களும் சட்டம் பயின்றவர்கள். சட்டத்தில்

தலைவருக்கு இப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிறது என்று எந்த ஷரத்தும் சொல்லவில்லை என்று சொல்லுகிறார். நான் பணிவன்போடு ஒன்றைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். அதாவது கோர்ட்டு தீர்ப்பிற்குப் பிறகு இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசியல் சட்டத்தின் ஷரத்துகளில் எங்காவது சொல்லப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

இன்னொன்று, கோர்ட்டு தீர்ப்பு பற்றி தங்களுக்கே தெரியும். தாங்களும் ஒரு வழக்கறிஞர். ஒரு குற்றவாளியின் மீது குற்றம் நிரூபணம் ஆகவில்லை அல்லது குற்றம் செய்ததாக நிரூபிக்கப்படவில்லை என்று காரணம் காட்டி—பெனிபிட் ஆப் டவுட்—என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்படலாம். அதன் காரணமாக அவர் குற்றமே செய்யவில்லை என்று ஆகிவிடுமா? குற்றம் நிரூபணம் ஆகவில்லை என்றோ அல்லது நிரூபிக்கப்படவில்லை என்றோ சொல்லி விடுதலை செய்யப்பட்டுவிட்டால் அவர் குற்றமே செய்யவில்லை என்று ஆகிவிடுமா என்று அறிய விரும்புகிறேன். ஒரு நீதிபதி ''குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்ற காரணத்திற்காகவோ அல்லது குற்றம் நிரூபணம் ஆகவில்லை என்ற காரணத்திற்காகவோ விடுதலை செய்கிறேன்'' என்று சொன்னால் அதன் காரணமாக அவர் குற்றமே செய்யவில்லை என்ற அளவுக்குப் போய்விடுமா என்ற விவரத்தையும் திரு. ரமணி அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அரசியல் சட்டத்தில் எங்காவது டிஸ்குவாலிபிகேஷன் பண்ண அதிகாரம் இருக்கிறதா என்று கேட்டார்கள். 52-ஆவது அமெண்ட்மெண்ட் டு தி கான்ஸ்டிடியூஷனில் இருக்கிறது. அந்தப் பிரச்சினையே கூட தேவையில்லை என்று நான் அதைக் குறிப்பிடவில்லை. I have not invoked any of the powers of the Governor under Article 191 or 192. My intention was to inform him as a piece of information the position under Article 194 (3). (குறுக்கீடு)

(முற்பகல் 11-40)

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பதில் சொல்ல வாய்ப்பு இல்லாவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி அப்படியே இருக்கும். அதற்கான பதில் இருக்காது. ஆகவே பதில் சொல்ல அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

திரு. கு. ரமணி: நம்முடைய திரு. செம்மலை அவர்கள் இந்தச் சட்டத்தை எரித்ததை ரமணி அவர்கள் தப்பு என்று ஒத்துக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். அந்த வார்த்தையை நான் பயன்படுத்தவில்லை. இந்தச் சட்ட எரிப்பு சம்பந்தமாக கேஸ் எப்படியும் நடக்கப் போகிறது. அதைப் பற்றி கோர்ட் தீர்மானிக்கும், அந்தத் தீர்மானம் வந்த பிறகு



இங்கே பேசினால் அப்போது அனுமதி கிடைக்கும். அதை முன்கூட்டியே தப்பு என்று நான் சொன்னதாகச் சொல்ல வேண்டாம். அந்தச் சட்டத்தை மீறினால் மூன்று வருஷம் வரை தண்டனை கொடுக்கலாம். அந்த உரிமை கோர்ட்டுக்கு இருக்கிறது. சட்டப்படி தண்டனை கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, நாஞ்சிலார் (குறுக்கீடுகள்).

திரு. கி. மனோகரன்: எனக்கும் அவருக்கும் உள்ள உறவு உங்களுக்கு எங்கே தெரியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவு நல்ல உறவு வைத்துக் கொண்டு அவரைப் பார்த்து நேரிடையாகவே சொல்லி விடலாமே.

திரு. கி. மனோகரன்: அதை நீங்கள் தீர்மானிக்க வேண்டியதில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வார்த்தை சொல்லிவிடுவதில் என்ன குறைந்துவிடப் போகிறது?

(ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் எழுந்து, வாபஸ் வாங்கு, வாபஸ் வாங்கு என்றார்கள்.)

திரு. கி. மனோகரன்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாஞ்சிலாரைக் கேட்டுக் கொள்கிறேன். இது ஒன்றும் பெரிதல்ல. It is a gesture. யாராவது தவறு செய்தால், 'சாரி' என்று சொல்வதில்லையா? அதிலே என்ன வந்துவிடப் போகிறது.

திரு. கி. மனோகரன்: கொஞ்சம் அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (ஆளும் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாஞ்சிலார் அதைச் சொல்லிவிட்டு ஆரம்பிக்கலாம்.

டாக்டர் கே. சமரசம்: நாங்கள் கேட்டுக் கொள்வதும் அந்த உறவின் அடிப்படையிலேதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற உறுப்பினர்கள் அமர வேண்டும். அவர் வாபஸ் வாங்கிவிடுவார்.

திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மதிப்பிற்குரிய அவை முன்னவர் அவர்கள் ....(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாஞ்சிலார் அவர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். அப்போது அவர் சொன்ன வார்த்தையை......

THIRU K. MANOHARAN: I will explain in the course of my speech.

Mr. SPEAKER: Let us have smooth proceedings. சொல்லி விடலாம். இதிலே என்ன?

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான நோக்கத்தோடும் அல்லது களங்கப் படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடும் நான் முதலமைச்சரைப் பற்றி பேசவில்லை என்பதையும், அவரிடம் எனக்குத் தனி மரியாதை உண்டு என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேஜையைத் தட்டும் பலத்த ஒலி)

எனக்கே கஷ்டமாக இருக்கிறது. அவை முன்னவர் அவர்கள் இங்கே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, மூன்று உறுப்பினர்கள் மேலும் பதவியை இழக்கிறார்கள் என்ற ஒரு அறிவிப்பை இந்த மன்றத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். ஏழு உறுப்பினர்கள் தங்கள் பதவியை இழந்திருக்கிறார்கள் என்று நீங்கள் அறிவித் தீர்கள். மூன்று உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இழந்திருக் கிறார்கள் என்று அவை முன்னவர் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். Theory of co-existence. நல்லது. நான் குறுக்கிட விரும்பவில்லை. நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புவது ஒன்று. 7 பேர்களை நீங்கள் அவையில் இருக்கத் தகுதி இழந்தவர்களாக்கி. அவர்கள் உட்கார்ந்த இடம் 'வெற்றிடம்' என்று எழுதிப் போட்டு வைத்ததற்குப் பிறகு, அந்தக் கேள்வியை நண்பர்கள் எழுப்பிய நேரத்தில், நீங்கள் சொன்ன பதில் அவைக் குறிப்பில் இருக்கிறது என்பது உங்களுக்கும் தெரியும். எனக்கும் தெரியும். நீங்கள் பேசுகிற போது சொன்னீர்கள். ''எனது முடிவுதான் முடிவு. நான் இதை மேன்மை தங்கிய ஆளுநர் அவர்களுக்கும் எலக்ஷன் கமிஷனர் அவர்களுக்கும் follow up action-க்காக அனுப்பி வைக்கப் போகிறேன்'' என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள். அதுவும் குறிப்பேட்டிலே இருக்கிறது. நீங்கள் சொல்லி ஏறத்தாழ, ஒரு மாத காலம் இருக்கும் என்று நான் நம்புகிறேன். இதை ஒரு மாதத்திற்குள்ளாக ஆளுநர் அவர்களிடமிருந்தோ அல்லது தேர்தல் கமிஷனரிடமிருந்தோ உங்களுக்கு ஏதாவது தகவல் கிடைத்ததா என்பதை, இந்த மன்றத்திலே நீங்கள் அதைக் குறிப்பிட்ட காரணத்தாலே, கேட்க விரும்பு கிறேன். நீங்கள் இந்த மன்றத்திற்குச் சொல்லியாக வேண்டும். அதுதான் நியாயமானது என்று கருதுகிறேன்.

அதோடு நீங்கள் உங்களது அதிகாரத்தைப் பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள், அதே அதிகாரத்தை நான் மதிக்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பற்றி இங்கே விவாதிக்கக்கூடாது என்று எனது கெழுதகை நண்பர் மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஏனென்றால் இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிறபோது இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்கக் கூடாது என்று நாம் உருவாக்கிய விதியில் இருக்கிறது என்பது உங்களுக்கும் தெரியும். அவைக்கும்



தெரியும். ஒரு வேளை மறந்திருந்தால், அதைத் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று கருதி நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். "Not to give his opinion or refer to any matter on which a judicial decision is pending" நீதி மன்றத்தில் தீர்ப்பு கூறாத நிலையில் அது இருக்குமேயானால் அதைப் பற்றி விவாதிக்கின்ற உரிமை அல்லது நீதிபதியின் conduct பற்றி விவாதிக்கின்ற உரிமை இந்த அவைக்கு இல்லை என்று மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே நீங்கள் ஒரு முடிவு எடுத்திருக்கிறீர்கள். முடிவெடுத்து 7 பேர்களை வெளியே தள்ளிவிட்டிருக்கிறீர்கள். ஒரு பலம் பொருந்திய opposition, எதிர்க் கட்சி ஜனநாயகத்திற்குத் தவிர்க்க முடியாத தேவை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால்— "Opposition is the lubricating oil in the wheels of the democratic machine".

ஜனநாயகம் என்ற இயந்திரம் ஒழுங்காகச் சுழல்வதற்கு எதிர்க் கட்சி என்ற எண்ணெய் ஊற்றப்பட வேண்டுமென்பது ஒத்துக் கொள்ளப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதை அருள்கூர்ந்து நீங்கள் மறந்துவிடக்கூடாது என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் உங்களுடைய கவனத்திற்கு வைப்பதை என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அது என்ன வென்றால், எனது எஞ்சிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, நான் இந்தக் காரியத்திலே ஈடுபட்டேன் என்று நீங்கள் தெரிவித் திருக்கிறீர்கள். எஞ்சிய அதிகாரங்கள் எது என்பதற்கான விளக்கங்கள் விதியிலே இல்லை. அரசியல் சட்டத்திலே வரையறுக்கப்படாத சில நிலைமைகளுக்கு சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்த அல்லது வடிவம் சமைப்பதற்காக உங்களுக்கு உரிமை தரப்பட்டிருக்கிறதே தவிர "duly elected member" முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினரை அவையிலிருந்து "cease to be a member" என்று சொல்கிற உரிமை உங்களுக்கு இருக்கிறதா என்று அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எனது சார்பாகவும், எனது கட்சியின் சார்பாகவும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு நிச்சயமாக அந்த உரிமையில்லை. வாதத்திற்காக நான் பேசுகிறேன் என்று தயவு செய்து கருதாதீர்கள். அந்த உரிமை உங்களுக்கு இல்லாத நிலைமையிலே நீங்கள் எப்படி அந்த உரிமையைப் பயன்படுத்தினீர்கள் என்பது விளங்க வில்லை.

விதி 312-ன் அடிப்படையில் நீங்கள் அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள். நான் அதைக் கண்டிக்க விரும்பவில்லை. ஆனால் அது முறையல்ல என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குத் தெரிவிப்பதுஎன்னுடைய புனிதமான கடமையாகக் கருதுகிறேன்.

அடுத்தாற்போல் உங்களுக்கு இருக்கின்ற உரிமையை தயவு செய்து புரட்டிப் பாருங்கள். விதி 121

"The Speaker may direct any member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House, and any Member so ordered to withdraw shall do so forthwith and absent himself during the remainder of the days meeting......"

(முற்பகல் 11-50)

If any member is ordered to withdraw a second time in the same session, the Speaker may direct the member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the session, and the member so directed shall absent himself accordingly. If such member refuses to withdraw, the Speaker may order his removal by force by the Sergeant of the Assembly. The member so directed to be absent shall not be deemed to be absent for the purposes of clause (4) of Article 190 of the Constitution.

இதுதான் உங்களுக்கு இருக்கின்ற அதிகாரம் விதியின்படி. அடுத்தாற்போல் சொல்கிறேன். The Speaker may, if he deems it necessary, name a member who disregards the authority of the Chair or abuses the rules of the House by persistently and willfully obstructing the business thereof. இது உங்களுக்கு இருக்கின்ற அதிகாரம். (2) If a member is so named by the Speaker, the Speaker shall, on a motion being made forthwith without any discussion put the question that the member (naming him) be suspended from the service of the House for a period not exceeding the remainder of the session ஆக சஸ்பென்சன் செய்கிற உரிமைதான் உண்டே தவிர, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வெளியேற்றுகிற அல்லது அவர்கள் பதவி இழக்கின்ற அளவிற்கு உத்தரவு போடுகின்ற உரிமை உங்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் எப்போதும் இல்லை என்று தெரிவிக்க விரும்புகிறேன். நான் பேசும்போது நீங்களே சொன்னீர்கள். பேசுகிறபோது 'நான் கூட நாஞ்சிலாரிடம் சொன்னேன். இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரப்போகிறோம் என்று'....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் அரசியல், நான் உங்களிடம் என்ன சொன்னேன்? நான் தீர்மானத்தைப் பற்றி சொன்னேன்? 8 ஆம் தேதி, எரிக்காதீர்கள், எரித்தால் சட்டப் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னேன். நீங்கள் ஒவ்வொன்றாகச் சொல்கிறீர்கள். உங்களைமாதிரிப் பேசத் தெரிய வில்லையே எனக்கு.

திரு. கி. மனோகரன்: நீங்கள் தெரிவித்த அந்த உணர்வை மட்டும் நான் பிரதிபலிக்க விரும்புகிறேன். நீங்கள் அப்படிப் பட்ட அந்தக் கருத்தை....



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஒன்றும் வேண்டாம். அன்று சொன்னது வேண்டுமென்றால் தப்பு. இப்போது வேண்டாம்.

திரு. கி. மனோகரன்: தாங்கள் தப்புகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர் என்று கருதுபவன் நான். சில நேரங்களிலே தவறு இழைக்கின்றவர் என்பதை நீங்களே ஒத்துக்கொள்கின்ற போது, அதை மறுக்கிற உரிமை எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைச் சொல்ல வில்லை. நீங்கள் ஒவ்வொன்றாகச் சொல்கிறீர்கள். தங்களுக்கு மீட்டிங்குகளில் பேசிப் பேசிப் பழகிவிட்டது. நான் எங்கே மீட்டிங்குப் போனேன்.

திரு. கி. மனோகரன்: தங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமைக்காக நான் வருத்தப்படுகிறேன். மக்கள் எனக்கு அந்த வாய்ப்பைத் தருகிறார்கள். நான் பயன்படுத்துகிறேன்.

அடுத்தாற்போல் உங்களுக்கு இன்னொன்றையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். அரசியல் சட்டத்தில் எங்காவது ஒரு உறுப்பினரை நீக்குகிற அல்லது பதவி இழக்கிற சரத்துக்கள் இருக்கின்றனவா என்றால் நிச்சயமாக இருக்கின்றன. 191 மற்றும் ஆர்ட்டிகிள் 192. இரண்டையும் படித்தவர்களுக்குத் தெரியும். திரு. ரமணி அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். குறிப்பிட்ட சில காரணங் களுக்காக, ஐந்து காரணங்களுக்காக இருக்கிறது. ஒன்று foreign national என்ற காரணத்திற்காக, அல்லது corrupt practice என்ற காரணத்திற்காக, அல்லது மன நோயாளி என்ற காரணத்திற்காக, அல்லது undischarged insolvent என்ற காரணத்திற்காக. இப்படி ஐந்து காரணங்கள் தரப்படுகின் றனவே தவிர, தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்ற உறுப்பினர் களை வேறு எந்தக் காரணத்தைக் கொண்டும் நீக்க முடியாது என்று மிகத் தெளிவாக இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் சட்டம் தெரிவித்திருப்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். நீங்களே நீக்க முயன்றாலும் கூட பாராளுமன்றச் சட்டத்தின் அடிப்படையிலேதான், பாராளுமன்றம்தான் முடிவு எடுக்க முடியுமே தவிர, உங்களுக்கு அந்த அதிகாரத்தை, எஞ்சிய அதிகாரத்தின் மூலம் வழங்கியதாக நான் கருதவில்லை. நான் ஆரம்பத்திலேயே தெரிவித்தது போல, எஞ்சிய அதிகாரத்தை மிஞ்சிய அதிகாரமாக மாற்றி நீங்கள் துஷ்பிரயோகம் செய்திருக் கிறீர்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 194—கிளாஸ் 3, Do not omit it; you read it. நீங்கள் யோசிக்க வேண்டும். the Speaker represents the House: the House represents the nation. நீங்கள் இந்த இரண்டு வாக்கியங்களை நினைத்துக் கொள்ளுங்கள். நான் அவையிலிருந்து எந்தத் தீர்ப்பை வழங்கினாலும் அது அவையின் தீர்ப்புதான். வேண்டாம் என்றால் மாற்றிக் கொள்ளலாம். எஞ்சிய அதிகாரம் இல்லை என்று சொன்னார்கள். How to regulate Rule 4. To regulate Rule 4, Rule 312 definitely comes into play

திரு. கி. மனோகரன்: நீங்கள் தெரிவித்திருக்கிற கருத்து எனக்கு உடன்பாடான கருத்து. உங்கள் வாதத்தை வலுப்படுத்தும் கருத்தாக நான் கருதவில்லை. திரும்பவும் வலியுறுத்திச் சொல்கிறேன். உங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. நீங்கள் அரசியல் சட்டத்தைக் காப்பாற்ற, அதன் புனிதத்தைக் காப்பாற்ற பதவிப் பிரமாணம் எடுத்ததற்குப் பிறகு அந்த அரசியல் சட்டத்தை நீங்கள் எரிக்கலாமா என்று கேட்டிருக்கிறீர்கள். தெளிவாகவும், திட்டவட்டமாகவும் நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் சட்டத்தை மதிக்கிறது. அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின் ஒரு வரியை "The official language of the Union shall be Hindi in Devanagari script" என்ற ஒரு பகுதியை மட்டும் எழுதிக் கொளுத்தியது என்பது அரசியல் சட்டத்தை அவமானப் படுத்துவது அல்ல, மேலே இருக்கிற ராஜீவ் காந்தி அவர்களின் கவனத்தைக் கவரவும், இங்கே அரசினர் தீர்மானம் கொண்டு வந்த முதலமைச்சரின் கரத்தை வலுப்படுத்தவும்தான் ஈடுபட்டோம். அரசியல் சட்டத்தைக் களங்கப்படுத்த அல்ல. இன்னும் பெருமையோடு சொல்கிறேன். நாங்கள் கூட அதைச் சொல்லவில்லை. Hindi shall be என்று போடுவதைக் கூடப் பொறுக்க முடியாமல் முதலமைச்சர் அவர்கள் English alone shall be என்று தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அரசியல் சட்டத்தைக் களங்கப்படுத்த அல்ல. அரசியல் சுவட்டின் மேலே கையை வைத்து சத்தியம் செய்து நாங்கள் பதவிப் பிரமாணம் மேற்கொள்கிறோம். நீங்களும் பதவிப் பிரமாணம் எடுத்தீர்கள். நானும் எடுத்தேன், முதலமைச்சரும் எடுத்தார்கள், எல்லோரும் எடுத்தோம். ஆனால் ஒன்றை மட்டும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. Preamble of the Constitution-ஐ நூற்றுக்குநூறு நாங்கள் மதிப்பவர்கள். எந்தக் காரணத்தாலேயும் அரசியல் சட்டத்தில் இருக்கிற சில சரத்துக்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். குறிப்பாக ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறேன். சர்க்காரியா கமிஷன் இங்கே வந்தது. அரசின் சார்பில் ஒரு அறிக்கை தரப்பட்டது. Abolition of Governorship என்ற ஒன்று அதிலே குறிப்பிடப்பட்டிருந்தது. குடியரசுத் தலைவருக்கு அரசியல் சட்டப் பிரிவுகள் 356-லிருந்து 363 வரை இருக்கிற அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டுமென்று அதில் இருந்தது. அரசியல் சட்டத்தின் மேல் கையை வைத்து சத்தியம் செய்தது உண்மை.



ஆனால் உள் அடக்கம் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்று நீங்கள் கருதினால்—தெரிந்தோ தெரியாமலோ—நீங்கள் தவறி இருக்கிறீர்கள் என்று சொல்லவில்லை. அவையை திசை திருப்புகிறீர்கள் என்றும் சொல்லமாட்டேன். ஆனால் உண்மையை நீங்கள் ஏற்றுக்கொள்ள கொஞ்சம் தயக்கம் காட்டுகிறீர்கள் என்று மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சொல்வது ஆர்ட்டிகிள் 194 .Art. 194. Powers Privileges etc. of the Houses of Legislatures and of the members and Committees thereof.— (1 Subject to the provisions of this Constitution and tothe rules) and standing orders regulating the procedure of the Legislature, there shall be freedom of speech in the Legislature of every State." அதுவும் எனக்குச் சாதகமே தவிர, உங்களுக்கு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 194 கிளாஸ் 3—ஐப் படியுங்கள் Powers, Privileges and Immunities.

திரு. கி. மனோகரன் : நீங்கள் படிக்க வேண்டாம். நான் படிக்கிறேன். என் கையில் புத்தகம் இருக்கிறது. நீங்கள் ஏன் கஷ்டப்பட்டு படிக்க வேண்டும், 194(3) "In other respects the powers, privileges and immunities of a House of the Legislature of a State, and of the members and the committees of a House of such Legislature, shall be those of that House and of its members and committees at the commencement of section 34 of the Constitution (Forty-second Amendment) Act, 1976, and as may be evolved by such House of the Legislature, of a State, so far as may be in accordance with those of the House of the People, and of its members and committees where such House is the Legislative Assembly and in accordanee with those of the Council of States, and of its members and committees where such House is the Legislative Council."

(நண்பகல் 12—00)

நான் கேட்கிறேன். (குறுக்கீடு) கடைசி பாரா அது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அல்ல, நீங்கள் படித்ததிலே லேட்டஸ்ட் இது. அதிலே கொஞ்சம் அதிகமாக இருக்கிறது.

திரு. கி. மனோகரன் : இது........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் படித்ததிலே அதிகமான வார்த்தைகள் இருக்கின்றன. (குறுக்கீடு) விளக்கம். நான் செக்ஷனைப் படிக்கிறேன்.

"In other respects, the powers, privileges and immunities of a House of the Legislature of a State, and of the members and the committees of a House of such Legislature, shall be such as may from time to time be defined by the Legislature by law, and, until so defined, shall be those of the House of Commons of Parliament of the United Kingdom......"

Till they are defined those powers devolve upon the Parliamen and the Legislature.

திரு. கி. மனோகரன் : நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) ஓஹோ "House of Commons" பற்றியும் படித்தீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. The powers of the House of Commons have devolved upon our Parliament and Legislature. We have the same powers as the House of Commons enjoys.

Thiru A. RAHMANKHAN: They do not have a written Constitution there.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் சொல்லி இருக்கிறோம். Until it is defined, our powers have not been defined, our immunities have not been defined and our privileges have not been defined.

திரு. கி. மனோகரன் : House of Commons-னுடைய அதிலே இருந்து நாம் வேறுபட்டு ரொம்பக் காலம் ஆகிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய அரசியல் சட்டத்திலே பல மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக நான் தெரிவிக்க விரும்புவது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த expulsion பவரே நாம் House of Commons-லே இருந்துதான் எடுக்கிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, House of Commons-னுடைய அதிகாரம் வராது என்று சொல்கிறார்கள். நீதிமன்றம், நீதிமன்றம் என்று பலமுறை சொல்கிறார்கள். 1964—ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றமே சொல்லியிருக்கிறது. 194(3)—இல், இங்கிலாந்து



நாட்டிலே இருக்கின்ற பாராளுமன்றம். 26—1—1950 என்னென்ன உரிமைகளை வைத்திருந்தது என்பதை மட்டும் பார்த்து அவை அங்கே இருந்தால் அவற்றை அப்படியே இந்திய நாட்டிலே இருக்கின்ற பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றமே சொல்லியிருக்கிறது. நீங்கள் எல்லாம் நீதிமன்றம், நீதிமன்றம் என்று சொல்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் இங்கே ஒன்றை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாஞ்சிலார் அமர்ந்தால் தான் mike கிடைக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : நான் ஒரு நிமிடத்தில் சொல்லி விடுகிறேன். பேரவையினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் House of Commonsனுடைய முறைகள் பின்பற்றப்படுகின்றன என்று சொன்னார்கள். நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே தெரிவிக்க விரும்புகிறேன் இங்கிலாந்து நாட்டினுடைய அரசியல் சட்டத்திற்கும் நம்முடைய நாட்டினுடைய அரசியல் சட்டத்திற்கும் முதலிலே வேறுபாடு உண்டு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கிலாந்து நாட்டிலே அரசியல் சட்டமே இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்ல வருவது, நீங்கள் தவறாகப் புரிந்து சொண்டீர்கள். நான் சொல்ல வருவது, இங்கிலாந்து நாட்டிலே எழுதப்படாத சட்டம்; இங்கே ரிட்டன்.

இரண்டாவது, அங்கே இருக்கக்கூடிய ஹவுஸ் ஆப் காமன்ஸ் கோர்ட்டுக்கு உரிய ஜூரிஸ்டிக்ஷனை-அதிலே லாபம்- நீதிமன்றத்தினுடைய அதிகாரங்கள் அனைத்தையும் ஹவுஸ் ஆப் காமன்ஸ் பெற்றிருக்கிறது.

ஆனால் இங்கே என்னவென்று கேட்டால், உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த உரிமை இங்கே உள்ள இந்த ஹவுசுக்குக் கிடையாது.

அடுத்து என்னவென்று கேட்டால், ஒரு சபையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களை டிஸ்குவாலிபை செய்யவோ, எக்ஸ்பல் செய்யவோ ஹவுசுக்கு அதிகாரம் இல்லை என்று அரியானா நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்தியப் பிரதேசம் அதை ஆதரித்து இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையை நடத்திச் செல்லுகின்ற பொழுது ஐயப்பாடுகளும். மற்றவைகளும் ஏற்படுமேயானால், பாராளுமன்ற முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்றும், பாராளுமன்றத்திலேயும் விளக்கங்கள் ஏற்படாத சூழ்நிலையிலே House of Commons என்ன முறைகளைக் கொண்டிருக்கிறதோ அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்ற முறையும்தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதே தவிர. சிலபல வகைகளிலே பாராளுமன்றத்திலேகூட விளக்கங்கள் பெறாத தன்மையில் House of Commons முறையைத்தான் அங்கே இருக்கிற ஸ்பீக்கர் பல தடவை கோட் பண்ணியிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். மேஸ் பார்லியமெண்டரி பிராக்டிஸிலிருந்து எடுத்து, கோட் பண்ணி, நடைமுறைப்படுத்துகிறோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஹவுஸ் ஆப் காமன்ஸ் பற்றி இங்கே நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்கள். [குறுக்கீடு] பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஹவுஸ் ஆப் காமன்ஸ் பின்பற்றிய நடைமுறைகளுக்கும் இப்போது இருக்கிற ஹவுஸ் ஆப் காமன்ஸ் பின்பற்றுகிற நடைமுறைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. அவை எழுதப்படாத அரசியல் சட்டம். இன்னும் சொல்லப்போனால் அவர்கள் பிரசிடென்ட்ஸ், usage இவற்றை அடிப்படையாக வைத்து பலவற்றை நீக்கி, சிலவற்றை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இல்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய பாராளுமன்றம் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய புக்கிலும் இருக்கிறது. Halsbury's Laws of England Third Edition The power of expulsion is already there என்று இருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** நான் சொன்னதை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ஹவுஸ் ஆப் காமன்ஸுக்கும் நம்முடைய நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் அதிகாரங்களில் வேறுபாடு உண்டு. ஹவுஸ் ஆப் காமன்ஸ் நீதிமன்றமாக இருந்து தீர்ப்பு வழங்க முடியும். ஆனால் இந்தச் சபைக்கோ பாராளுமன்றத்திற்கோ அந்த அதிகாரம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது Criminal case, Civil case, Court of Appeal என்று அந்த மாதிரி வருகிறது. இங்கே நாம் அதை எடுக்கவில்லை, இங்கே விவாதிக்கக்கூடிய உரிமை, தீர்ப்பு வழங்கக்கூடிய உரிமை இந்த அவைக்கு இருக்கிறது. House of Commons எடுக்கக்கூடிய சிவில் வழக்குகள், கிரிமினல் வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்க முடியும். ஆனால் இங்கே அப்படித் தீர்ப்பு வழங்க முடியாது.



**திரு. அ. ரகுமான்கான் :** அரசியல் சட்டத்தை எதிர்த்தார்கள் என்பதற்காக பதவியை ரத்து செய்ய எந்தச் சபைக்கும் அதிகாரம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அமருங்கள். விளக்கி விடுகிறேன். You have voluntarily relinquished your rights.

Thiru A. RAHMANKHAN: Where is the provision?

Mr. SPEAKER: It is not defined, But this House is supreme. இந்த அவை அவ்வளவு பலம் வாய்ந்தது. These Members have given up their rights and privileges. (குறுக்கீடு; உள்ளே எம்.எல்.ஏ. வெளியே எம்.எல்.ஏ. இல்லை என்ற அர்த்தம் வரவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** பதவிப் பிரமாணம் எடுக்காமல் உள்ளே வர முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஹவுசைப் பொறுத்த வரையில் the conduct of the Member inside the House and outside the House are one and the same.

**திரு. அ. ரகுமான்கான் :** பதவிப் பிரமாணம் எடுக்க வேண்டாம் என்றால் 500 ரூபாய் கட்டி விட்டு உள்ளே வந்து விடலாம் என்று....

**திரு. கி. மனோகரன் :** தலைவரவர்களே, நீங்களும் பேசினீர்கள்; மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களும் பேசினார்கள். பாராளுமன்ற சட்டத்தைப் பற்றியும் இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு இருக்கிற உரிமை பற்றியும் அது உருவாக்கியிருக்கிற சட்டத்தைப் பற்றியும் சொல்லும் போது நீங்கள் சொன்னீர்கள். இங்கிலாந்து நாட்டிலே சட்டமே இல்லை என்பது தவறு. Unwritten Constitution என்று சொல்வதும் தவறு. புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, நாம் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன், அது எழுதப்பட்ட சட்டம் என்றால் அதை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். Largely unwritten, statutes, convention ஆகியவற்றின் மொத்தத் தொகுப்பே அங்கே சட்டமாக இருக்கிறது என்பதைத் தவிர மற்றப்படி இல்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் கொண்டுவர விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு உங்களுடைய கவனத்திற்கு இன்னொன்றையும் நான் கொண்டு வருகிறேன். இந்திரா காந்தி அம்மையாரைப் பற்றி இங்கே பேசினார்கள். இந்திரா காந்தி அம்மையாரை நாடாளுமன்றத்திலே இருந்து வெளியேற்றிவிட வேண்டுமென்று Privileges Committee முடிவு எடுத்து — சபாநாயகர் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன் — அந்த முடிவை அப்போது பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் எனக்குச் சொல்லி, அவர்களை வெளியேற்றப்போகிறோம் என்ற கருத்தை எடுத்து வைத்த நேரத்தில் நான் திட்டவட்டமாகச் சொன்னேன், எக் காரணத்தைக் கொண்டும் இந்திரா காந்தி அம்மையாரை வெளியேற்ற நாங்கள் தயாராக இல்லை என்று.

இன்னும் சொல்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்போது அவர்கள் கடலூரிலே இருந்தார்கள். என்னோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு, அலகாபாத் நீதிமன்றத்தின் ஜட்ஜ்மென்டை நீங்கள் படித்தீர்களா என்று கேட்டார். ஆம் என்றேன், அப்படியானால் இன்னும் டெல்லிக்குச் செல்லாமல் இருக்கிறீர்களே, அம்மையார் ஒரு வேளை இராஜிநாமா செய்தால் தடுத்து நிறுத்துங்கள் என்று கேட்டுக்கொண்ட கட்சி அண்ணா தி.மு.க., அதே போல கேட்டுக் கொண்ட கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12 10)

அதைப்போன்று இன்னொன்றையும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில் திரு. மொரார்ஜி அவர்கள் சொன்னார்கள் பெரிய தவறு இழைக்கப்பட்டு இருக்கிறது. ஆகையினால் திருமதி இந்திரா காந்தி அம்மையாரை வெளியேற்றுவது என்று தீர்மானித்து விட்டோம் என்று சொன்னபோது திரு. மொரார்ஜி அவர்களுடைய கவனத்திற்கு நான் சொன்ன கருத்தை இந்த அவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். 16, 17 ஆண்டுக் காலமாக பிரதம அமைச்சராகப் பணியாற்றி இருக்கிற அம்மையாரிடமிருந்து நீங்கள் அதிகப்படியான அனுபவங்களைப் பெற முடியும் என்றும், அவர் ஒரு எதிர்க்கட்சித் தலைவராக வருவாரேயானால் அதன்மூலம் கிடைக்கிற பலன் அதிகமாக இருக்கும் என்றும், அண்மையில் சிக்மகளூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும், அவரை வெளியேற்றுவதன் மூலம் அவருக்கு வாக்களித்த மக்களை நீங்கள் கேலி செய்கிறீர்கள், கேவலப்படுத்துகிறீர்கள் என்றும் நான் திரு. மொரார்ஜிக்குச் சொன்னேன், அவ்வாறு நான் சொன்னேன் என்பதற்கு என்ன சாட்சி என்று கேட்கக் கூடும். திரு. மொரார்ஜி தேசாய் இப்படி என்னிடம் பேசினார் என்பதையும் திருமதி இந்திரா காந்தி அம்மையார் தோற்கடிக்கப்பட்ட நேரத்தில் அவரைக் குடும்பத்தோடு சென்று பார்த்தவன் நான் என்பதையும் இப்படி அத்தனை நிகழ்ச்சிகளையும் எனது அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. முசிறிபுத்தன் அவர்களிடத்தில் — அவர்கள்



தான் அப்போது சிக்மகளூர் தேர்தலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடத்திக்கொண்டிருந்தவர் — தெரிவித்து இருக்கிறார் என்ற செய்தியை எனக்குச் சொன்னார். நான் அதைத்தான் இங்கே உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அனுபவம் மிக்க ஒரு உறுப்பினரை, இன்னும் சொல்லப் போனால் இணை பிரியாமல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நமது நாவலர் அவர்களோடு கற்றுக்கொண்டு தமிழ் ஆய்ந்த புலவராக இந்த அவையிலே வீற்றிருந்த பேராசிரியர் அவர்களை நீங்கள் துணிச்சலாக வெளியேற்றி இருக்கிறீர்களே, இது நியாயம்தானா? எதிர்க்கட்சியினுடைய கருத்துக்களைக் கேட்பது தவறு என்று கருதுகிறீர்களா? அவர்கள் உங்களுக்கு உதவ மாட்டார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அவர்களது கருத்துக்கள் பல சந்தர்ப்பங்களில் ஆளும் தரப்பினருக்குப் பயன்படாது என்று நம்புகிறீர்களா? ஆகவே நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மறு பரிசீலனை செய்யுங்கள் என்று கெஞ்சிக் கேட்கத் தயாராக இல்லை. ஆனால் உங்களுடைய மனச்சாட்சியோடு பேசிவிட்டுச் சொல்லுங்கள்; 22 பேர் நாங்கள் இங்கே உட்கார்ந்துகொண்டு இருந்தோம். 10 பேரை விழுங்கியதற்குப் பிறகு நாங்கள் 12 பேர் இங்கே உட்கார்ந்துகொண்டு இருக்கிறோம். எங்களுக்கு எண்ணிக்கை அல்ல முக்கியம். எண்ணங்களை எடுத்து வைக்கிற வாய்ப்பு உண்டு. அந்த வாய்ப்பைப் பயன்படுத்து வதற்கு நாங்கள் எப்போதும் தயாராக இருப்போம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எண்ணிக்கை குறைந்துவிட்ட காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வலிவு வெளியே போய்விட்டது என்று தயவு செய்து அருள்கூர்ந்து கருதாதீர்கள் என்று நான் அவை முன்னவர் அவர்களுக்கும், சபாநாயகர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும், அவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இதற்கு முன் சபாநாயகராக இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்கள் அளித்த தீர்ப்பை நீங்கள் படித்து இருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். இதே கருத்தின் அடிப்படையில்தான் அவர்களும் தீர்ப்புச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் சட்ட எரிப்புக்காகப் புறப் பட்டுக்கொண்டிருந்த நேரத்தில்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெளியே நடத்துகிற விவகாரம் வேறு.... (குறுக்கீடு) அந்த மாதிரி முன்மாதிரியைப் பின்பற்றுவது கிடையாது. நீங்கள் முன்னாள் சபாநாயகர் பற்றிச் சொன்னீர்கள். அந்தத் தீர்ப்பு பற்றி இங்கே பேசுவது சரியல்ல. 1963-ஆம் ஆண்டின் தீர்ப்பு அது. சுப்ரீம்

கோர்ட்டில் மாதாமாதம் நம்முடைய நாட்டின் தேவைக்கேற்ப சமுதாயத்தினுடைய சூழ்நிலைக்கேற்ப தீர்ப்பு மாற்றப் படுகிறது. அந்த மாதிரி தீர்ப்பு இல்லை இது. அதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது. அந்த சர்ச்சை வேண்டாம். வெளியே அதை வைத்துக்கொள்ளுங்கள். உள்ளே அது வேண்டாம்.

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வெளியே நடந்தது என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறீர்கள். அவர் வெளியே இருக்கிறார் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறீர்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொன்ன அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள். 1963-லே இருந்த மாதிரியா இன்றைக்கு இருக்கிறீர்கள் நீங்கள்? நாம் எவ்வளவு அட்வான்ஸ்-ஆகிக்கொண்டு வருகிறோம். அன்றைக்கு இருந்த சூழ்நிலை வேறு; எனவே ஒவ்வொரு சபாநாயகருடைய முன் மாதிரியையும் இங்கே பேசுவது சரியல்ல. நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும் —— அது சரியல்ல. அது நல்ல முறையல்ல.

**திரு. அ. ரகுமான்கான் :** அந்தச் சபாநாயகருடைய தீர்ப்பு சபையிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது தப்பு என்றால் தப்பு என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் பிரச்சினைக்கு ஏற்ப அந்தத் தீர்ப்பு, இந்தப் பிரச்சினைக்கு ஏற்ப இந்தத் தீர்ப்பு.

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1963-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பு. இப்போது 1986 இடையிலே உருண்டோடி விட்ட ஆண்டுகள் எத்தனையோ! அந்தத் தீர்ப்பு இந்தப் பிரச்சினைக்குப் பொருந்தாது என்ற உங்களது வாதத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை மெத்தப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ''மேஸ் பார்லியமெண்டரி பிராக்டீஸ்'' என்ற புத்தகத்தைத் தான் பாராளுமன்றம் ஓரளவிற்கு பின்பற்றிக் கொண்டிருக்கிறது. மேஸ் பார்லியமெண்டரி பிராக்டீஸ் என்ற புத்தகம் எழுதப்பட்ட நாள் எப்போது என்பதையும், எந்த ஆண்டு என்பதையும், இப்போதும் அவைகளில் சிலவற்றை நாம் பரிபாலித்துக் கொண்டிருக்கிறோம், பேணிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சரி, செல்லபாண்டியன் 1963-ம் ஆண்டில் சொன்னார்கள். போகட்டும். பால்கிவாலாவை விட தலை சிறந்த வழக்கறிஞராக நீங்களும் இருக்க முடியாது. நானும் இருக்க முடியாது....



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இதுகுறித்து பேச வேண்டாம். வழக்கறிஞர்கள் எல்லாம் என்னுடைய நண்பர்கள். நீங்கள் என்ன செய்தாலும் அவர்கள் என்னிடத்தில் நண்பர் களாகத்தான் இருப்பார்கள். அவர்களிடத்திலிருந்து நீங்கள் என்னைப் பிரிக்க முடியாது. அதே வழக்கறிஞர்களோடு தான் இந்த அவை ஆரம்பிப்பதற்கு முன்பு அமர்ந்து சாப்பிட்டுவிட்டு வந்தேன். அது நான் பிறந்த இடம், நீங்கள் யாரும் அந்த இடத்திற்கு வர முடியாது. வந்தால் கையில் கட்டோடு வரலாம். ரகுமான்கான் அவர்கள் தான் கோட்டு போட்டு செல்ல முடியும்.

**திரு. கி. மனோகரன்:** சபாநாயகர் அவர்களே, நான் உங்களோடு சட்டப்பிரச்சினையில்ஈடுபட்டு, விவாதித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. பேச்சை முடிப்பதற்கு முன்பு இறுதியாக கேட்டுக் கொள்ள விரும்புவது, முறைகேடான, அன்கான்ஸ்டிடியூஷனல்என்றுகருதப்படுகிற,அரசியல் சட்டத்திற்கு எதிரான ஆண்டி—கான்ஸ்டிடியூஷனல் என்றுதெரிவிக்கிறஅளவிற்கு, அரசியல் சட்டத்திற்கு விரோதமான, நாட்டு மக்களில் சிந்திக்கக் கற்றுக் கொண்டவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாத தீர்ப்பை நீங்களும், அவை முன்னவரும் வழங்கி இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தான் ஏற்றுக் கொள்ளவில்லை. நாடு பாராட்டுகிறது. எல்லா பத்திரிகைகளும் பாராட்டி இருக்கின்றன. தலையங்கங்களில் எல்லோரும் பாராட்டி இருக்கிறார்கள், ஒருசில வரிகளைத் தவிர. நாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள்தான் ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மக்கள் இந்தத் தீர்ப்பை ஏற்றிருக்கிறார்கள். மக்களைப் பற்றி நீங்கள் பேசமுடியாது. நீங்கள் ஒரு கட்சி வேண்டுமானால் ஏற்காமல் இருக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த விவகாரமெல்லாம் இப்போது வேண்டாம். இவையெல்லாம் அவைக்குறிப்பில் இருப்பது நல்லதல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க உத்தர விடுகிறேன்.

**திரு. கி. மனோகரன் :** இங்கே குறிப்பிட விரும்பிய தெல்லாம், சட்டம் படித்த மேதைகள் எல்லாம் உங்களுடைய தீர்ப்பை வரவேற்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியதற்காக நீங்கள் நேரடியாக மக்களிடம் சென்றிருக்கிறீர்கள், மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிற வாய்ப்பு எனக்கு இருப்பதைப்போல உங்களுக்கு இருக்க முடியுமென்று நான் நம்பவில்லை. அதற்காக நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. மாதத்திற்கு 20 நாட் களுக்கு மேல் நான் மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்..

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உங்களுடைய கட்சிக் கூட்டம். மக்கள் கூட்டம் அல்ல.

[பிற்பகல் 12-20]

**திரு. கி. மனோகரன்:** பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள் என்றால், அவர்கள் அத்தனைபேரும் கட்சிக் காரர்கள் என்று நீங்கள் கருதுவீர்களானால், எவ்வளவு பலம் பொருந்திய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன், மிக்க மகிழ்ச்சி. மக்கள் எந்த அளவுக்கு உங்களுடைய தீர்ப்பை மதிக்கிறார்கள் என்பதை நான் தெரிந்தவன் என்ற முறையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு கடுமையான தீர்ப்பை எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்கள் கொண்டு வரக்கூடாது. ''நான் சொல்லிவிட்டேன் அல்லவா? வெற்றிடம் என்று எழுதிவிட்டேன் அல்லவா?'' என்று ஒரு prestige issueவாக இதை ஆக்கி ஜனநாயக உரிமையை நீங்கள் அழித்துவிடக்கூடாது என்று உங்களை நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவை முன்னவர் எப்படி இதை ஒப்புக்கொண்டார் என்றே எனக்குத் தெரியவில்லை. அந்த உரிமை உங்களுக்கு உரிய உரிமை. நான் அதை மறுக்க வில்லை. அதே உரிமை முன்னவர் அவர்களுக்கும் உண்டு என்பதையும் நீங்கள் மறுக்கமாட்டீர்கள். Maximum நீங்கள் செய்யக்கூடிய ஒன்று suspension செய்யலாம். நான் அண்ணா தி.மு.க.விலே இருந்தபோது, நிதியமைச்சராக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 3 பேர்களை சஸ்பென்ஷன் செய்தேன் 20 நாட்களுக்கு. அது இங்கே உட்கார்ந்து இருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்குத் தெரியும். எந்தக் காரணத்தைக் கொண்டும், அந்த 3 பேர்கள், 20 நாட்களுக்கு இந்த வளாகத்திற்குள்ளே வரக்கூடாது, சட்டசபையில் நுழையக் கூடாது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியவன் நான். அந்த அளவிற்குத்தான் அதிகாரம் உண்டே தவிர, இதே அதிகாரத்தைத்தான் அப்போது சபாநாயகராக இருந்த எனது அருமை நண்பர் திரு. முனு ஆதி அவர்கள் பயன்படுத்தினார்களே தவிர, நீங்கள் இந்தியாவே வியக்கத்தக்க அளவிற்கு ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறீர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய அரசியல் சட்டம் என்கிற காரணத்தாலேதான், இந்தியாவே அதைப் பார்க்கிறது. நீங்கள் ஒன்றைச் சொல்லுங்கள், எரிக்கலாம் என்று சொல்லலாம். இவ்வளவு பேசுகிறீர்களே, ஏன் அந்த ஆக்ட்டுக்கு போகமாட்டேன் என்று சொல்கிறீர்கள்? You are talking about my act, Why don't you talk about their act?



**திரு. பி. முசிறிபுத்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 8-ஆம் தேதிக்கு முன்னாலே நம்முடைய நாஞ்சிலாருக்கு விளைவு களைப் பற்றி சொன்னதாலே அவர்கள் தன்னுடைய பெயரைக் கடைசியாக சேர்த்துக் கொண்டு, அவர்கள் இங்கே வந்திருக் கிறார்கள். இல்லை என்றால் அவர்களும் அங்கே போய் இருப்பார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** அவைக்குள்ளேயே எரிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீனாட்சிசுந்தரம்........ பாருங்கள், சபைக்குள் எரிப்போம் என்கிறார். நாட்டு மக்களுக்குத் தெரியட்டும். இதற்கு மேலே எப்படி. இப்போதும் நான் சொல்கிறேன். தாங்கள் ஏன் இதைச் செய்தீர்கள் என்பதைப் பற்றி வருத்தத்தோடு நாட்டு மக்களுக்குச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்). ஸ்டேச்சரைப் பாருங்கள். அம்பேத்கார் ஸ்டேச்சர் வேறு, அண்ணா ஸ்டேச்சர் வேறு, ராஜாஜி ஸ்டேச்சர் வேறு. அவர்களை சாதாரண மனிதன் பின்பற்ற முடியாது. அவர்கள் செய்ததை நீங்கள் செய்தால், வம்புதான்! (குறுக்கீடு). தயவுசெய்து அப்படி உள்ளே பேசாதீர்கள். எரிப்போம் என்று சொல்கிறார்கள், இத்தனைக்கும் பிறகும். (குறுக்கீடு). அரசியல் சட்டம் காகிதம் என்று சொன்னார்கள். ஒரே ஒரு அரசியல் சட்டம்தான் பாராளுமன்றக் கட்டிடத்திலே கண்ணாடிக்குள் வைக்கப்பட்டு இருக்கிறது. ஒரே சட்டம்தான், புக். நாம் வைத்திருப்பது எல்லாம் காப்பி. எழுதுவது காப்பி; டைப் அடிப்பது காப்பி; ஜெராக்ஸ் எடுப்பது காப்பி, ஆகவேதான் சொல்கிறேன், நம்முடைய கையிலே இருப்பது எல்லாம் காப்பி. (குறுக்கீடு).

**திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னிடம் நேரடியாகப் பேசிவிட்ட காரணத்தாலே நான் தெரிவிக்கின்றேன். சட்டத்தை எரித்தீர்களா, அல்லவா, சொல் என்று என்னைக் கேட்டீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்போது அரசியல் சட்டத்தை எரிப்பேன் என்று சொல்லி வந்த நேரத்தில், அந்த அரசியல் சட்டத்தின் காப்பியை கிழித்து அந்த 17-வது பிரிவை கிழித்து, அசோகச்சக்கரம் போட்டிருந்த அந்தப் பகுதியை கிழித்து அவர்கள் கொளுத்த வரவில்லை. மாறாக ஒரு காகிதத்தில் அந்தக் குறிப்பிட்ட பகுதியைப் பற்றி மட்டும் எழுதி எரிக்க வந்தார்கள். எரிக்க வந்தவரை தடுத்து நிறுத்தியது அப்போது இருந்த, இன்றைக்கும் நான் பெரிதும் மதிக்கின்ற பக்தவச்சலம் அவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனை சிறை, 6 மாதம். இதேபோல் பதவி பறிப்பு அங்கே நடைபெறவில்லை. அதேபோல் தூண்டிவிட்டார் என்ற குற்றச்சாட்டுக்காக டாக்டர் கலைஞர் அவர்களைக் கைது செய்து, 6 மாதம் நீதிமன்றம் தண்டனை வழங்கி—அப்போது அவர்கள் எம்.எல்.ஏ.வாக இருக்கிறார்கள்—பாளையங் கோட்டைச் சிறையிலே அடைக்கப்பட்ட சம்பவம் உங்களுக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் பாளை சிறைக்குப் போனது இதனால் அல்ல.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணாநிதி பாளை சிறைக்குச் சென்றது மாணவர்களை வன்முறைக்குத் தூண்டிவிட்டார் என்பதற்காகத்தான். வன்முறையாளர் என்பதாலே......

திரு. அ. ரகுமான்கான்: தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் 5-வது பிரிவின்படி தூண்டினார் என்று குற்றம் சுமத்தப்பட்டு 6 மாதம் சிறைத்தண்டனை பெற்றார். மாணவர்களை வன்முறைக்குத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டுக்காக அல்ல. அமைச்சர் பெருமக்கள் தவறான தகவலைச் சொன்னதற்காக நான் உரிமைப் பிரச்சினை கூட கொண்டு வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தை அவசியம் இல்லை. தவறு என்றால்தான் பிரச்சினை. (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான்: தவறான தகவல் கொடுத்த காரணத்தால்தான் இந்திரா அம்மையார் அவர்களை எக்ஸ்பெல் பண்ணினார்கள். தவறான தகவலைக் கொடுக்கிற அமைச்சரை எக்ஸ்பெல் பண்ணுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோடு முடித்துவிடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அண்ணாவைப் பற்றி இப்படிப் பேசினால் எப்படி சார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாவினுடைய ஸ்டேச்சர் வேறு; அம்பேத்காருடைய ஸ்டேச்சர் வேறு; நேருவினுடைய ஸ்டேச்சர் வேறு; ராஜாஜியினுடைய ஸ்டேச்சர் வேறு. அவர்களோடு ஒப்பிட்டுப் பேசுவது தமக்கே சரியல்ல.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விரைவாக முடிக்க விரும்புகிறேன், கலைஞரைப் பற்றி, அவர் தூண்டிவிட்டார் வன்முறையை, அதற்காக கைது செய்யப்பட்டார் என்று எல்லாம் இங்கே கூறப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைத் தண்டனை அனுபவித்தார் என்பது நீங்கள் எல்லாம் அறிந்த உண்மை. அப்போது அவர் எம்.எல்.ஏ.வாக இருந்தார் என்பதை நீங்கள் மறந்து இருக்க முடியாது (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தவறான தகவலைத் தொடர்ந்து, வேண்டும் என்றே மாண்புமிகு உறுப்பினர் தந்து கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து அதைத் திருத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கருணாநிதியை பாளையங் கோட்டைச் சிறையில் வைத்தது மாணவர்களை இந்தி எதிர்ப்புப்



போராட்டத்தின்போது வேண்டும் என்றே கூப்பிட்டு, திட்டமிட்டு குழப்பத்தை உண்டாக்கவேண்டும் என்பதற்காக—மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது. சிறைச்சாலையிலிருந்து வெளியே வரவேண்டும் என்பதற்காக மாண்புமிகு நாவலர் அவர்கள் தனியாகக்கூட அவரிடத்தில் அவர் செய்தது தவறுதான் என்று சொன்னதையும் இந்த நாடு அறியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) (கூச்சல்—குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாவலர்கிட்டே என்ன பேசினார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. அது தெரிந்தால் நன்றாக இருக்கும். அமைச்சர் அவர்கள் சொன்னதை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனது பேச்சை முடிப்பதற்கு முன்பு ஒன்றை மட்டும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட்டார்கள். தண்டிக்கப்பட்டார்களே தவிர அவர்கள் வகித்து வந்த பதவிகளை யாரும் பறிக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் கொளுத்த வந்த அந்த நேரத்தில் அவர்கள் ராஜ்ய சபை உறுப்பினராக இருந்தார்கள் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். நானும் அறிவேன். அன்றைக்கு அண்ணா அவர்களுக்கு 6 மாத தண்டனைதான் வழங்கப்பட்டதே தவிர ராஜ்ய சபையில் நீங்கள் இருக்கக்கூடாது என்று யாரும் சொல்லவில்லை. தீர்மானமும் கொண்டு வரவில்லை. நீங்கள் வேண்டுமானால் சொல்லாம், அம்பேத்கார் ஸ்டேச்சர் வேறு, நேரு ஸ்டேச்சர் வேறு, உங்கள் ஸ்டேச்சர் வேறு என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உண்மையில் சொல்கிறேன். நீங்கள் அந்தமாதிரி பேச வேண்டாம். (மணியடிக்கப்பட்டது) திரு. என்.எஸ்.வி. சித்தன், உங்கள் ஸ்டேச்சர் வேறு, உட்கார்ந்து விடுங்கள். (சிரிப்பு)

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதிகமாகப் பேசப் போவது இல்லை. எனது அருமை நண்பர் திரு. சித்தன் அவர்கள் தொடர்ந்து உங்களுடைய தீர்மானத்தை எதிர்த்துப் பேச இருக்கிறார்கள். ஆகவே இந்த வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்ற பெயராலே அரசியல் சாசனத்தின் ஒரு பகுதியைத் தீயிட்டுக் கொளுத்திய இந்த அவையின் 3 உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரும் தீர்மானத்திற்கு அவை முன் வைக்கப்பட்டுள்ள திருத்த அறிவிப்பின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

இந்தப் பேரவையினுடைய மேலான கவனத்திற்கு வரலாற்றுப் பார்வையோடு பழைய நிகழ்ச்சிகளை முதலாவதாக நினைவு படுத்த விரும்புகிறேன். நாடு சுதந்திரம் பெற்ற உடன் உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்திமொழி ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தி பேசாத மக்களின் நலனில் அக்கறை கொண்டு ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக 15 ஆண்டுக் காலத்திற்கு இருக்கும் என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிறகு தமிழகத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஒன்று உருவாக இருந்த சமயத்தில்....

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாணபுமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசும்போது அவர் அமர்ந்து இருந்தார்.

(பிற்பகல் 12-30)

திரு. என். எஸ். வி. சித்தன் : அவைத் தலைவர் அவர்களே, பிறகு தமிழகத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஒன்று உருவாக இருந்த சமயத்தில் அன்று பிரதமராக இருந்த ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேரு அவர்கள் 7–8–1959 ஆம் தேதி அன்று சொன்னார்கள்—I quste; ''இந்தி மொழியுடன் ஆங்கிலம் துணை மொழியாகவும், மாற்று மொழியாகவும், அதாவது Associate Additional Language ஆகவும் மக்கள் விரும்பும் வரை தொடர்ந்து இருக்கும்.'' அதைத் தீர்மானிக்கும் பொறுப்பை இந்தி மொழி பேசும் மக்களிடம் விடாமல் பேசாதவர்களிடம் விடவேண்டும். 500–க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போது தமிழகத்தைச் சார்ந்த அமரர் திரு.ஈ.வே.கி. சம்பத்துக்கும் இன்னொரு உறுப்பினருக்கும், இந்த உறுதிமொழியைக் கொடுத்ததன் மூலம் தன்னை உலகின் மிகச்சிறந்த ஜனநாயக வாதியாக நாட்டுமக்களுக்கு ஜவஹர்லால் நேரு அவர்கள் நிரூபித்துக் காட்டியதை யாரும் மறந்துவிடமுடியாது. அவர் கொடுத்த உறுதிமொழிக்காக அன்றைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் போட்டதோடு, அன்றைய ஜனாதிபதியாக இருந்த மாண்புமிகு டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் வருகையையொட்டி கருப்புக் கொடி கட்டுவோம் என்று முன்னால் செய்த அறிவிப்பை மாற்றியதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மேலும் தாம் கொடுத்த உறுதிமொழிக்குச் சட்ட வடிவம் கொடுக்க வேண்டும் என்று விரும்பிய ஜவஹர்லால் நேரு அவர்கள் ஆட்சி மொழிச் சட்டத்தை 1963-லே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார்கள். ஆசிய ஜோதிக்குப் பின்னால் பாரதத்தினுடைய பிரதமராக பொறுப்பு ஏற்றுக்கொண்ட லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் இந்த உறுதி மொழியைக் காப்பாற்றினார்கள் என்பதையும் நாம் அறிவோம்.



அடுத்த பிரதமராக வந்த வீராங்கனை அன்னை இந்திரா காந்தி அவர்கள் இந்தி பேசாத மாநில மக்களுடைய ஐயங்களைப் போக்கும் விதத்தில் ஆட்சிமொழிச் சட்டத் திருத்தம் 1967-லே நாடாளுமன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். இந்தத் திருத்தச் சட்டத்தின்படி, இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளாத எல்லா மாநிலங்களின் சட்டசபைகளும் ஆங்கில மொழியை சட்டத்தில் குறிப்பிட்ட காரியங்களுக்குத் தொடர்ந்து பயன்படுத்துவதை நிறுத்திவிடலாம் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு, இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆங்கிலத்தை நிறுத்தக் கோரும் ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தினுடைய இரு சபைகளும் நிறைவேற்றும் காலம்வரை இந்நிலை நீடிக்கும் என்று கூறினார்கள். இதன்படி ஏதாவது ஒரு மாநிலம் விரும்பினால்கூட ஆங்கிலத்தை அகற்றமுடியாது. இது நாகாலாந்து போன்ற சிறிய மாநிலங்களுக்குக் கூட பொருந்தும். இப்படிப்பட்ட ஏட்டு அதிகாரத்தைவிட வேறு பாதுகாப்பு இந்தி பேசாத மக்களுக்கு என்ன இருக்கமுடியும் என்பதை இந்த நேரத்தில் நான் அழுத்தந் திருத்தமாகக் கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

I quote, ''மக்களுடைய உணர்ச்சிகளையும், கஷ்டங்களையும் புரிந்து தெரிந்து கொள்வதற்கான சாதனங்கள் மொழி. அதையே தேசத்தைப் பிளக்க அனுமதித்தால் மொழியின் நோக்கமே வீழ்த்தப்படுகிறது. ஐயங்களை அகற்றவும், ஒற்றுமையை வளர்க்கவுமே இம்மசோதா கொண்டுவரப் பட்டுள்ளது. ஒற்றுமையே பிரதானமானது. தீரத் தியாகம் செய்தும், பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் ஆர்வமுமே உண்மையான ஒற்றுமையை உருவாக்கும்'' என்று மறைந்து அமரராக இருக்கின்ற முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்கள் அரசியல் திருத்த மசோதா மீது 20–12–1967-ல் ராஜ்ய சபையில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

நான் இன்னமும் நினைத்துப் பார்க்கிறேன். இந்த அவையிலே இளைய உறுப்பினராக இருந்த காலத்திலே 1968-ஆம் ஆண்டு இந்த சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட இரு மொழிக் கொள்கை தீர்மானத்தை மாநில அரசு அமல்படுத்துவதற்காக அன்று முதல் இன்று வரை மத்திய அரசு ஏதாவது ஊறுவிளைவிக்க முயற்சித்ததாக யாராவது குறிப்பிடமுடியுமா? தமிழக அரசுப் பள்ளிகளில் இந்தி படிக்க வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதா? மத்திய அரசு என்றைக்காவது, எப்போதாவது தலையிட்டது உண்டா? தமிழக அரசுப் பள்ளிகளில் இரு மொழிக் கொள்கை இன்றைக்கும் அமல் நடத்தப்படுகின்றது. நாட்டின் நிலைமை இவ்வாறிருக்க பாரதப் பிரதமர், நான் பெரிதும் மதிக்கின்ற 20–ஆம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் பல தடவை இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று உறுதி கொடுத்தபோதும், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் நேரில் உறுதிகொடுத்த போதும்கூட, ஏதோ

ஒருவாறு தற்காலிகச் சுற்றறிக்கையைக் காரணம் காட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசு தமிழகத்தில் இந்தியைத் திணிக்கிறது என்று கூறி இந்தச் சிறிய பிரச்சினையை பூதாகரமாக ஆக்கி, நாம் அனைவரும் புனிதமாக, பவித்திரமாக போற்றி மதிக்கின்ற அரசியல் சாசனத்தை எரிப்பது, நான் மிகக் கடுமையாகச் சொல்ல விரும்புகிறேன், தேசத் துரோகம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பழைய நிகழ்ச்சிகளை நான் திரும்பப் பார்க்கிறேன். 1757-லே நடைபெற்ற பிளாசி யுத்தத்தின் மூலம் இந்தநாடு கிழக்கு இந்தியக் கம்பெனியுடைய ஆதிக்கத்தின் கீழ் வந்தது. 100 ஆண்டுகளுக்குப் பின்னாலே, 1857-ல் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரின் மூலம் கிழக்கு இந்தியக் கம்பெனியிடமிருந்து இந்த நாடு விக்டோரியா மகாராணிக்கு அடிமைப்படுத்தப்பட்டது, 1855ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை சுதந்திரத்திற்காக நடத்திய பல்வேறு போராட்டங்களில் அடிபட்டவர்கள், சிறையிலே சித்திரவதைப்பட்டவர்கள், நாடு கடத்தப்பட்டவர்கள், நாட்டை இழந்தோர், நல்லோரை இழந்தோர், மாடு மனைகளை இழந்தோர், தூக்கு மேடையை துச்சம் என மதித்து தூக்கு மேடை ஏறியவர்கள், ஆகியவர்களுடைய தியாக வேள்வியிலே பெற்ற சுதந்திரத்தின் அடிப்படையில்தான் இந்த அரசியல் சட்டப் உருவாக்கப்பட்டது என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் தெரிந்திருக்க நியாயம் இல்லை. சுதந்திர வேள்வியில் தனிமைச் சிறையிலே ஒன்று அல்ல, 14 ஆண்டுகளைக் கழித்த எங்கள் மாபெரும் தலைவர் சுதந்திர இந்தியாவின் முதல் மூவர்ணக் கொடியினை டெல்லி செங்கோட்டையில் ஏற்றிய ஜவஹர்லால் நேரு அவர்கள் டிசம்பர் 1949-ல் அரசியல் சாசனத்தை இந்த நாட்டு மக்களுக்காக உருவாக்கி அதில் கையெழுத்து போடும்போது மகிழ்ச்சி நிறைந்த உணர்ச்சிப் பெருக்கால் தன் கண்களிலேயிருந்து வந்த ஆனந்தக் கண்ணீரால் அவர் கையெழுத்து இடுகின்ற நேரத்திலே அவர் கையெழுத்தே கொஞ்சம் அழிந்து போயிருப்பதையும் நாடாளுமன்ற மைய மண்டபத்திற்கு செல்லும் எவரும் இன்றைக்கும் பார்க்கலாம். உள்ளத்தை உருக்கும் இந்த நிகழ்ச்சியினை திராவிட முன்னேற்றக் கழகம் நினைத்திருக்க முடியாது.

சட்டசபையில் உறுப்பினராக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட அதே அரசியல் சாசனத்தை தீயிட்டுக் கொளுத்திவிட்டு, பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் 7 சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்வதாக அறிவித்ததை நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்ல உதவும் இந்த அரசியல் சாசனத்தை அல்லவா இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறது. தமிழைக் காக்கவே இந்த இனமானப் போர், என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறதே, உண்மை நிலை என்ன? இன்றுள்ள பிரச்சினை இந்தியா, ஆங்கிலமா என்பதுதான். இந்தியா, தமிழா என்பதல்ல என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.



மாநிலங்களில் பிராந்திய மொழிதான் ஆட்சி மொழி என்று இன்று நேற்று அல்ல, 1925-ல் கான்பூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டிலே தேசப்பிதா மகாத்மா காந்தியின் முயற்சியாலே, கவிக்குயில் சரோஜினிநாயுடு அவர்கள் தலைமையில் தீர்மானத்தைப் போட்ட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்கள் என்பதையும் இந்த நேரத்திலே பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். எனவே தமிழ் இடத்திற்கு இந்தி ஒரு காலத்திற்கும் வரவே முடியாது. தமிழை யாராலும் அழிக்கவே முடியாது. ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மூத்த மொழி. கல் தோன்றா, மண் தோன்றா காலத்தே தோன்றியது தமிழ் என்பதை இந்த நேரத்தில் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). 1922-லே சென்னை இராஜதானி ஒரே அமைப்பாக இருந்தபோது—நான் கூற விரும்புகிறேன்—தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திரா காங்கிரஸ் கமிட்டி, கேரளா காங்கிரஸ் கமிட்டி, கர்நாடகா காங்கிரஸ் கமிட்டி என்று பிரித்து மொழி உணர்வுக்கு முதலிடம் கொடுத்து உருவாக்கிய வரலாற்றுப் பெருமைக்கு உரியவர்கள் நாங்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்வதிலே நான் பெருமை அடைகிறேன். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த அரசியல் சாசனத்தை திராவிட முன்னேற்றக் கழகம் தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறது. இந்திய குடிமக்களாகிய நாம் நமக்கு நாமே இந்தியாவில் இறையாண்மை, சோஷலிச மத சார்பின்மை, ஜனநாயகக் குடியரசை உருவாக்கும் சமூகப் பொருளாதார, அரசியல் நியதிக்காகவும், சிந்திக்கவும், வெளிப்படுத்தவும் சமமான வாய்ப்பை வழங்குகின்ற, சகோதரத்துவம் வழங்குகின்ற அரசியல் சாசனத்தை அவர்கள் கொளுத்தியிருக்கிறார்கள். நாட்டினுடைய குடிமக்களுக்கு மத, மொழி, இன, பிராந்திய வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் அடிப்படை ஜீவாதார உரிமைகளையும், நாடாளுமன்றம், சட்டமன்றம், நிர்வாகம், நீதிமன்றம் ஆகிய பிரிவுகள் இயங்குவதற்கு அதிகாரம் இருக்கின்ற, மத்திய மாநில அரசுகள் இயங்க அதிகாரம் தருகின்ற, ஏன், மைய மாநில உறவுகளை நெறிப்படுத்துகின்ற, இந்த நாட்டையே ஒன்றுபடுத்துகின்ற, ஒருமைப்பாட்டிற்கு வித்திடுகின்ற அரசியல் சாசனத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் தீயிட்டுக் கொளுத்தி இருக்கிறது. போராட்ட ஆரம்ப காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சொல்லியது? எரியூட்டப்பட வேண்டிய சட்டப் பிரிவு வாசகங்கள் என்று சொல்லி, அதனை பத்திரிகையிலேயே அச்சிட்டு வெளியிட்டார்கள். இந்தி ஆதிக்க எதிர்ப்பு, எரியூட்டப்பட வேண்டிய சட்டப்பிரிவு வாசகங்கள். அங்கிலத்திலே பார்ட் 17—அஃபிஷியல் லாங்குவேஜ் Part XVII-OFFICIAL LANGUAGE Chapter I-Language of the Union-343 (1) The official language of the Union shall be Hindi in Devanagari script என்று ஆங்கிலத்திலே அச்சடித்துவிட்டு அதற்குக் கீழே தமிழிலே விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். 17 ஆம் பாகம், அலுவல் மொழி. முதல் அத்தியாயம், மைய அரசின் மொழி 343 உட்பிரிவு 1 தேவநகரி

(பிற்பகல் 12–40)

வரிவடிவத்தில் லிபி உள்ள இந்தி இந்தியாவின் அதிகார பூர்வமான மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு அறிவித்துவிட்டு, ஏன், அவர்களுடைய பத்திரிகையிலே கூட பல்வேறு இடங்களிலே, 'ஆதிக்க இந்தியை எதிர்த்து அரசியல் சட்டம் எரிப்பு—கோவை மாவட்டத்திலே 500 பேர் கைது. இந்தி ஆதிக்கத்தை இங்கு இல்லாமல் செய்திட, தென்னாற்காடு மாவட்டத்தில் அரசியல் சட்டத்திற்கு தீயிட்டு 1474 தோழர்கள் கைது' என்று குறிப்பிட்டு விட்டு, அரசியல் சட்டத்தினுடைய 17–வது பிரிவை நாங்கள் கொளுத்துகிறோம் என்று கோவையில் பேசும்போது குறிப்பிட்டுவிட்டு, அதைக் கொளுத்துவது தவறு என்றால், முழு அரசியல் சட்டத்தையும் கொளுத்துகிற ஒரு காலத்தை எதிர்பார்ப்போம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னணித் தலைவர் சொல்லிவிட்டு, இன்றைக்கு நாங்கள் அரசியல் சட்டத்தை எரிக்கவில்லை, ஒரு துண்டுக் காகிதத்திலே உள்ள பகுதியைத் தான் எரிக்கிறோம் என்று சொன்னால், நான் தெலுங்கிலே கேட்க விரும்புகிறேன், தானிக்கி பேர் ஏமி?' (மேசையைத் தட்டும் ஒலி).

ஆக, திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு போராட்டத்தை அறிவித்து விட்டு, அதைச் சந்திப்பதால் எற்படும் விளைவுகளை எண்ணிப் பார்க்காமல், சந்திப்பதற்குத் துணிவு இல்லாமல் எந்த அளவுக்கு வழுக்கிக் கொண்டு போய் இருக்கிறது என்பதை அருள் கூர்ந்து இந்த அவை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமா சொன்னார்கள்? அரசியல் சட்டத்தை எரிப்போம், பஞ்சாப் நெருப்பு கொண்டு கொளுத்துவோம், தமிழ் போதும், தமிழ்நாடே போதும்!—ஒற்றுமைக்குப் பாடுபாடுகின்ற நேரத்தில் இப்படிச் சொல்கிறார்கள் பாருங்கள்.

அது மட்டுமா சொன்னார்கள்? 'இன மானப் போருக்கு எழுக: வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்று சொன்னார்களா, இல்லையா? அரசியல் சட்டம் 17-வது பிரிவை நாம் துச்சமாக மதிக்கிறோம், கால் தூசாகக் கருதுகிறோம் என்று வீர முழக்கம் இட்டுவிட்டு, இன்றைக்கு மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்திய 301 பேர் கைது என்று போட்டு விட்டு இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? 9–12–1986 ஆம் தேதியன்று பத்திரிகையிலே என்ன வருகிறது? இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்று எழுதப்பட்ட காகிதத்தைக் கொளுத்துகிறேன் என்று கூறி, 'சட்டி சுட்டதடா, கை விட்டதடா' என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிற இந்த வரலாற்றுப் புகழ் மிக்க இன மானம் மிக்க போருக்கு முடிவுரை எழுதி முடித்தும் வைத்து விட்டார்கள்.

என்ன சொன்னார்கள்? நாம் கொளுத்துகின்ற தீ. நாடெங்கும் அறிவுத் தீயாகப் பரவட்டும்—முழக்கம் இட்டார்களா, இல்லையா? நாம் பார்த்தோம். நாடும் பார்த்தது.



அறிவுத் தீ எப்படிப் பரவியது தெரியுமா? இருபதுக்கும் மேற்பட்ட நம்முடைய சொத்துக்கள், அரசினுடைய பேருந்துகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன என்பதை இந்த நேரத்திலே மறந்துவிடக்கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தானே வலிய சென்று, அரசியல் சட்டத்தை எரித்து, குற்றம் செய்து, கைதானதற்கு ஐந்து நிமிடத்திற்குள்ளாகவே அவரை விடுதலை செய் என்று போஸ்டர் ஒட்டும் சூழ்நிலை இன்றைக்குத் தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 1965-லே மாணவர்களைத் தூண்டி ஆட்சியைப் பிடித்ததைப் போல், மீண்டும் கனவு கண்டு கொண்டிருக்கிறது அந்த இயக்கம் என்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஏன், இந்த நேரத்தை திராவிட முன்னேற்றக் கழகம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது? அரசியல் நோக்கம் தவிர அதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? நான் கேட்க விரும்புகிறேன். 1969-லிருந்து, 1975 வரை சர்வ வல்லமை படைத்த அந்தக் காலத்திலேயே ஏன் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கக்கூடாது? ஏன் அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டு இருக்கக் கூடாது? அன்றைக்குக் கேட்கவில்லையே; கேட்க மனமில்லையா? அல்லது வேறு பிரச்சினையில் மனம் இருந்ததா என்று என்னால் கேட்காமல் இருக்க முடியாது.

நான் இன்னமும் சொல்வேன்: 1980-ஆம் ஆண்டு சென்னைக் கடற்கரையிலே, "We do not want a tamasha in Delhi; We want a Government; We want a stable Government" என்று சொன்னார்களே, 'நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சியைத் தருக' என்று சொன்னார்களே, 'நேருவின் பேரப்பிள்ளை, இந்திராவினுடைய வீரப்பிள்ளை' என்று சொன்னார்களே, அன்றைக்கு இந்தப் பிரச்சினையை ஏன் வைக்கவில்லை என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் (குறுக்கீடு) வாய்ப்பு கிடைக்கின்ற நேரங்களில் எல்லாம் இந்தப் பிரச்சினையை எழுப்பாமல் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்பி வருவது, மக்கள் மன்றத்திலே......(குறுக்கீடு), (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மலர்மன்னன், உட்காருங்கள். (கூச்சல் குழப்பம்). ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். திரு. சித்தன், தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு, கூச்சல்-குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் எல்லோரும் அமருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் நடைபெற்ற நிகழ்ச்சிகளைத்தான் சொல்லிக் கொண்டு வருகிறேன், பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு எதிராக எதுவும் சொல்லவில்லை. (குறுக்கீடு). ஏன் உள்ளதைச் சொன்னால், உணர்ச்சி ஏற்படுகிறது என்று புரியவில்லை...... (கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் பேசும்போது இடைமறித்துப் பேசாதீர்கள். அவர் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஓர் உறுப்பினர் பேசும்போது அவர் உரிமையை நீங்கள் பாதுகாக்க வேண்டும்.

திரு. ஆ. நடராசன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆக, நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட விரும்புவது, இந்த மொழிப் பிரச்சினையைக் காரணமாக வைத்துக்கொண்டு சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லாமல், இன்றைக்கு ஒரு நிலையை உருவாக்குவது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசியல் நிலைதானே தவிர, வேறு என்னவாக இருக்கமுடியும் என்று கேட்க விரும்புகிறேன். இன்றையதினம் தமிழகத்திலே இருக்கின்ற இந்த அரசுக்கும், மையத்திலே இருக்கின்ற அரசுக்கும் இருக்கின்ற ஒரு நல்ல உணர்வை கெடுப்பதற்காகத்தானே தவிர, வேறு என்ன காரணத்தினாலே இதைக் கொண்டு வந்திருக்க முடியும்; இந்த நேரத்திலே இந்தப் போராட்டத்தை எடுத்திருக்க முடியும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தொடர்ந்து அடுக்கடுக்காக நடைபெற்ற தேர்தல்களிலே மக்கள் மத்தியிலே சரிந்துவிட்ட செல்வாக்கை ஈடுகட்டுவதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் போராட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று நான் சொல்வேனே தவிர வேறு என்ன தவறு இருக்க முடியும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த தேசத்தைக் காக்க (கூச்சல்—குழப்பம்) தேசத்தினுடைய ஒருமைப்பாட்டையும், ஐக்கியத்தையும் (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவருக்கொருவர் நேருக்குநேர் பேசக்கூடாது. அது முறை அல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : தேசத்தினுடைய ஒருமைப்பாட்டையும், ஐக்கியத்தையும், இறையாண்மையையும் காக்க, தன்னுடைய அருமைத் தாயையே பறிகொடுத்திருந்தாலும் இந்த தேசத்தைக் காக்க, ஜனநாயகத்தைக் காக்க, நிலையான ஆட்சியை இந்த நாட்டு மக்களுக்குக் கொடுப்பதற்காக உயிரையே துச்சமாக மதித்து தேசத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற நம்முடைய 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர்



மேன்மைக்குரிய இந்தியாவினுடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழியைக் கொடுத்திருக்கிறார். நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுபற்றி நேரிலே கேட்டபோது கூட மிக அழுத்தந்திருத்தமாக, தமிழக மக்கள் விரும்பாத வரையில் இந்தி நிச்சயமாகத் திணிக்கப்படாது என்கின்ற கருத்தினை வெகு அழகாகக் கூறியதற்குப் பின்னரும் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் காரணங்களுக்காக இந்தப் போராட்டத்தை நடத்துகிறது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன். தேசத்தினுடைய ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும், ஒற்றுமையையும் கருதி மத்திய அரசோடு நல்ல உறவினை வைத்துக் கொண்டு தேச பக்த உணர்வோடு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுடைய மத்தியிலே இழந்துவிட்ட செல்வாக்கைப் பெறுவதற்காக எடுத்த இந்தப் போராட்டத்தை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு, துணிச்சலாக, சாமர்த்தியமாக சந்தித்ததற்காகவும், நடவடிக்கை எடுத்ததற்காகவும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய இதயம் கனிந்த பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தப் போராட்டத்திற்கு எள்ளளவுகூட ஆதரவு கொடுக்காமல் இந்தப் போராட்டத்தின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட தமிழக மக்களை, அவர்களுடைய பாத கமலங்களை என்னுடைய கைகளில் பற்றி வணக்கத்தைத் தெரிவித்து நான் மரியாதை செலுத்த விரும்புகிறேன்.

ஒரு வாதத்தைச் சொன்னார்கள். அன்னை இந்திரா காந்தி அவர்கள் நாடாளுமன்றத்திலே, பதவி பறிக்கப்பட்ட நேரத்திலே நாங்கள் குரல் கொடுக்கவில்லையா ? ஜனதா ஆட்சியின்போது அன்னை இந்திரா காந்தியின் பதவி பறிக்கப்பட்ட நேரத்திலே நாங்கள் அதற்காக ஆதரவுக்குரல் கொடுக்கவில்லையா? அன்றைய தினம் ஆட்சியில் இருந்த ஜனதா அரசு அதற்கு முந்தைய நாடாளுமன்றத்திலே ஒரு தவறான தகவல் கொடுத்து விட்டார்கள் என்று காரணத்தைக் காட்டி உரிமைக் குழுவுக்கு அந்தப் பிரச்சினையை அனுப்பி அன்னை இந்திராகாந்தியின் பதவியைப் பறித்தார்கள். ஆனால் அன்னை இந்திராகாந்தி அவர்கள் எந்தக் காலகட்டத்திலேயும் அரசியல் சாசனத்தை, சட்டத்தை மறுத்திட்டவர்கள் இல்லை என்பதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். அரசியல் சாசனத்தை உருவாக்கிய பெரும் அறிஞர்கள், சட்ட மேதைகள், தேச பக்தர்கள், அரசியல் சாசனத்தைக் கொளுத்தி தன்னுடைய தேச விரோதத்தை வெளிப்படுத்துபவர்கள் வருகின்ற காலங்களில் இருப்பார்கள் என்பதை அன்றைக்கு எண்ணிப் பார்த்திடவில்லை. எண்ணிப் பார்த்திருப்பார்களேயானால் அரசியல் சட்டத்தை எரிப்பதற்கு என்ன தண்டனை என்பதையும் நிச்சயமாக அன்றைக்கே எழுதியிருப்பார்கள், திட்டவட்டமாக.

[திரு. என்.எஸ்.வி. சித்தன்] [1986 டிசம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக தமிழக அரசைக் கேட்டுக் கொள்வேன், அரசியல் சாசனத்திற்கு, அவமதிப்பு செய்ததற்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று, நாடாளு மன்றத்திலே சட்டம் கொண்டு வர வேண்டுமென்று தமிழக அரசின் சார்பிலே ஒரு தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்ற ஒரு யோசனையை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் முன் வைக்க விரும்புகிறேன். அரசின் சார்பில் முன் மொழியப்பட்டு இன்று விவாதத்திற்கு வந்துள்ள இந்தத் தீர்மானத்தில் ஆட்சிக் கட்சிக்கு, அரசுக்கு இருக்கின்ற உணர்வுகளையும், நல்லெண்ணத்தையும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மதிக்கிறது. அரசியல் சாசனத்தை மதிப்பதிலே என்றைக்குமே இந்திய தேசிய காங்கிரஸ் முன்னணியிலே இருந்திருக்கிறது; அது புனிதமானது, பவித்ரமானது என்கின்ற காரணத்தினாலே.

(பிற்பகல் 12-50)

அரசியல் சாசனத்தின் ஒரு பகுதியை எரித்த காரணத்திற்காக அவையில் உள்ள 3 உறுப்பினர்களுடைய எஞ்சிய பதவிக் காலத்தில்—அதாவது 3 ஆண்டுக் காலத்திற்கு இங்கே பதவி வகிக்க தகுதியற்றவர்களாக ஆக்கும் இந்தத் தீர்மானத்தின் மீது கருத்து சொல்லும்போது, எந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அரசியல் சட்டத்தை எரிக்க வேண்டும் என்று ஆரம்பித்தார்களோ அவர்களே தொடர்ந்து ''நாங்கள் அரசியல் சட்டத்தை அவமதிக்கும் எண்ணத்தோடு அரசியல் சட்டத்திற்கு எரியூட்டவில்லை'' என்று சொல்லிவிட்ட காரணத்தாலும் இங்கே உறுப்பினர்களாக இருக்கிற 3 பேர்களுடைய எஞ்சிய 3 ஆண்டுக்கால பதவியை இழக்கச் செய்வோமானால் தாங்கள் செய்யாத ஒரு தவறுக்காக அந்தத் தொகுதிகளின் மக்களும்கூட தண்டனை அடைவார்கள் என்ற காரணத்திற்காகவும் நான் கனிவோடு ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பரந்த மனமும், தயாள குணமும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். இந்த 3 உறுப்பினர்களையும் 3 ஆண்டுக்குப் பதவி இழக்கச் செய்வது என்பதை ஒரு கடுமையான நிலையாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி கருதுகிறது. எனவே அடையாள பூர்வமாக ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு அவர்களை expel செய்து தகுதி இழக்கச் செய்யும் முயற்சியை—ஒரு நல்ல சூழ்நிலையை—உங்களோடு தோழமை கொண்டிருக்கிற தோழமைக் கட்சிக்காரர் என்கிற முறையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆட்சியைப் பொறுத்த வரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அமைத்துத் தந்த வழிகளுக்கு ஏற்ப, வகுத்துத் தந்த கொள்கைகளுக்கு ஏற்ப, மாண்புமிகு தமிழக முதல்வர், பொன்மனச் செம்மல், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்று கடமை உணர்வோடு பணியாற்றி வருகிறார்கள் என்பதை இந்த அவையும் உணரும், நாடும் நன்கு உணரும்.



1986 டிசம்பர் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்படுத்தித் தந்த மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையிலும்—இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் இரு மொழிக் கொள்கைதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பது திட்டவட்டமாகவும் தெளிவாகவும் நாம் அறிந்த ஒன்று. அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் மும்மொழிக் கொள்கை நடைமுறையில் இருந்தது என்பதும், அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு தமிழும் ஆங்கிலமும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இரு மொழிக் கொள்கையாக, ஆட்சிமொழிக் கொள்கையாக இருக்க வேண்டும் என்று இந்த அவையிலேயே ஒரு தீர்மான வடிவம் கொண்டு வந்து அது நிறைவேற்றப்பட்டு அது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் இந்த அவை நன்கு உணரும். ஆக, அந்த இருமொழிக் கொள்கையிலிருந்து இது வரையில் கடுகளவும் விலகாத வகையில் மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதிலே இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருந்து நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதையும் இந்த அவை நன்கு உணரும்.

அது மட்டுமல்ல. அறிஞர் அண்ணா அவர்கள் எந்தெந்த வகைகளிலே திட்டங்களைத் தீட்டி வைத்துவிட்டுச் சென்றார்களோ, எந்தெந்த வகைகளிலெல்லாம் முன்னேற்றம் காண வேண்டும் என்று விரும்பினார்களோ அவற்றையெல்லாம் பல்வேறு முயற்சிகள் வாயிலாக முறையாகவும், முனைப்புள்ளத்தோடும் இந்த அரசு நிறைவேற்றி வருகிறது என்பதையும் எல்லோரும் நன்கு அறிவார்கள்.

தாய்மொழியான தமிழுக்கு எல்லா வகையிலும், எல்லா வழிகளிலும் ஆக்கம் ஏற்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை எல்லா வகைகளிலும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சித்து வருகிறது. அந்த முயற்சிகளைப் பொறுத்த வரையில் எந்த ஒரு உறுப்பினருக்கும் மாறுபட்ட கருத்திருப்பதற்கு இல்லை. ஆக, தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் எதிலும் தமிழ் இருக்கவேண்டும். எங்கும் தமிழ் இருக்க வேண்டும், என்றும் தமிழ் இருக்க வேண்டும், தமிழ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் மாறுபட்ட கருத்தோ, வேறுபட்ட கருத்தோ, முரண்பட்ட கருத்தோ இருக்க வழியில்லை என்பதையும் அதில் மாச்சரியங்களோ அல்லது வேறு பல நிலைமைகளோ இல்லை என்பதையும் நாம் உணர்வோம்.

ஆக தமிழை வளர்க்க. தமிழ் உணர்வு கொண்டவர்களுக்கு ஆக்கம் தருவதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை சென்னை மாநகரில் வெகு சிறப்பாகக் கொண்டாட இந்தியாவினுடைய முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த மேதகு ஜாகீர் உசேன் அவர்களை வரவழைத்து மிகச் சிறப்பான முறையில் அதை நடத்தினார்கள் என்பதையும்,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 டிசம்பர் 22

அதனையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை மதுரை மாநகரில் இந்தியப் பிரதமராக இருந்த மறைந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களை அழைத்து வெகு சிறப்பான முறையில் நடத்திக் காட்டினார்கள் என்பதையும் நன்கு அறிவோம்.

தமிழுக்கு ஆக்கம் தர வேண்டுமென்ற முறையில், தமிழுக்கென்று ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் அறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்டு வந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய பல்லாயிரக்கணக்கான அறிஞர்களும் பெரியோர்களும் எண்ணினார்கள் என்பது மட்டுமல்லாமல் தமிழகத்திலேயுள்ள பல கோடி மக்கள் கண்டு வந்த கனவுகள் நினைவாகும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சை மாநகரத்தில் நிறுவி தமிழ் பல்வேறு துறைகளில் ஆக்கம் பெற வேண்டும், ஏற்றம் பெற வேண்டும், உலகத்தார் அதனுடைய திறனைக் கண்டு வியக்க வேண்டும், அறிவியல் துறையிலும், கலைத் துறையிலும் மற்ற பல்வேறு துறைகளிலும் அது புகழ் பெற்றுத் துலங்க வேண்டும் என்ற வகையில் முயற்சிகள் எடுத்து வருவதை நாடு நன்கு உணரும்.

அது மட்டுமல்லாமல் உலகத் தமிழ்ச் சங்கத்தைக் கொண்டு வருவது மட்டுமல்லாமல் தமிழின் பெருமையை உலகம் எல்லாம் பரவச் செய்ய வேண்டும் என்று பாரதியார் கண்ட கனவை நனவாக்கும் வகையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தி, உலகத்திலே உள்ள தமிழ்ச் சங்கங்களையெல்லாம் இணைக்கும் முறையில் நல்லதொரு தொடர்பை ஏற்படுத்துகிற வகையிலே, அதற்கான பணிகளை இந்த அரசு ஆற்றி வருகிறது என்பதை நாம் நன்கு உணர்வோம். இதிலே எந்தக் கட்சிக்கும் மாறுபட்ட எண்ணம் இருப்பதற்கில்லை. ஆளும் கட்சி தமிழுக்கு ஆக்கம் தர வேண்டுமென்ற உணர்வோடு, தமிழுக்கு ஆக்கம் தர வேண்டுமென்ற ஊக்கத்தோடு, அதற்கான பணிகளில் முனைப்புள்ளத்தோடு பாடுபட்டு வருகிறது என்பதை நினைவுகூர வேண்டியது கடமையாக இருக்கிறது என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் வாழ வேண்டும், வளர வேண்டும், வளம் பெற வேண்டும், எல்லாத் துறைகளிலும் வலிவு பெற வேண்டும் என்பதற்காக ஆளும் கட்சியினர் ஆர்வம் கொண்டிருப்பது போலவே எல்லோரும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள், ஊக்கம் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். எந்த ஒரு மொழியும் பிறிதொரு மொழி பேசக்கூடிய பகுதியில் திணிக்கப் படக்கூடாது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய கூற்றையும் இந்தியாவிலுள்ள முக்கியமான 15 மொழிகள் இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக வேண்டும், அதற்கான சூழ்நிலை ஏற்படும் காலம் வரையிலும் ஆங்கில மொழியே ஆட்சி மொழியாகவும், இணைப்பு மொழியாகவும் நீடிக்க வேண்டும்,



1986 டிசம்பர் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முக்கிய மொழிகள் அனைத்திற்கும் சம அந்தஸ்து தந்து வளர்க்க வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் வற்புறுத்திய கொள்கையையும் ஆளும் கட்சியைப் பொறுத்த வரையில் வற்புறுத்தி வருகிறது. வேண்டுமென்றால் காங்கிரஸ் கட்சி சிறிது மாறுபடலாம், வேறுபடலாம். ஆனாலும் கூட ஆளும் கட்சியைப் பொறுத்த வரையில் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம், அதற்கான சூழ்நிலை ஏற்பட வேண்டும், அந்தக் கருத்துக்கள் ஆக்கம்பெற வேண்டும் என்ற முனைப்புள்ளத்தோடு இந்த அரசு பாடுபட்டு வருகிறது.

பண்டித நேரு கூறிய உறுதிமொழி, உறுதிமொழி என்ற அளவிலே இல்லாமல் சட்டமாக நிறைவேற்றப்பட்ட அளவிலே இருந்தால்தான் எந்த மொழிக்கும் பாதகம் ஏற்படாது. அப்படி யில்லாவிட்டால் அதற்குத் தர வேண்டிய மதிப்பை பல்வேறு துறையினர் தராமல் போய்விடுவார்கள். அது மட்டுமல்லாமல் மற்றொரு தீர்மானம் மூலம் என்றேனும் ஒரு நாளைக்குப் பாராளுமன்றத்தில் சட்டமாகக் கொண்டு வந்து அந்த உறுதிமொழியை நீக்கிவிடலாம். அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க இந்தி பேசாத பகுதி மக்களுக்குத் தெம்பு ஏற்படவும்; நம்பிக்கை ஏற்படவும் தங்களுக்குப் பாதகம் ஏற்படாது என்ற நிலை ஏற்படவும் பண்டித நேரு அவர்கள் திட்டவட்டமாக, தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அந்த உறுதிமொழியை அரசியல் சட்டத்தின் அங்கமாக ஏற்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுமானால் இந்தி பேசாத மாநிலங்களில் வாழ்கின்ற மக்களுக்கு நிம்மதியான தன்மை ஏற்படும் என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். தொடர்ந்து திராவிடர் இயக்கமும் வலியுறுத்தி வந்தது. நாமும் வலியுறுத்தி வந்தோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். 1968-ஆம் ஆண்டு இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 1-00)

மீண்டும் அதை வலியுறுத்துகிற வகையில், மீண்டும் மத்திய அரசுக்கு அதை எடுத்துத் தெரிவித்து, இப்போது இந்தியப் பிரதமராக இருக்கும் மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய கருத்துக்கும், கவனத்திற்கும் கொண்டு வருகிற முறையில் ஒரு தீர்மானத்தை இந்த அவையே சிறப்பாக நிறைவேற்றி—சென்ற திங்கள் 13ஆம் தேதி என்று கருதுகிறேன்—நாம் அனுப்பியிருக்கிறோம். அந்தக் கருத்து ஏற்கப்பட வேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்துகிற அளவுக்குத்தான் நாம் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறோம்.

செயலா என்பதைப் பற்றி ஆராய்வதுதான் இப்போது இந்தக் கட்டத்திலே இருக்கிறதே தவிர, அது அவமதிப்புச் செயல் அல்லவா, அரசியல் அமைப்புச் சட்டம் 51 ஏ பிரிவின்படி, கடமையை மதிக்க மறுத்த செயல் அல்லவா, அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 188ன் கீழ் எடுத்துக்கொண்ட பிரமாணத்தை மீறிய செயல் அல்லவா, இந்த நடத்தை தண்டனைக்குரியது அல்லவா, என்ற பிரச்சினைகளைப் பற்றி ஆராய வேண்டிய அடிப்படையிலே தான் இந்தத் தீர்மானத்திலே மிக விரிவாக விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சென்ற திங்கள் 21ம் தேதி பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் அந்தப் பிரச்சினையைத் திடீரென்று கிளப்பினார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பல்வேறு முறைகள், பல்வேறு வழிகள் இருக்கின்றன; பல்வேறு முறைகளிலே பிரச்சினையை அணுகலாம். பல தடவைகளிலே, நானே இரண்டு வாரம் தண்டனை கொடுக்கலாம் என்றாலும், ஒரு வாரம் தண்டனையும் கொடுக்கலாம் அல்லது விட்டும் விடலாம். இப்படி பல்வேறு முறைகள் எல்லாம் இருக்கும். உரிமைக் குழுவிலேகூட நாங்கள் பல்வேறு முறைகளைக் கையாளலாம். அவர்கள் சொன்னவுடனேயே நான் சொன்னேன். இந்த வழக்குகள் எல்லாம் இருப்பதன் காரணமாக, வழக்கு முடிந்தபிறகுகூட தீர்க்கலாம் என்ற கருத்தை, எண்ணத்தை, ஒரு சஜஷனைத்தான் நான் செய்ய முடியும். அவை முன்னவர் என்ற முறையிலே நான் தீர்ப்பு அளிக்கமுடியாது. இரண்டு நாட்கள் கழித்து, 21-ம் தேதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்புத் தந்து விட்டார்கள். தீர்ப்புத் தந்ததற்குப் பிறகு அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்புதான் இப்போது இந்த அவைக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இப்போது பணிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் இந்தத் தீர்மானங்கள் இங்கே கொண்டு வரப்படுகின்றன.

இதைப் பொறுத்தவரையில் அவை அவமதிப்புச் செயல் அல்லவா என்று கேட்டால் அல்ல என்று சொல்கின்ற சூழ்நிலை தான் வருகின்றது. அப்படி வருகின்றபோதுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இது வருகின்றபோது, இதற்கு முன்னால் அடிப்படைக் காரணம் போராட்ட முறைகளை வகுப்பது என்பது அது அந்தந்தக் கட்சிகளுடைய கொள்கைகளை, குறிக்கோளைப் பொறுத்தது. இந்தப் போராட்டத்தை இப்படித்தான் வகுக்க வேண்டும் என்று எந்த அரசியல் கட்சிக்கும் எந்த அரசியல் கட்சியும் டிக்டேட் பண்ணமுடியாது. இப்படித்தான் உங்களுடைய போராட்ட முறை இருக்க வேண்டும் என்று சொல்லமுடியாது. இது அவரவர்களுடைய விருப்பம். ஆனால்



அந்தப் போராட்ட முறையினால் ஏற்படுகின்ற விளைவுகளைத் தாங்கிக் கொள்வதும் அவரவர்களுடைய விருப்பம். இதனாலே ஏற்படுகின்ற விளைவுகளைத் தாங்கிக்கொள்கின்ற அளவுக்கும் அதை ஏற்றுக்கொள்கின்ற தன்மையோடுதான் அவரவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆக இப்படித்தான் இருக்கவேண்டும் என்று அரசியல் கட்சிகளுக்கு நாம் அறிவுரை கூறமுடியாது. அவர்கள் போராட்ட முறைகளை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். போராட்டத்திலே ஆர்ப்பாட்ட முறைகள், மறியல் முறைகள் என்று பல்வேறு முறைகள் இருக்கின்றன. எதிர்க்கின்ற முறைகள் பல்வேறு முறைகள் இருக்கின்றபோது சிலபல முறைகளை அரசியல் கட்சிகள் கடைப்பிடிக்கின்றன. ஆனால் பல்வேறு முறைகள் வருகிறபோது, இந்த அவையை, அல்லது அவை உறுப்பினர்களை அல்லது அவை கண்ணியத்தை, தரத்தை, தகுதியை, மற்றவற்றைக் காக்க போராட்ட முறைகள் என்று வருகின்றபோது அரசு அதற்கென்று இருக்கின்ற சட்ட திட்டங்கள் மற்றவைகள் வகுக்கின்றன. இந்த அவையைப் பொறுத்தவரையில், இந்த அவை உறுப்பினர்களைப் பொறுத்து, தகுதியைப் பொறுத்து, தரத்தைப் பொறுத்து பார்க்கின்றபோது இந்த அவையைக் கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே வெளியிலே நீதிமன்றத்திலே எடுக்கின்ற நடவடிக்கைக்கும் இந்த அவையிலே எடுக்கின்ற நடவடிக்கைக்கும் சம்பந்தம் இல்லை. நீதிமன்றத்தினுடைய நடவடிக்கைகள், நீதிமன்றம் எடுக்கும். ஆக நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கும் போது அந்த வழக்கைப் பற்றி நாம் இங்கே பேசக் கூடாது. நீதிமன்றத்திலே உள்ள வழக்குபற்றி நாம் பேசக் கூடாதே தவிர இந்த அவை தொடர்புள்ளதைப் பற்றி நாம் பேசலாம்.

திரு. வி. பி. சிந்தன்: ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். சபையிலே எடுக்கவேண்டிய முடிவை எடுக்க நமக்கு உரிமையுண்டு. ஆனால் நீதிமன்றத்திலே ஒரு முடிவு எடுத்தால்—நான் இங்கே கேட்பதன் காரணம், இன்று உயர்நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு பரிசீலனையில், ஜஸ்டிஸ் வேங்கடசாமி அவர்கள் முன்னிலையில் இந்த ஏழு பேர்களுடைய பிரச்சினை இருக்கிறது. இன்று அட்மிட் ஆகியிருக்கிறது. நான் அதில் விவாதத்திற்குப் போகவில்லை. அப்படி அந்த நீதிமன்றம் 'இந்தத் தீர்ப்பு தவறு' என்று கூறினால்——உங்களுடைய நிலைமை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் Criminal Act-படி சில இடங்களிலே விட்டுவிடலாம். ஒரு வாரம் போடலாம், 2 வாரம் போடலாம், 6 மாதம் போடலாம். ஆனால் இங்கே இருப்பது conduct பற்றியது. இந்த அவையைப் பொறுத்து, இந்த அவை உறுப்பினர்களுடைய நடத்தையைப் பொறுத்து எடுக்கின்ற ஒன்றே தவிர, அவர்களுடைய Criminal Act பொறுத்து எடுக்கின்ற ஒன்று அல்ல. (குறுக்கீடு) நான் அதற்குப் பின்னாலே வருகிறேன்.

[1986 டிசம்பர் 22

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதன் நோக்கம் வேறு ஒன்றுமல்ல, நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது. மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வழக்கு சம்பந்தப்பட்டவரை பிரச்சினை வேறு. அது குறித்து அந்த நீதிமன்றம் தீர்ப்பு தரும். ஆனால் இந்தச் சட்டசபையைப் பொறுத்த வரையில் பிரதிநிதித்துவம் எனபது வேறு. Disqualification of member சம்பந்தமாக இன்றைக்கு writ petition ஒன்று admit ஆகியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையை எந்த மன்றமும் கட்டுப்படுத்த முடியாது. இந்த அவையின் தீர்ப்பில் எந்த நீதிமன்றமும் உள்ளே நுழைய முடியாது. இந்த அவையைக் கட்டுப்படுத்த யாரும் வர முடியாது.

[பிற்பகல் 1-10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உச்ச நீதிமன்றத்திலிருந்து அவர்கள் தீர்ப்பு அல்லது விளக்கங்கள் சொல்ல அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது. ஆனால் நாங்கள் உணர்ந்த அளவுக்கும், இருக்கின்ற நிலைமையின் அளவுக்கும், இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் எடுத்துச்சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்கிறோம், பல்வேறு கருத்துக்களைச் சொல்லும்போது, இருக்கின்ற நிலைமையை மட்டும் உறுப்பினர்கள் தங்களுடைய கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். திட்டவட்டமானவற்றை, தெளிவானவற்றை அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும், குழப்பம் அடையக் கூடாது என்பதற்காகவும் நான் இதைச் சொல்கிறேன், அந்த அடிப்படையில்தான் நான் authoritative ஆக, authentic ஆக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக 7-10-1986 முரசொலியில் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதிய கடிதத்தின் அடிப்படையில் ஒன்றைச் சொல்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : நான் கேட்டதற்கு அமைச்சர் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பின்னாலே சொல்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : ஆதாரத்தோடு சொல்ல வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பின்னாலே ஆதாரத்தோடு நான் பதில் சொல்கிறேன், ஆதாரம் இருக்கிறது. இப்பொழுது சொல்ல முடியாது. அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைக் கொளுத்துவதாக கழகம் முடிவெடுத்தால் அது சட்டத்தை மதிக்காத செயல் ஆகாது. அது அவர்களுடைய கருத்து. பிரிவினைக் கொள்கையை வலியுறுத்தினால் தேர்தலில்





என்று ஒரு சட்டத்தை முன்பு மத்திய அரசு நிற்க முடியாது திணிப்பை எதிர்த் கொண்டு வந்தது. அப்பொழுது இந்தித் தேர்தலில் தாலோ, எதிர்த்துப் போர்க் குரல் கொடுத்தாலோ என்றால் நிற்க முடியாதவாறு சட்டம் கொண்டு வரப்படும் பிரிவினை இந்தி ஆதிக்கத்தை மட்டும் எதிர்ப்பதற்குப் பதலாக ஒன்றுதானே யைக் கேட்டு விடலாமே, இரண்டுக்கும் தண்டனை ஓட்டிக்கொண்டு என்ற நிலைமை ஏற்பட்டு விடும் அல்லவா? எங்கள் உரிமையைக் கேட்பதை விட வெட்டிக்கொண்டு உரிமைகளை நாங்கள் நிலைநாட்டிக் கொள்கிறோம் என்பதை திட்டவட்டமாக—17வது பிரிவைக் கொளுத்துவதாக கழகம் முடிவெடுத்தால்—என்று திட்டவட்டமாக அவர்களே கடிதத்தில் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு காலத்திலே அறிஞர் அண்ணா வற்புறுத்திய ஒன்றைப் பின்னாலே விட்டு விட்டார் என்றால், எதற்காக என்றால் 1962 வரையிலே திராவிட நாட்டு பிரிவினையைக் கேட்டோம். அடைந்தால் திராவிட நாடு, இல்லாவிட்டால் சுடுகாடு என்றெல்லாம் உணர்ச்சியோடு எடுத்துச் சொன்னோம். ஆனால் அந்தத் தடுக்கின்ற வகையில் ஒரு சட்டம் கொண்டு வந்த பிறகு அறிஞர் அண்ணா சரிவர காரண காரியங்களை எடுத்துச் சொல்லியதோடு, விளக்கங்களை எடுத்துச்சொல்லி, நாட்டினுடைய சூழ்நிலையை அறிந்து, சூழ்நிலைக்கு ஏற்ப—அப்போது சீனப்போர் வந்தது, நாட்டினுடைய ஒற்றுமைக் குலைவுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்லி, அதற்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது என்கிற அளவுக்கு வந்து, சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும் என்ற உவமையையும் சொல்லி, சாதாரணமாக கட்சியை, கழகத்தை, கொள்கையை, கோட்பாடுகளை அழிக்கக் கூடாது என்பதற்கான காரணங்களை எல்லாம் அடிப்படையாக வைத்து—ஒரு வெறி நாய் கடிக்க வருகிறது என்று சொன்னால், அதிலிருந்து விலகிக் கொள்வது தான் புத்திசாலித்தனமே தவிர, வெறிநாய் தானே, கடித்தால் தான் என்ன என்று போய் விழுவது, வீழ்ந்து போய் நம்மையும் மாய்த்துக் கொள்வது என்பது புத்திசாலித்தனமான காரியம் அல்ல என்ற உணர்வையும் அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி, அதிலிருந்து விடுபடுவதற்கு 100 காரணங்களைச் சொல்லி, 101வது காரணம் பிரிவினை என்றால் 101வது காரணத்தை மட்டும் நான் விட்டுவிட்டேன், ஆனால் மற்றைய காரணங்கள் எல்லாம் இருக்கின்றன என்று அன்றைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். இதை எதற்காக இங்கே சொல்ல வருகிறேன் என்றால் பொதுவாக நாட்டினுடைய நடப்புக்கு ஏற்ப சில பல சட்ட திட்டங்களை, கொள்கைகளை உருவாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

மாவட்டச் செயலாளர்கள் முடிவு என்ற வகையில் முரசொலியில் 16-10-1986 அன்று நவம்பர் 17 முதல் டிசம்பர் 17 வரை மாவட்டம் தோறும் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம், மாவட்டச் செயலாளர்கள் கூடி முடிவு என்று வந்தது. "இந்திய அரசியல் சட்டத்தில் "இந்திய ஆட்சி மொழி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 டிசம்பர் 22

இந்தி'' என்று இருக்கின்ற பகுதியைக் கொளுத்துவது என்று திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்கள் முடிவு எடுத்தபடி நவம்பர் 17 முதல் டிசம்பர் 17 வரை எல்லா மாவட்டங்களிலும் போராடுவது என்று இன்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது''.—கலைஞர் நிருபர்களுக்கு பேட்டி: ''அபிசியல் லாங்குவேஜ்'' என்று 17வது பிரிவில், 341 (1) பிரிவிலுள்ள ''இந்தி இந்தியாவிலுள்ள அதிகாரபூர்வமான மொழியாக இருக்க வேண்டும்'' என்ற அந்தப் பகுதியை கொளுத்துவோம். இந்தத் தன்மையை நான் எடுத்துச் சொல் வதற்குக் காரணம் சட்டத்தை எரிப்போம் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே தவிர, இந்தி எதிர்ப்பைக் காட்டுகிறார்கள் என்றோ அல்லது தமிழை ஆதரிக்க இருக் கிறார்கள் என்ற கருத்துக்கு முரண்பட்ட தன்மையோ அல்ல, சட்டத்தை எந்தத் தன்மையில் எரிக்கிறார்கள் என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். அரசியல் சட்டத்தின் பகுதியை மட்டுமே கொளுத்துவோம் என்ற அளவிற்கு 20–10–1986-இல் டாக்டர் கலைஞர் அவர்கள் கடிதத்தில் எழுதுகின்றபொழுது, அரசியல் சட்டத்தின் 17-வது பகுதியில் இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி என்ற அந்தப் பகுதியை மட்டுமே 1963-லும் கொளுத்தினோம், இப்பொழுதும் கொளுத்திடக் களம் அமைக் கின்றோம்.''

முரசொலி 4-11–1986-இல் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கடிதத்தில், ''அரசியல் சட்டத்தில் 17-வது பாகத்தில் இந்தி மொழி இந்தியாவின் ஆட்சி மொழி எனக் குறிப்பிடும் பகுதியை மட்டும் எரிக்கப் போகிறோம் எனத் தெளிவாக அறிவித்து உள்ளோம்.''

முரசொலி 3-11–1986-இல் டாக்டர் கலைஞருடைய கடிதத்தில், ''அரசியல் சட்டத்தில் இந்திதான் ஆட்சி மொழி என்ற பகுதியைக் கொளுத்தும் நெருப்பு வெளிச்சத்தில் தமிழக மக்களின் இந்தி எதிர்ப்புக்கு விளம்பரம் கிடைக்கட்டும்.''

முரசொலி 7-11-1986-இல், ''கழகம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 17-வது பிரிவை மட்டும் கொளுத்தப் போகிறது என்பதும், அதற்கான காரணங்கள் எவை என்பதும் பாரத மாதாவின் தத்துபுத்திரர்களுக்குப் புரியாமல் இல்லை, அந்தப் பிரிவில் தீயிடுவதில் தவறு என்ன?'' என்றும் உள்ளன.

முரசொலி 10-11-1986—ல் தலைப்பு, அரசியல் சட்ட எரிப்பு போராட்டம், மாவட்ட வாரியாகக் களம் காண்போர் பட்டியல், கலைஞர், பேராசிரியர், நாஞ்சிலார் சென்னையில் சட்டத்தை எரிக்கிறார்கள், கோவை செயற்குழு முடிவுகள். ''இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது அத்தியாயத்தின் கீழ் இந்திய ஆட்சி மொழி இந்திதான் என்ற பகுதியை மட்டும் நவம்பர் 17-ஆம் நாள் முதல் பல்வேறு ஊர்களில் மாலை பொதுக்கூட்டங்களில் கொளுத்துவது என்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது.''



1986 டிசம்பர் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முரசொலி 12-11–86-இல் கலைஞர் அவர்களுடைய கடிதத்தில்,

''The official language of the Union shall be Hindi in Devanagari script அதாவது அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில் 343 (1) ''தேவநாகரி வரிவடிவத்தில் உள்ள இந்தி, இந்தியாவின் அதிகார பூர்வமான (அலுவலக) மொழியாக இருக்க வேண்டும்'' என்ற வரிகளை அச்சடித்துப் பொது மேடைகளில் கொளுத்துவது தேசவிரோதம் எனக் கூறி, அதற்காக சிறைவாசம் மட்டுமல்ல; தேர்தல்களிலும் நிற்கக் கூடாது என்பது போல மிரட்டுவீர்களே யானால்; தனிநாடு கேட்டாலும் தேர்தலில் நிற்கக்கூடாது— நிற்க முடியாது எனச் சட்டம் இருக்கும்போது; அரசியல் சட்ட மொழிப்பிரிவைக் கொளுத்தினாலும் அதே மாதிரிச் சட்டம் வருமென்றால்—ஒருவேளை அப்படி வந்தால்—அதற்கு ஓரேயடி யாகத் தனிநாடே கேட்டு விடலாமே என்ற எண்ணம் தமிழரிடம் தோன்றி விடக்கூடும்.''

முரசொலி 18-11-1986-இல் தலைப்பு, அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்திய பேராசிரியரும் 301 பேரும் கைது. வரும் டிசம்பர்த் திங்கள் 17—ஆம் நாள் தலைவர் கலைஞர் தலைமையில் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் ஏழு தொகுதிகளில் நடை பெற இருக்கிறது''

முரசொலி 19-11-1986, ''பேராசிரியர் முழக்கம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தோழர்கள் ஒவ்வொருவராக ஆட்சி மொழிச் சட்டத்தினுடைய 17-வது சாப்டர் அந்தப் பகுதியினுடைய Official language என்ற தலைப்பிடப்பட்ட அதனுடைய முதல் பகுதி. முதல் பாகம் Official Language of the Union என்ற ஒரு தலைப்பிட்டு அதிலே 343 (1) என்ற விதியின் கீழ் The Official Language of the Union shall be Hindi in Devanagari script என்று இருக்கின்ற இந்தப் பகுதியை இங்கே கொளுத்துகிறேன்.'' இவ்வாறு பேராசிரியர் உரையாற்றினார்.

முரசொலி 21-10-1986, கலைஞர் கடிதத்தில் தலைப்பு, ''அடியேன் அழைக்கிறேன்'' என்று, ''அரசியல் சட்டம் 17-வது பிரிவை நாம் துச்சமாக மதிக்கிறோம், கால் தூசாகக் கருது கிறோம் என்பதை நாம் நமது போராட்டத்தின் மூலம் எடுத்துக் காட்டி ஆக வேண்டும். தமக்குப் பிடிக்காததை ஒழிக்க மூன்று காரியங்கள் செய்யலாம். அதைக் கிழித்து எறியலாம். அது மிகவும் அழுக்காக இருந்தால் குழி தோண்டிப் புதைக்கலாம். இந்த இரண்டும் செய்தால் மற்றவர்களுக்குத் தெரியாது. ஆக தீயிட்டுக் கொளுத்துவதுதான் மூன்றாவது காரியம் ஆகும். எனவே ஊரும் உலகமும் அறிய கொளுத்திக் காட்டுவது தவிர வேறு காரியம் இல்லை. எனவே போராட்டத்தின் முதற் கட்டமாக அரசியல் சட்டத்திலுள்ள மொழிப் பிரிவை, அதாவது 17-வது பிரிவு என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு பொது இடத்தில் கொளுத்துகிற நிகழ்ச்சி நடைபெறும்'' என்று, இந்தச் சொற்றொடர்களைக் கலைஞர் மேற்கோளாக எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 டிசம்பர் 22

முரசொலி 24-11-1986 இல் தலைப்பு, "கர்மபுரி மாவட்டத்தில் அரசியல் சட்டப்பிரிவை எரித்து 315 தோழர்கள் கைது."

25-11-1986-இல் மதுரையில் கலைஞர் அவர்கள் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், "பதவிகள் பறிபோகும் சூழ்நிலை வந்தாலும் சட்ட எரிப்புப் போர் நிற்காது, அது தீவிரமாகவே செய்யும். மத்திய அரசோ அல்லது மாநில அரசோ குறுக்கு வழி கண்டுபிடித்து கழகத்தவர் பதவிகள் பறிபோகும் சூழ்நிலை வந்தாலும், கழகம் அரசியல் சட்ட மொழிப்பிரிவு எரிப்புப் போரை நிறுத்திவிடாது."

சட்டமன்றப் பேரவைக் கூட்டம் 25-11-1986-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் மாண்புமிகு செ. ஆறுமுகம் அவர்கள் பேசும்பொழுது, "எனக்கு think செய்ய time கிடையாது", வெளியிலும் கொளுத்துவோம், உள்ளேயும் கொளுத்துவோம், இந்தப் பதவியைப்பற்றி நான் கவலைப்படவில்லை."

27-11-1986 தி.மு க. நிர்வாகக் குழுக்கூட்டம், 26-11-1986 சேலத்தில் நடைபெற்ற பொழுது, "இந்தியே ஆட்சிமொழி என்று சொல்லும் இந்திய அரசியல் சட்டத்தின் வாசகங்களை ஒரு காகிதத்தில் எழுதிக் கொளுத்தினால் அது அரசியல் சட்டத்தின்மீது உறுதிமொழி எடுத்துக் கொண்டதை மீறியது ஆகாது."

(பிற்பகல் 1—20)

2—12-1986 முரசொலியில், சிவகங்கைப் பொதுக் கூட்டத்தில் கலைஞர் பேச்சு—"எம்.எல்.ஏ.க்கள் பதவியை பறித்துவிட்டதால் 'சட்டி சுட்டதடா கை விட்டதடா' என்று விட்டுவிடமாட்டோம். 'போனால் போகட்டும் போடா' என்று போராட்டத்தைத் தொடருவோம்" என்ற செய்தி வந்திருக்கிறது.

3-12-1986 அன்று நீதிமன்றத்திற்குப் பேராசிரியரை அழைத்து வந்தபோது, 'அரசியல் அமைப்புச் சட்டத்தை அவமதிப்பது. கேவலப்படுத்துவது என் நோக்கம் அல்ல; மதிப்பற்ற, கேவலமான இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பாகத்தைத் தீயிட்டு கொளுத்துவோம் என்று நான் ஒரு போதும் கூறவில்லை ; மத்திய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு வழிகாட்டியாக அறப்போர் முறையிலே இந்தி ஆட்சிமொழி வாசகங்கள் அச்சடிக்கப்பட்ட துண்டுத்தாளை தீயிட்டு, எங்களுடைய கண்டனத்தை, வேதனையை எடுத்துக்காட்டுகின்ற முறையில் ஈடுபட்டேன் ; எனவே நான் குற்றவாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ; மற்ற குற்றச்சாட்டுகளை மறுக்கிறேன்' என்று கூறியிருக்கிறார்கள்.



1986 டிசம்பர் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பேராசிரியர் 12-11-1986-ல் சொல்லுகின்றபோது நான் "வேதங்களைக் கொளுத்துங்கள் என்றும் சொல்பவன், அரசியல் சட்டத்தைக் கொளுத்த விரும்புபவன், அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவை கொளுத்துகிறேன். இதைக் கொளுத்துவது தவறு என்றால் ஒவ்வொரு அரசியல் சட்டத்தையும் கொளுத்தும் ஒரு காலத்தை எதிர்பார்ப்போம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்கு நான் சொல்ல விழைவது என்னவென்றால், எந்த நோக்கத்தை எப்படிச் சொன்னாலும் கூட, இதை எல்லாம் திட்டவட்டமாக, தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டு, இது தவறு என்று வருகிறபோதுதான் இங்கே தெளிவாக Constitution of India தெரிவிக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே மாற்றம் அல்லது இதிலே திருத்தம் இல்லை. முதன் முதலாக 1976-ல் அரசியல் அமைப்புச் சட்டம் இது சம்பந்தமாகத் திருத்தப்பட்டிருக்கிறது. அதன் பிறகுதான் 51-ஏ என்ற அரசியல் சட்டப் பிரிவு வந்தது. அதுவரையில் 51 இருந்தது, 52 இருந்தது. 51-ஏ என்ற பிரிவு 1976ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக 42-வது அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய திருத்தமாகக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

அதிலே 10 கடமைகள் என்று சொல்லி, ஒவ்வொரு குடிமகனும் இன்னின்ன கடமை ஆற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் முதலிலே 51-ஏ "It shall be the duty of every citizen of India to abide by the Constitution and respect its ideals and institutions, the National Flag and the National Anthem".

அதற்கு விளக்கங்கள் கூறும்போது துர்க்காதாஸ் பாசு என்பவர் "shorter constitution of India" என்று பெயரிட்ட தனது நூலில் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். "This para has been added by the Constitution 42nd Amendment Act 1976 in accordance with the recommendations of the Swaran Singh Committee. It will bring our Constitution in line with Article 29(1) of the Universal Declaration of Human Rights and the Constitutions of Japan, China and USSR".

இதைச் சொல்லுகின்றபோது அவர்கள் வெளிப்படையாக 1976 ஆம் ஆண்டில் இதற்குத் திருத்தச் சட்டம் சுவரன்சிங் குழுவின் பரிந்துரையின் பேரில் கொண்டுவரப்பட்டது. உலக மனித உரிமைகள் சட்டத்தின் 29(1) பிரிவின் படியும் ஜப்பான், சீனா, ரஷியா நாடுகளின் மனித உரிமைகளை ஒட்டியும் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் கீழே "....While exercising and enforcing his fundamental rights remembering that he owes the duty specified in Article 51 A(a) to the State and that if he does not agree for the duty he should not deserve the right. For instance a person who burns the Constitution in violation of the duty in Article 51-A(a) cannot assert that the meeting or assembly at which it was burnt by way of demonstration against

the Government should be protected by the freedom of expression or assembly guaranteed by Article 19'', என்று ஒரு குடிமகன் இப்படிப்பட்ட உரிமைகளை நினைந்து செயலாற்றும் போது 51-ஏ யில் வரையறுக்கின்ற கடமைகளுக்கு மதிப்பு அளிக்கவேண்டும். அப்படி மதிப்பளிக்க முன்வரவில்லை என்றால் அவன் உரிமை பெறத்தகுதியில்லை. எடுத்துக்காட்டாக 51-ஏ யில் கூறப்பட்டுள்ள கடமைகளை மீறி அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிக்கமுன்வந்து, தன்னுடைய எதிர்ப்பு உணர்வைக் காட்ட பொது இடத்தில் பலர் முன்னிலையில் தீயிட்டுக் கொளுத்திவிட்டு, அது தனது அடிப்படை உரிமை என்று வாதாட முடியாது என்று இதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இது 1960 அல்லது 1970 வரையில் இல்லை. 1971-க்குப் பின்னால் புகுத்தப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமைகளின் அடிப்படையில்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் சொல்லுகின்றபோது, அதனுடைய தமிழாக்கத்தை மட்டும் நான் சொல்கிறேன். உறுப்பினர்களுடைய நடத்தை வழக்கத்திற்கு மாறாகவோ, மன்றத்தின் உணர்வுகளுக்கு மாசு கற்பிக்கும் வகையிலோ, மன்றம் தனது உறுப்பினர்களிடம் எத்தகைய நடவடிக்கைகளை எதிர்பார்க்கிறதோ அந்தத் தரத்திற்கு மாறாகவோ அமையக் கூடாது.

உறுப்பினர் ஒருவர் விசுவாச உறுதிமொழி எடுத்துக் கொள்வது என்பது அவருடைய புனிதமான கடமையும் அரசியல் சட்டத்தினால் விதிக்கப்பட்ட பொறுப்பும் ஆகும். அத்தகைய விசுவாச உறுதிமொழி எடுத்துள்ள ஒவ்வொருவரும் அந்த உறுதிமொழி வாசகத்துக்கு முற்றிலும் ஒத்து நடக்கவேண்டும். உறுப்பினர் என்ற முறையில் எடுததுள்ள உறுதிமொழியை மீறுவாரேயாகில் அவரது நடத்தை மன்றத்தின் கண்ணியத்திற்கு ஊறு விளைவிக்கின்றதாக அமைகிறது என்று கருதப்படும். மற்றும் அனைத்து உறுப்பினர்களும் அவர்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழிக்கேற்ப நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது உறுப்பினர்களின் நடத்தை மன்றம் அதன் உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கும் தரத்தினதாக இல்லை என்று கருதும் நிலையில் அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. தவறான நடத்தைக்காக உறுப்பினர்கள் கண்டிக்கப்பட முடியும். தவறான நடத்தை அல்லது மன்ற அவமதிப்பு போன்ற நேர்வுகளில் உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை, கண்டனம், மன்றத்திலிருந்து வெளியில் நிறுத்துதல், மன்றத்திலிருந்து தற்காலிக நீக்கம், சிறைத்தண்டனை மற்றும் மன்றத்திலிருந்து வெளியேற்றல் ஆகிய தண்டனைகள் வழங்கப்படும்.



இதை ஆங்கிலத்தில் சொல்கிறபோது கூட ''....Committed by the Members, the House can impose the following punishments Viz., admonition, reprimand, withdrawal from the House, suspension from the service of the House, imprisonment and expulsion from the House.'' என்று தெளிவாக இதிலே எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் உறுப்பினருடைய விளக்கங்களைக் கேட்க நேரடியாக அவர்களைக் கொண்டு வந்து விளக்கம் கேட்கவேண்டும் என்று சொன்னால், அப்படிக் கேட்கவேண்டிய முறையும் உண்டு. ஆனால் திட்டவட்டமாக, தெளிவாக ஒரு உறுப்பினர் ஒன்றைச் செய்திருக்கிறார் என்ற நிலைமை ஏற்படுமேயானால் நான் முதலிலே கூறியபடி, தீர்மானத்தின் மூலமாகவோ அல்லது பொதுக் கூட்டங்கள் வாயிலாகவோ, ஏடுகளின் வாயிலாகவோ அல்லது மற்ற வகைகளிலோ திட்டவட்டமாகத் தெளிவாகச் செய்த ஒன்றுக்கு விசாரணை செய்து அறிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. அதிலே ''....Where it is apparent that no question of indication can arise an order for attendance has not been made'' என்று இருக்கிறது. ஆகவே இதிலே உத்தரவிடுகிறபோது உறுப்பினரை சபைக்கு வருமாறு செய்து, உறுப்பினரது விளக்கத்தைக் கோர வேண்டிய அவசியம் இல்லை என்று தெள்ளத் தெளிவாகத் தெரிகின்ற நேர்வில் இந்த மன்றத்திற்கு உறுப்பினருடைய வருகையைக் கோர வேண்டிய அவசியம் இல்லை என்று தெளிவுபடக் கூறப்பட்டு இருக்கிறது.

மற்றொன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள். உரிமைக் குழுவிற்கு விடலாம் அல்லது சிறப்பாணைக் குழுவிற்கு விடலாம் அவர்கள் பார்த்து ஒரு முடிவு செய்துவிடலாம் என்று சொன்னார்கள். அவைக்கு நேரம் இல்லாமல், சிந்திக்க நேரம் இல்லாமல் கால நேரம் இல்லாமல் இருக்கும்போது குழுவிற்கு விடலாம். ஆனால் உரிமைக்குழு, சிறப்பாணைக் குழுவை விட வலிமை வாய்ந்தது, முழுப் பொறுப்பு வாய்ந்தது இந்த அவை. அவையே ஒரு முடிவு எடுத்து விதிக்கும் போது குழுவிற்கும் மற்றவற்றிற்கும் விட வேண்டிய அவசியம் இல்லை. தண்டனை அளிக்கும் அதிகாரம் இருக்கவேண்டும் என்று சொல்கிறபோதுகூட, Conduct of Members என்று சொலகிறபோது கூட மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கிறார்கள். கவுல் அன்ட் சக்தர் எழுதிய புத்தகத்தில் 251வது பக்கத்தில் ஆங்கிலத்தில் எழுதி இருக்கிறார்கள். அதன் தமிழாக்கத்தை மட்டும் நான் சொல்கிறேன். மன்ற உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட தரமான நடத்தையைக் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உறுப்பினரின் பிரச்சினைக்குரிய நடத்தை பற்றி மன்றத்திற்கு உள்ளே அல்லது வெளியே நிகழ்ந்தது என்ற பாகுபாடின்றி நடவடிக்கை எடுக்க மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. உள்ளே நடந்தாலும் நடவடிக்கை எடுக்கலாம், வெளியே நடந்தாலும் எடுக்கலாம். வெளியே நடந்தால் எடுக்கமுடியாது என்று சொல்கிறார்கள். வெளியே நடந்தாலும் உள்ளே நடந்தாலும் காண்டக்டைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கலாம். அது பிரிவிலஜ்-ஆகக் கூட இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பிரிவிலேஜ்-க்குள்ளே வராமலும்

இருக்கலாம். ஆனால் நடத்தையிலே குறைவாக இருந்தால்
அதை வைத்து உள்ளே நடந்தாலும் சரி, வெளியே நடந்தாலும்
சரி அதற்குப் பாராளுமன்றத்தில் எடுத்த நடவடிக்கைகள் மற்றும்
வேறுபல சட்டமன்றங்களில் எடுத்த நடவடிக்கைகள் எல்லாம் கூட
உண்டு. ஆகவே மக்கள் பிரதிநிதி என்ற அளவில் மிக உயர்ந்த
நெறிமுறைகளைப் பாதுகாத்து பராமரிப்பதற்குப் பாராளுமன்ற
உறுப்பினர்கள் மன்றத்திற்குள்ளேயும், வெளியிலும் ஒரு தரமான
நடத்தையைக் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படு
கிறது. அவர்களுடைய நடத்தை, பொதுவாக மன்றத்தின் கண்ணி
யத்தையும் உறுப்பினர்களின் கண்ணியத்தையும் பாதுகாப்பதாக
அமையவேண்டும்; உயர்வானதாக அமையவேண்டும். நடத்தை
வழக்கத்திற்கு மாறானதாகவோ, கண்ணியத்திற்கு இழுக்கு
ஏற்படும் தன்மையிலோ, அல்லது மன்ற உறுப்பினர்கள் எந்த
அளவில் நடந்து கொள்ளவேண்டும் என்று மன்றம் எதிர்பார்க்
கிறதோ அதற்கு மாறுபட்டு இருக்கும் வகையிலோ அமையக்
கூடாது.

ஒரு உறுப்பினர் தகாத முறையில் நடந்துகொண்டார் அல்லது
மன்றத்தின் முறைகளுக்கு மாறாக நடந்துகொண்டார் என்று
எந்த நேரத்திலும் முடிவு செய்வது மன்றத்தினுடைய அதிகார
வரம்புக்கு உட்பட்டது.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன்
அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** எனவே ஒரு நேர்வில்,
நிகழ்வில் பொதுவாக கருதப்படக்கூடிய உரிமை மீறல்கள்,
மன்ற அவமதிப்புகள் ஆகியவற்றின்கீழ் கருதக்கூடிய குற்றங்
களாக அமையாவிட்டாலும் உறுப்பினருடைய நடத்தை தகாத
ஒன்றென, மன்றத்தின் கண்ணியத்தைக் குறைப்பதாக அமைந்
துள்ளது என்று கருதப்படலாம். மன்றத்திற்கு உறுப்பினரை
நடத்தைக்காகத் தண்டிக்கும் உரிமை உண்டு. உறுப்பினர்கள்
நடத்தையைப் பொறுத்தமட்டில் ஒரு நிகழ்வு மன்றத்தின்
உள்ளேயோ அல்லது வெளியிலோ நடந்தாலும் மன்றத்தின்
ஆய்வு செய்யும் எல்லைக்குள் அமையும். உறுப்பினர்களை,
அவர்கள் இழைத்த தவறுக்காகவோ அல்லது மன்றத்தை
அவமதித்ததற்காகவோ, மன்றத்திற்குள்ளேயோ அல்லது கட்ட
எல்லைக்கு அப்பால் வெளியிலோ இழைக்கப்பட்டிருந்தாலும்
தண்டிப்பதற்கு அதிகாரம் உண்டு.

பக்கம் 251-ல் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
ஏனென்றால் இதுபற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள்
எடுத்துச் சொன்னார்கள். தண்டனை பற்றிச் சொல்கிறபோது
கூட May's Parlimentary Practice புத்தகத்தில் சொல்லியிருப்பதின்
தமிழாக்கத்தை மட்டும் எடுத்துச் சொல்கிறேன். அதனுடைய



131-ம் பக்கத்தில் தெளிவுபடச் சொல்கிறார்கள். ஒரு
உறுப்பினரை வெளியேற்றுவதன் நோக்கம் தவறுகளைக் களை
வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகக்கொள்ளாது
நிவாரண நடவடிக்கையென்றோ, குற்றம் இழைத்த உறுப்
பினருக்குத் தண்டனை அளிக்கப்பட்டது என்றோ கொள்ளக்
கூடாது. உறுப்பினராக இருப்பதற்கு, தகுதியற்ற ஒருவரை
மன்றத்திலிருந்து களைவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையென
கொள்வதே சரியாகும். இங்கே இந்த நடவடிக்கையை நாம்
எடுக்கிறோமென்றால் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியை
இழக்கிறார் என்று எடுக்கிறோமே தவிர, அவருடைய
செயலுக்கான தண்டனையை நீதிமன்றம் மற்றவைகள் தரும்.
ஆனால் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி உடையவரா
இல்லையா, அதற்குத் தண்டனை கொடுக்க உரிமை உண்டா,
இல்லையா, அவமதிப்புக் குற்றமா, இல்லையா, என்று இவை
களைப் பற்றி கவனிப்பதற்குத்தான் இந்த அவை இருக்கிறது.
ஆகவேதான் நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளும், மற்றவைகளும்
பொறுத்த வரையில் தீர்ப்புகள் பலவகையில் வரலாம்;
விடுதலையும் செய்யலாம்; நிரூபிக்கப்படவில்லையென்றும்
விடலாம்; எப்படி வேண்டுமானாலும் விடலாம். ஆனால் இந்த
மன்றத்திற்குத்தெளிவாகத் தெரிகின்ற ஒன்றை மன்றத்தினுடைய
நோக்கில் நாம் வைக்கிறோம். 25-9-1951-ல் பண்டித
ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்த
போதுதான் எச். முட்கல் என்கிற உறுப்பினரைப் பற்றி
மக்களவையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து அவர் கண்ணியத்
திற்குக் குறைவாக, ஒரு குறிப்பிட்டவரிடத்திலிருந்து பணம்
வாங்கிக் கொண்டு கேள்விகள் கேட்டார் என்பதற்காக, ஒரு
உறுப்பினருடைய தரத்தை குறைத்தார் என்ற காரணம்
காட்டி, அவர் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி
யற்றவர் என்று சொல்லி அவையை விட்டே அவரை நீக்கி
யிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட காரணங்கள் பல
வற்றையும் எடுத்துச் சொல்கிறபோது இன்னொன்றையும்
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கவுல் அண்ட் ஷக்தர் புத்தகத்தில் எடுத்துச் சொல்லும்போது
பக்கம் 948-949-ல் சொல்லப்பட்டிருப்பதன் தமிழாக்கத்தை
மட்டும் நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு
உறுப்பினரை வெளியேற்றுவதற்கு பாராளுமன்றத்திற்குள்ள
அதிகாரத்தை அம்மன்றம் நிலை நாட்டியுள்ளது. மக்கள்
பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 149-ன் கீழ் தேர்தல்குழு
பாராளுமன்றத்தினுடைய முடிவை நடைமுறைப்படுத்த வேண்டு
மென்றும், உறுப்பினரை வெளியேற்ற பிறப்பிக்கப்பட்ட
ஆணையை நிறைவேற்ற வேண்டுமென்றும் விதிக்கப்பட்
டிருக்கிறது. பாராளுமன்றம், சட்டமன்றம் ஒரு தீர்மானத்தில்
முடிவெடுத்து விட்டால் அதை 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதி
நிதித்துவச் சட்டம், பிரிவு 149-ன் கீழ் தேர்தல் குழு பாராளு
மன்றத்தினுடைய முடிவை நடைமுறைப்படுத்தித் தீரவேண்டும்.
பாராளுமன்றத்தினுடைய முடிவை நடைமுறைப்படுத்த வேண்டு

மென்றும், உறுப்பினரை வெளியேற்ற பிறப்பிக்கபபட்ட
ஆணையை நிறைவேற்ற வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது.
949-ம் பக்கத்தில் மேலே சொல்லியுள்ள கருத்தின்படி.
நோக்கினால் மன்றத்திலிருந்து உறுப்பினர் வெளியேற்றப்
படுகிறார் என்றால் உடனடியாக அதே வேளையில் பதவியும்
காலியாகிறது என்று கொள்ள வேண்டும். உறுப்பினர் பதவி
காலியாகிறது என்பதற்கான அறிக்கை எதுவும் தனியாக
மன்றத்தில் வெளியிட வேண்டிய அவசியம் கூட இல்லையென்று
தெளிவுபட இவ்வளவு எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன.
எதற்காக இவற்றையெல்லாம் நான் சொல்லவருகிறேன் என்றால்
பிரச்சினை இந்த அளவிற்கு வந்துவிட்டதன் காரணமாக, இந்த
அளவிற்கு கொண்டுவந்துவிட்டுவிட்டதன் காரணமாக, இவ்வளவு
வந்ததற்குப் பிறகு இந்த முடிவிற்கு வரவேண்டியிருந்ததன்
காரணமாகத்தான் இந்த நிலைமைக்கு நாம் வரவேண்டிய
அவசியம் வந்தது. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள்
ஒன்றைச் சொன்னார்கள். தரக்குறைவு ஏற்பட்டு விட்டது
என்பதிலிருந்து 'எக்ஸ்பல்ஷன்' என்பது வராது. அவர் சொல்லும்
போது தண்டனை என்றுதான் வரும். நாம் கொடுப்பது
தண்டனை அல்ல. தரக்குறைவு என்று வந்ததற்குப் பிறகு ஒரு
பீரியட், ஒரு டெர்ம் என்று வரும். இதற்கு இடையிலே ஒரு
இடைத்தேர்தல் என்று வந்துவிட்டால் அது வரையிலும்தான்.
ஒரு பொதுத் தேர்தல் இடையிலே வந்துவிட்டால் அதுவரையிலே
தான். இல்லாவிட்டால் அடுத்த தேர்தல் நடக்கிற வரையில்
தான் என்று வரும். அவர்கள் சொல்கிறபடி வைப்போமேயானால்
தற்காலிகமாக, டெம்பரரியாக சஸ்பென்சன் பண்ணவேண்டும்.
ஆக எக்ஸ்பல்சன் என்று வராது. சஸ்பென்சன் என்று வரும்போது,
தரக்குறைவாக, மதிக்காமல் அரசியல் சட்டத்தை எரிக்கும்போது,
இந்தக் கேள்வி எல்லாம் வருகிறது. ஆகவேதான் இந்தத்
தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய அளவுக்கு, நான் முதலிலே
சொன்னபடி, நாம மகிழ்ச்சிகரமாக இதை நிறைவேற்றவில்லை.
ஆனால் பல்வேறு காரணங்கள் வளர்ந்து கொண்டு வருகின்றன.
வளர்ந்துகொண்டு வருகின்றபோது, வளர்கின்ற நாட்டில் ஒரு
ஜனநாயக நாட்டில், கட்டுப்பாடு மற்றவற்றை நிலைநாட்ட
வேண்டிய அவசியம் வருகிறது. அதுவும் இந்தியாவிலே, வளர்ந்து
வருகிற சூழ்நிலையிலே—சட்டமன்றங்கள், பாராளுமன்றங்கள்
மற்றவைகளில் எல்லாம் கலந்துகொள்கிறவர்கள்,—நாளுக்கு
நாள் இந்தக் கெட்டிப்படுத்தப்பட வேண்டிய அவசியம்
ஏற்படுகிறது என்பதை, நாடாளுமன்ற நடவடிக்கைகள், பல்
வேறு சட்டமன்ற நடவடிக்கைகள் எல்லாம் தெளிவுபடுத்தி
இருக்கின்றன. அப்படி வருகின்ற போதுதான்— ஈவு, இரக்கம்
இல்லாமல் இந்தக் காரியத்திலே ஈடுபடவில்லை. உள்ளபடியே
நாம் இதிலே மகிழ்ச்சிகரமாகவும் ஈடுபடவில்லை. ஆகவே அந்தக்
கொள்கையினுடைய நோக்கத்திற்காக அல்ல. தமிழுக்காகத்தான்
பாடுபடுகிறார்கள், இந்தித் திணிப்பை எதிர்க்கத்தான் பாடு
படுகிறார்கள் என்பதிலே நூற்றுக்கு நூறு நமக்கு உடன்பாடு
உண்டு. ஆனால் எதிர்ப்பைப் பொறுத்தவரையிலும், நான்



அடிக்கடி எடுத்துச் சொல்வது மதிப்பது வேறு, எதிர்ப்பது வேறு,
அவமதிப்பது வேறு என்பதுதான். எதிர்க்க உரிமை உண்டு.
அரசியல் சட்டமே இடம் கொடுத்து இருக்கிறது. அப்போசிசன்
பார்டிஸ் இருப்பதோடு, அப்போஸ், அப்போசிசன் பார்டிஸ்
இருப்பதே பலவற்றை எதிர்க்கத்தான். இங்கே கொண்டு
வருவதை எதிர்க்கத்தான். திருத்த உரிமை உண்டா
என்றால் அரசியல் அமைப்புச் சட்டத்திலே வகை செய்யப்பட்டு
இருக்கிறது. அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை இன்னின்ன
காரணங்களுக்காக இன்னின்ன வகையிலே திருத்தச் செய்யலாம்
என்று இருக்கிறது. இந்திய பாராளுமன்றத்திலே அரசியல்
அமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும் என்றால், 2/3
மெஜாரிட்டி வேண்டும். இன்னின்ன சட்டங்களை மொத்த
மாநிலங்களிலே பாதி மாநிலங்களுடைய சட்டப் பேரவை ஒப்புக்
கொள்ள வேண்டும் என்று விதிமுறைகள் எல்லாம் வகுத்து,
திருத்தலாம், திருத்துவதற்கு அனுமதி இருக்கிறது. திருத்து
வதிலே தவறு இல்லை. அந்த வகையிலேதான் 52-க்கும் மேற்
பட்ட திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன.
எதிர்க்கலாமா என்றால், எதிர்ப்பதற்காகத்தான் ரூலிங் பார்ட்டி,
அப்போசிசன் பார்ட்டி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது.
எரிக்கலாமா என்றால், எரிப்பதற்கு என்று செக்சன் இல்லை.
எரிக்கக்கூடாது, ரெஸ்பெக்ட் கொடுக்க வேண்டும் என்று
இருக்கிறது. அது இப்போது அல்ல. அப்போதே அதற்கான
அவமதிப்புச் சட்டமோ அந்த நிலைமைகளோ, 76-ஆம் ஆண்டில்
சட்டமோ இல்லை. அப்போதே வந்திருந்தாலும்கூட, அறிஞர்
அண்ணா அவர்கள், என்னுடைய கொள்கையை நான் நிறை
வேற்றுவேனே தவிர, அதற்காக என்ன தண்டனை கொடுத்
தாலும் நான் ஏற்றுக்கொள்வேனே தவிர, என்றுதான் சொல்லி
இருப்பார்களே தவிர, நான் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று
சொல்ல வரவில்லை. அந்தக் கட்டத்திற்கு நான் போகவும்
இல்லை. என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்
என்று டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லி இருப்பதாலே,
மற்றவர்கள் சொல்லியிருப்பதாலே, என்ன விளைவுகள்
ஏற்பட்டாலும், இந்தக் கொள்கையைப் பொறுத்து, கொடுக்கிற
தண்டனையை நாங்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகத்தான்
இருப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேலி
பேசவோ, கிண்டல் செய்யவோ வேறு எந்த நிலைமைகளிலோ
சொல்லவில்லை. இருக்கிற நிலைமைகளைத்தான் எடுத்துச்
சொன்னேனே தவிர. போராட்டம், அதனால் ஏற்படுகிற
விளைவுகளை எல்லாம் தாங்கிக்கொள்கின்ற அளவிற்கு
ஒவ்வொருவரும் வருகின்றபோது அதை ஏற்றுக்கொள்ள
மாட்டார்கள் என்று நான் அந்த அர்த்தத்திலே சொல்லவில்லை.
அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது கூட அதை அவர்கள்
மறுத்தார்கள். நல்ல தூய நோக்கத்தோடு எரிப்பேன் என்று
சொன்னார்கள். அவர்கள் எரிப்பதற்கு முன்னாலே முன்கூட்டியே
கைது செய்து வைத்தார்கள். மர்டர் என்று சொன்னாலும்,
அட்டெம்ப்ட் டு மர்டர் என்று சொன்னாலும் ஒன்றுதான் என்ற
அளவுக்குத்தான் அரசியல் அமைப்பு அவமதிப்புச் சட்டம்

என்று சொல்லி, 6 மாதம் என்றார்கள். அந்த அளவிற்கு தண்டனையை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பிறகு, சட்டங்கள் எல்லாம் கட்டுப்பாடான வகையிலே திருத்தப்பட்டதன் காரணத்தால், இந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டு வரவேண்டிய அவசியமும், வேறு பல நிலைமைகளும் வந்திருப்பதன் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறதே தவிர, வேறு எந்த நோக்கத்தினுடைய அடிப்படையிலேயும் அல்ல. வேறு எந்தக் காரணத்தினுடைய அடிப்படையிலேயும் அல்ல. பந்தம், பாசம், பற்று ஆகியவற்றினுடைய காரணங்களும் அல்ல. பந்தம், பாசம், பற்று எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே அந்த இடங்களிலே எல்லாம் மறுபடியும் தேர்தல் வந்தால், அவர்கள் பெரும்பாலும் வெற்றி பெறலாம். நான் இல்லை என்று சொல்ல விரும்பவில்லை. அடுத்த தேர்தல் வந்தாலும் வெற்றி பெறலாம். அது வேறு. ஆகவே பொதுமக்களைச் சந்திப்பது என்பது வேறு. ஆகவே இந்த அவையைப்பற்றி நாம் நினைக்கிறோம். வெளியிலே இருக்கிற சூழ்நிலை இப்போது எங்கு பார்த்தாலும் வருகின்ற பிரச்சினை, எதைக் காப்பாற்றி மதிக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ, அது மதிக்கப்படாமல் இருக்கிற நிலைமை ஏற்படுகிறபோதுதான் பிரச்சனை வருகிறது. 75 கோடி மக்கள் நிறைந்து இருக்கிற, 38, 39 ஆண்டுக்காலமாக காப்பாற்றி வருகிற ஒரு ஜனநாயகம் காப்பாற்றப்படாமல் போய்விடுமோ என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இந்தச் சட்டங்களை காப்பாற்றுகின்ற பொறுப்பிலேதான் அறிஞர் அண்ணா அவர்கள் 2½ ஆண்டுக் காலம் இருந்து காப்பாற்றினார்கள். 144 சட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்த்தார்கள். அந்தச் சட்டத்தை மீறி அப்போது கழகத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், விருதுநகருக்குப் பக்கத்திலே உள்ள துலுக்கப்பட்டி என்ற இடத்திலே உள்ள ஆலையில் மறியல் செய்தார்கள் என்பதற்காக, கழக எம்.எல்.ஏ. என்று கூட பார்க்காமல், கழகத்தைச் சேர்ந்தவர் என்பதையும் பார்க்காமல் அவர்களைக் கைது செய்து உள்ளே அடையுங்கள் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-40)

கழகத்தைச் சேர்ந்தவர்தான்; அதே சமயத்தில் இங்கே வட சென்னையில் உண்ணாவிரதம் இருந்தபோது சட்டப்படி என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யுங்கள் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சட்டம் தன் கையில் இருக்கும்போது தன்னை சேர்ந்தவர்கள், கட்சியைச் சேர்ந்தவர்கள், கட்சியில் இருப்பவர்கள் என்று பந்தம், பாசம், பற்று காட்டவில்லை. ஆனால் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டம் வந்தது. ஆகவேதான் இந்த நிலைமை வந்ததே தவிர வேறு அல்ல. ஒன்று விட்டுவிட வேண்டும் அல்லது இந்த நிலைக்கு வந்த பிறகு திரு. சித்தன் மாதிரி கலங்கக்கூடாது. (கூச்சல்-குழப்பம்)



திரு. என். எஸ். வி. சித்தன்: நான் கலங்கவில்லை. அந்தத் தொகுதி மக்களுக்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதற்கு தேர்தல் கமிஷன் இருக்கிறது. தேர்தல் வந்தால் நீங்கள் எல்லாம் பார்த்துக்கொள்கிறீர்கள். அவர்களே மறுபடியும் நிற்கலாம், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே நிற்கலாம். எப்படியோ அது இருக்கலாம். அது வேறு. அந்தப் பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு நியாயமான, நேர்மையான, உண்மையான, ஜனநாயகத்தின் அடிப்படையில் சொல்கிறேனே தவிர இதற்கு நோக்கமோ, குறிக்கோளோ எதுவும் இல்லை என்று சொல்லி இந்தத் தீர்மானத்தோடு மற்றும் ஒன்றை, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் சொல்லியது போல் இந்த மாதிரி ஏற்கனவே 7 பேருக்கு ஒரு தீர்ப்பு அளித்து இருக்கிறீர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையும் சேர்த்து 24 ஆம் தேதி நான் அளித்த தீர்ப்பை நீங்களே உங்களுடைய ரெசலுஷனில் வைத்து நீங்களே அவையில் பாஸ் செய்து விடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தாங்கள் அளித்த தீர்ப்பில் தலையிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தமாக விவாதம் முழுமையாக நடைபெற்று விட்ட காரணத்தால் உங்களுடைய ரெஸல்யூஷனில் வைத்து பாஸ் செய்து விடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தாங்கள் தீர்ப்பு அளித்து விட்டீர்கள், ஆனால் அந்தத் தீர்ப்பின் மீது பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல உரிமை இல்லை, இருந்தாலும் கூட நான் இந்த அவையின் சார்பாக கேட்டுக் கொள்ளுவது இந்த அவை பெரியது. எப்படியும் இந்தப் பிரச்சினை இந்த அவைக்கு வந்துவிட்டது, வந்து விட்டதன் காரணமாக 3 பேரைப் பொறுத்து இந்தத் தீர்மானம் எடுக்கிறோம். ஆக மறுபரிசீலனைச் செய்து இந்த அவையின் முடிவுக்கு இந்த 10 பேரைப் பொறுத்தும் விட்டுவிடுவீர்களே யானால் அதையும் இந்த அவையே பார்த்து ஒரு முடிவு எடுக்கிறது என்ற நிலை ஏற்படுவது அவைக்கும் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒட்டுமொத்தமான தீர்மானமாக நீங்கள் அதையும் சேர்த்து போட்டுவிடலாம். முன்பு 7 உறுப்பினர்கள், இப்போது 3 உறுப்பினர்கள், ஆக மொத்தம் 10 உறுப்பினர்களையும் சேர்த்து போட்டுவிடலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூறியதை ஏற்று இந்தத் தீர்மானத்திலே அந்த 7 பேரையும் சேர்த்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வானம்தான் எனது அதிகாரத்தின் எல்லை. இந்த அவையின் அதிகாரம்தான் எனது அதிகாரம். நீங்கள் அதை எட்டிப் பிடிக்க முடியாது. உங்களாலும் முடியாது, உங்களைச் சேர்ந்தவர்களாலும் முடியாது. நான் மீண்டும் சொல்லுகிறேன், வானம்தான் என்னுடைய அதிகாரத்தின் எல்லை. இந்த அவையின் அதிகாரம் தான் என்னுடைய அதிகாரம். இந்த அவையின் குரலை பிரதிபலிப்பவர்தான் சபாநாயகர்; நான் அளித்த தீர்ப்பிலே பிரச்சினையே எதனால் விவாதத்திற்கு வருகிறது என்றால் "Disqualification" என்ற இங்கிலீஷ் வார்த்தை இருக்கிற காரணத்தால்தான் பிரச்சினையே உருவாகியிருக்கிறது.

It was not my intention to invoke Article 191 or 192 of the Constitution. It is not within my power. I have expressed that day on behalf of the House to take note of the vacancies under Art.194(3).

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கத்தை கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் அவர்கள் இந்த நாட்டு அரசியல் அமைப்பை யாரும் களங்கப்படுத்தாமலும், சேதப்படுத்தாமலும் அதற்கு எந்தவிதமான குறைபாடும் நேராமலும் காப்பாற்ற நாட்டினுடைய குடிமக்களாகிய நாம் அதிலும் குறிப்பாக மக்களுடைய பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நடந்து விட்ட நிகழ்ச்சிகள் சில அவசர, அவசரமாக நடந்து இருக்கின்றன. சபை முன்னவர் அவர்களுடைய விளக்கம் நாட்டு மக்களுக்கும்; இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் தர வேண்டிய தெளிவை தந்து இருக்கிறது. அவையினுடைய முன்னவர் அவர்களை உங்கள் மூலமாகவும், நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களிடத்திலும் நான் கேட்டுக்கொள்ளுவது, இந்தப் பேரவை பெருமனதோடு, நீங்கள் உங்களுடைய அதிகாரத்தைக் கொண்டு பதவி இழக்கச் செய்த அந்த 7 மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த அவையினுடைய முன்னவர் அவர்களால் இந்த அவையிலிருந்து நீக்கிவிடலாம் என்று முன்மொழிந்து இருக்கக்கூடிய இந்த மாண்புமிகு உறுப்பினர்களையும் சேர்த்து இந்த விவாதத்தோடு அதை விட்டுவிடலாம். இதை அவர்கள் பெருமனதோடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு முடிந்து வரும் புத்தாண்டில் நாம் எல்லாம் கால் எடுத்து வைக்கிறோம். அந்த ஆண்டு ஒரு சுபிட்சம் மிக்க ஆண்டாக, சுமுகமான ஆண்டாக திகழக் கூடிய வகையில்—இது தொடர்பாக கைது செய்யப்பட்டு இருக்கக்கூடிய எல்லோரையும் விடுதலை செய்து—இந்தக் கொள்கையில் அரசு உறுதியாக இருக்கிறது.



இதை நிலைநாட்டுவதிலே மத்திய அரசிடத்திலே இந்த அரசும் தொடர்ந்து முயலும்........(மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த அவையே எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டதன் காரணமாக, அன்று அவர்கள் அளித்த தீர்ப்பு எடுபட்டுப் போகிறது. ஆகவே இப்போது அந்த 10 பேரைப் பற்றிதான் வருகிறதே தவிர, அந்தத் தீர்ப்பினுடைய பகுதி நீங்கிவிடுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எக்சர்சைஸ் பண்ணலாம் என்று சொல்லுங்கள். உங்களுடைய வாதத்திற்குப் பிறகு நானாக எடுத்த முடிவு. நீங்கள் வித்தியாசமாகப் பேசுகின்ற காரணத்தால் நான் அவையின் முடிவிற்கே விட்டு விட்டேன். என்னுடைய முடிவாக இருக்குமானால் என்றைக்கும் அதைப் பார்த்துக் கொள்ளலாம். அவையின் முடிவிற்கே விட்டு விட்டேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க வில்லை. நான் என்ன சொல்கிறேன் என்று நீங்கள் கேட்க வில்லை........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை, பேசியாகிவிட்டது. இனிமேல் இதிலே விவாதத்திற்கு இடமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தில்........

**திரு. அ. ரகுமான்கான்:** 'டிஸ்குவாலிபை' என்கிற வார்த்தையை மாற்றி........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'டிஸ்குவாலிபை' என்பது ஆங்கில வார்த்தை..........What I said was they are not qualified. My intention was not to disqualify them. My intention was that they lost the qulification to sit as members in the House.

**திரு. அ. ரகுமான்கான்:** டிஸ்குவாலிபிகேஷன் என்பது வேறு டிஸ்குவாலிபிகேஷன் என்று நீங்கள் சொன்னதை வாபஸ் வாங்க வேண்டும். ரூல்ஸ் என்னவாயிற்று?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். நான் அவைக்கே விட்டுவிட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரூலிங்கை மறுபரிசீலனை செய்யச் சொல்லி அவைக்கே விட்டாகி விட்டது. அதை ஏற்றுக் கொண்டு நான் கீழ்க்கண்ட திருத்திய மாற்றுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு, கோவையில் 9-11-1986 அன்று நடந்த கூட்டத்தில், 17-11-1986 தொடங்கி 17-12-1986 முடியும் கால அளவிற்கிடையே, மாநிலத்தின் பல்வேறு இடங்களில், பொதுக் கூட்டங்களில் இந்திய அரசியல் சட்டத்தின், 17-வது அத்தியாயத்தின் ஆட்சிமொழி இந்திதான் என்னும் பகுதியை கொளுத்துவது என்று தீர்மானித்து, செய்தித் தாள்களிலும், பொதுக் கூட்டங்களிலும் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் நடைபெறும் என்று விளம்பரப்படுத்தியிருந்ததாலும், அத்தீர்மானத்தைத் தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள். இந்திய அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியின் நகலொன்றை (எழுதப்பட்ட வடிவத்திலோ அல்லது அச்சடிக்கப்பட்ட வடிவத்திலோ அல்லது வேறெந்த வகையான வெளிப்பாடு (representation) அல்லது மறுபடைப்பு (reproduction) வடிவத்திலோ அமைந்த, இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு ஏதொன்றின் முழுமையான எடுபகுதிகள் (excerpts) அல்லது அதன் பகுதி ஏதொன்றின் எடுபகுதிகள் அடங்கிய ஆவணம் அல்லது தாள் எதையேனும்) பொது இடத்தில் தீ வைத்துக் கொளுத்தியிருக்கின்றனர் என்பதாலும்;

மேற்சொன்ன தீர்மானத்தைத் தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவையின் பின்வரும் உறுப்பினர்கள், அதாவது—

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. க. அன்பழகன் | .. .. | 17-11-1986 |
| 2. | திரு. சு. பாலன் | .. .. | 17-11-1986 |
| 3. | திரு. ஆ. செல்வராசன் | .. .. | 17-11-1986 |
| 4. | திரு. ப. பொன்னுரங்கம் | .. .. | 17-11-1986 |
| 5. | திரு. பரிதி இளம்வழுதி | .. .. | 17-11-1986 |
| 6. | திரு. மு. இராமநாதன் | .. .. | 19-11-1986 |
| 7. | திரு. ரா. சின்னசாமி | .. .. | 23-11-1986 |
| 8. | திரு. ம. ஆபிரகாம் | .. .. | 29-11-1986 |
| 9. | திரு. செ. ஆறுமுகம் | .. .. | 29-11-1986 |
| 10. | திரு. வி. கே. இராசு | .. .. | 5-12-1986 |

ஆகியோர், அவரவருக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இந்திய அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியின் நகலொன்றை (எழுதப்பட்ட வடிவத்திலோ அல்லது அச்சடிக்கப்பட்ட வடிவத்திலோ அல்லது வேறெந்த வகையான வெளிப்பாடு அல்லது மறுபடைப்பு வடிவத்திலோ அமைந்த, இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு ஏதொன்றின் முழுமையான எடுபகுதிகள் அல்லது அதன் பகுதி ஏதொன்றின் எடுபகுதிகள் அடங்கிய ஆவணம் அல்லது தாள் எதையேனும்) பொது இடத்தில் தீ வைத்துக் கொளுத்தியிருக்கின்றனர் என்பதாலும்;



மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் நடத்தை, அவர்கள் இவ்வவையின் உறுப்பினர்கள் என்ற முறையில் இந்திய அரசியல் சட்டத்தின் 188-வது பிரிவின் கீழும் சட்டமன்றப் பேரவை விதி 4 (1) இன் கீழும் இந்திய அரசியல் சட்டத்தில் உண்மையான நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டிருப்பேன் என்று எடுத்துக் கொண்ட பதவிப் பிரமாணத்தை மீறுவதாக அமைவது மட்டுமின்றி. அவர்களுடைய நடத்தை அரசியல் சட்டத்தின் மதிப்பையும் அதன்மூலம் ஏற்படுத்தப்பட்ட இவ்வவையின் மதிப்பையும், அவை உறுப்பினருக்கு இருக்க வேண்டிய மதிப்பையும் தாழ்த்தி, இந்திய அரசியல் சட்டத்தின் கண்ணியத்தையும், இந்த அவையின் கண்ணியத்தையும் குறைக்கும் செயலாக அமைந்துள்ளபடியாலும், மேலும் அந்த நடத்தை உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கும் தரத்திற்கும், தகுதிக்கும் ஒவ்வாததாக இருப்பதாலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் தங்கள் நடத்தையால், இந்த அவையின் உறுப்பினர்களாக இருக்க அருகதையற்றவர்களாக இப்பேரவை கருதுகிறது

இப்பேரவை இதுகுறித்து ஆழ்ந்து பரிசீலித்தபின் இப்பேரவையின் உறுப்பினர்களாகிய—

1. திரு. க. அன்பழகன்
2. திரு. சு. பாலன்
3. திரு. அ. செல்வராசன்
4. திரு. ப. பொன்னுரங்கம்
5. திரு. பரிதி இளம்வழுதி
6. திரு. மு. இராமநாதன்
7. திரு. ரா. சின்னசாமி
8. திரு. ம. ஆபிரகாம்
9. திரு. செ. ஆறுமுகம்
10. திரு. வி. கே. இராசு

ஆகியவர்கள் இப்பேரவையின் உறுப்பினர்களாக நீடித்து இருக்கும் தகுதியற்றவர்கள் என்று தீர்மானித்து, அவர்கள் இப்பேரவையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுகின்றனர் (expelled) என்றும் தொடர்ந்து இந்த அவையின் உறுப்பினர்களாக இருக்க முடியாதென்றும் தீர்மானிக்கிறது. மற்றும் அவர்களுடைய இடங்கள் வெற்றிடங்களாகின்றன என்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது".

திருத்திய மாற்றுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றதாக அறிவிக்கப் பெற்றது.

(பிற்பகல் 1.50)

திரு. அ. ரகுமான்கான்: We want division.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தை எரித்த சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் சாசனத்தை அவமதித்த குற்றத்திற்கு ஆளானவர்கள் என்பதில் ஐயமில்லை, இருப்பினும் சட்டமன்ற காலம் எஞ்சிய மூன்று ஆண்டுகளுக்கும் அவர்களை வெளியேற்றுவதை, தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்கு அளிக்கப்படும் கடுமையான தண்டனையாகக் கருதுகின்றோம். ஆதலால்தான் செய்த குற்றத்திற்கு குறைவான தண்டனையை நல்கி, மீண்டும் இந்த அவையில் வந்து அவர்கள் அமர்கின்ற வாய்ப்பைத் தருவது இந்த அவையின் கண்ணியத்திற்கும், கௌரவத்திற்கும் ஏற்றதாக இருக்கும் என்று நாங்கள் எண்ணுகிறோம். எங்கள் கட்சியின் சார்பில் பேசிய மாண்புமிகு திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் கருத்தினை, ஆலோசனையை அவை முன்னவர் அவர்கள் ஏற்காத காரணத்தினால், ஏற்கப்படும் முடிவுகளுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் துணை நிற்க முடியாது என்பதை வெளிப்படுத்தும் வகையில், இந்த அவையை விட்டு வெளிநடப்பு செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

**திரு. அ. ரகுமான்கான்:** நான், திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் 'மார்க்ஸிஸ்ட்' கட்சியின் சார்பாக டிவிஷன் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் வாக்குகளை அறிய எண்ணிக் கணிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும். எனவே தற்போது பேரவைச் செயலாளர் அழைப்பு மணியை அடிப்பார்.

(அழைப்பு மணி இரண்டு நிமிடங்கள் அடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி உத்தரவிடுகிறேன். (நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன.)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று வாக்குகள் எண்ணிக் கணிக்கப்பெற்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் தலைமை)

ஆதரித்தோர்........131

எதிர்த்தோர்........ 24

நடுநிலை வகித்தோர்....ஒருவரும் இல்லை.

தீர்மானத்திற்கு ஆதரவாக 107 வாக்குகள் அதிகமாகக் கிடைத்துள்ளதால் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

ஆதரித்தோர்.

1 திரு. துரை கோவிந்தராசன்
2 மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)
3 திரு. தி. அன்பழகன்
4 திரு. மு. ஆறுமுகம்
5 திரு. கா. வே. கந்தசாமி
6 திரு. பி. முசிறிபுத்தன்
7 திரு. வே. இரா. ஜெயராமன்
8 திரு. இரா. அரிக்குமார்
9 திரு. பொ. அன்பழகன்
10 திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி
11 திரு. எச். ஜி. ஆறுமுகம்
12 திரு. மு. ஆனந்தன்
13 திரு. கோ. இரகுபதி
14 திரு. எம். வி. இரத்தினம்
15 திரு. செ. இரத்தினவேலு
16 திரு. ஆர். இராசமாணிக்கம்
17 திரு. எல்ல. இராசமாணிக்கம்
18 திரு. எப். எம். இராசரத்தினம்
19 திரு. எம். இராசரத்தினம்
20 திரு. ப. ந. இராமச்சந்திரன்

21 டாக்டர் கே. பி. இராமலிங்கம்
22 திரு. சி. எத்திராசன்
23 மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்
24 மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
25 மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
26 மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
27 மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்
28 மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
29 திரு. எஸ். என். இராசேந்திரன்
30 திரு. இரா. அருணாசலம்
31 திரு. தா. வீராசாமி
32 திரு. என். நல்லுசாமி
33 திரு. எம். ஆர். கோவேந்தன்
34 திரு. இரா. சண்முகம்
35 டாக்டர் கே. சமரசம்
36 திரு. க. இரா. சின்னராசு
37 திரு. கு. அ. செங்கோட்டையன்
38 திரு. ப. தனபால்
39 திரு. இரா. தாமரைக்கனி
40 திரு. துரை ராமசாமி
41 திரு. கே. ஆர். கணபதி
42 திரு. பி. கந்தசாமி
43 திரு. சோ. கலிதீர்த்தான்
44 திரு. வி. இரா. கிருஷ்ணசாமி
45 திரு. ஜி. கிருஷ்ணராஜ்
46 திரு. கே. குப்புசாமி
47 திரு. எம். அண்ணாதாசன்
48 திரு. ச. சங்கரலிங்கம்
49 திரு. என். சண்முகம்
50 திரு. எம். சண்முகையா பாண்டியன்
51 திரு. மு. சந்திரசேகர்
52 திரு. தா. சாமிக்கண்ணு
53 திரு. ஆ. சிவக்குமார்
54 திரு. எம். சிவக்குமார்
55 திரு. சீ. சிவப்பிரகாசம்
56 திரு. மு. சின்னக்குழந்தை



57 திரு. வே. கு. சின்னசாமி
58 திரு. மா. சின்னராசு
59 திரு. சி. சுப்புராயர்
60 திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்
61 திரு. வி. சுப்பிரமணியன்
62 திரு. செ. செம்மலை
63 திரு. கே. பி. கே. சேகர்
64 திரு. க. சோலைராசு
65 திரு. சைதை சா. துரைசாமி
66 திரு. சா. ஞானசுந்தரம்
67 திரு. மு. தங்கமணி
68 திரு. ஏ. தங்கராசு
69 மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
70 மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு
71 மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன்
72 மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன்
73 மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்
74 மாண்புமிகு திரு. த. இராமசாமி
75 மாண்புமிகு திரு. எ. அருணாசலம்
76 மாண்புமிகு திரு.கே. கே.எஸ். எஸ். ஆர்.இராமச் சந்திரன்
77 திருமதி கோமதி சீனிவாசன்
78 திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி
79 திருமதி இரா. சரோஜா
80 திருமதி பீ. லட்சுமி
81 திருமதி பா. வளர்மதி
82 திரு. கே. உச்சி
83 திரு. கே. பி. நாச்சிமுத்து
84 திரு. செ. பட்டாபிராமன்
85 திரு. அ. பாலுசாமி
86 திரு. இரா. முத்தையா
87 திரு. இரா. சா. முனிரத்தினம்
88 திரு. மு. ஜான் வின்சென்ட்
89 திரு. செ. தங்கராசு
90 திரு. தமிழ்மணி

91 திரு. துரை அன்பரசன்
92 திரு. எஸ். பி. துரைராசு
93 திரு. க. நரசிம்மபல்லவன்
94 திரு. பூ. மு. நரசிம்மன்
95 டாக்டர் த. முகம்மது சலீம்
96 திரு. பு. கோ. நாராயணன்
97 திரு. பா. ந. பரமசிவம்
98 திரு. த. பழனி
99 திரு. கா. செ. பழனிச்சாமி
100 திரு. மு. பாண்டுரங்கன்
101 திரு. பாப்பா சுப்பிரமணியன்
102 திரு. ச. பாலகிருஷ்ணன்
103 திரு. வி. பாலகிருஷ்ணன்
104 திரு. க. பாலசுப்பிரமணியன்
105 திரு. எஸ். பாலசுப்பிரமணியன்
106 திரு. கே. பாலாஜி
107 திரு. ஏ.பாலுச்சாமி
108 திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்
109 திரு. ஆ. பிரேம்குமார்
110 திரு. எஸ். புருசோத்தமன்
111 திரு. அ. பெரியசாமி
112 திரு. தெ. பெருமாள்
113 திரு. கோ. பெருமாள் பிள்ளை
114 டாக்டர் அ. பொன்னுசாமி
115 திரு. தி. நா. கோ. அ. மனோகரன்
116 திரு. யு. பி. மாதையன்
117 திரு. ஆர். எம். வீரப்பன்
118 திரு. செ. அரங்கநாயகம்
119 டாக்டர் கா. காளிமுத்து
120 திரு. த. மாரிமுத்து
121 திரு. மு. மாரிமுத்து
122 திரு. ம. நா. ராமஜெயம்
123 திரு. கூடலூர் இ. வி. வேலு
124 திரு. கு. தமிழரசன்
125 திரு. கு. வடிவேல்



126 திரு. என். விஜயபாலன்
127 திரு. வே. குப்புசாமி
128 திரு. அ. வெங்கடாசலம்
129 திரு. டி. எம். வெங்கடாசலம்
130 திரு. சு. ஜெகதீசன்
131 திரு. ஜி. கே. பிரான்சிஸ்

### எதிர்த்தோர்

1 திரு. பொ. உத்திராபதி
2 திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்
3 திரு. கோ. வீரய்யன்
4 டாக்டர் தே. குமாரதாஸ்
5 திரு. கே. சுப்பராயன்
6 திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்
7 திரு. எம். செல்லமுத்து
8 திரு. ஜே. ஹேமச்சந்திரன்
9 திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்
10 திரு. சோ. மா. இராமச்சந்திரன்
11 திரு. ச. குமரகுருபர ராமநாதன்
12 திரு. வி. எம். தேவராஜ்
13 திரு. ஆ. நடராசன்
14 திரு. அ. பிரணவநாதன்
15 திரு. மா. மணிமாறன்
16 திரு. அ. மலர்மன்னன்
17 திரு. மா. மீனாட்சிசுந்தரம்
18 திரு. பொன் முத்துராமலிங்கம்
19 திரு. எஸ். ரெத்தினராஜ்
20 திரு. கி. மனோகரன்
21 திரு. கு. ரமணி
22 திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்
23 திரு. அ. ரகுமான்கான்
24 திரு. வி. பி. சிந்தன்

### 3. அரசினர் தீர்மானம்.

#### பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 2-08 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

### 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

173. அன்னை தெரஸா மகளிர் பல்கலைக் கழகத்தின் திட்டக் குழுவிற்கு உறுப்பினர்களை பல்கலைக் கழக வேந்தர் நியமனம் செய்வது குறித்து கல்வித்துறையின் 18-12-1985-ஆம் நாளிட்ட 109925/என்.யு.1/85-1, ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரஸா மகளிர் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2)ஆம் எண் பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

174. வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலூகாவைச் சேர்ந்த நத்தம் சிற்றூரிலுள்ள நத்தம் காலனியை தானமாக கொடுக்கப்பட்ட கிராமமாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித்துறையின் 4-7-1986-ஆம் நாளிட்ட 519ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

175. அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த நத்தம் தாலூகாவில் சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 12-8-1986 ஆம் நாளிட்ட 645ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].





176. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சாராய (மொத்த விலையில் வழங்கல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 17-9-1986-ஆம் நாளிட்ட 1147-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

177. தேசிய அனுமதியின் கீழ் ஓடும் சரக்கு வண்டிகளுக்கு விதிக்கக்கூடிய வரியினை குறைப்பது குறித்து உள் (போ. 6) துறையின் 24—9—1986-ஆம் நாளிட்ட 2685ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

178. மைசூரில் நடைபெறும் தசராப் பண்டிகையை முன்னிட்டு கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்தின் பயணிகள் பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதி அளிப்பது குறித்து உள் (போ.6) துறையின் 29—9-1986-ஆம் நாளிட்ட 2748-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

179. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 17-9-1986-ஆம் நாளிட்ட 946-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

180. திருப்பதியில் நடைபெறும் பிரம்மோத்ஸவம் பண்டிகையை முன்னிட்டு ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் பயணிகள் பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதி அளிப்பது குறித்து உள் (போ.6) துறையின் 16—10—1986-ஆம் நாளிட்ட 2912-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

181. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகாவைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 18—5—1986-ஆம் நாளிட்ட 761-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958—ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

## (ஆ). அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

47. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு வரிவிதிப்பு (காலவரையறை பொருந்தாது என்பது) சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண் 43/1985) நடைமுறைக்கு வரும் தேதியினை நியமிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையில் 27-9-1986-ஆம் நாளிட்ட 969-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

48. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 17-3-1986 முதல் 15-5-1986 முடிய உள்ள நடவடிக்கை சுருக்கக் குறிப்பு.

136500
600 008

D
V211,31 N86
N86.31-3 F4

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.